சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரி)

(பாகம்-6)

வெளியீடு
சிவாசார்யர் அறக்கட்டளை
207/101, தம்பு செட்டி தெரு, சென்னை-1

உ

காளிகாம்பாள் துணை

சிவாகம கட்டுரைத் திரட்டு

(பாகம்–6)

2011–ம் ஆண்டின்
சைவாகம சிறப்புச் சொற்பொழிவுகள்
(7 ஆய்வாளர்களின் கட்டுரைத் தொகுப்பு)

வெளியீடு

சிவாசார்யர் அறக்கட்டளை - சென்னை-1.

சிவஶ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட் - சென்னை-1.

தொகுப்பாசிரியர்

ஆகம ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி, சைவாகமக்ஞ சூடாமணி, சைவாகம வித்வான், வ்யாகரண விசாரதா, சிவாகம ஸார்வபௌம:, சிவஸம்வித் ஸபர்யா பாராவாரீணர், சிவாகம அருட்செல்வர், ஸம்ஸ்க்ருத சேவாரத்தினம், சிவாகம வாசஸ்பதி, வாஸ்து வித்தகர், சைவாகமஶ்ரீ: , ஆகம கல்பத்ரும:, ஆகம வித்தகர், சிவாகம வித்யாரத்னம், சாக்தயாக சாம்ராட், வைதிகசைவ ரக்ஷாமணி, சிவபாத பத்மபூஷணம், சிவாகமக் கலாநிதி, சைவாகம துரந்தர:, சைவாகம பரீக்ஷாதிகாரீ, யாக ஸர்வஸாதக திலகம், சாஸ்தா உபாஸகர், அகோரசிவம் என்கிற

சிவஶ்ரீ. விஜய. சோமசேகர சிவாசார்யார் M.A.,

குருமுதல்வர். சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை–1.

சென்னை 1 தம்புசெட்டித்தெரு புது எண் 207ல் இயங்கிவரும் சைவாகம கலாசார வித்யாகேந்திரத்தில் சிவாசார்யர் அறக்கட்டளை மற்றும் ஶ்ரீ சாம்பமூர்த்தி சிவாசார்யர் பவுண்டேஷன் இணைந்து மாதந்தோறும் நடத்திவந்த சிவாகம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் 2011ம் ஆண்டில் ஆகம அறிஞர்களால் அளிக்கப்பட்ட சிவாகம கட்டுரைகளைத் தொகுத்து லோகோபகாரகமாய் சென்னையில் 25.12.2011–ல் நடத்தப்பட்ட சிவாகமவித்வத்சதஸ் மற்றும் சிவாகம் கலாசாரதீபிகோத்ஸவத்தில் கட்டுரையாளர்களுக்கு சிவாகம வாசஸ்பதி எனும் விருதளித்துப் பாராட்டி இந்நூல் வெளியிடப்பட்டது.

CENTRE FOR ...

நூல் வெளியீட்டுக் குறிப்பு

நூலின் பெயர்	: ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரீ (பாகம்-6) (சிவாகம கட்டுரைத் திரட்டு பாகம்-6)
நூலின் மொழி	: தமிழ் மற்றும் சமஸ்கிருதம்
நூலின் எழுத்து	: தமிழ் மற்றும் தேவநாகரி
நூலின் அளவு	: 8.5 X 5.5 inch
நூலின் எண்ணிக்கை	: 100
வெளியீடு வரிசை எண்	: 4
நூலின் பதிப்பு எண்	: முதற்பதிப்பு
தொகுப்பு ஆசிரியர் நூல் வடிவமைப்பு	: சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யார்
நூல் உரிமை	: சிவஸ்ரீ டி. எஸ். காளிதாஸ் சிவாசார்யார்
நூலின் பக்கங்கள்	: 130 பக்கங்கள்
வெளியீட்டு நாள்	: 13.07.2014
அச்சிட்டோர் சௌமியா	: ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை 14
கணிணி பதிவு அச்சகம்	: ராஜம்ஸ் டிஜிட்டல், சென்னை 14
வெளியீடு	: மேதா சக்ரிணீ கோஷ்டம்
தொகுத்த நிறுவனம்	: சிவாசார்யர் அறக்கட்டளை
வெளியிடுவோர்	: சிவஸ்ரீ தி.ஸா. ஸ்வாமி சதாசிவோம் சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ் சிவாசார்யர் சிவஸ்ரீ தி.ஸா. ஷண்முக சிவாசார்யர்
புத்தகத்தின் விலை	: **விலை ரூ.200/-**
புத்தகம் கிடைக்கும் இடம்	: அறக்கட்டளை & நூலாசிரியர்அகம்.
நூலைபெறத் தொடர்புக்கு	: 98402 99352 | 99402 01849

உரிமை : © இந்த புத்தகத்திலுள்ள எந்த ஒரு பகுதியையும் நூலாசிரியர் அனுமதியை எழுத்து மூலம் பெறாமல் பதிப்பிக் கூடாது.

Copyright © All reserved including the rights of reproduction in whole or in part in any form.

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்

[library stamp]

ஞானதீப நமஸ்காரம்

(காலை மாலை இருவேளையும், தீபம்ஏற்றிவைத்து, இந்த ஸ்லோகத்தைக் கூறி நமஸ்காரம் செய்தால் சகல ஸௌபாக்யங்களும் ஏற்படும்.)

ஸுவர்ண வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
ஸுதான்ய வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
கல்யாண வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
விபூதி வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:

***

சுபம் பவது கல்யாணி! ஆயு ராரோக்ய ஸம்பத: |
சத்ருபுத்தி விநாசாய தீபஜ்யோதிர்! நமோ(அ)ஸ்து தே ||

***

கோமாதா ஸ்துதி. (பசுவணக்கத் துதிகள்)

இந்த அபூர்வமான ஸ்தோத்திரத்தைச் சொல்லி கோபூஜையைச் செய்து, பிரதக்ஷிணம் செய்தால், அளவற்ற புண்யங்களும், சகலபாக்யங்களும் ஏற்படும். இதனைக்கூறிப் பணிந்து வாசகர்கள் பயன்பெற வேண்டும்.

நமோ தேவ்யை மஹாதேவ்யை ஸுரப்யை ச நமோ நம:.
கவாம் பீஜ ஸ்வரூபாயை நமஸ் தே ஜகதம்பிகே. 1

நமோ ராதா ப்ரியாயை ச பத்மாம்சாயை நமோ நம:.
நம: கிருஷ்ண ப்ரியாயை ச கவாம் மாத்ரே நமோ நம:. 2

கல்பவ்ருக்ஷ ஸ்வரூபாயை ஸர்வேஷாம் ஸந்ததம் பரம்:
ஸ்ரீதாயை தனதாயை ச வ்ருத்திதாயை நமோ நம: 3

சுபதாயை ப்ரஸன்னாயை கோபதாயை நமோ நம:.
யசோதாயை கீர்த்திதாயை தர்மக்ஞாயை நமோநம:. 4

இதம் ஸ்தோத்ரம் மஹத்புண்யம் பக்தியுக்தச்ச யப்படேத்.
ஸ கோமான் தனவான் சைவ கீர்திமான் புத்ரவான் பவேத். 5

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

ப்ராதஸ்மரணம் (காலைஇறைவணக்கம்)

ப்ராதர் நமாமி கணநாத மநாத பந்தும் –
சிந்தூர பூர பரிசோபித கண்ட யுக்மம் |
உத்தண்ட விக்ன பரிகண்டன சண்டதண்டம் –
ஆகண்டலாதி சுரநாயக ப்ருந்த வந்த்யம் || 1

ப்ரஹ்மா முராரிஸ் த்ரிபுராந்தகாரி –
பானுஸ் சசீ பூமி சுதோ புதஸ் ச |
குருஸ் ச சுக்ரஸ் சனி ராகு கேதவ: –
குர்வந்து ஸர்வே மம சுப்ரபாதம் || 2

ப்ராதஸ் ஸ்மராமி சரதிந்து கரோஜ்வலாபாம் –
ஸத்ரத்னவன் மகர குண்டல ஹாரபூஷாம் |
திவ்யா யுதோர்ஜித ஸுநீல ஸஹஸ்ர ஹஸ்தாம் –
ரக்தோத்பலாப சரணாம் பவதீம் பரேசாம் || 3

ப்ராதர் நமாமி மஹிஷாஸுர சண்டமுண்ட –
சும்பாஸுர ப்ரமுக தைத்ய விநாச தக்ஷாம் |
ப்ரஹ்மேந்த்ர ருத்ர முனி மோஹநசீல லீலாம் –
சண்டீம் ஸமஸ்த ஸுரமூர்த்தி மனேக ரூபாம் || 4

ப்ராதர் பஜாமி பவதா மபிலாஷ தா^{3}த்ரீம் –
தா^{4}த்ரீம் ஸமஸ்த ஜகதாம் துரிதாப ஹந்த்ரீம் |
ஸம்ஸார ப^{3}ந்தன விமோசன ஹேது பூதாம் –
மாயாம் பராம் ஸமதி^{4}கம்ய பரஸ்ய விஷ்ணோ: || 5

சைவாகம பத்ததிகளின் ஆசார்ய வந்தனம்



18பத்ததி ஆசார்ய ப்ரணதி: ஸ்ரீ குருப்யோ நம:

தூர்வாஸாப் பிங்களஸ் சைவ உக்ரஜ்யோதிஸ் ஸுபோதக:.
ஸ்ரீகண்டோ விஷ்ணுகண்டஸ் ச வித்யாகண்டஸ் ததைவ ச.
ராமகண்டோ ஞானசிவோ ஞானசங்கர ஏவச.
ஸோம சம்பூர் ப்ரம்ம சம்புஸ் த்ரிலோசன சிவஸ் ததா.
அகோர சிவ ஏவா(அ)த ப்ராஸாத சிவ ஏவச.
ராமநாத சிவஸ் சைவ ஈசான சிவ ஏவச.
வாருணாக்ய சிவஸ் சைவா(அ)ஷ்டாதசா சார்ய புங்கவா:.
ஏதைர் திவ்யைர் சிவாசார்யைர் பத்ததிப் பரிபாஷிதா.
தேப்யோ நித்யம் நமோ திவ்ய தேசிகேந்த்ரேப்ய ஏவச.
ஸித்தாந்த மார்க்க தர்சிப்யோ ஆசார்யேப்யோ (அ)ஸ்து மே நதி:.

பக்தசுந்தரமூர்த்திஸ்தவ:- கேயூர குண்டல கிரீட விபூஷி தாங்கம் -
ஹஸ்தோத்பலம் கடிகரம் த்ருத ராஜவேஷம் |
ருத்ராக்ஷ ருத்ரஜப பூதி லலாட பாஜம் -
த்யாயேத் த்ரிபங்க சிவசுந்தர மூர்த்தி ரூபம் ||

சைவ ஸந்தான ஆசார்யர்கள்

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

இஷ்டதேவதாவந்தனம்



ஓம் கணேசாய நம:

குணாதீத மாத்யம் சிதானந்த ரூபம் –
சிதாபாஸகம் ஸர்வகம் ஞானகம்யம்.
முனித்யேய மாகாச ரூபம் பரேசம் –
பரப்ரஹ்ம ரூபம் கணேசம் பஜே(அ)ஹம்.

ஓம் ஷண்முகாய நம:

குந்தேந்து மந்த ஸ்மித சுந்தரா ஸ்யம் –
வந்தாரு பூதேவ வரை ருபா ஸ்யம்.
ப்ருந்தாரகா ராதி ஜனை ரசா ஸ்யம் –
வந்தே பவானீ தநயம் ஷடா ஸ்யம்.

ஓம் சங்கராய நம:

தவள மய சரீரம் ஸர்ப்ப சூலஞ் ச பாசம் –
பரசு மனல கட்கம் கேடகம் வஜ்ர ஹஸ்தம்.
அபய வரத ஹஸ்தம் பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம் –
பணி சசி ஜல மௌளிம் தேவதேவம் நமாமி.

ஓம் தக்ஷிணாமூர்த்தயே நம:

கபர்திநம் சந்த்ர கலா வதம்ஸம் –
த்ரிநேத்ர மிந்து ப்ரதிமா நநோ ஜ்வலம்.
சதுர் புஜம் ஞானத மக்ஷ சூத்ரம் –
புஸ்தாக்னி ஹஸ்தம் ஹ்ருதி பாவயேத் சிவம்.

ஓம் நடேசாய நம:

க்ருபா ஸமுத்ரம் சுமுகம் த்ரிநேத்ரம் –
ஜடாதரம் பார்வதி வாம பாகம்.
ஸதாசிவம் ருத்ர மனந்த ரூபம் –
சிதம்ப ரேசம் ஹ்ருதி பாவயாமி.

ஓம் லலிதாம்பாயை நம:

ஸ்ரீம் பதபூர்ண மஹா மநு ரூபே –
ஸ்ரீ சிவகாமி மஹேச்வர ஜாயே .
ஸ்ரீ குஹ வந்தித பாத பயோஜே –
ஸ்ரீ லலிதா பர மேசி நமஸ்தே.

ஓம் க்ருஷ்ணாய நம:

இந்தீவர ச்யாமள கோமலாங்கம் –
இந்த்ராதி தேவார்ச் சித பாத பத்மம்.
ஸந்தான கல்ப த்ருமம் ஆச்ரிதானாம் –
பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி .

ஓம் விஷ்னவே நம:

மேக ச்யாமம் பீத கௌசேய வாஸம் –
ஸ்ரீவத் ஸாங்கம் கௌஸ்துபோத் பாஸிதாங்கம்.
புண்யோ பேதம் புண்டரீகாய தாக்ஷம் –
விஷ்ணும் வந்தே ஸர்வ லோகைக நாதம்.

ஓம் மஹாலக்ஷ்ம்யை நம:

ஸரஸிஜ நயனே ஸரோஜ ஹஸ்தே –
தவளதரா ம்சுக கந்த மால்ய சோபே.
பகவதி ஹரி வல்லபே மனோக்ஞே –
த்ரிபுவன பூதிகரி ப்ரஸீத மஹ்யம்.

ஓம் துர்க்காயை நம:

நமஸ்தே சரண்யே சிவே ஸாநுகம்பே –
நமஸ்தே ஜகத் வ்யாபிகே விச்வரூபே.
நமஸ்தே ஜகத் வந்த்ய பாதாரவிந்தே –
நமஸ்தே ஜகத் தாரிணி த்ராஹி துர்கே.

ENTRE FOR SHAI
Puducherry

ஓம் ஸரஸ்வத்யை நம:

சுராசுர சேவித பாத பங்கஜா–
கரே விராஜத் கமநீய புஸ்தகா.
விரிஞ்சி பத்னீ கமலாஸந ஸ்திதா–
ஸரஸ்வதீ ந்ருத்யது வாசி மே ஸதா.

ஓம் ஹயக்ரீவாய நம:

ஞானா னந்த மயம் தேவம் –
நிர்மல ஸ்படிகா க்ருதிம்.
ஆதாரம் ஸர்வ வித்யானாம் –
ஹயக்ரீவம் உபாஸ்மஹே.

ஓம் லக்ஷ்மீந்ருஸிம்ஹாய நம:

யஸ்யா (அ)பவத் பக்தஜனா (ஆ)ர்த்தி ஹந்து: –
பித்ருத்வம் அன்யேஷு அவிசார்ய தூர்ணம்.
ஸ்தம்பே (அ)வதாரம் தம் அநந்ய லப்யம் –
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே.

ஓம் மஹாசாஸ்த்ரே நம:

ஹரிவரா ஸநம் விச்வ மோஹனம் –
ஹரிததீ ச்வரம் ஆராத்ய பாதுகம்.
அரிவிம ர்தநம் நித்ய நர்த்தனம் –
ஹரிஹரா த்மஜம் தேவ மாச்ரயே.

ஓம் பைரவாய நம:

கட்கம் கபாலம் டமரும் த்ரிசூலம் –
கராம் புஜைஸ் ஸந்தததம் த்ரிநேத்ரம்.
திகம் பரம் பஸ்ம விபூஷி தாங்கம் –
நமாம் யஹம் பைரவ மிந்து சூடம்.

ஓம் ஹநுமதே நம:

அசேஷ லங்கா பதி ஸைன்ய ஹந்தா –
ஸ்ரீராம ஸேவா சரணைக கர்த்தா.
அசேஷ துக்காஹத லோக கோப்தா –
த்வஸௌ ஹநூமான் தவ ஸௌக்ய கர்த்தா.

திருமுறைத்துதிகள்

விநாயகர் துதி (உமாபதிசிவம் அருளியது)

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

சிவனார்துதி (தேவாரம்) (திருஞானசம்பந்தர் அருளிது)

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே

பூவார் மலர் கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங் கள் எரித்த அன்று மூவர்க் கருள் செய்தார்
தூமா மழை நின் றதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணை வந் தணையும் சாரல் அண்ணா மலையாரே.

திருவாசகம் – (மாணிக்கவாசகர் அருளியது)

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையா னைப் பாடுதுங்காண் அம்மானாய்.

திருவிசைப்பா - திருமுறை-9 (சேந்தனார்)

பண் : பஞ்சமம் தாளம் : ஆதிதாளம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.

திருப்பல்லாண்டு - திருமுறை-9 (சேந்தனார்)

பண் : பஞ்சமம் தாளம் : ரூபகம்

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம் - திருமுறை-12 (சேக்கிழார்)

ராகம் : மத்யமாவதி விருத்தம்

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப்பொலிவு கண்டுஆர்தல்
உண்மையாம் எனில் உலகர் முன் வருக என உரைப்பார்.

ஆசியுரை

ஸ்ரீ சிவசைவாச்சாரியராகிய

ஸ்ரீ சீர்காழி சட்டநாத சுவாமிகள் மடம்

கோமளீஸ்வரன்பேட்டை கோயில் தெரு

மவுண்ட்ரோடு, சென்னை-600 002.

போன் : 65180106

சிவஸ்ரீ. T.S.சதாசிவோம் சிவாசாரியர்

சிவஸ்ரீ. T.S.காளிதாஸ் சிவாசாரியர்

சிவஸ்ரீ. T.S.சண்முக சிவாசாரியர் அவர்களுக்கு

ஸ்ரீ காமாக்ஷி அகஸ்தீஸ்வரர் கிருபா கடாக்ஷத்தினால் என்றும் அநேக ஆசீர்வாதங்களை தெரிவித்துக்கொள்கிறோம். தங்களின் சிவாச்சாரியர் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சார்யர் பௌண்டேஷன் மூலமாக கடந்த இரண்டு வருடங்களாக சிவாகமத்திற்கும் வரும்கால சிவாச்சார்ய இளைஞர்களின் பூஜா விஷயங்களுக்கு உதவியாக நடைபெற்று வரும் ஆகம சொற்பொழிவுக்கும் பேரறிஞர்களின் வருகை தரும் நம்முடைய சமுதாயத்திற்கும் பேருதவியாக அமைந்து என்றும் நம்முடைய ஆதிசைவ சமூகத்திற்கும் இவ்வுலகத்திற்கும் என்றும் துணை நிற்க ஸ்ரீ காமாக்ஷி அகஸ்தீஸ்வரர் பேரருள் துணை நிற்க ஆசீர்வாதம் செய்கின்றோம்.

15/12/11
சென்னை-2

இப்படிக்கு

தி. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியர்

தி. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியர்

மீமாம்ஸ், வ்யாகரண சிரோமணி சிவஸ்ரீ தி.ஷ. ஸச்சிதானந்த சிவாசார்யர்
பரம்பரை பூஜை ஸ்தானீகர்
அருள்மிகு குளிர்ந்த நாயகி உடனுறை ஒத்தாண்டேஸ்வரர் திருக்கோயில்
திருமழிசை, சென்னை, தொலைபேசி 044 26496007

வாழ்த்துரை

எனது ஸஹோதரர் தெய்வத்திரு. தி.ஷ.ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்களின் லக்ஷியங்களை நிறைவேற்றும் விதமாக அவரது திருக்குமாரர்கள் தந்தையாரின் பெயரில் அறக்கட்டளைகள் அமைத்து பொதுநலத் தொண்டுகளையும், சிவாகமசொற்பொழிவுகளையும் இன்னும் பல நற்காரியங்களையும் செய்து வருவது எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ காளிகாம்பிகையின் பேரருளே. மாதந்தோறும் சிறந்த ஆகம வல்லுனர்களை கொண்டு அவர்களின் சொற்பொழிவுகளை பதிவு செய்ததோடு மட்டுமல்லாமல், கட்டுரைகளாகவும் பெற்று வருங்கால சந்ததியினருக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையுமாறு இந்த புத்தகத்தினை தொகுத்து அளித்திருக்கிறார்கள். "சூத்ரே மணிகணா இவ" என்றபடி பல மணிகளை ஒரு நூல் இணைத்திருப்பது போல், இதுபோன்ற பல நறுமலர்களை சிறந்த முறையில் தொகுத்து அளித்த சிவஸ்ரீ ஸோமசேகர சிவாசார்யர் அவர்களுக்கும், புத்தகத்தை பதிப்பித்த அறக்கட்டளை நிர்வாகத்தினருக்கும் எனது அன்பான வாழ்த்துகள். இது போன்று பல மலர்கள் இந்த அகண்ட ஞானவ்ருக்ஷத்தில் இருந்து பூத்து, இருளால் சூழப்பட்டிருக்கும் இவ்வுலக மக்களுக்கு ஒளிதர எல்லாம் வல்ல எனது ஈசன் குளிர்ந்த நாயகி உடனுறை ஒத்தாண்டேச்வர சுவாமியை வேண்டி பணிகின்றேன்.

அன்புடன்
தி.ஷ. ஸச்சிதானந்த சிவாசார்யர்

ஸாஹித்ய சிரோமணி. ஆகமப்பிரவீனர். சைவாகம வித்யா ரத்னம்

சிவஸ்ரீ. வி. சந்திரசேகர சிவாசார்யர்

சைவாகமப் பேராசிரியர் (ஓய்வு)

ஸ்ரீ வெங்கடேஸ்வர வேதசாஸ்த்திர ஆகமவித்யாகேந்திரம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஏ2, ஆனந்தி அடுக்ககம், 33/17, சாலைத் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.

தேதி : 21-12-2011

ஓம் ஸ்ரீ குருப்யோ நம :
நமோ வாமார்த ஜானயே.

சென்னை, தம்புச்செட்டி தெருவில் கோயில் கொண்டு எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்துவரும் **அருள்மிகு. ஸ்ரீ காளிகாம்பாள் கோயில் பிராதான அர்ச்சகரும், "சிவாசார்ய குல திலகம்", "சாக்த ரத்னாகரம்"** போன்ற விருதுகளைப் பெற்றவரும், இந்து மதத்தின் குரு என்கிற முறையில் அயல்நாட்டுக்கு சென்று ஐக்கிய நாடுகளின் சபையில் நமது இந்துமதத்தின் சிறப்பையும், சைவ-சமயத்தின் மேன்மையையும் எடுத்துரைத்துப் பெரும்புகழ் பெற்றவருமான சிவாசார்ய குல பூஷணம் **சிவஸ்ரீ. ஸாம்பமூர்த்தி சிவாசார்யர்** அவர்களுடைய அருளாசியுடன் அவருடைய குமாரர்களால் சிறப்புடன் நடத்தப்பட்டு வரும் சைவாகம கலாசார வித்யா கேந்திரத்தில், கடந்த இரண்டு வருடங்களாக பிரதிமாதம் சைவாகம விற்பன்னரான ஒரு சிவாசாரியார், சைவாகம ஞான, கிரியா, சர்யா, யோக பாதங்களில் கூறப்பட்ட விஷயங்களை சிறப்பாக உரையாற்றியவற்றை கட்டுரைகளாக எழுதி அவை தொகுக்கப்பட்டு மலராக வெளியிடப்படுகிறது.

இந்த விழாவில், இரண்டு ஆண்டுகளில் பிரதிமாதம் உரையாற்றிய சிவாசார்யர்களைப் பாராட்டி அவர்களுக்கு விருதும் வழங்கப்படுகிறது.

பொது ஜனங்களுக்கு ஆன்மிகத்தில் அதிகப்பற்று உண்டாக வேண்டுமென்பதும், ஆதிசைவ குலத்தில் பிறந்த சிவாசார்ய சிறுவர்களுக்கு சிவாகமங்களைக் கற்பதிலும், ஆலயத்தில் அர்ச்சகராக பணிபுரிவதில் ஆர்வம் உண்டாகவேண்டுமென்பதுமே இதுபோன்ற விழாக்களின் நோக்கமாகும்.

எனவே இதுபோன்ற ஆன்மிக விழாக்கள் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று எல்லாம் வல்ல பரம்பொருளாகிய அருள்மிகு. ஸ்ரீ காளிகாம்பாள் திருவடிகளை வணங்கி பிரார்த்திக்கிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!"

இப்படிக்கு,
ஸாஹித்திய சிரோமணி ஆகமப்பிரவீணர்
சைவாகம வித்யா ரத்னம்
V. சந்திரசேகர சிவாசார்யர்

Phone : 2498042

The Madras Sanskrit College & S.S.V. Patasala

(Affiliated to University of Madras)
[Recognised by Rashtriya Sanskrit Sansthan, The Ministry of Human Resource Development, Govt. of India, New Delhi, Under Adarsh Sanskrit Mahavidyalaya Scheme]

Dr. N.V. DEVIPRASAD
Principal

84, ROYAPETTAH HIGH ROAD,
MYLAPORE, CHENNAI - 600 004.
E-mail : mds.sanskritcollege@gmail.co

மதிப்புரை

மனிதனுடைய வாழ்க்கையில் அடைய வேண்டியவை நான்கு - தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம். மனிதனால் அடையப்படவேண்டியவை என்பதினால் இவை நான்கும் புருஷார்த்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த நான்கு புருஷார்த்தங்களை அடைவதிலும் ஆன்மீகம் நிறைந்திருக்க வேண்டும். புனிதத் தன்மையுடன் போற்றப்படவேண்டும். இந்த நான்கு வகைகளிலும் கடைசியாக கூறப்பட்டுள்ள மோக்ஷம்தான் மனித வாழ்க்கையின் லக்ஷியம். மற்றநாட்டவர்களை விட நம் நாட்டவர்களுக்கு இதுதான் சிறப்பு. "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்பது பெரியோர்களின் வாக்கு. நமது பிறவியைத் தொடங்கி அனைத்து கார்யங்களும் பரமேஸ்வரனுடைய அருளால் தான் நிகழ்கின்றன. எவ்வாறு உயிரினங்கள் பிறவியிலிருந்து கடைசி வரை ப்ராண வாயுவை ஸ்வாசிக்கின்றனவோ அதுபோல் ஈசனிடம் பக்தி, ஆன்மீக சிந்தனை வாழ்க்கை முழுவதும் நிறைந்திருக்கவேண்டும். இது தான் வேதங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

இத்தகைய ஆன்மீக சிந்தனை செழித்தோங்கி நிற்கத்தான் அனாதி காலமாக கோயில்கள் கட்டப்பட்டு வேதாகம சாஸ்த்ரங்கள் அறிந்த சிவாசார்ய பெருமக்களால் சாஸ்த்ரவிதிகளின்படி செவ்வனே பூஜை செய்யப்பட்டு வருகின்றன. வேதவிதிகளின் படியும், சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவையான ஆகமங்களின் விதிமுறைகளின் படியும் பூஜை முதலான சடங்குகள் நடத்தப்படுவதனால் மட்டுமே கோவில்களும், அங்கிருக்கு மூர்த்திகளும் சிறப்பு மிக்கவையாகவும், மகிமைக்கொண்டவையாகவும், நாட்டு மக்களுக்கு நலம் தருபவையாகவும் அமையும். நாட்டில் அமைதி, மகிழ்ச்சி, சுகபோகங்கள், தர்மம், ஆன்மீக சிந்தனை செழிக்க முறைதவறாது நடக்கும் பூஜைகளோடு விளங்கும் ஆலயங்கள்தான் காரணம். ஈசன் அருள் இல்லையென்றால் நம் மனதில் பக்தியே தோன்றாது.

"திவஸம் திவாஸார்தம் வா முஹுூர்த்தம் வா க்ஷணம் லவம்
நஹி அலப்த ப்ரஸாதஸ்ய பக்திர்பவதி சங்கரே!!

ஒரு நாளோ அல்லது அரை நாளோ கடைசி பக்ஷமாக ஒரு கணமோ, சிவபெருமானிடம் பக்தி ஏற்படவேண்டுமென்றால் இறையருள் இன்றி ஏற்படாது என்று மஹாபாரதம் கூறுகின்றது. பூஜை முறைகளும் சிவஞானமும் சைவாகமங்களை அறிவதன் மூலமாகத்தான் உண்டாகும்.

"பரமாப்த பரமேஸ்வர ப்ரணீதத்வேனைவ வேதாகமானாஞ்ச
ப்ராமாண்யம்

என சைவாகமங்களின் மகிமை சைவபரிபாஷை என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. சைவாகமங்கள் பல இருந்தாலும் வேத வழியை பின்பற்றுகின்ற ஆகமங்களைத்தான் சான்றாக எடுத்துக்கொள்ள வேண்டுமென காமிகாகமத்தின் கூற்று.

சைவாகமோபி த்விவித: ச்ரேளதோ (அ)ஸ்ரெளதஸ் ஸஸ்ம்ருத:
ச்ருதிஸாரமய: ச்ரெளத: ஸ்வதந்த்ர இதரோமத:

நாளடைவில் சர்யா, க்ரியா, யோக, ஞான என்ற பாதங்கள் அடங்கிய சைவாகமத்தின் நுணுக்கங்களை அறிந்த சிவாசார்ய பெருமக்களும், சான்றோர்களும் குறைந்து கொண்டே இருக்கின்ற இச்சூழ்நிலையில் ஆலயங்களுக்கு ஜீர்ணோத்தாரணம் போல் புத்துணர்ச்சி மிகமிக அவசியமான ஒன்று.

கல்லூரிகளிலும், பல்கலைகழகங்களிலும், புத்துணர்வு பயிற்சி என்னும் கருத்தரங்குகள் என்றும், சொற்பொழிவுகள் என்று பல நடத்தப்படுவது போல் சிவாசார்யர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கும் வகையில் பல கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், இளம் மாணாக்கர்களுக்கு பயிற்சி முதலியவை நடத்தப்படவேண்டும்.

இப்பெரும் முயற்சியில் மஹேஸ்வரனின் இச்சாசக்தி, ஞானசக்தி, க்ரியாசக்தி ஸ்ருரூபினியான, சென்னையில் எழுந்தருளி பக்தர்களின் கற்பக வ்ருக்ஷமாக விளங்கும் ஸ்ரீகாளிகாம்பாளின் பரம பக்தரும், அம்பாளுக்காகவே தன்னை அர்பணித்துக்கொண்டவரும், சிவாசார்ய குல திலகம், சைவாகமக்கடல் சிவஸ்ரீ தி.ஸா. ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்களுடைய புத்திரமாமணிகள் சிவஸ்ரீ தி.ஸா. ஸதாசிவோம் சிவாசார்யர், சிவஸ்ரீ தி.ஸா.காளிதாச சிவாசார்யர் மற்றும் சிவஸ்ரீ டாக்டர் தி.ஸா. ஷண்முக சிவாசார்யர் அவர்களும், மிகுந்த ஆர்வம் கொண்டு ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசார்யர் அறக்கட்டளை மற்றும் சைவாகம சொற்பொழிவுகளையும் கருத்தரங்குகளையும் நடத்துவது மட்டுமல்லாமல் பல சைவாகம நூல்களையும் அச்சிட்டு சைவாகம வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றி வருகின்றனர் என்பது மிகவும் போற்றத்தக்கது. வெறும் சொற்பொழிவுகள் அமைப்பதோடு நின்று விடாமல், காலம் காலமாய் நிலைத்து நிற்கவும் தலைச்சிறந்த சிவாசார்ய சைவாகம புலவர்களின் ஞானத்தாலும் கருத்துக்கட்டுரைகளாலும் இளையத்தலைமுறை மற்றும் பொதுமக்கள் அறிவதன் பொருட்டும் புத்தக வடிவமாக அச்சிட்டிருப்பது தங்கத்திற்கு வாசமும் சேர்வது போலாகும். சொற்பொழிவாற்றிய பன்னிரெண்டு புலவர்களும் பன்னிரெண்டு சிவாகம ஞான்சூரியர்கள் ஆவர். இவர்களின் சொற்பொழிவுகள் கட்டுரைகள் ஆகிய கதிர்களின் ஒளியினால் இளம் சிவாசார்யர்களின் நெஞ்சத்தில் மலமாகிய அக்ஞானம் நீக்கப்பட்டு ஞானஒளி பிரகாசிக்கும் என நினைக்கிறேன்.

இவ்வனைத்து கட்டுரைகளையும் மிகவும் சிரமப்பட்டு தொகுத்து வழங்கிய ஆகமப்ரவீன, சிவாகமசார்வபௌம, வ்யாகரண சிரோமணி முதலிய பிருதங்களால் போற்றப்பட்ட தன்னிகரற்ற சைவாகம வித்வான் சைவாகம கலாசார கேந்திரத்தின் முதல்வர் ப்ரம்ம ஸ்ரீ சோமசேகர சிவாசார்யர் அவர்களின் இறைப்பணி மிக மிக பாராட்டத்தக்கதாகும். இந்நிறுவனங்களின் நிர்வாகிகளும் பரமேஸ்வரனின் அருள் பெற்று மேன்மேலும் தொண்டுபுரிய வேண்டும் என ஈஸ்வரனை ப்ரார்த்திக்றேன்.

சுபமஸ்து

அன்புடன்

Dr. N.V. தேவி பிரசாத் M.A., Phd.

Dr. N.V. Devi Prasad
Sahitya Siromani, M.A.,Ph.D.
PRINCIPAL
The Madras Sanskrit College
Mylapore, Chennai-600 004.

நூல் முகவுரை

சிவனருளால் சிவபுண்ணியச்செயல்கள் தழைத்திடும்பொருட்டு, சென்னை சிவாசார்யார் அறக்கட்டளை பல சமயத்தொண்டுகளைச் செய்வதுடன், ஞானவேள்வி-யாகிய ஆகமஞான உபதேசரூபமான சிறப்புச்சொற்பொழிவுஒன்றை மாதந்தோறும் நிகழ்த்திவருவது காலத்திற்குத் தேவையானதும், எதிர்காலத்திற்கு உதவக்கூயதுமாக உள்ளதால் போற்றுதற்கு உரியதாகஉள்ளது. சிவாசாரியர் குலபூஷணமாகவிளங்கிய ஸ்ரீ ஸாம்பமூர்த்திசிவாசார்யர் அவர்களின் குமாரர்கள் மாதம் ஒரு சிவாகமஅறிஞர்களை அறிமுகப்படுத்தி, கௌரவித்துவருவது சாலப்பொருத்தமான சிறப்புப்பணியாகஉள்ளது. இத்துடன் மாதந்தோறும் பேசப்படும் சிவாகமகருத்துக்களை ஆண்டுதோறும் மலராகத் தொகுத்து வெளியிட்டுவருவது எதிர்காலத்திற்கு உதவக்கூடிய, செயற்கரிய அறப்பணியாகிறது. இவ்விதம் நடப்பதில் மூன்றாம்ஆண்டான 2011-ல் நடைபெற்ற பன்னிருமாதபேச்சுகளின் கட்டுரைகளைவெளியிட, நூல்வடிவில் தொகுத்தளித்திடு-வதற்கு என்னைத்தேர்வுசெய்து பேச்சுக்கட்டுரைகளை அளித்தனர். அவைகள் கிரந்தம், நாகரம், தமிழ் ஆகியவற்றில் பலவகை எழுத்துக்களில் கைஏடுகளாகவும், ஒரு சிலகட்டுரைகள் மூலசான்றுகள் மட்டுமாகவும், சிலகட்டுரை தமிழ்உரை மட்டுமாகவும், சிலகட்டுரை கலந்தும்விளங்கின. மேலும், ஒரேவடிவில்இல்லாமல், பேச்சுப்பொருள்கள் பலவாறாக கருத்துசேமித்தவண்ணமாக, சிறுகுறிப்புகளாக முறைமாறியும் இருந்தன. இக்கேந்திரத்தில் முழுநேரபணியாளர்கள், கணினிஅறிந்தவர்கள், பணியில் இல்லாத-தாலும், சிலர் ஈடுபாடுஇல்லாமல் இருந்தமையாலும் இவற்றை, இருமொழியையும் ஒரேதமிழ்எழுத்தில் தட்டச்சுசெய்துஉள்ளோம். இதனால் சமஸ்கிருதம் அறிந்தவர்களும், அதனை அறியாதவர்களும், இதிலுள்ள சான்றுகளை எளிதில் அறிந்துகொள்ளமுடியும். மேலும், ஒரு தலைப்பில் விரிவாக பேசப்பட்டமையால், இக்கட்டுரைகள் பலநூல்களின் மேற்கோள்களையும், சான்றுகளையும் பெற்றுஇருப்பது, கல்விபயில்வோருக்கு மிகவும் பயனுள்ளதாக, அமைந்துஉள்ளது. இம்மலரில் ஒவ்வொரு கட்டுரைக்கான பேச்சுப்-பொருளும், சிறுசிறுஉட்பிரிகளின்கீழ், சிறுசிறுபகுகளில் சமயம் பற்றி அறிய ஆர்வமுள்ள-வர்களுக்கு ஏற்றவகையிலும், எளிதில் யாவரும் விளங்கிக்கொள்ளுமாறும், கட்டுரை-யாளரின்கருத்தும், நோக்கமும் சிதைவுறாமலும், கருத்துமாறாமலும், தலைப்புத்தொடர்பு உடையதாகவும், பலதலையங்கங்களில் தொகுத்து, பிரித்து, முறைப்படுத்திஉள்ளது சிறப்புஅம்சமாகும். இந்த வடிவஅமைப்பு ஆகமபாடசாலை மாணவர்களுக்கும்,

போதிக்கும்ஆசிரியர்களுக்கும், தமிழில் ஆகமகருத்துக்களின் எழுத்துத்தேர்வு, பேச்சுப்-போட்டி இவற்றிற்கு, வினாக்களை தயாரிக்கவும், விடைகளைஅறியவும், எளிதில் செய்தியை எடுத்துக்கையாளவும், பகுத்து, மனதில்பதித்துக்கொள்ளவும் மிகவும் ஏற்ற அமைப்பாகும் எனலாம். இந்துசமய ஆகமகருத்துக்களை எளியமுறையில் தமிழில் அறிய விரும்புவோருக்கு, இக்கட்டுரைத் தொப்புநூலானது அரியபலகருத்துக்களைப் பல்வேறு சான்றுகளுடன் அறியபெரிதும்உதவும் என்பதில் வேறுகருத்து இருக்கமுடியாது. கட்டுரையைஎழுதிஅளிக்காதவர்களின் பேச்சுப்பொருளும், பதிவிலிருந்து குறிப்பு எடுக்கப்பட்டு, குறைபடாவண்ணம், ஆண்டின் பன்னிருமாதகட்டுரைகளும் ஒரேவடிவில் பொருத்தமாகதொகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டுரையும் மும்முறை பிழைநீக்கத் திருத்தம் செய்யப்பட்டப்போதிலும், கணினிப்பதிப்பில் ஏற்படும் குறைகளால் ஏற்படும் சிலகுறைகளைக்காண்போர், பிழைநீக்கிப்பொருத்தருள வேண்டுகிறேன். சமஸ்கிருதத்திலும், ஆங்கிலம், பிரஞ்ச்சு முதலிய பிறமொழிகளிலும், பெரியநூல்கள் பல இருப்பினும் அவற்றின்பொருளை பட்டப்படிப்பு இல்லாத பாமரமக்களும், இந்துசமயத்தின் பலதரப்பட்டபொதுமக்களும் அவற்றை எளிதில் அறிந்திடஇயலாது. சமயநூலின்படியான சடங்குகளின் விளக்கத்தை நிகழ்ச்சிகளில் மட்டுமே அவ்வப்பொழுது விளக்கப்-படுவதால் அறியமுடியும். இக்குறையைப் போக்கிடவும், அறியபல ஆகமகருத்துக்களை தலையங்கமாகக்கொண்டு மூன்றுஆண்டுகளாக முற்றிலும், எளியதமிழில் கட்டுரை வடிவிலேயே இந்நூல் திட்டமிட்டுநடத்தப்பட்ட கட்டுரைகளின் திரட்டாக வெளியிடப்பட்டு உள்ளதால், இது இந்துசமயமக்கள் அனைவருக்கும் உதவிடும் எனலாம். ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய, அறியவேண்டிய சமயசெய்திகள்நிறைந்த சிவஞானமாகிய அறிவுக்களஞ்சியமாக இந்தநூல்திகழும் என்பதில் ஐயமில்லை. இந்நூலை வடிவமைத்துத் தொகுத்திட்டதில் பெருமிதமும், மகிழ்ச்சியும் கொண்டு, நூலும், சமயமும் சிறக்க வாழ்த்தி, நன்றி தெரிவித்து வணங்குகிறேன்.

இங்ஙனம்,
சமயப்பணியில் உள்ள,
வி. சோமசேகர சிவாசார்யர்
முதல்வர், S.K.V.K.சென்னை.

வாழ்க சீரடியாரெல்லாம்

பொருளடக்கம்

கட்டுரையின் தலைப்பு & ஆய்வாளர்கள்

1.	**சைவாகம மந்திரவகைகள்** சிவஸ்ரீ T.G. கல்யாண சுந்தர குருக்கள்	20
2.	**ஆகமங்களில் அக்னிகார்ய விதானம்** சிவஸ்ரீ N. நீலகண்ட சிவாசார்யர்	33
3.	**சிவாலய பிரதோஷகால பூஜை முறை** சிவஸ்ரீ V.சேதுராம சிவாசார்யர்	39
4.	**சைவ சித்தாந்தத்தில் பாசவகைப்பொருட்களின் இயல்புத் தொழில் விளக்கம்** சிவஸ்ரீ T.V. ராஜப்பா குருக்கள்	56
5.	**விசேஷத்திரவிய அபிஷேகவிதானம்** சிவஸ்ரீ S. கற்பூர பட்டர் M.A.	69
6.	**சிவஞான தீக்ஷையின் தசகாரிய விளக்கம்** சிவஸ்ரீ T.S.சுவாமிநாத சிவாசார்யர் B.A.	75
7.	**காக்கும் காளியின் காருண்ய மஹிமை** சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யர்	100

உ

<u>நமச்சிவாய்யாம்</u>

சைவாகம மந்திர வகைகள்

கட்டுரையாசிரியர்

ஆகம ப்ரவீணர். சைவாகம போதகர்

சிவஸ்ரீ. T.G. கல்யாணசுந்தர குருக்கள்

சிட்லபாக்கம், சென்னை - 64.

ஓம் இத்யேகாக்ஷரம் பிரம்ம வ்யாஹரந்திரயச் சிகா: .
தஸ்மை தாராத்மனே மேதா தக்ஷிணா மூர்த்தயே நம: .
நமச்சிவாய சக்தியைச பிந்தவே சாச்வதாயச.
குரவேச கணேசாய கார்த்திகேயாய தீமதே.

<u>மந்திர சொல் விளக்கம் :</u> சிவாகமங்களில் பலவகை மந்திரங்கள் கூறப்படுகின்றன. "மநநாத் திராயதே இதிமந்த்ர:" என்னும் வசனத்தால், மனனம் செய்வதனாலேயே, துக்கத்திற்கு காரணமானவற்றிலிருந்து பாதுகாப்பு ஏற்படுகிறது என்பதால் மந்திரம் எனப்படுகிறது. சப்தஸ்வ- ரூபமான ஒலிஎழுத்துக்களான அகாராதி க்ஷகாராந்தமான மாத்ருகாக்ஷரங்களே மந்திரங்கள் ஆகும். பார்ப்பதற்கு சாதாரண எழுத்துக்கள் போல் தோன்றினாலும் அளவற்ற சக்தியைக் கொண்ட அந்த மாத்ருகைகள் (அக்ஷரங்கள்) ஒவ்வொன்றும் தனித்தனி நிறங்களுடன் தெய்வத்தின் வெவ்வேறு அவஸ்தாபேதங்களை போதிக்கும் தன்மையோடும், மற்றும் பல குணங்களோடும் விளங்குபவை. ஒன்றோடொன்று இணைந்த சில குறிப்பிட்ட மாத்ருகா-க்ஷரங்கள், ஸத்குருவின் உபதேசத்தாலும், சாத்திரத்துடன் இடைவிடாது, வாசிகம், உபாம்சு, மானஸம் என்கிற மும்முறையில் ஜபிப்பதாலும், வலுப்பெற்று, சொல்லுக்கும், மனதுக்கும் எட்டாத சக்தியை (பூர்ணமாக) நிறைவாகத் தருகின்றன.

ஆசாரியர்கள் (அதாவது குருவின் மூலமாக) நமக்கு பொதுவானதாகவும், உயர்ந்ததாகவும் உள்ள மந்திரமான வேதசிவாகமங்களை உபதேசித்து உள்ளார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இவற்றில் வேதம் பொது நூல் எனவும், ஆகமம் சிறப்பு நூலெனவும் உள்ளன. சிவாகம சித்தாந்தத்திலே, சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வழிகள் உள்ளன. ஆனால் ஒவ்வொன்றும், அடுத்துள்ள ஒன்றைச் சென்றடைகின்ற சோபானங்களாக (படிகளாக) மிளிர்கின்றன. இவைகளில் இரண்டாவதான கிரியையில், முக்கியத்துவம் பெற்று விளங்குவது, மந்திரத்துடன் கூடிய திருவாராதனையே ஆகும். அது, அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, பூஜை, ஜபம், ஹோமம், நைவேத்யம், உபசாரம் என்று இப்படியாக பல பகுதிகளாக உள்ளது. அதில் எத்தனை பகுதிகள்

உள்ளனவோ, அவ்வனைத்திற்கும், மந்திரம் என்பது முக்கியமாக ஓர் உறுப்பாக உள்ளது. "மந்திரம்விநா கிரியாநாஸ்தி கர்ஷணாத் யர்சனாந்திகா" என்பது ஆகமவாக்யமாகும். மந்திரமின்றி கிரியை இல்லை என்பதும், மந்திரமில்லாத வழிபாடு பலன் தராது என்பதும் சிவாகமத்தின் கருத்து ஆகும்.

அம்மந்திரம் அனாதியாகவே, சிவத்திலிருந்து தோன்றிய ஒன்றாகும். இதனால், மந்திரமின்றி கிரியையும், கிரியையின்றி யோகமும், யோகமின்றி ஞானமும், ஞானமின்றி மோக்ஷமும் இல்லை என்பது முடிவாகச் சொல்லப்பட்டு உள்ளது. மூலாகமங்களான, காமிகம் முதல் வாதுளம் வரையிலாக உள்ள 28 சிவாகமங்களில், "மந்திராவதார விதிபடலம்" என்று உள்ள பகுதியில் மந்திரவகை விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் முக்கியமாக, ஆசாரியத்தன்மை அடைவதற்கு, சமயம், விசேஷம், நிருவாணம், என்ற மூவகை தீக்ஷையின் வழியாக சென்று, தகுதி பெற வேண்டும் என்பதாகும். முதலில் சிவாகமத்தை பயிலுவதற்கு உரிய தகுதி பெற, சைவசமய தீக்ஷை செய்திருக்க வேண்டும் என்பது விதிமுறை. தீக்ஷையில் உள்ள மந்திரம் மிக-மிக முக்கியமாகவும், சிறப்பாகவும் உள்ளது. இதில் "ப்ராஸாதமந்திரம்" எனப்படும் மந்திரம் ஆனது, அனைத்திற்கும் ஜீவனாக (உயிராக) உள்ளது என்பது, உணர்வினால் மட்டும் அறிந்த பொக்கிஷம் ஆகும். பிராஸாத மந்திரத்தைப் பற்றி இதன் நிறைவுப்பகுதியில் காண்போம். சிவாகமங்களில் (1) சம்ஹிதாமந்திரம், (2) பதமந்திரம், (3) மூலமந்திரம், (4) அஸ்திரமந்திரம், (5) சப்தகோடிமந்திரம் என்று மந்திரங்கள் குறிப்பாகச் சொல்லக்கூடியவை.

I. <u>சம்ஹிதாமந்திரம் :</u> - (ஆகமத்தின் மந்திரங்கள் 11) இதில் பஞ்சபிரம்ம மந்திரங்கள் 5-ம், ஷடங்க மந்திரங்கள் 6-ம் என இருபகுதிகளும் அடங்கியுள்ளன. பஞ்சபிரம்ம ஷடகங்களின் பீஜமந்திரங்களை அறிவோம்.

"காரம் பிரதமம் பிந்து: ஸத்யோஜாதஸ்ய பீஜகம். (ஹம்)
திருதீய ஸ்வர ஸம்யுக்தம் வாமதேவ முதாஹ்ருதம். (ஹிம்)
பஞ்சம ஸ்வர ஸம்யுக்தம் அகோரம் பிரம்மபீஜகம். (ஹூம்)
ஏகாதச ஸ்வரோ பேதம் புருஷம் பரிபட்யதே. (ஹேம்)
திரயோதச ஸ்வரோ பேதம் ஈசாநம் பஞ்சமம் விது:. (ஹோம்)

இவ்வாறாக கூறப்பட்டுள்ள [1]ஹம் [2]ஹிம் [3]ஹூம் [4]ஹேம் [5]ஹோம் ஆகியவை ஐந்தும், சிருஷ்டிக்கிரமத்தில் பஞ்சபிரம்ம பீஜமந்திரங்கள் ஆகும். இவ்வாறே, 2, 4, 6, 12, 14, 16-வது எழுத்தான உயிரெழுத்தோடு கூடிய சிவபீஜமாகிய "காரமான, உயிர்மெய்யெழுத்து முறையே, [1]ஹாம் [2]ஹீம் [3]ஹூம் [4]ஹைம் [5]ஹௌம் [6]ஹ: என்ற ஆறும், இதயம், சிரசு, சிகா, கவசம், நேத்ரம், அஸ்த்ரம், எனும் ஆறு அங்கங்களின் பீஜாக்ஷரமந்திரங்கள் ஆகும். மேற்காட்டிய பதினோரு பீஜஎழுத்துக்களும் "சம்ஹிதா மந்திர பீஜமந்திரங்கள் ஆகும். இதில்

ஷடங்க மந்திரத்தில், "வித்யாதேஹம்" என்ற மந்திரத்தை நீக்கி, மூலத்தை சேர்த்துச் சொன்னால், சம்ஹிதாமந்திரம் எனப்படும்.

II. <u>பதமந்திரம் :</u> இது சிறப்பாகச் சொல்வதானால் விரிவாக உள்ளதில் ஷடத்வமந்திரம் என்றும், குறிப்பாகச் சுருக்கிச்சொல்லும்பொழுது பதமந்திரம் என்றும் கூறப்படுவதாகும். ஷடத்வா என்பதில் மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலா என்பன கூறப்படும். கலை என்பது, சாந்தியதீதகலை, சாந்திகலை, வித்தியாகலை, பிரதிஷ்டாகலை, நிவிருத்தி-கலை என்று ஐந்து கலைகள் ஆகும். இவற்றில் சாந்தியதீதகலையில், ஓம் என்ற ஒரு பதமந்திரம் மட்டும் உள்ளது. சாந்திகலையில், வியோமவியாபிநே என்பது முதலாக யோகபீடஸம்ஸ்திதாய என்பது வரையிலான பதினொன்று பதமந்திரம் உள்ளது. வித்யாகலையில், தியானாஹாராய முதல் வியாபின்வியாபின் வரை இருபதுபதமந்திரங்கள் உள்ளன. பிரதிஷ்டாகலையில் அருபிந்நருபிந் முதல் மஹேச்வராய என்பது வரை இருபத்தொன்று உள்ளன. நிவிருத்தி-கலையில் மஹாதேவாய முதல்ஓம் நம: வரை இருபத்தெட்டு உள்ளன. ஆக எண்பத்தி ஒன்று பதமந்திரங்கள் ஐந்துகலைகளில் ஒடுங்கி விளங்குவன 81 ஆகும். இதில் மற்றொரு சிறப்பு ஒவ்வொரு பதத்திற்கும் எத்தனை எழுத்துக்கள் உள்ளன என்பதையும் ஆகமம் கூறியுள்ளது.

<u>பிரணவ மந்திரம் :</u> பிரணவ மந்திரம் என்பது ஓங்காரமே ஆகும். ஓம் என்பது அகர உகர மகரங்களின் சேர்க்கையே ஆகும். ஓங்காரத்து உட்பொருளாய் இருப்பவனே பரம்பொருள். ஓங்காரமே பரபிரம்மம். இதுவே அனைத்திலும் உயர்வானது. இதுவே தாரகம் என்றும், தீபகம் என்றும் பெயருடையது. எல்லாம் இந்த ஓம் ஒன்றிலேயே ஒடுங்கியும் தோன்றியும் விளங்குவன. பிரணவம் இல்லாத மந்திரம் பிராணன் இல்லாததாகும்.

பிராணநாகிய இப்பிரணவம், ஆவாஹனம், பிராணப்பிரதிஷ்டை ஆகிய கிரியைகளில் முதலில் முக்கியமாக உள்ள "ஓம், ஆம், ஹ்ரீம், க்ரோம், யரலவ சக்ஷஸஹோம்" என்பது பிரணவத்தின் விரிவான அம்சமே ஆகும். இதில் ஓம் என்பது ப்ரணவம், இது ஆத்மபீஜம், ஆம் = பாசபீஜம், ஹ்ரீம் = சக்திபீஜம், க்ரோம் = அங்குசபீஜம், யம் = ப்ராணவாயு பீஜம். பிராண சக்திக்கு பிராணவாயு ஆதாரம். ஸர்வாத்மபிந்துஸகிதம் ஆகாரம். யம் வாயுபீஜம், ரம் = அக்னிபீஜம், லம் = பிருதிவிபீஜம், வம் = ஜலபீஜம், ஹொம் =ஆகாசபீஜம், பிராணன் ஸம் என்பதும், ஜீவன் ஹம் என்பதுமாம். ஆகாசஸ்தானத்திலே இருக்கிற ப்ராணனை ஆத்ம-பீஜத்தினாலோ, யோஜிக்கையினால் ஆத்மபிராணஸம்யோகம் ஏற்படும். அதற்கு மூலம் பிரணவம். ஆகையினாலேயே பிரணவம் என்று சொல்லப்பட்டது. இந்த ப்ரணவத்துக்குள்ளே ஸகலஆத்மாக்களும் பொருந்துகையினாலும், இது மூலமாகும். ஸர்வபீஜாக்ஷரங்களும் இதனுள்ளே தோன்றும். அதிலே நாதம் என்று பெயர். ஊம் என்கிற பிந்துஸஹிதமாக சொல்லுகிறமையினால் பிந்துநாதம் என்று சொல்லுப்பட்டது. அதற்கு ஸகாராந்தமும், பிரணவ ஒகாராந்தமும், பிந்துவும் சம்புடமாகையினால் ஹோம்ஸ: என்று சொல்லப்பட்டது. இது

ஆத்மபிராணனை ஜீவனுடனே கூட்டப்பட்டது ஆகும். ஹும் என்று பிராணனை பின்பு ஹம்ஸ என்று ஜீவபிராண ஐக்யத்வம் செய்து ஸோஹம் என்று ஜீவனை பிராணனுடனே கூடினது ஆகும். இதிலே தோன்றும் அக்ஷரங்கள், பிரணவத்துக்குள்ளே பிந்து தோன்றும், பிந்துவுக்குள்ளே ஹகாரம் தோன்றும், ஹகாரத்துக்குள்ளே உகாரம் தோன்றும். உகாரத்துக்குள்ளே அகாரம் தோன்றும். இவை உயிரெழுத்து ஆகும். இனி உடலெழுத்து மகாரம் தோன்றும். அகாரத்திலேயே அ ஆ அம் அ: என்ற அகாராதிக்ஷகாராந்தமான ஐம்பத்தொன்று அக்ஷரமும் ஆகாயத்திலே தோன்றும். அ, ஆ, அம், அ: என்ற அக்ஷரம் 4ம் உகாதரத்திலே அக்ஷரம்யும் உகாரத்திலே தோன்றும். இந்த நான்கும் உடலுயிர் நிற்கப்பட்டது. உகாரத்திலே இம் ஈம் உம் ஊம் ஏம் ஐம் இந்த ஆறும் உடல் ஊகாரமும் அகாரமும் உகாரத்துள்ளே நிற்கும் இனி க முதல் ம வரையுள்ள 25 எழுத்துக்களும் உடல். இதிலே அ எனும் அக்ஷரம் உயிரும், அகாராந்தமான அக்ஷரம் உடலும். இவை இரண்டும் ஸம்புடம். ஆகையினால் அம் என்று பெயராயிற்று. சப்தாக்ஷரம், அஷ்டாக்ஷரம், நவாக்ஷரம், தசாக்ஷரம். இவை நான்கும் பிந்துஆக நால்வகை வாக்குகள் தோன்றும். அதற்கு சூட்சுமை, பச்யந்தி, மத்யமா, வைகரீ என்பது பெயராகும். யாவும் இவை நான்கினுள் நிற்கும் என்கிறது. பிந்துவுக்கு ரூபம் இல்லாமையினாலே உம் என்று கூறுப்படுகிறது. அகாரமும் விஸர்ஜநீயமும் கூடப்பட்டது. பிந்துவுக்கு உடலுயிரும் கூடியதற்கு அ என்று சொல்லப்பட்டது. நாதத்திற்கு யரலவச ஷஸஹளக்ஷ என்று சொல்லும் பத்து எழுத்துக்களும் ஷோடசஸ்வராதியிலே கூட உடல்உயிரென்று சொல்லப்பட்டது. அ ஆ அம் அ : என்ற இந்த நாலு அக்ஷரமும் ஆகாசபீஜமாகிய ஹகாரத்துக்குள்ளே அடையும், இந்த அகாராதி-க்ஷகாராந்தமான ஐம்பத்தொன்று அக்ஷரமும் ஆகாயத்திலே தோன்றும், அ. ஆ. அம். அ: என்ற அக்ஷரம் 4ம் உகாரத்திலே தோன்றும், ரு ரூ ள ளு அ ஆ அம் அ: என்ற அக்ஷரம் எட்டும் மகாரத்திலே தோன்றும். ககாராதி மகாராந்தமான அக்ஷரங்கள் இருபத்தி ஐந்து, பிந்துவில் தோன்றி அக்ஷரம், நாலு, நாதத்திலே தோன்றின, அக்ஷரம் நாலு, நாதத்திலே தோன்றின, அக்ஷரம் பத்தும் ஆக அக்ஷரம் ஐம்பத்தி ஒன்று என்று அறிக.

அகாரச்ச உகாரச்ச மகாரோ பிந்துரேவச.
யோகேந ப்ரணவம் ஜ்ஞேயம் பஞ்சதேவாத்மகம் பரம்.

அகார மகார மகார பிந்து நாதம் இவை ஐந்தும் பிரணவகலைகள். இவை ஐந்தின் சேர்க்கையே பிரணவம். இவற்றின் அதிதேவதைகள் பிரம்மாதிகள் ஐவர் என்று அறிக. இவ்விதம் ஸர்வமந்திர அக்ஷராத்மகம் பிரணவம் என்று அறிக.

ஸ்ரீ சுப்ரமண்ய பெருமாள் வாமதேவ முனிவருக்கு பிரணவம் ஆறுவகைப் பயன்களைக் கொண்டதாக கூறுகிறார்.

பிரதமோ மந்த்ரரூபஸ்யாத் த்விதீயயோ யந்த்ரபாவத: தேவதா I
தேவதார்த்தஸ் திருதீயார்த்த: ப்ரபஞ்சார்த்தஸ்தத: பரம்
சதுர்த்த: பஞ்சமோர்த்தஸ்யாத் கூருரூபப்ரதர்சத: I
ஷஷ்டஸ்சிஷ்யா தமரூபோரத்தாப் பரிகீர்த்திதா:II

இதனால் (1) மந்திரரூபம், (2) யந்திரரூபம், (3) தேவதார்தம், (4) ப்ரபஞ்சார்த்தம், (5) குரு-ரூபம், (6) சிஷ்யாத்மரூபம் என ஆறுவகை ஸ்வரூபங்க்ளில் பிரணவம் பயன் தருவதாகும். சித்தாந்த ஸாரவளியில் திரிலோசன சிவாகார்யர். இறைவனை "ஓம்இத்யாதி மநூச்சரத்த் வணிகதம் ஜோதிடர்" என்று பிரணவ மந்திரத்தின் சுடரொளிவடிவினர் என்று குறிப்பிட்டு உள்ளார். உலகங்கள் ஓதப்புரோதரூபமாய் மேலுங்கீழுமாய் பிரணவாத்மகமாய் உள்ளதையும் குறிப்பிட்டு உள்ளார். இந்த ப்ரணவ மந்திரமானது பலவாறு விளங்குகிறது. ஆத்யந்தப்பிரணவம், வேதப்ரணவம், சாக்தப்ரணவம், ஓஷ்டபிரணவம், பஞ்சபிரணவம், தசப்ரணவம், என்ற பெயர்- களால் கூறப்பட்டு கையாளப்படுகிறது. இதனால் ஓம் எனும் பிரணவம் எங்கும், எதிலும் எல்லாமாய் மந்திரங்களில் இடம்பெற்று விளங்கும். ஓம் எனும் தொடக்கம் கொண்ட மந்திரம் ஆதிபிராணவாத்மகம். முதலிலும், முடிவிலும் ஓம் என்பதை உடையது ஆத்யந்தகம். நூமாவளி அர்ச்சனையின் போது ஓம் சிவாய நமோநம ஓம் என்பதும், வேதபிரணவம் ஓம்ஹரிஹி: ஓம் என்பதும் பஞ்சபிரணவம், ச்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் என்ற கணேச மந்திரபீஜங்கள் ஐந்தும் பஞ்சபிரணவம் என்று கூறப்படுகிறது. ஓம் ஐம் ஹ்ரீம் ச்ரீம் என்ற மூன்றுடன் கூடியது சாக்த-பிரணவம் ஹ்ரீம் என்பதுமாக கூறுவர்.

III <u>மூலமந்திரம் : -</u> இது பிரணவமும், சிவபஞ்சாக்ஷரமும் ஆகும். மூலமந்திரம் என்பது பொதுவாக உள்ளன என்றாலும், சிவமந்த்ரம் என்பதே முதலாவதாக மூலமாக சொல்லக்கூடியது. சிவமந்திரம் என்பது ஆறுவகைப்படும். அவை பஞ்சாட்சரம் எனப்படுபவை.

1) தார பஞ்சாக்ஷரம் - இது "ஓம்நமச்சிவாய" என்பதாகும். 2) பிராஸாத பஞ்சாக்ஷரம் - இது "ஓம்ஹாம்ஹௌம் சிவாயநம" என்பதாகும். 3) ஸ்தூல பஞ்சாக்ஷரம் - இது "நமச்சிவாய" என்பதாகும். 4) சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம் - இது "சிவாயநம:" என்பதாகும். 5) மிச்ர பஞ்சாக்ஷரம் - இது "நமசிவாய சிவாயநம:" என்பதாகும். 6) சுத்த பஞ்சாக்ஷரம் - இது "சிவாயநம:" என்று உள்ளதாகும். மூலமந்திரத்தில் அடுத்ததாக உள்ளது. அனைத்துவிதமான மூர்த்திகளுக்கும் சொல்லக்கூடிய தனித்தனியாக கூறப்பட்டு உள்ளவை ஆகும். இதன் விதிமுறையானது "ஸ்வநாமாத்யக்ஷரேணைவ நமோந்தம் ப்ரணவாதிகம்" என்று உள்ளது. அதாவது ஆதியிற் ப்ரணவம் (ஓம்) என்பதும், பிந்து நாதம் ஹம்" என்பதும், இவைகளோடு கூடிய தேவநாமத்தின் முதலெழுத்தை இரண்டாவதாகவும், (நமோந்தம்) (நம:) என்பதை கடைசியாக கொண்டு- உள்ளவாறு அமைந்துள்ள, நாலாவது வேற்றுமையுடன் மூர்த்தி நாமத்தை உச்சரிப்பது, மூலமந்திரம் எனப்படும். இது பொதுவிதி.

இதற்கு எடுத்துக்காட்டுகள் : (1) ஓம் (3வது) கம் கணபதயே நம: (2) ஓம் (3வது) தம் தக்ஷிணாமூர்த்தயே நம: I (3) ஓம் சம் சரவணபவாய நம: I (4) ஓம் ஷம் ஷண்முகாய நம:I என்பனவாகும். இவ்வாறே பிற ஆவரணதெய்வங்கள் மற்றும் நவகிரஹாதி தேவதைகளுக்கும், அதனதன் பெயரின் முதலெழுத்துடன் அறிந்திடுவது முறை. மேலும் கணபதிக்கு, பஞ்சபிரம்ம ஷடகங்க பீஜமந்திரங்களையும், அந்த முதலெழுத்து பீஜத்தாலேயே கற்பித்தல் வேண்டும். "(2வது)காந்தேநைவ ஸமாயுக்தம் பிரம்மாங் காநிப்ர கல்பயேத்" என்ற வசனத்தின்படி, காந்தம் என்பது (3வது) ககாரம் ஆகும். பரம்மபீஜங்கள் கம், கிம், கும், கேம், கோம் என்றும், ஆறு அங்கபீஜங்கள் முறையே காம், கீம், கூம், கைம், கௌம், க: என்பதும் ஆகும். இதுபோலவே சுப்ரமண்யருக்கும், உமைக்கும். ஸம் ஸிம் ஸும் ஸேம் ஸோம் என்பவை பிரம்மபீஜங்களும், ஸாம், ஸீம், ஸூம், ஸைம், ஸௌம், ஸ: என்பவை அங்கபீஜங்களும் ஆகும். மேலும் ஆகமத்தில் சுப்ரமண்யருக்கு ஜகத்புவம், வசத்புவம், விச்வபுவம், ருத்ரபுவம், பிரம்மபுவம், புவத்புவம் என்று 6, ஷண்மந்திரங்களும் தனியே கூறப்பட்டுள்ளன.

IV <u>விசேஷ மந்திரங்கள் : -</u> ஆகமங்களில் பலவகையான சிறப்பு மந்திரங்களும் உள்ளன. அவற்றுள் சிலவற்றை இனி காண்போம். எடுத்துக்காட்டாக

(1) <u>தசாக்ஷர மந்திரம் : -</u> இது பத்து எழுத்துக்களால் அமைந்ததாகும்.

ப்ரணவம் ப்ரதமம் புரோக்தம் ஆம் ஈம் ஊம் ததனந்தரம்.
வ்யோமவ்யாபீ சதுர்த்யந்தம் தசாக்ஷர மிதிஸ்மிருதம்

மேற்படி வசனத்தின்படி "ஓம்ஆம்ஈம்ஊம் வ்யோமவ்யாபிநேஓம்" என்பது தசாக்ஷரம் எனப்படும் சிறந்த சிவமந்திரமாகும்.

(2) <u>மிருத்யுஞ்ஜய மந்திரம் : -</u> இது சிறப்புமிக்க மூன்றெழுத்து மநுவாம். வேதாத்யஷ்டமஷ் <u>ஷஷ்டஸ்வரார்தேந்த்</u> வன்விதச்ச ஸ: "ஓம்ஜூம்ஸ:" என்பது மூன்றெழுத்திலமைந்த மந்திரமாகும். (3) <u>ஆத்ம மந்திரம் : -</u> "<u>ஓம்ஹாம் ஹம்ஹாம்</u> ஆத்மநேநம:" என்பதாம். (4) <u>ஸ்வப்நதேவமந்த்ரம்</u> சுவப்னத்தாலறிய உதவும் மந்திரம். "லிஹித்வயம் வதேத் சூலபாணயே ஸ்வெதிஹேதிச" எனும் விதியால், "ஓம்லிஹிலிஹிசூலபாணயே ஸ்வாஹா." என்பதாம். (5) <u>திரிதத்துவாதிபதிமந்த்ரம் : -</u> மும்மூர்த்திகளின் முத்தத்துவ மந்திரம்.

ஓம் ஹாம் ஆத்மதத்வாய நம: அதிபதயே பிரம்மணேநம: .
ஓம் ஹீம் வித்யாதத்வாய நம: அதிபதயே விஷ்ணவேநம: .
ஓம் ஹூம் சிவதத்வாய நம: அதிபதயே ருத்ராயநம: .

(6) <u>தசதிக்பாலக மந்திரங்கள் :</u> பத்து திசை அதிபதிகளின் மந்திரம்

(1) கிழக்கில் : ஓம் லம் இந்திராயநம : (2) தென்கிழக்கில் : ஓம் ரம் அக்னயேநம: (3) தெற்கில் : ஓம் ஹம் யமாயநம: (4) தென்மேற்கில் : ஓம் ஷம் நிருருதயேநம: (5) மேற்கில் : ஓம் வம் வருணாயநம: (6) வடமேற்கில் : ஓம் ஸம் வாயவேநம: (7) வடக்கில் : ஓம் ஸம் ஸோமாய (குபேராய) நம: (8) வடகிழக்கில் : ஓம் சம் ஈசாநாயநம: (9) மேல்திசைக்கு, வடகிழக்கின் தெற்கே : ஓம் அம் பிரும்மணே நம: (10) கீழ்திசைக்கு, தென்மேற்கின் வடக்கே : ஓம்ஹ்ரீம் விஷ்ணவேநம : இவை பத்தும் பத்து பீஜமந்திரங்களுடன் கூடிய நாமமந்திரங்கள்.

(7) <u>வித்யாதேஹ மந்திரம் :</u> - சிவனது ஞானகிரியாசக்திதேஹமநு ஹஓம்ஹாம் ஹௌம் வித்யாதேஹாய நம:" இம்மந்திரம். ஸகளீகரணம், அர்கியபூஜை, ஆவாஹணம் போன்ற தருணங்களில் சொல்லப்பட்டு இடம்பெற்றுள்ளதாகும்.

(8) <u>பூஜாகிரியாங்க மந்திரம் :</u> - இம்மந்திரம் ஆகமபூசையில் முதலாவதாகச் செய்யப்படும் பத்து சம்ஸ்காரங்களுக்கு உரியவை. 1) ஆவாஹநம் - மூலமந்திரம் மற்றும் ஸத்யோஜாத மந்திரம். 2) ஸ்தாபனம் - வாமதேவமந்திரம். 3) ஸந்நிதானம் - அகோரமந்திரம். 4)ஸந்நிரோ-தனம்தத்புருஷமந்திரம். 5) அவகுண்டனம் - ஈசானமந்திரம். 6) தேனுமுத்திரைக்காட்டல் - மூலமந்திரம். 7) பாத்யம் - நமோந்தமாய் அமைந்த மூலமந்திரம். 8) ஆசமனம் - ஸ்வதாந்த-மாயமைந்த மூலமந்திரம். 9) அர்கியம் - ஸ்வாஹாந்தமாய் அமைந்த மூலமந்திரம். 10) புஷ்பதா-நம் - மூலமந்திரம் முதலானவற்றால் செய்தல் வேண்டும். மேற்கண்டவற்றுள் ஐந்து மற்றும் ஆறுஎண்ணிக்கையில் உள்ளதை மட்டும் நீக்கி மற்றவைகளைச்செய்யும் முறையே "அஷ்ட-ஸம்ஸ்காரம்" எனப்படும். இம்முறை பரிவார தெய்வத்திற்கு உரியவை ஆகும். மேலே குறிப்பிட்ட பத்து மந்திரங்களோடு ஆறுமந்திரங்களையும் சேர்த்து செய்வதும்உண்டு. அவை ஷோட-சோபசாரம் எனப்படும். அவை : 11) தூபம் அளித்தல் - ஸ்வாஹாந்தமான மூலமந்திரம், 12) தீபம் காட்டுதல் - ஸ்வாஹாந்தமான மூலமந்திரம், 13) நைவேத்யம் காட்டுதல் - ஸ்வாஹாந்தமான மூலமந்திரம், 14)பாநீயம் - ஸ்வாஹாந்தமானமூலமந்திரம், 15) ஜபஸமர்ப்பணம் - ஓம்ஹாம் மூலம், 16) ஆராத்ரிகம் - ஸ்வாஹாந்தகவசமந்திரம், இவ்விதம் பூஜையின் 16 வகை உபசார கிரியைகளின் மந்திரங்களை அறியலாம்.

<u>அஸ்திர மந்திர வகை : -</u>

(1) சிவாஸ்த்ர மந்திரம் - "ஓம்சிவாஸ்திராயபட்" (6 எழுத்து)

(2) அகோராஸ்திர மந்திரம் - "ஓம் ப்ரஸ்புர ஸ்புர கோர கோரதர தனுரூப சடசட ப்ரசட ப்ரசட, கஹகஹ வமவம காதயகாதய ஹூம்பட் ஸ்வாஹா" (இது பல எண்ணிக்கை எழுத்தால் பலவகை.)

(3) "வியோமாஸ்திரம்" - "ஓம் மாம் மீம் மூம் வ்யோமவ்யாபிநே ஓம்".
(4) பாசுபதாஸ்திர மந்திரம் - "ஓம் ச்லீம் பம் சும் ஹூம் பட் (6 எழுத்து)
(5) க்ஷுரிகாஸ்திர மந்திரம் - "ஓம் சிம் சிம் க்ஷுரிகாஸ்த்ராய பட்"
(6) பிரத்யங்கிராஸ்த்ர மந்திரம் =
"ஓம்ஹ்ரீம் கிருஷ்ணவாஸஸே, ஸிம்ஹவதனே, மஹாவதனே,
மஹாபைரவி, ஸர்வசத்ருகர்ம வித்வம்ஸிநீ, பரமந்திரச்
சேதினி, ஸர்வபூததமநி, ஸர்வபூதான்பந்தபந்த, ஸர்வ
விக்னாந் சிந்திசிந்தி, ஸர்வவ்யாதிம் நிகிருந்த நிகிருந்த.
ஸர்வதுஷ்டான் பக்ஷபக்ஷ ஸ்வாலாஜிஹ்வே, கராளவ்கத்ரே,
கராளதம்ஷ்டிரே, பிரத்யங்கிரே, ஹ்ரீம், ஸ்வாஹா"

<u>நவாத்ம மந்திரம் :-</u> இது ஒன்பது எழுத்தாலான சிவமந்திரம்.

நாதம் நாதாதிகம் கூடம் காலார்ணம் பார்த்திவான்விதம்.
வாருணம் வன்னிஸம்யுக்தம் மருத்ஷஷ்ட ஸ்வாராந்விதம்.
ஸ்வராந்தே பிந்து நாதாட்யம் நவார்ணாத்ம சிவம் விது:

மேற்கண்ட ஆகமவசனத்தின்படி ஒன்பது எழுத்துகளாவன. "ஹஸக்ஷமலவரயூஊம் நவாத்மநே சிவாயநம:" இது நவார்ணமந்த்ரம் என்றும், நவாத்மமந்த்ரம் என்றும் கூறப்படும் விசேஷ மந்திரமாகும்.

<u>ஸப்தகோடிமந்திரங்கள் :-</u> இது ஏழுவகை (மந்திரமுடிவுகள்) பல்லவங்கள். எல்லா மந்திரங்களும் ஏழுவகையான முடிவுடன் விளங்குவனாம். அவை (1) நம:, (2) ஸ்வாஹா, (3) ஸ்வதா, (4) வஷட், (5) வௌஷட், (6) ஹூம், (7) பட் என்பவை ஏழும் மந்திர முடிவுகளாகும்.

வஷட் வச்யே, படுச்சாடே, ஹூம் த்வேஷே, மாரணேபிச.
ஸ்தம்பேச வௌஷடாகர்ஷே, நமஸ்ஸம்பத்கரம் ததா.
ஸ்வாஹா சக்தி ஸ்வதா புஷ்டி ரித்யேதே மந்த்ரபல்லவா: .

என்ற வசனத்தின்படி இவை உரிய முறையில் உபயோகித்தால் உரிய பயன் விளையும்.

(1) வஷட் என்பது வச்யத்தையும், (2) பட் என்பது உச்சாடனத்தையும், (3) ஹூம் என்பது த்வேஷம், மரணம், தம்பனம் இவற்றையும் (4) வௌஷட் என்பது ஆகர்ஷணத்தையும், (5) நம: என்பது செல்வம் தருவதும், (6) ஸ்வாஹா என்பது வல்லமை தருவதும், (7) ஸ்வதா என்பது புஷ்டி (வளம்) தருவதும் ஆக அமைந்திடும். ஸப்தகோடி மந்திரங்களைப்பற்றி விரிவாக பார்க்கும் பொழுது, ஏழுவிதகோடி தேவாதியர்க்கு (யீற்றினுடைய (கடைமுனை) மந்திரங்களுக்கு) தர்பணாதிகளில் பகுப்புமுறை உள்ளது. நம: என்பது ரிஷிகளுக்கும், ஸ்வாஹா என்பது தேவர்-களுக்கும், ஸ்வதா என்பது பித்ருகளுக்கும், வௌஷட் என்பது

பூதம் முதலியவைகளுக்கும், வஷட் மானுடர்களுக்கும், பட் என்பது உக்ரவிக்ரஹங்களுக்கும், ஹூம் என்பது ஆக்ஞை தலைவர்களுக்கும் என்று அறிந்து மகிழ்வித்தல் முறை என்பதை பௌஷ்கராகமபசு படலத்தில் காணமுடிகிறது. மந் + திரம் என்ற இரண்டும்தன்னை நினைப்பரை காப்பது என்ற பொருளை விளக்கிடுபவை. ஆதலால் மந்திர ஜபத்தினால் பயன் ஏற்படும்.

<u>சுவாஹாந்த மந்த்ர ஹோமவிதி : -</u>

மந்திராந்தே யாவன்னிஜாயா ஸாதுமந்த்ரஸ்வரூபிணீ
ததந்தே அன்யாம் ப்ரயுஞ்சீத ஸாஹோமாங்கதயாதத: I

எனும் மேற்கண்ட வசனத்தின்படி இதன் பொருள் யாதொரு மந்திரம் ஸ்வாஹாந்தமான முடிவை உடையதோ, அதில் உள்ள சுவாஹா என்பது மந்திரவடிவமாய் மந்திர எண்ணிக்கைக்கு உட்பட்டதாய் விளங்குவதாகும். அதுவே சப்தகோடிகளில் ஒன்றான மந்திர பல்லவமாக கருதுதலாகாது. ஆதலால் அந்த மந்திரம் ஹோமகாரியத்தில் கையாளப்படும் போது அந்த ஸ்வாஹாந்தமந்திரத்துடன், மற்றொரு ஸ்வாஹாகாரத்தைஹோமத்திற்கு அங்கமாக அனுஸ்வாரத்துடன் சேர்த்து உபயோகப்படுத்தவேண்டும் என்பதாகும். எடுத்துக்காட்டு ஸ்ரீ கணேச மூலமந்திரத்தின் முடிவில் வசமானய ஸ்வாஹா என்று முடிவதால் இதன் ஆகுதியை வசமானய ஸ்வாஹா, ஸ்வாஹா என்று கூறி அளித்தலாகும். பத்ததி நூல்களில் பலவாறு மூலமந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றை நூலின் உத்தாரவிதிகளைக் கண்டு கையாள வேண்டும்.

<u>சிவகாயத்ரீமந்திரம் :</u> சைவாகமங்கள், ஸகலதெய்வங்களுக்கும், அதனதன் பிரதிஷ்டா பூஜா- விதிகளில் 24 எழுத்துடன் கூடிய (திரிபாதம்) மூன்றுஅடி கொண்ட காயத்ரீ மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. இது பலவாறு காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக சிவனுக்கு விசேஷமாக காயத்ரீ கூறப்படுகிறது. அது தீக்ஷையில் உபதேசிக்கப்பட்டு நித்ய சைவசமய அனுஷ்டானத்தில் ஜபிக்கப்படுகிறது.

சிவகாயத்ரீ மந்திரம் "ஓம் தன்மகேசாய வித்மஹே
வாக்விசுத்தாய தீமஹி
தந்நச் சிவ: ப்ரசோதயாத்"

மற்றது "ஹம்ஸ ஹம்ஸாய வித்மஹே
பரம ஹம்ஸாய தீமஹி
தந்நோ ஸம்ஸப் பிரசோதயாத்"

மற்றும் "நிரஞ்ஜநாய வித்மஹே
நிரபாஸாய தீமஹி
தந்நஸ் சூக்ஷ்மப் பிரசோதயாத்" முதலியனவாம்.

<u>சிவஸாவித்ரீ மந்திரம் :-</u> இது சிவனது சாவித்திரியும் அஸ்திரமந்திரமாகவும் கூறப்படுகிறது.

"ஓம் வ்யோம வ்யோமாய வித்மஹே
சூக்ஷ்ம சூக்ஷ்மாய தீமஹி,
தந்நஸ் சூக்ஷ்மப் பிரசோதயாத்"

என்பது. சிவசாவித்திரி ஆகும். காயத்ரீமந்திரங்களை பூசைக்கிரியைகளிலும், ஹோமத்தில் ஸ்வாஹாந்தமாயும் உபயோகிக்க வேண்டும் என்கின்றன சிவாகமங்கள்.

<u>பிராஸாதமந்திரம் :-</u> சைவசித்தாந்தோக்த சிவமகாமந்திரம். சிவாகமங்களில் கூறப்பட்ட அனைத்துமந்திரங்களுக்கும் தலைமையாக மணிமகுடம்போல் பிரகாசிக்கின்றதும், ஜீவனாகவும், அளவிடமுடியாத மகிமைபொருந்தியதும் மஹாமந்திரம் என சொல்லக்கூடியதும், மந்திரம் எனப்படுவதும், கிடைப்பதற்கு அரியதாயும் விளங்குவது பிராஸாதமந்திரம் எனப்படும். இம்மந்திரம் ஆத்மார்த்தம் ப்ரார்த்தம் என்றபூசை இரண்டிலும் முக்கியமாகும். இந்த மந்திரத்தை, தீக்ஷாகுருவின் உபதேசத்தால் நாம் செய்தபூஜையின் பயனாகவும், செய்யப்போகின்ற பூஜையின் பயனாகவும்கருதி, எந்த மூர்த்தியை ஸ்தாபனம் (பிரதிஷ்டை) பூஜைசெய்வதாயினும், அக்காலங்களில் தவறாது செய்வதற்குரிய இப்பிராஸாத மந்திரத்தின் முறைகளையும் தெரிந்து கொண்டும், உணர்ந்தும் பயன்படுத்த வேண்டும் என்பது முக்கியம் ஆகும். பிராஸாதமந்திரத்தை உபதேசம் பெற்றுஅறிந்தஆசாரியர் என்பவர், பிரதிஷ்டை செய்யக்கூடிய மூர்த்தியின் பெயரோடு, பிராஸாதமந்திரத்துடன் மந்திரத்தை தனது இதயகமலத்தில் நிறத்தி, அதன்பிறகு ஆவாஹனம் செய்ய வேண்டும் என்று உள்ளது. இதன் (ஆவாஹனக்கிரியையின்) இலக்கணத்தை இந்த சுலோகத்தின் மூலம் நன்று அறியலாம்.

கிருத்வா ஹ்ருத்கத மஞ்ஜலிம்ச குசுமம் ப்ராசாத மந்த்ரம் படன்
பக்தியா நிஷ்கள கோசரஸ் ஸமரஸீ பாவம் கதஸ் ஸாதக:
தியாயேத் விக்ரம ஸ்வசக்திபவனே நாதே ததா பிந்துகே
நிஷ்கிராந்தம் கிரமசஸ் ஸ்வசக்தி கிரணைஸ் ஸ்யாதேவ மாவாஹநம்

ப்ரா + ஸா + தம் என மூன்று பகுதிகளாய் பகுத்துப் பொருள் கொள்ளப்படும். "ப்ரா"= என்பது சிவஞானத்தையும், "ஸா" = என்பது நற்கதி / சக்தி என்பதையும் த் = என்பது தருவது என்பதையும் உணர்த்துவனவாம். அதாவது சிவஞானமாகிய உயர்நிலையைத் தருவது என்பதும், (ஆவாஹநம் செய்வதற்கு பிராஸாதயோகநெறி பெரிதும் வேண்டப்பெறும்). ஞான அனுக்ரஹ சக்தியைத் தருவது என்பதும் இச்சொல்லின் பொருளாம். மேலும் ப்ராஸாதம் எனும் சொல் கோயில் என்னும் பொருளை உடையதாய், சிவனை வெளிப்படுத்துவதற்கு உரிய இடமாகிய கோயில் போன்ற மந்திரத்தையும் குறித்து நிற்கின்றது. பரமசிவவாசகமாகிய ஸ்ரீ பஞ்சா-க்ஷரத்தின் பீஜாக்ஷரமாய் விளங்குவதே இந்த ப்ராஸாத மந்திரமாகும்.

இப்பிராஸாத மந்திரஜபம் சிவயோகமார்க்கமாகிய சகமார்க்கம் எனப்படும். ஹப்ராஸாதமந்திரத்தை அறியாதவன் குருவல்லன் என்றும், பிராஸாதம் அறியாதார் சிவனை அறியார்" என்றும், காலமாத்திரை, ஒளி, காரணேச்வரர், பெயர், சூனியம், அங்குலம், அத்துவா சக்தி, ஆகிருதி (உருவம்) ஆகியவற்றுடன் பிராஸாதகலையின் வியாப்தியை, உணர்ந்தவனே முக்தி பெறுதல்கூடும் எனவும் சிவாகமங்கள் கூறுகின்றன. பிராஸாதமந்திர சிகையின் முடிவில்நின்று தீக்ஷை புரியும், ஆசாரியரே, தன் சீடரோடு சிவஸாயுஜ்யம் அடைவார் என்பதை த்விசதிகாலோத்தராகமம் கூறுகிறது.

ப்ராஸாதப்ஜ சிகாந்தஸ்தோ யஸ்து தீக்ஷாம் கரோதி வை.
ஆசார்யஸ் ஸஹ சிஷ்யைச்ச சிவஸாயுஜ்ய மாப்நுயாத். (த்விசதிகாலோத்தரம்)

இந்த பிராஸாதமந்திரமானது கலாபேதத்தால் எட்டுவகையாக கூறப்படுகிறது. அவை கலைகளை 20, 16, 12, 10, 8, 6, 5, 3 என்ற எண்ணிக்கையில் கொண்டதாக பகுத்து அவ்வாறே பெயரிடப்பட்டு விளக்கப்படுவன. (1) விம்சதிகாலாப்ராசாதம், (2) ஷோடசகலாப்பிராசாதம், (3) துவாதசகலாப்ராசாதம், (4) தசகலாப்ராசாதம், (5) அஷ்டகலாட்யம், (6) ஷட்கலாட்யம், (7) பஞ்சகலாட்யம், (8) திரிகலாட்யபிராசதம் என்பவை 8வகை கலாட்யமாம். இவற்றால் விளக்கப்படும் மூலபிராசாதபீஜமந்திரமானது எழுத்துக்களின் சேர்க்கை வடிவமைப்பால் ஐவகை. (1) சுத்தப்ராஸாதம் இது ஹ என்பதாகும். (2) மூலப்ராஸாதம் இது ஹ்ரௌம் என்பதாகும். (3) தத்வப்ராஸாதம் இது ஹம் என்று அமைவதாம். (4) ஆதிப்ராஸாதம் இது ஹௌம் என்று அமைந்ததாம். (5) ஆத்மப்ராஸாதம் இது ஹம்ஸ என்று அமைந்தது. இவ்விதமாக ஐவகையாக ஆகமங்களில் கூறப்படுகிறது. இதை "சுத்தோ மூலஸ் ததா தத்வ ஆதி ராத்மேதி பஞ்சதா" என்று வாதுளாகமம் கூறியுள்ளதால் அறியலாம்.

இனி ப்ராஸாதகலைகளைப் பற்றி காண்போம். பிராஸாதஷோடசகலைகள் முறையே

"அகாரச்ச உகாரச்ச மகாரோ பிந்துரேவச.
அர்தசந்திர நிரோதீச நாதோ நாதாந்த ஏவச.
சக்திச்ச வியாபிநீ சைவ சமநா சோன்மநா ததா.
ஸமநாந்தம் பாசஜாலம் உந்மந்யந்தே பரச்சிவ:
கலார்க்க [12]ஸங்கியாமேவோக்தம் கலாசந்த்ரஸ் [16]ததோச்யதே.
அகாரச்ச உகாரச்ச மகாரோ பிந்துரேசவ.
அர்தசந்திர நிரோதீச நாதோ நாதாந்த ஏவச
சக்திச்ச வியாபிநீ,சைவ வ்யோமரூபா ஸ்த்வநந்தகா.
ஆநாதா அநாச்ரிதாசைவ, ஸமநா சோந்மநா ததா
ஸமநாந்தம், பாசஜாலம் உந்மந்யந்தே பரச்சிவ:
ஆநாதா அநாச்ரிதே த்யேவம் ஞேயோத்வியஷ்ட [16]கலச்சிவ:.

ஏவம் ஷோடசதா பேத: கலாப்ராஸாத உச்யதே. (ஸித்தாந்தரஹஸியம்)

ஸித்தாந்தரஹஸியநூலில் மேற்கூறப்பட்டவாறு விளங்கிடும் பதினாறு கலைகளுள் (கலை = என்பது, கூறு/அம்சம் என்பதாம்) [1]அகாரம், [2]உகாரம், [3]மகாரம், [5]பிந்து, [5]அர்தசந்திரன், [6]நிரோதினி, [7]நாதம், [8]நாதாந்தம் ஆகிய எட்டுகலைகளும் முறையே [1]நாபி, [2]ஹ்ருதயம், [3]கண்டம், [4]புருமத்யம், [5]நெற்றிநடு, நெற்றிமேல்உச்சி, உச்சியின் பின்புறம் ஆகிய எட்டு இடங்களை ஆதாரமாக (உறைவிடமாக) கொண்டு உள்ளதால் இவை எட்டும் ஆதாரகலைகள் எனப்படும். அவ்வாறே அதற்கு மேல் தொடர்ச்சியாக முறையே. [9]சக்திகலை, [10]வியாபிநீ, [11]வியோமரூபிணீ, [12]அநந்தை, [13]அநாதை, [14]அநாசிருதை, [15]சமனை, [16]உன்மனை ஆகிய எட்டுகலைகளும், தலை உச்சிக்கு மேல் துவாதசாந்தம் (12 அங்குல உயரம்) வரையுள்ள இடங்களில் தங்குமிடமின்றி தியானிக்கப்படுபவை ஆதலால் இவை எட்டும் நிராதார கலைகள் எனப்படும். முதற்கலையாகிய அகாரகலையைச்சார்ந்து, அதன் இருப்பிடமாகிய நாபிக்குக்கீழே மூலாதாரம்வரை உள்ள, 12 அங்குலம் (தூரமுள்ள இடம்) இடம் பெறுவது கோஷகலை எனப்படும். மூலாதாரத்தில் நான்குஇதழ் கலைகளையுடைய வெண்டாமரையின்நடுவில் ஓங்கார வடிவமாக பாம்பு போலிருக்கும் குண்டலினியின் நடுவில் தாமரைநூல்போல உடம்பிலுள்ள எழுபத்தி இரண்டாயிரம்நாடி மத்தியில் ஹ் என்னும் "அஜ்பாமனு" தோன்றும். இதனையே ஔவையார் "குண்டலியதனிற்கூடியவசபை" என்று விநாயகர் அகவலில் குறிப்பிடுகிறார்.

இவ்வசபாமனு மெய்மாத்திரமாய் விளங்கிட, இக்(கோஷ)கலை பின்வரும் அகார கலையோடு உடன்கூட்டி, ஒன்றாக்கி, கொள்ளப்பெறுவதாயிற்று. இந்த அசாபமனு மின்னல் போன்ற வடிவுடன், நாபியடிஅளவாக காமிய மலத்தில் தாவரங்களாகிய பத்தொன்பது லக்ஷம் யோனிபேதங்களும், சோதனைப்படபொருந்தும். இக்கோஷகலையின் சிறப்பாகும். ஆதார-கலைகளில் மகாரம் நிரோதினிகலைகளுக்கு மேலே இரு சூனியங்களும், நிராதார கலைகளில் சக்தி, வியாபினீ, சமனை, உன்மனை, ஆகிய கலைகளுக்கு மேலே நான்கு சூனியங்களும் இருக்கும். அகாரகலையோடு கூடிய "காரமானது, பூதங்களாகிய பிருதிவீ, அப்பு, தேயு வாயு, ஆகாசம், தன்மாத்திரைகளாகிய சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம், கன்மேந்திரியங்களாகிய, வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம், ஞானேந்திரியங்களாகிய, சுரோத்ர துவக் சக்ஷு, ஜிஹ்வா, கிராணம், மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் எனும் ஆன்மதத்துவங்கள் இருபத்தி நான்கோடு வ்யாபகராகிய பிரம்மாவை அதிகார முதல்வராகப்-பெறும். உகாரகலையோடு கூடிய ஹகாரமானது புருஷன், இராகம், வித்தை, கலை, நியதி, காலம் என்னும் வ்த்யாதத்துவங்கள் ஆறோடு வியாபகராகிய விஷ்ணுவை அதிகார முதல்வராகப் பெறும். மகாரகலையோடு கூடிய ஹகாரமானது மாயை என்றும் வித்யாதத்துவத்தோடு வியாபகராகிய உருத்திரனையும், (பிந்து) விந்துகலையோடு கூடிய ஹகாரம் சுத்தவித்தை, ஈஸ்வரம் என்னும் சிவதத்துவங்கள் இரண்டோடு, வியாபகராகிய ஈச்வரனையும், மற்றய நாலு கலைகள் சதாசிவத்தையும், இவற்றின் மேற்பட்ட நிராதார கலைகளோடு கூடிய ஹகாரம் சிவதத்துவாந்தத்தோடு வ்யாபகராகிய பரசிவத்தையும்

அதிகார முதல்வர்களாகப் பெறும். இனி ஷோட சகலாபிராஸாத ஒடுக்க முறையைக் காண்போம்.

மனிதஉடலானது உயரஅளவு தொன்னூற்றாறு அங்குலம் கொண்டதாகும். (அதில் பாதி போக, மீதி 48 அங்குலம் பிரம்மரந்திரம் வரை மேலும் 12 அங்குலம் உயரத்தில் துவாதகாந்தம்) அதில் மூலாதாரத்தின் கீழ்உள்ள நாற்பத்தெட்டு அங்குலத்தை நீக்கி மேலுள்ள நாற்பத்தெட்டு அங்குலங்களில், நாபியில் அகாரகலை முதல் பிரம்மாந்திரம் வரை 8 ஸாதாரகலைகளும் வியாபித்துயிருக்கும். மூலாதாரத்தில் குண்டலினீ சக்தியில் சிவபீஜமாகிய நாதம் என்னும் பெயர் உடையதுமான ஹகாரம் அகாரகலை முதலாகிய கலைகளின்வழியே சென்று, பிரம்ம-ரந்திரத்தின் அருகிலே நாதமாகிய அதன்மேல் நாதாந்தமாகி ஒடுங்கும். நாதாந்தகலை தன்காரணமாகிய, சக்திகலையிலும், சக்திகலை அநாசிருதையீறான நான்கு நான்கு கலைகளை தன்னகத்தே அடக்கிக்கொண்டிருக்கின்ற வ்யாபினீகலையிலும், அந்த வியாபினீ-கலையானது சமனாகலையிலும், அந்த சமனாகலை உன்மனாகலையிலும் ஒடுங்கும். இவ்வொடுக்க முறையில் தத்துவதாத்விகங்கள் எல்லாவற்றையும்கடந்து சென்று, அப்போது உண்டாகும், இச்சா ஞான கிரியைகளோடு பராசக்தியை அடைந்து, அம்மூன்று சக்திகளையும் விடுத்து, பராசக்தியோடு தான் கூடிஇருத்தலையும், பின்இதனை சுட்டியறியாது நிற்றலாகிய உன்மநாகலையின் அனுபவம்பெற்று, பரசிவத்தோடு ஒன்றுபடுதலே ஷோடசகலாப்ராசாத மந்திரத்தால் பெறத்தக்க பெரும் பயனாகும். இப்பிராஸாத மந்திரம் கலாபேதத்தால் எட்டுவிதம் என அறிவோம். 12 கலையுள்ள துவாதச கலாப்ராஸாதமானது, அகாரம், உகாரம், மகாரம், பிந்து, அர்தசந்திரன், நிரோதி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாபினீ, சமனை, உன்மனை என்னும் காலாபேதங்களோடு கூடியது. 10 கலையுடைய தசகலாப்ராஸாதமானது, அகாரகலை முதல், வியாபினிகலை வரை, கூடியது ஆகும். 7 கலைகளுடைய ஸப்தகலாபிராஸாதமானது, அகார- கலை முதலாக, நாதகலைவரை கூடியது. 5 கலைகளுள்ள பஞ்சகலாபிராஸாதமானது, அகார- கலை முதலாக, அர்தசந்திரகலை வரை கூடியது. மூன்று கலையுள்ள திரிகலாபிராஸாத-மானது, அகாரகலை உகார மகாரகலைகள் மூன்றும் வரை கூடியது, என்று அறியத்தக்கது. இவ்வகை கலைகளுக்கு மேலாக, கு ருமுகமாக தீக்ஷையின் முறையில் உபதேசிக்கக்கூடிய மஹாமந்திரம்" ஷோடசகலாப்ராசாதம்". மற்றும் "விம்சதிகலாப்ராசாதம்" என்றும் உள்ள இவைகள் (2ம்) குருவின்அருளாலும், இறைவன் திருவருளாலும், அப்யாசம் (பயிற்சி) மூலமாகப் பெற்று அளவிடமுடியாத ஆனந்தநிலையை அடையலாம் என்றதாகும்.

ஆசார்யோ மந்த்ரபூர்ணச்ச தனபூர்ணச்ச தார்மிக: .
கிரியாபூர்ணோ யத்ரசில்பி: தத்ரஸ்யாத் தேவஸந்நிதி:
லோகாஸ் ஸமஸ்தாஸ் சுகிநோபவந்து.

----------**********------------

உ

ஓம் நமச் சிவாப்யாம்

ஆகமங்களில் அக்னிகாரிய விதானம்

(வேள்வித்தீ வழிபாட்டுமுறை)

வாகர்த்தாவிவ ஸம்பிருக்தௌ பித்ரு மாத்ரு ஸ்வபாவதௌ.
தர்ம கர்ம வசௌ சாந்தௌ அர்தநாரீச்வரோ (அ)வது .

கட்டுரையாளர்
ஆகமப்ரவீணா். சைவாகமரத்தினம்.
சிவஸ்ரீ. N. நீலகண்டசிவாசார்யர்
திருக் கஞ்சனூர்.

ஸாம்போ ந: குல தைவதம் பசுபதே! ஸாம்ப! த்வதீயா வயம்.
ஸாம்பம் ஸ்தௌமி ஸுராஸுரோ ரககணா: ஸாம்பேந ஸந்தாரிதா:
ஸாம்பாயாஸ்து நமோ மயா விரசிதம் ஸாம்பாத் பரம் நோ பஜே
ஸாம்பஸ்யா(அ)னுசரோஸ் மியஹம் மம ரதி: ஸாம்பே பரப்ரம்மணி.
(ஸ்ரீஹரதத்தாசார்யர்)

உலகில் உயிர்கள் யாவும் உய்வுபெற்றிட. ஆதிஅந்தமில்லாப் பரம்பொருளானவரும், அனைத்து ஜீவராசிகளுக்குத் தாய்தந்தையானவருமான பகவானை, வழிபடவேண்டும். இறைவனை வழிபடுவதற்கு **பூஜை, ஜபம், ஹோமம்** இவைகள் இன்றியமையாதவை. அக்னியின்மூலம் தேவர்களையும், அந்தணர்மூலம் பித்ருக்களையும், வழிபடவேண்டும் என்பது யாவரும்அறிந்ததே. இதில் **அக்னிகார்யம்** என்பது **"தீயிலே சிவபெருமானை வழிபடுதல்"** என்பதாகும்.

வேதங்களில்உள்ள வைதிகமந்திரங்களால் மட்டுமே ஏற்ப்பாடுசெய்யப்பட்டது, **வைதிக அக்னிகாரியம்** ஆகும். வேதத்தின் வைதிகமந்திரங்களோடு கூடின, சைவாகமமந்திரங்களால் உருவாக்கப்பட்டது, **மிச்ராக்னிகாரியம்** ஆகும். சிவாகமமந்திரங்களால் மட்டுமே உருவாக்கி ஏற்பாடுசெய்யப்பட்டது **சைவாக்னிகாரியம்** என்று சிவஞானரூபமாகிய சிவாகமங்கள் உற்பத்திக்கிரமத்தால் அக்னியின் மூவகையை விளக்குகின்றன. இதன் விவரத்தை காமிகாகமத்தால் அறியலாம். தனித்த வைதிகாக்னியில் சிவமந்திரங்களைச் சேர்த்தல் ஆகாது. சிவாக்னியில் வைதிகமந்திரங்களும் மற்றவைகளும் சேர்க்கத்தக்கவைகள் ஆகும். வஹ்னி எனும் சொல்லின் விளக்கமாவது, இச்சொல் வ +

ந்நி என்ற இருஎழுத்து சேர்ந்தது. "இதில் வ என்ற எழுத்து, ஞானம் வளர்வதையும், ஹ்நி என்ற எழுத்து , ஆத்மாவில் உள்ள மும்மலம் அழைக்கப்படுவதையும், உணர்த்துவதாய்க்கொண்டு, உயிர்களின் மூவகை மலங்களை நீக்கி, ஞானமளிப்பதாலேயே வஹ்நி என்று தீயானது அழைக்கப்படுகிறது" என்று, வஹ்நி எனும் சொல்லுக்கு சுப்ரபேதாகமம் பொருள் கூறுகிறது. இதற்கான சான்று,

வகாரே வர்ததே ஞானம் ஹ்நிகாரேந மலக்ஷய: .
பிரக்ஞோத்பந்ந மலச்சேதாத், வஹ்நி ரித் யபிதீயதே. (சுப்ரபேதாகமம்)

ஈச்வரன் சாந்நித்யமாவதன்பொருட்டு, ஆசாரியர், குண்டம், ஸ்தண்டிலம் இவைகளில் மந்திர பூர்வமாகசமஸ்காரங்களை செய்தல்வேண்டும். குண்டசம்ஸ்காரம் என்பது ஹோமகுண்டத்தைச் சுத்தமாக்கும் கிரியைஆகும். (1) **நீரீக்ஷணம்** (உற்றுநோக்குதல்), (2) **புரோக்ஷணம்** (நீரைத்-தெளித்தல்), (3) **தாடனம்** (தட்டுதல்), (4) **அப்யுக்ஷணம்** (நீரால் நனைத்தல்), (5) **கனனம்** (ஆழமாக தோண்டுதல்), (6) **அவகீரணம்** (வெளியில் எறிதல்), (7) **பூரணம்** (உள்ளே நிரப்புதல்), (8) **ஸமீகரணம்** (சமப்படுத்துதல்), (9) **ஸேசநம்** (நீரில் நனைத்தல்), (10) **குட்டநம்** (இடித்து கெட்டியாக்குதல்), (11) **ஸம்மார்ஜனம்** (அலகிட்டு பெருக்கிடுதல்), (12) **ஸமாலேபனம்** (நன்கு மெழுகிப்பூசுதல்), (13) **கலாநியாஸம்** (கலாமயகல்பனம்), (14) **திரிசூத்ரவேஷ்டனம்** (மூவிழை நூலைசுற்றிக்கட்டுதல்), (15) **கலாமயாப்யர்ச்சனம்** (ஐங்கலைவடிவாய் பூசித்தல்), (16) **ரேகாச-துஷ்டயம்**, (17) **வஜ்ரீகரணம்** (இருமுனைமுச்சூலமாய் அடையாளமிடுதல்), (18) **சதுஷ்பத நியாஸம்** (குண்டத்தின் உள்ளிடத்தை நாலுகட்டமாக்குதல்), மேற்கூறிய **18வகை ஸம்ஸ்-காரங்களையும்** செய்வதால்மட்டுமே அவ்விடத்தில், அக்குண்டத்தில் சிவாக்னி ஸித்திக்கும். அதில் இறைதோன்றிஅருள்தரும். இவை 18-ம்செய்யப்படாதகுண்டத்தில், அக்னியை ஸ்தாபித்தலும், ஹோமம்செய்தலும், பயனற்ற செயலாகவேஆகும்.

அக்ஷபாடகல்பனம் உலகத்தாய்தந்தையர்களான, சிவசக்திகளை, அக்னியைத் தோற்றுவித்திடும் பொருட்டு, குண்டத்தினுள் பூசித்து, அவர்களுக்கு திருமணம்முதல் அக்னி-ஜனனம்வரை செய்வித்திடும்பொருட்டு, குண்டத்தினுள் பெற்றோர்இருப்பதை மறைத்திட வேண்டி, தர்பையால்திரைச்சீலையை அமைப்பது **அக்ஷபாடம்** எனப்படும். தேவியின் கருவிலிருக்கும் கர்பாக்னியாகபாவித்து, பூசித்திடவேண்டும்.

(1) **கர்பாதானம்**, எனும் ஸம்ஸ்காரத்தின்பொருட்டு,ஸத்யோஜாதமந்திரத்தால் பூசித்து, ஹ்ருதய-மந்திரத்தால், எள்ளினால் மூன்றுமுறை ஆகுதிகளை கொடுக்கவேண்டும். (2) **பும்ஸ்வனம்**, எனும் ஸம்ஸ்காரத்தின்பொருட்டு, வாமதேவசிவனைதியானித்து, வாமதேவமந்திரத்தால்பூசித்து, சிரோமந்திரத்தினால், எள்ளினால் மூன்றுமுறைஆகுதிகளை அளிக்கவேண்டும். (3) **சீமந்தோந்நயனம்**, என்னும் ஸம்ஸ்காரத்தின்பொருட்டு,

அகோரமந்திரத்தால்பூசித்து, சிகா-மந்திரத்தால் எள்ளினால் மூன்றுமுறை ஆகுதிகளைக்கொடுத்து, அந்த சிகாமந்திரத்தினாலேயே கர்பாக்னிக்கு முகம் முதலிய அனைத்து உறுப்புகளும் வளர்ச்சிபெற்று, நிறைவாகி உள்ளதாக பாவித்திடவேண்டும். கர்பாக்னியின் பிறப்பின்பொருட்டு தத்புருஷசிவனைத்தியானித்து, தத்புருஷமந்திரத்தால்பூசித்து, கவசமந்திரத்தால் எள்ளினால் மூன்றுஆகுதிகளைக் கொடுத்து, பின்பு அக்னி ஜனித்ததாக பாவித்திடவேண்டும். ஜனித்தபொழுதில் பிரசவித்த மாசுகளை நீங்கிடுவதன்பொருட்டு, குண்டஅக்னியில் தருப்பைபுல்லை (உலர்ந்தபொரசுஇலை, அத்திஇலை, அருகம்புல்முனை முதலானவற்றையும்) போட்டுப்பொசுக்கி, கருப்பரக்ஷையாக தேவிக்கு முன்புகட்டியதர்பை கங்கணத்தை மேகலைமீதுவைத்ததை அப்புறப்படுத்திவிட்டு, தேவிக்கு பொற்காப்பு அணிவிக்கப்பட்டதாகசிந்தித்து, இருதயமந்திரத்தால் பூசித்திடவேண்டும். அந்த குழந்தையான அக்னியைச்சூழ்ந்திருத்து காத்திடுவதன்பொருட்டு, கிழக்கு முதலான திசைகளில், மேகலைகளில், வடக்கு மற்றும் கிழக்கு திசைகளில் மட்டுமே நுணியுடையவை-களாக தர்பங்களை அஸ்திரமந்திரத்தால் சுற்றிலும்பரப்பி, அவைகளின் மீதுநீளமான பச்சைமரக் குச்சியான பரிதிகளை தருப்பையாலானபின்னிய விஷ்டரங்கள் நான்கை நான்கு திசையிலும், பரிஸ்தரணங்களான தர்பைகளை, சுற்றிலும் முறைப்படிவைக்கவேண்டும். மேல்மேகலையில் உரியபகுதிகளில் முறையே, கிழக்கில் பிரம்மாவையும், மேற்கில் விஷ்ணுவையும், தெற்கில் ருத்ரனையும், வடக்குபகுதியில் ஈச்வரனை அல்லது குருவான அநந்தரையும் பச்சைபரிதி-யிலிருப்பவர்களாய் பூசித்தபின்பு, நடுமேகலையில் தர்பையாலான விஷ்டரங்களில் கிழக்கு முதலான எட்டுதிக்கிலும் முறையே. இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், ஆகியோரையும், ஈசானத்திற்கு தெற்கில் பிரம்மனையும், நைருதிக்கு வடக்கில் விஷ்ணுவையும், இவ்விதம் பத்துலோகேசர்களையும் பூசிக்கவேண்டும். கீழ்மேகலையில் பரிஸ்தரணங்களில் வஜ்ரம் முதலான 10தசாயுதங்களையும் இவ்வாறே பூசிக்கவேண்டும். இவர்களின் அந்தந்த ஸ்தானத்தை நெல்பொரி, புஷ்பம், அக்ஷதை முதலானவற்றால் அலங்கரித்து, இடையூறுகளைப்போக்கி, "நீங்கள் அக்கினிசிசுவை காத்திடுங்கள்" என்று சிவனது கட்டளையை அவர்களுக்கு தெரிவிக்கவும் வேண்டும். இவ்விதம் குழந்தை அக்னிக்கு பாதுகாப்பூசையை செய்தபின்பு, ஹோமத்திற்கான முக்கியஸாதனக்கருவிகளான சுருக்கு-சுருவம் எனும் மரக்கரண்டிகள் இரட்டையின் சம்ஸ்காரத்தைச்செய்யவேண்டும். பயன்படுத்தப்- படவேண்டும். இந்த சுருக்குசுருவங்கள் இரண்டும் ஓரேமரத்தினால், வில்வம்அரசு கருங்காலி முதலிய, யாகத்தின் சமித்துவகைமரங்களால் செய்யத்தக்கவை. சுருக்குசுருவங்கள் இல்லாத பொழுதில், இலைகளைப்பயன்படுத்திடவேண்டும். ஹோமத்திற்கு பசுவினுடைய நெய்மட்டுமே ஏற்கத்தக்கதும், சிறந்ததுமாகும். ஹோமாரம்பத்தில் இதற்கு பதினெட்டுவகைசுத்திகள் செய்யப்பட்டு இது அமுதமாக்கப்படும். அவை (1) நிரீக்ஷணம், (2) புரோக்ஷணம், (3) தாடனம், (4) அப்யுக்ஷணம், (5) பிரமணம், (6) தாபனம், (7) அதிச்ரயணம்,

(8) உத்வாசனம், (9) உத்பிலவனம், (10) சம்பிலவனம், (11) பவித்திரீகரணம், (12) நீராஞ்சனம், (13) தியோதனம், (14) நேத்ரோத்காடனம், (15) அபிமந்திரணம், (16) ரக்ஷணம், (17) அவகுண்டனம், (18) அமிர்தீகரணம் என்பன. ஆஜ்யஸம்ஸ்காரம் செய்துமுடித்தபின்பு அக்னியினுடைய திருமுகங்களுக்கு சம்ஸ்காரம் செய்யப்படும். இது மூன்றுநிலையில் செய்யப்படும்.

குண்டத்திற்குள் அக்னிஜ்வாலையில் ஏழுஇடத்தில்உள்ள ஏழுநாக்குகளுக்கும். முறையே, [1]மேற்கில் **ஹிரண்யா** என்பதற்கும் [2]நடுவில் **கனகா** என்பதற்கும், [3]வடக்கில் ரக்தா என்பதற்கும், [4]தெற்கில் **கிருஷ்ணா** என்பதற்கும், [5]கிழக்கில் **சுப்பிரபா** என்பதற்கும், [6]தென்கிழக்கில் **அதிரக்தா** என்பதற்கும், [7]வடகிழக்கில் **பகுரூபா** என்பதற்குமாக ஏழுநாக்கு-களின் பீஜாக்ஷரத்துடன்கூடிய, பெயர்களோடமைந்த, தனித்தனி மந்திரத்தால், அக்னியின் ஏழுநாக்குகளுக்கும் தனித்தனியே ஒவ்வோர்ஆகுதியாக ஒருமுறைஆகுதிசெய்தல் **ஜிஹ்வாதீபனம்** எனப்படும் சம்ஸ்காரமாகும். ஜிஹ்வாசம்ஸ்காரத்தில் முதலில் ஒவ்வொரு ஆகுதிசெய்து, அவற்றை பிரகாசப்படுத்தியபிறகு, இரண்டிரண்டாக ஐந்துஆகுதியால் இணைத்தப்பிறகு, எல்லாவற்றையும் ஒரேஆகுதியால் நடுவில்சேர்த்து, லயப்படுத்துவதே இக்கிரியைகளாகும். பெயரிடுதற்பொருட்டு, அக்னியை ஈசானமந்திரத்தால் பூசித்து, அர்க்கியம் கொடுத்து, அஸ்திரமந்திரத்தால் ஐந்துமுறை ஆகுதிகொடுத்து **அக்னியே! நீர் சிவாக்னி** என்று பெயர்சூட்டி நாமகரணம்செய்து, இவ்வாறு பெயரிட்டபின்பு, பாலாக்னியைத்தியானித்து **ஓம் ஹ்ரூம் அக்னயே ஸ்வாஹா** என்று 25 முறை ஆகுதிகள் தரவேண்டும். (இவ்வாறாக பாலபருவம்வரை சடங்குகள் செய்துமுடிக்கப்படும். தீக்ஷைகள், சாந்திஹோமங்கள் முதலிய கர்மாக்களில் இதுவரை செய்து நிறுத்திக்கொண்டு, பிறகு பாலபருவஅக்னி உருவமானது, அக்னியின் பெற்றோரை அனுப்பி வைத்து, பின்பு, வேண்டுதலுடன்பூசை தொடரப்படும்).

அக்னியின் சம்ஸ்காரவரிசைமுறைகளில் **நாமகரணம்** வரையிலான சம்ஸ்காரங்கள் செய்யப்பட்டது **பாலாக்னி** என்றும், சமாவர்த்தனவிரதம் வரையில் சம்ஸ்காரங்கள் செய்யப்-பட்டது **யௌவனாக்னி** என்றும், **விவாஹம்** வரையிலாக சம்ஸ்காரங்கள்செய்யப்பட்டது **விருத்தாக்னி** என்றும், ஆகமங்களில் கூறப்படும். 9குண்டநவாக்னிகளில் தியானித்துபூசிக்கப்-படுகிற **பாலாக்னி, விருத்தாக்னி** என்பவை வேறுஆகும். இவற்றுள் தீக்ஷை, சாந்தி முதலிய கிரியைகளில் பாலாக்னியும், புரோக்ஷணம் உத்ஸவம் முதலியவைகளில் யௌவனாக்னியும், பிரதிஷ்டையிலும், நித்தியபூசையிலும் விருத்தாக்னியும்உரியன. ஈசானமுகத்துக்குரிய **பகுரூபை** என்னும் நாக்கானது, விரும்பும் பலவகைப்பயனையும் கொடுக்கும் சிறப்புத்தன்மை உடையது. இதனை **சித்தாந்த சாராவளி** நூல் **ஹஏகைவ பகுரூபா து ஸர்வகாம பலப்பிரதா”** என்று கூறுவதாலும் அறியலாம். ஆதலால் ஈசானமுகத்தை தேர்வு செய்து, மற்றதை அதனுள் ஒடுக்குவது சிறந்தமுறையாகும்.

ஒரு சம்ஸ்காரக்கிரியையின் முடிவிலோ, குறிப்பிட்ட ஆகுதிஎண்ணிக்கையின் முடிவிலோ, தத்துவார்த்தாதி பாவனையை குணஸித்தியைப் பெறவோ, ஒருசிறப்புதிரவ்வியத்தினுடைய ஆகுதியின் முடிவிலோ, ஹோமத்தின் முடிவிலோ, கிரியையின் ஒவ்வொருகட்டமனோபாவனையின்பொருட்டோ, அக்னிகாரியத்தில், முன்னும்பின்னும் 4வியாஹ்ருதிகளின் ஹோமத்துடன்கூடியதாகவே **பூரணாகுதி** என்பது செய்யப்பட வேண்டியதாகும்.

சிவாக்னிஸ்வரூபத்தை முதலில் தியானித்து, பிறகு, பிரார்த்தனை செய்து, அவரிடத்தில் மற்றய தெய்வத்தைப்பூசித்திடுவதற்கு முன் அனுமதியை வேண்டிப்பெற்ற பின்னரே, அக்னியில் பிறதேவதையைபூசிக்கத் துவங்கவேண்டும். இறைவனின் அனுமதி பெறப்பட்டதாகபாவித்து, அந்த அக்னியினுடைய இருதயகமலத்தில் ஆசாரியர் யொகநெறியில் இருந்து முறைப்படியே, யோகபீடத்தை, பூசைசெய்து, பின்பு, அவ்விருக்கையின்மீது மிகப்பிரகாசமாயும், மிகவுஞ் சிறந்ததாயும், சிரேஷ்டமாயுமுள்ள மூர்த்தியை கற்பிக்கவேண்டும். பிறகு ஆவாஹனம் செய்து, ஷோடசஉபசாரத்துடன் பூசித்திடவேண்டும். யாகமத்தியவேதிகையின் மீதுஉள்ள கும்பத்தி-லிருக்கும்சிவனுக்கும், யாகஅக்னியிலிருக்கும்சிவனுக்கும், மூர்த்திபர்களோடு கூடியுள்ள, தனக்குமாக, ஒருதொடர்பை, தர்பை, தர்பைக்கயிறு, நூல், கயிறு, பொன்கம்பி இவற்றில் ஏதேனும் ஒன்றினால், நாடீசந்தானத்தை (நரம்புத்தொடர்பை) செய்து கொள்ளவேண்டும். மந்திர தருப்பணத்தின்பொருட்டு, மூலமந்திரத்தால் 108 ஆகுதியும், அதற்குத்தசாம்சமாய் பஞ்சபிரம்ம-ஷடங்கமான 11மந்திரங்களால் தலா10ஆகுதிவீதமும் ஹோமம்செய்து, முடிவில் பூர்ணாகுதியை முன்புகூறியதுபோலவே செய்யவேண்டும். இதில் பிரதிஷ்டை, உத்ஸவம், பூஜை, முதலான கிரியைக்கு செய்யப்படவேண்டிய, ஆகுதிஎண்ணிக்கையை பின்பற்றி அதற்குள் சமித்துவகை, திரவியவகை, நெய்அன்னம் முதலியவற்றால் பகுத்துஆகுதிகளைச் செய்துமுடித்திடவேண்டும். இதுவே மந்திரஹோமவிதிமுறை ஆகும். [1]சூகரீமுத்ரை (பன்றிமுகவடிவம்) [2]மிருகீமுத்திரை (மான்முகவடிவம்), [3]ஹம்ஸீமுத்திரை (அன்னப்பறவைவடிவம்) என்று மூன்றுவகைமுத்திரைகள் ஹோமத்திற்கு உரியவைஆகின்றன. **முத்ரா ஹீநம்து யத் ஹோமம் தத் ஹோமம் நிஷ்பலம் பவேத்.** எனும் வசனத்தால் உரியமுத்திரை ஏதுமில்லாமல் செய்யப்படும் ஹோமம் பயனற்ற செயலாகும் என்பதை அறியலாம். சமித்து, நெய், எள்ளு இவற்றை மிருகீமுத்திரையாலும், சரு(அன்ன)ஹோமத்தை வாராஹீமுத்திரையான சூகரியாலும், செய்யவேண்டுமென்று அஜிதாகமம் கூறுகிறது. ஹோமதிரவியங்களாக (காரணாகமம்) 26பொருளைக் குறிப்பிடுகிறது. அதன்படி முறையே சமித்து, நெய், அன்னம், சாலீநெல், யவம், கோதுமை, மூங்கிலரிசி, நீவாரம் (செந்நெல்), நெல்பொரி (நென்மலர்), சக்துமா (பொரித்தஅரிசி மாவு), பாசிப்பயறு, உளுந்து, வெல்லம், கொள்ளு, நிஷ்பாவம், தரளம், மொச்சை, துவரை, எள்ளு, தினை, கடுகு, தேன், தயிர், பால், பழம், அப்பம், வடை,

தாம்பூலம் ஆகிய பொருட்கள் ஹோமப்பொருள்களாகும். ஹோமத்திற்காக சிவாக்னியில், மந்திரத்தால் சமைக்கப்பட்டது சரு என்கிற சுத்தமான பச்சரிசி அன்னபொங்கல்ஆகும். இவ்விதம் யாகத்திற்காக புதிதாய் அன்னம்தயாரித்து, ஹோமம் செய்துமுடித்தலே சரு ஹோமம் என்பதாகும். குண்டசம்ஸ்காரம் முதலாக இந்த சருஹவனம் வரையிலாக செய்யப்படுவதே பொதுவான அனைத்திற்கும் உரிய அக்னிகாரியமாகும். திருஞானசம்பந்தநாயனார்சுவாமிகள், தமது பாடலில் வேதவேள்வியின் நிந்தனையை செய்யக்கூடாது என்பதை குறிப்பிட்டுள்ளார். அப்பாடல்,

வேத வேள்வியை நிந்தனை செய்து உழல்
ஆதம் இல்லி அம்ம ணொடு தேரரை
வாதில் வென்று அழிக்கத் திரு உள்ளமே
பாதி மாது உடன் ஆய பரமனே. (சம்பந்தர்) என்கிறது.

அவ்வாறே அப்பர்சுவாமிகள் திருப்பழனத்தேவாரத்தில் குற்றம்விலகிட வேள்விசெய்யப்-படுவதை ஹகலிமெலிய அழலோம்பும் அப்பூதி” என்று குறிப்பிடுகிறார்.

இதுவரை எனது சிற்றறிவுக்கு எட்டியவாறு சைவாகமத்தில் அக்னிகாரியம் எனும் பொருள்பற்றிக் கூறப்பட்டது. இக்கருத்துக்களைப்பின்பற்றி, யாவரும் தமது குருமார்களிடமும் இதுபற்றி கேட்டுஅறிந்தும், தெளிந்தும், செயற்கரிய இச்செயலை, தீவழிபாட்டைச்செய்து, இறைவனின் அருளைப்பெற்றிட ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே என இறைவனைப்பிரார்த்தித்து இச்சைவாகம அக்கினிகாரியம் பற்றிய கட்டுரையை நிறைவு செய்கிறேன். நன்றி.

மேன்மை கொள் சைவநீதி விளங்கு உலகமெல்லாம்.

************* சுபம் *************

உ

ஓம் சிவாய்யாம் நம:

சிவாலய பிரதோஷகால பூஜாவிதானம்

குரவே ஸர்வலோகாநாம், பிஷஜே பவரோகிநாம்
நிதயே ஸர்வவித்யாநாம், தக்ஷிணாமூர்த்தயேநம:

கட்டுரையாளர்
சிவாகமசிரோமணி, சாஹித்திய சிரோமணி.
க்ஷேத்திரபாலபுரம் சிவஸ்ரீ. V. சேதுராம குருக்கள்.
பெருங்களத்தூர். சென்னை.

சிவநேயச் செல்வர்களுக்கு நமஸ்காரம்,

ஸ்ரீமத்பூர்வகாரணாகமத்தில் உள்ள மஹாபிரதோஷபூஜாவிதிபடலத்தின்படி, மேற்படி தலையங்க பொருள்பற்றிய சைவாகமகருத்துக்களை இனிகாண்போம். காரணாகமத்தின் 160வது படலத்தின் பொருளாவது. பிரதோஷபூஜாவிதியை விசேஷமாகக் கூறுகிறேன் என்று பகவான் கூறத்துவங்கி கூறுகிறார்.

<u>பிரதோஷகால விளக்கம் :-</u> பக்தர்களைக் காக்கும் பொருட்டு யமனை (விஷத்தை) நிக்ரகம் செய்தகாலம் இரவின் ஆரம்பமாகும். காலநிச்சயம் அஸ்தமித்து மூன்றேமுக்கால் நாழிகை பிரதோஷகாலமென்று கூறப்பட்டிருக்கிறது.

<u>பிரதோஷத்தில் செய்யத்தக்கவை :-</u> அப்பொழுது சிவனை அருச்சிக்கவேண்டும். பிரதோஷ-காலத்தில் சிவனை அருச்சிக்காமல் செய்யப்படும் ஸ்நாநம், தானம், ஜபம், ஹோமம் முதலியன பலனைத்தராதவைஆகும்.

<u>தரிசன முறை :-</u> விருஷபத்தின் பீஜத்தில் எல்லாத்தீர்த்தங்களும் இருக்கின்றன. ஆகையால் விருஷபத்தின் பீஜத்தைதொட்டுக்கொண்டு, கொம்புகளின் இடையே சிவனைத்தரிசிக்க வேண்டும்.

<u>வேண்டத்தக்கமுறை :-</u> கடன், ரோகம், தாரித்ரியத்தால் உண்டாகும் பசி, மனக்கவலை, அபமிருத்யு, பாவம், மனம் நொந்நுபோதல், கோபம், மோஹம், பயம் என்னும் இவை என்னிடம் உள்ளனவென்று ஈசுவரனிடம் தெரிவிப்பின், அவன் அப்பாவபலனை அனுபவிக்கமாட்டான்.
<u>பாவம் நீங்க பரிகாரமுறை :-</u> ஈரமுள்ள பனைஓலையில் தனக்குள்ள துன்பத்தை எழுதி ஈசுவரனிடம் அறிவித்து அந்த ஓலையை எரித்து, நீர்க்கரையில் போடவேண்டும். இவ்விதம் மூன்றுமுறை செய்தால் அந்தப்பாவபலனை அனுபவிக்கமாட்டான். இவ்வாறு செய்தல்

எல்லாப்-பாவங்களையும் போக்கும், புண்ணியத்தை உண்டாக்கும், எல்லாத்தோஷங்களையும் போக்கும். விசேஷபூசை முறை :- சிவபூஜையை பிரதோஷகாலத்தில் விசேஷமாகச் செய்ய வேண்டும்.

விருஷபதேவரின் பூசைமுறை :- முதலில் விருஷபத்திற்கு பஞ்சகவ்யத்தால் அபிஷேகம் செய்து, சுத்த ஜலத்தாலும், அபிஷேகஞ்செய்து, சந்தனம், புஷ்பம்சாத்தி, தூபம்தீபம் சமர்ப்பித்து, எள்ளன்னம் நிவேதித்து, தாம்பூலோபசாரம் முதலியன செய்யவேண்டும்.

கலச ஸ்நபனபூசை :- பலிபீடத்திற்கு முன்னர், சாலிநெற்களால் மேடை செய்து, பொரி, புஷ்பம், எள்ளு இவற்றை இரைத்து அலங்கரிக்கவேண்டும். பின் தர்ப்பைகளைப்பரப்பி புண்யா- ஹவாசனம் செய்யவேண்டும். பின்னர் ஒன்பதுகும்பங்களை சுத்தஜலத்தால் புரோக்ஷித்து, நூல்சுற்றி, வஸ்திரம் அணிந்து, கூர்ச்சம் மாவிளைரத்னம், தேங்காய் என்னும் இவற்றைக் கும்பங்களில் வைத்து, மேடையில் தாபித்து, சந்தனம் முதலியன சாத்திப்பூஜை செய்யவேண்டும். பின்னர் பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம், இளநீர், சுத்த தைலம், நெய் முதலிய அபிஷேகத்திற்குரிய திரவியங்களை வைத்துக் கொண்டு சுத்தமான நீரால் அவற்றைப் புரோக்ஷிக்க வேண்டும். சிவன் கருவறை சுத்திபூசை :-பின்னர், கருப்பக்கிருஹத்திற்குச் சென்று ஸ்தானசுத்தி, லிங்கசுத்தி, பீடசுத்திகளைச்செய்து, ஆசனமூர்த்தி மந்திரங்களால் பூசித்து, மாதிருகாநியாஸம் அஷ்டத்ரிம்சத் கலாநியாசங்களைச் செய்து, வியோமவியாபிபதமந்திரங்களை நியாசஞ்செய்து, மூலமந்திரத்தால் ஈசுவரனை ஆவாஹனம் செய்யவேண்டும்.

பிரதோஷ அபிஷேகமுறை :- பிறகு, ஈசுவரருக்கு பாத்யம், அர்க்யம் ஆசமனங்களைச் சமர்ப்பித்து, பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம், இளநீர் என்னும் இவற்றால் அபிஷேகம் செய்ய-வேண்டும். அபிஷேகதிரவியங்களை (நெல்லி, மா முதலியவற்றை) பிசைந்து ஈசுவரரது திருமேனியிற்பூசவேண்டும். பின்னர் தைலத்தாலும்,நெய்யாலும் அபிஷேகம் செய்து கந்தோதகம், சுத்தோதகம் இவற்றால் அபிஷேகம் செய்யவேண்டும். பின்னர் சந்தனம், புஷ்பம் இவற்றைச் சாத்தி, தூபதீபங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

கலசஸ்நபனாபிஷேகமுறை :- பிறகு கும்பத்தை எடுத்துக்கொண்டு பிராஸாதத்தைப் பிரதக்ஷிணம் செய்து, கும்பத்தில் இருக்கும் ஈசுவரனை லிங்கமத்தியில் சேர்க்கவேண்டும். வர்த்தனியின் பீஜாக்ஷரத்தைத உச்சரித்து, வர்த்தனி தீர்த்தத்தைப்பீடத்தின் நடுவில் அபிஷேகம் செய்யவேண்டும். கும்பஜலத்தாலேயே பரமேசுவரருக்கு அபிஷேகம் செய்யவேண்டும். அக்காலத்தில் சமகம், புருஷஸூக்தகம் ஸ்கந்தஸூக்தம் ஜபிக்கவேண்டும். மற்ற மந்திரங்களை ஜபிக்கலாகாது.

சிவலிங்க அலங்காரமுறை :- பின்னர் லிங்கம், பீடம் இவற்றை உலர்ந்த வஸ்திரத்தால் திருவொற்றாடைசாத்தி எல்லா வஸ்திரத்தாலும் சமஸ்தமான சந்தனம் முதலிய பூச்சாலும்

அலங்கரித்து, ஹாரம் கேயூரம் மாலை இவற்றை இருதயமந்திரத்தால் சாத்தவேண்டும்.
நிவேதனமுறை : - பின்னர் தூபதீபம் சமர்ப்பித்து, சுத்தான்னம், பாயாஸன்னம், அபூபம், வாழைப்பழம், தேங்காய், கரும்பு இன்னும் மற்றப்பக்ஷணங்கள் ஆகிய நைவேத்யங்களை இருதயமந்திரத்தாலேயே சமர்ப்பிக்கவேண்டும்.

ஹோம பலிவிதி : - பிறகு பரிவாரங்களுக்குப்பலி கொடுத்து நித்யஹோமம் செய்து நித்யோத்- ஸவஞ்செய்து தூபம்தீபம் ஆசமனம் சமர்ப்பிக்கவேண்டும்.

உத்ஸவ உபசாரமுறை : - பிறகு, பஸ்மத்தால் ரக்ஷை சத்ரம் சாமரங்கள் சமர்ப்பித்து, நான்கு வேதங்களையும், புராணம், கானம் இவற்றையும் விக்ஞாபனம் செய்து, ஸ்தோத்ரம் செய்து, சமஸ்தமானவாத்யம், நர்த்தனம் இவற்றால் ஈசுவரனைப்பூசை செய்யவேண்டும். இவ்வாறு செய்யப்படும் பூசை எல்லாச்சம்பத்துக்களையும், சுகத்தையும் தரும்.

பூசையின் தேவை : - மறதியால் பூசை செய்யாதிருப்பின் ராஜா, தேசம் இவற்றிற்கு தோஷம் உண்டாகும். ஆகையால் எவ்வாற்றானும் பிரதோஷ பூசையை செய்யவேண்டும்.

பூசையின் பயன் : - பிரதோஷகாலத்தில் ருத்ரரை அருச்சித்தால் ருத்ரலோகத்தை அடைவான். ஆடை, மோதிரம் இவற்றால் ஆசாரியரை உபசரிக்கவேண்டும். பக்தர், பரிசாரகர் இவர்கட்கும் உரியவாறு தக்ஷிணை சமர்ப்பிக்கவேண்டும். பிரதோஷகாலபூஜை எல்லாப்பாவங்களையும் போக்கும். இவ்வாறு சைவாகமங்களில் காரணாகமத்தின் 160வது படலமான பிரதோஷ பூசை-விதிப்படலத்தில் கூறப்பட்டுஉள்ளது. மேலும் உத்தரகாரணாகமத்தில் பிரதோஷபூஜாவிதிப் படலத்தில் பரமசிவனுக்குப்பூசை செய்தபிறகு, அம்பாளுக்கு பூசை செய்யவேண்டுமென்றும், பிறகு நித்யோத்ஸவம்செய்து, விருஷபத்தில் சுவாமியை ஆரோகணித்து, ஆலயத்தைப் பிரதக்ஷிணம் செய்து, மண்டபத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வற்றிற்கு சான்றாக உள்ள மேற்படி மூலாகமத்தில் அப்படலத்தை இனி அறிவோம்.

ஸ்ரீமத்பூர்வகாரணாகம த்தில்106வது பிரதோஷ பூஜாவிதிபடலம்

படலப்பொருள்	=	அதவக்ஷ்யே விசேஷேண பிரதோஷார்ச்சா விதிக்ரமம்.
பிரதோஷகால விளக்கம்	=	பக்தாநாம் ரக்ஷணார்த்தாய க்ருதாந்தஸ்யச நிக்ரஹம் க்ருத: காலாந்தகேநாபி தத்காலம் ரஜநீமுகம்.
காலம்	=	அஸ்தமாநம் ஸமாரப்ய த்ரிபாதேந த்ரிநாடிகா. ப்ரதோஷமிதி விக்யாதம் தத்காலே சிவமர்ச்சயேத்.
செய்யத்தக்கவை	=	ஸ்நாநம்தானம் ஜபம்ஹோமம் நிஷ்பலம்ச பவேத் ததா.

சிவதரிசன விதி = விருஷஸ்ய விருஷணே சைவ ஸர்வதீர்த்தாநி தத்ரவை.
தஸ்மாத் தத் விருஷணம் ஸ்பிருஷ்ட்வா சிருங்கமத்யே
சிவம்திருசேத்.

பிரார்த்தனைமுறை= குணரோகாதி தாரித்ரிய க்ஷுத்(பிராம்ய) பாஹ்ய
வ்யபமிருத்யவ:
கில்பிஷம்ச மனக்கேதம் கோபமோஹ பயாநிச.
தத்பலம் ந லபேன் மர்த்ய: ஸர்வபாபை: ப்ரமுச்யதே.

பாவம்நீங்கவழி = ஆர்த்ரேந தாலபத்ரேந லேக்யவிக்ஞாப்ய ஸந்நிதௌ.
தத்பத்ரம் தாஹயித்வா து ஜலதீரே விசேஷத:
ஸர்வபாபஹரம் புண்யம் ஸர்வதோஷ நிகிருந்தனம்.
ஸாயங்காலே விசேஷேண சிவபூஜாம் ஸமாரபேத்.

விசேஷ பூஜாவிதி= விருஷபம் பூஜயேத் பூர்வம் பஞ்சகவ்யா பிஷேசநம்.

விருஷபூசை = சுத்ததோயேந ஸம்ஸ்நாப்ய கந்தம்புஷ்பம்ச தூபகம்.
கிருஸராந்நம் நிவேத்யாத தாம்பூலம்து நிவேதயேத்.

ஸ்நபனகலச பூசை = பிராஸாதாக்ரே விசேஷேண ஸ்தண்டிலம் சாலிபி: குரு.
லாஜை: புஷ்பைஸ் திலைஸ் ஸார்தம் விகிரேத் ஸமலங்கிருதம்.
பரிஸ்தீர்ய ததோ தர்பைர் புண்யாஹம் வாசயேத் தத:
நவ கும்பம் ஸமாதாய புரோக்ஷயேத் சுத்தவாரிணா.
தந்துநா வேஷ்டயேத் தத்ர வஸ்த்ர கூர்ச்சாதிகம் ததா.
சூதபல்லவ ஹேமம் ச நாளிகேர ஸமன்விதம்.
ஸ்தண்டிலோபரி ஸம்ஸ்தாப்ய சுகந்தாதிபி ரர்ச்சயேத்.
பஞ்சகவ்யம்ச ஸம்ஸ்தாப்ய பஞ்சாமிருதம் ததந்திகே.
நாளிகேரோதகம் சைவ சுத்த தைல கிருதம் ததா.
ஸ்நாநத்திரவ்யம் ஸமாஹ்ருத்ய புரோக்ஷயேத் சுத்த
வாரிணா.

கருவறையில் சுத்தி = கர்பக்ருஹம் பிரவிச்யாத ஸ்தானசுத்திம் தத: குரு.

பஞ்சசுத்தி = லிங்கசுத்திம் தத: க்ருத்வா பஞ்சசுத்திம் தத: பரம்

லிங்கபூஜை = ஆஸநம்மூர்த்திமூலம்ச மாத்ருகாம் விந்யஸேத் தத.
அஷ்டத்ரிம்சத் கலாந்யாஸம் வியோமவியாபி ஸமம்புத:
ஆவாஹயேத் ததோதேவம் பாத்யாத்யை ரூபசாரகை:

லிங்கஅபிஷேகம் = பஞ்சகவ்யைஸ் ததஸ்நாப்ய பஞ்சாமிருதரஸைஸ் ததா.
நாளிகேரோ தகேநைவ ஸ்நாபயேத் பரமேச்வரம்.
ஸ்நாந திரவ்யம் ஸமாலோட்ய தேவதேவா நுலேபயேத்.
தைலம் வாத க்ருதம் வாத ஸ்நாபயேத்து விசேஷத:
கந்தோதைஸ் ஸ்நாப யித்வாது சுத்தோதை ரபிஷேசயேத்.

கலசாபிஷேகம் = ஸ்நபன க்ரம முத்ருத்ய கத்வா ஹர்மிய பிரதக்ஷிணம்.
கும்பாத் தேவம் ஸமாதாய லிங்கமத்யேது விந்யஸேத்.
தத்ர கும்போதகேநைவ ஸ்நாபயேத் பரமேச்வரம்.
சமகம் புருஷசூக்தம்ச ஸ்கந்தசூக்தம் ததைவச.
பிரதோஷே பூஜயித்வாது அந்யமந்த்ராணி வர்ஜயேத்.

அலங்காரவிதி = வஸ்திரேணா லம்பநம் க்ருத்வா லிங்கபீடம் விசேஷத:
ஸர்வவஸ்திரைர் அலங்கிருத்ய ஸர்வகந்தாநு லேபநை:
ஹார கேயூர மால்யாச்ச ஹிருதயேந பிரதாபயேத்.

நிவேதனவிதி = தூபதீபம் ததேத் சம்போர் நைவேத்யம்ச ப்ரதாபயேத்.
தேவஸ்ய நயநோச்சிஷ்டம் ப்ரதோஷே நிரவந்தத:
சுத்தான்னம் பாயஸான்னம்ச அபூபம்ச விசேஷத:
கதளீ நாளிகேரம்ச இக்ஷுதண்டோப தம்சகை:
நைவேத்யம் தாபயேத் பச்சாத் ஹ்ருதயே நைவ மந்த்ரத: .
பாநீயம் தாபயித்வா து தாம்பூலம் ச நிவேதயேத்.

நித்யஹோமவிதி = நித்யோத்ஸவம் ததக் குர்யாத் தூபதீபம் ததேத் புத:

ராஜோபசாரம் = ஆசமனம் தாபயேத் பச்சாத் பஸ்மரக்ஷா ஸமன்விதம்.
சத்ர சாமரகௌ தத்யாத் தேவம் விக்ஞாப்ய தேசிக:
வேதைப் புராண ராகைச்ச குர்யாத் ஸ்தோத்ர மதாசரேத்.
ஸர்வ வாத்யைஸ் ஸமாயுக்தம் நிருத்த கீதேந ஸேவிதம்.
பூஜயேத் பரமேசாநம் ஸர்வஸம்பத் சுகாவஹம்.

பூஜையின் தேவை= பிரமாதாத் யஜனேஹீநே ராஜராஷ்ட்ரஸ்ய தோஷக்ருத்.
தஸ்மாத் ஸர்வப் பிரயத்நேன சிவபூஜாம் ஸமாசரேத்.

பூசைப்பயன் = பிரதோஷே ருத்ரமப்யர்ச்ய ருத்ரலோகே மஹீயதே.
தேசிகம் பூஜயேத் தத்ர வஸ்திர ஹேமாங்குளீயகை:
பக்தாநாம் பரிசாராணாம் ஸ்வஸ்வ வித்தாநு தக்ஷிணாம்.
பிரதோஷேயஜநம் புரோக்தம் ஸர்வபாப நிகிருந்தனம்.
இதி பூர்வகாரணே பிரதோஷபூஜாவிதிப்படலே
ஷடுத்தரசததம:

பிரதோஷகாலத்தில் சிறப்புஅபிஷேகமாக செய்யத்தக்க (தீர்த்தவகை) 20 விசேஷ-தீர்த்தவகைகளின் அபிஷேகமுறைகளை இனி உத்தரகாமிகாகமத்தில் கூறப்பட்டுள்ளவாறு, இவற்றை கற்பிக்கும் முறையுடன் காண்போம். அபிஷேகதீர்த்த கலசத்தில், இவற்றை உடனே அப்பொழுதேபோட்டு மந்திரித்தும் நீராட்டலாம். அல்லது இவற்றை முன்னரே தண்ணீரில்போட்டு, கலசத்தில் ஊறவைத்து இருவேளைகளில் பூசித்து, பிறகு எடுத்தும் அபிஷேகம் செய்யலாம்.

அபிஷேகதீர்த்த வகைகள் :

1. கஷாயோதகம் (மரப்பட்டைகள் ஊரிய நீர்). (ஊரல்நீர் வகைகள்)

சதுக் க்ஷீர குஜோத்பூத துவக்ஸாரஸ் ஸ்யாத் கஷாயக:
ஆம்ர ஜம்பூ தருத்த துவக் ஸாரோ வா பரி கீர்த்தித:.

பொருள் = பாலுள்ள நால்வகை மரங்களின் பட்டைகளின் ஸாரமானது, மேலும் மா மரப்பட்டை, நாவல்மரப்பட்டைகள் ஊரியது கஷாயோதகம் ஆகும்.

2. மார்ஜநோதகம் (அருகு முதலியவற்றுடன் சேர்ந்தநீர்).

தூர்வா தில குசாக்ரைஸ் து மார்ஜநம் துவபிதீயதே.

பொருள்= அருகம்புல்நுணி, எள்ளு, தருப்பைநுணி, இவை சேர்ந்தது மார்ஜநோதகம்.

3. ரத்னோதகம் (ரத்தினக்கற்களுடன் கலந்தநீர்)

மாணிக்கம் சேந்திர நீலம் ச முக்தா வைடூர்ய ரத்னகம்.
புஷ்பராகம் பிரவாளம் ச வஜ்ரம் ஸ்படிக கண்டகம்.
மரகதம் ச ரத்னாநி நவ ரத்நாதி பஞ்சகம்.
பஞ்சரத்ன மிதிஞேயம் ஆத்யாபாவே த்விதீயகம்.

பொருள் = மாணிக்கம், இந்திரநீலம், முத்து, வைடூர்யம், புஷ்பராகம், பவழம், வைரம், ஸ்படிகத்துண்டு, மரகதம் ஆகிய ரத்தினங்கள் ஒன்பதையுமோ அல்லது ஒன்பது கிடைக்காத பொழுதில் மட்டும் ஐவகையையோ நீரில்கலந்து அபிஷேகித்தல் ரதினோதகம் ஆகும்.

4. <u>உலோஹோதகம் (உலோகவகை கலந்தநீர்)</u>

சுவர்ணம் ரஜதம் தாம்ரம் ஆயஸம் த்ரபு ஸீஸகம்.

ஆரகூடம் தத: காம்ஸ்யம் யுக்தம் லோஹோதகம் தத: .

பொருள் = தங்கம், வெள்ளி, தாமிரம், இரும்பு, தகரம், ஈயம், பித்தளை, வெங்கலம் இவைகள் நீருடன் கலந்து உலோஹோதகம் ஆகும்.

5. <u>தாதூதகம் (கனிம தாதுவகைகள் கலந்தநீர்((காதூததம்)</u>

ஸௌராஷ்ட்ர மஞ்ஜநம் சியாமா ஹரிதாலம் மநச்சிலா.

கௌரிகம் ரோசநா சாந்தே காதூதக மிதம் மதம் (காதூதகம் /தாதூதகம்)

பொருள் = சௌராஷ்டிரம், அஞ்சனம் (கருமைகல்), சியாமை, அரிதாரம், மநோசிலா, கைரிகம், ரோசநா எனும் ஏழுவகை கனிமதாதுக்களுடன் கலந்தநீர் காதூதகம் எனப்படும்.

6. <u>பீஜோதகம் (விதைகள் ஊறியநீர்)</u>

சாலீ கோத்ரவ நீவார பிரியங்கு தில ஸர்ஷபா:

யவசியாமயுதாம்பஸ் து பீஜோதகம் மிதிஸ்மிருதம்.

பொருள் = நெல், வரகு, செந்நெல் (நீவாரம்), தினை, எள்ளு, கடுகு, சாமை, யவை இவை எட்டுவிதை வகைகளும் ஊறியநீர் பீஜோதகம் ஆகும்.

7. <u>கந்தோகதம் (நறுமணப்பெருளின் பொடி கலந்தநீர்)</u>

நவநீதம் ச கற்பூரம் த்வக் ஏலா பத்ர ஸம்யுதம்.

சந்தனம், லகு குஷ்டம் ச வராலோ சீர முஸ்தகா:

குங்குமம் ஹரிபேரம் ச கச்சோலோ (உ)சீரா லம் ஜாதி ரேவச.

ஏபிஸ் து சூர்ணிதைர் யுக்தம் கந்தோதக மிதி ஸ்மிருதம்.

பொருள் = வெண்ணை, பச்சை கற்பூரம், லவங்கபட்டை (அகில்), ஏலக்காய், ஜாதிபத்திரி, சந்தனம், நாகப்பூ, கீழாநெல்லிசெடி, வராளம் (சிற்றேலம்), விளாமிச்சம்வேர், துங்கமுஸ்தம், குங்குமப்பூ, வெட்டிவேர், கோரோசனை, கச்சோலம், ஜாதிக்காய், இவைகளைப் பொடி செய்து கலந்தநீர் கந்தோதகம் என்பதாகும்.

8. <u>மிருதோதகம் (மண்வகை கலந்தநீர்) (மிருத் / மிருத்திகை = மண்)</u>

பர்வதே ச நதீதீரே வல்மீகே கர்கடாவடே

விருஷசிருங்கே ச சுக்ஷேத்ரே ஸமுத்ரே கஜதந்தகே.

அஷ்டபிஸ் ச ஸமாயுக்தம் மிருதம்ப: பரிகீர்த்திதம்.

பொருள் = மலை, நதி, புற்று, நண்டுவளை, கடல் இவைகளின் மண்வகையுடன் காளைமுட்டி எடுத்த கொம்புமண், யானை, தானேதந்தத்தால்எடுத்தமண், புண்ணியக்ஷேத்திரத்தின் மண், ஆகிய எட்டு மண்வகைகள் சிறிதளவு சேர்க்கப்பட்ட நீர், மிருதோதகம் ஆகும்.

9. <u>மார்ஜநோதகம் (துரைத்தாவர வகை கலந்தநீர்)</u>

கோசஷுரா ஸஹதேவீ ச விஷ்ணுக்ராந்தா கிருதாஞ்ஜலீ.

சிரீஷேந்தீ வரம் ராத்தரி ரேபிர் மார்ஜ்ஜன முச்யதே.

பொருள் = நெருஞ்சில்இலை, ஸஹதேவிஇலை, விஷ்ணுகிராந்திஇலை, யானைவணங்கிஇலை, காட்டுவாகை, கருநெய்தல், மஞ்சள்இவை ஏழும் கலந்தநீர் மார்ஜநோதகம் எனப்படுவதாகும்.

10. <u>பரிமானோதகம் (சிறப்புமிகு வளர்தாவரநீர்)</u>

தூர்வாங்குரம்ச பத்மம்ச குசாக்ரம் கௌரஸர்ஷபம்.

பத்ரா கிருதாஞ்ஜலீ யுக்தம்பரிமாணம் ததுச்யதே.

அருகுமுனை, தானியமுளைத்தளிர், தாமரை, தர்பைநுணி, வெண்கடுகு, த்ரா (பூனைப்-பூண்டு,) யானை வணங்கி இலை சேர்ந்த நீர் ஆகும்).

11. <u>பத்ரோதகம் (பூஜாங்கஇலை வகை கலந்தநீர்)</u>

துளசீ பில்வ பத்ரம் ச தமாலம் ச தபஸ்விநீ.

அபாமார்க ஸமாயுக்தம் பத்ரதோய மிஹோரிதம்.

பொருள் = துளசி, பில்வம், சாலமரஇலை, ஜடாமஞ்சீ, நாயுருவி இவை சேர்ந்தது பத்ரோதகம்.

12. <u>புஷ்போதகம் (மலர்வகை சேர்ந்த நீர்)</u>

பத்மம் ரக்தோத்பலம் பச்சாத் பாடலீ சம்பகாகிருத:

புந்நாக குரவ நாரங்க நந்தியா வர்த்தம் ச மல்லிகா.

சுவேதார்க்க வகுலைர் யுக்தம் புஷ்பதோய மிஹோரிதம்.

பொருள் = தாமரை, செங்கழுநீர்பூ, பாதிரி, சம்பகம், குருக்கத்தி, புன்னை, மருதாணி, நாரத்தம்பூ, நந்தியாவட்டம், மல்லிகை, வெள்ளெருக்கு, மகிழம்பூ இவவைகளுடன் கலந்த நீர் புஷ்பதோயம் என்று இங்கு கூறப்பட்டது.

13. <u>ஆட்யோதகம் (பெருந்தகைநமிக்க நீர்)</u>

குஷ்டம் குடந்நடம் லோஹம் சந்தனம் குங்குமம் ததா.

கற்பூரோ(உ)சீர ஸம்யுக்தம் ஆட்யோதக மிஹோரிதம்

பொருள் = கீழாநெல்லி, பெருங்கோரை, அகில் (லோஹம்), சந்தனம், குங்குமப்பூ, பச்சை-கற்பூரம், விளாமிச்சம்வேர் இவற்றோடு சேர்ந்தநீர்த்தம் ஆட்யோதகம் என்பதாம்.

14. அஸ்திரோதகம் (பொன்னால்ஆன சிறுஆயுதங்கள் ஊறியநீர்)

சூலம் கபால ஹரிணீ பிநாகப் பரசுஸ் ததா.

பாசாக்ஷமாலா ஹைமாம் ச தைரஸ்த்தி ரோதகம் பவேத்.

பொருள் = பொன்னால் (விரல் அளவில்) செய்யப்பட்ட சூலம், கபாலம், மான், வில், கோடாரி, பாசம், அக்ஷமாலை ஆகிய பிரதிமைகளுடன் கலந்தநீர் அஸ்திரோதகம் எனப்படுவதாகும்.

15. பலோதகம் (பழவகை ஊறியஜலம்)

பநஸோ நாரிகேளம் ச மாதுலங்க த்வயம் தத:

நாரங்க த்வய ரம்பாத் யைர் உக்த மஸ்மின் பலோதகம்.

பொருள் = பலாப்பழம், தேங்காய்கீற்று, இருவகை மாதுளை (வெண்டாடிமீ & செம்மாதுளை), இருவகை நாராங்கபழம் (சாத்துகுடி & கமலாஆரஞ்சு), வாழை, மா, முதலிய பிறபழ-வகைகளோடு ஊறினஜலம் இங்கு பலோதகம் என்று கூறியதாகும்.

16. காஷாயோதகம் (மரவகைகளின் பட்டை, தோல் ஊறிய நீர்)

பலாசோ தும்பராச் வத்த மாயூர ப்லக்ஷ பாடலீ.

ஜம்பூ த்வக்பிஸ் ஸமாயுக்தம் கஷாயோதக மீரிதம்

பொருள் = பொரசம்பட்டை, அத்திப்பட்டை, அரசம்படடடை, நாயுருவிசெடி, இச்சிமரப்பட்டை, ஆலம்பட்டை, பாதிரிமரப்பட்டை, நாவல்மரப்பட்டை ஆகிய மரப்பட்டைகளோடு கலந்தஜலம் காஷாயோதகம் ஆகும்.

17. காந்தோதகம் (ஈர்ப்புக்கல் ஊறிய ஜலம் காந்தவகை)

சூர்யகாந்தஸ் துவயக் காந்தோ ப்ராமரச் சந்த்ரகாந்தகம்.

நிகுந்தப் பஞ்சபிர் யுக்தம் காந்தோதக மிதிஸ்மிருதம்.

பொருள் = சூரியகாந்தக்கல், இரும்புஈர்க்கும் அயக்காந்தம், சந்திரகாந்தக்கல், பிராமகம் (சுற்றுவது) நிகுந்தம், (மார்பிள்) ஆகிய ஐந்தோடும் சேர்ந்தநீர் காந்தோதகம் எனப்படும். (தானே சென்று அடியில் சேரும் தூயது).

18. மூலோதகம் (வேர்வகைகள் ஊறிய ஜலம்)

உசீரோ ஹரிபேரச் ச பீவரி: புஷ்கரம்ததா.

ஸ்ரீகண்டச் சேதி பஞ்சே பிர் யுக்தம் மூலோ தகம் ஸ்மிருதம்.

பொருள் = விளாமிச்சம்வேர்,வெட்டிவேர், பீவரிவேர், தாமரைகிழங்கு, (சந்தன / வில்வவேர்), (மயில்தோகை), நாயுருவிவேர் இவை ஐந்தோடும் கூடிய ஜலம் மூலோதகம் ஆகும்.

19. <u>வல்கலோதகம் (மரவுரிபட்டை, இறகு சேர்ந்தஜலம்)</u>

மயூரச் சிகி பூர்ஜ த்வக் ரோசநா பிருங்கராஜகம்.

கிருதாஞ்லிச் ச பஞ்சேபிர் யுக்த ஸ்யாத் வல்கலோதகம்.

பொருள் = (மயில்தோகை) நாயுருவி, பூவரசம்பட்டை, கோரோசனை, கையாந்தகரை, ஆனைவணங்கி இவை ஐந்தோடு கூடிய ஜலம் **வல்கலோதகம்** எனப்படுவதாகும்.

20. <u>துவகோதகம் (த்வசோதகம்) தோலூறியஜலம் (த்வக்வாரி)</u>

லக்ஷ்மீ பத்ரா குசா தாந்தோ நீவாரம் சம்பகம் புந:

விஹிதா கோக்ஷூராத் யஷ்டௌ லோஹ துவக் வாரி நிர்மிதம்.

பொருள் = வில்வம், பத்ரா, தருப்பை, மருக்கொழுந்து, செந்நெல், சம்பகம், நெரிஞ்சில், வெள்ளைஅத்தி இவைகள் எட்டும் சேர்ந்தநீர் **த்வக்வாரி** என்பதாய் தயாரித்ததாகும்.

<u>பிரதோஷ காலஷோடசஉபசாரமுறை (16 வகைகள்) : -</u> தீபஉபசாரம் ஒன்றுமாத்திரமே பதினாறு வகைஆகும். 16விததீபமும் அவற்றை உபயோகிக்கும்விதமும் பின்வருமாறு : -

<u>ஷோடசதீபபேதம் : -</u> முதலாவது **புஷ்பதீபம்**, இரண்டாவது **புருஷமிருகதீபம்**, மூன்றாவது **நாகதீபம்**, நான்காவது **கஜதீபம்**, ஐந்தாவது **வியாக்ரதீபம்**, ஆறாவது **ஹம்ஸதீபம்**, ஏழாவது **குதிரைதீபம்**, எட்டாவது **ஸிம்மதீபம்**, ஒன்பதாவது **சூலதீபம்**, பத்தாவது (கொடி) **துவஜதீபம்**, பதினொன்றாவது **விருஷபதீபம்**, பனிரெண்டாவது **பிரமரதீபம்**, பதின்மூன்றாவது **குக்குட-தீபம்**, பதின்நான்காவது **கூர்மதீபம்**, பதினைந்தாவது **ஸ்கிருக்தீபம்**, பதினாறாவது **சக்தி-தீபம்**. இவ்வாறு பதினாறு தீபோபசாரங்களைச்செய்து பிறகு, பஞ்சபிரம்மபூர்ணகும்பங்களை பூஜை செய்து, காண்பித்துபிறகு விபூதிரக்ஷை (பஸ்மம்), தர்ப்பணம், சத்ரம், சாமரம், பனை-ஒலைவிசிறி, மயில்தோகை, பட்டுவிசிறி முதலிய ராஜஉபசாரங்களைச் செய்யவேண்டும்.

<u>ஷோடசஉபசாரபேதம் : -</u> பஞ்சப்ரஹ்ம பூர்ணகும்ப **பூஜைஉள்ள** மற்றொருமுறை. முதலாவது **தூபோபசாரமும்**, தீபோபாசாரமும், இரண்டாவது **புஷ்பதீபம்**, மூன்றாவது **நாகதீபம்**, நான்காவது **விருஷபதீபம்**, ஐந்தாவது **மேருதீபம்**, ஆறாவது **புருஷமிருகதீபம்**, ஏழாவது கும்பதீபம், எட்டாவது **ஆராத்ரிகம்**, ஒன்பதாவது **நக்ஷத்திரதீபம்**, பத்தாவது **கற்ப்பூரதீபம்**, பதினொன்றாவது **பஸ்மோபசாரம் (ரக்ஷைசாத்துதல்)**, பன்னிரண்டாவது **தர்ப்பணம்** (கண்ணாடி), பதின்-மூன்றாவது **சத்திரோபாசாரம்** (குடை), பதிநான்காவது **துவஜம்**(கொடி), பதினைந்தாவது **சாமரம்**, பதினாறாவது **விசிறி** என்றவாறு, செய்யப்படுவன ஷோடச உபசாரமுறை..

<u>உபசார சமயத்தில் கூறக்கூடிய வேதாகமமந்திரங்கள்: -</u> நைவேத்யோபசார சமயத்தில் மதுவாதா என்னும் பதத்தை ஆரம்பமாகவுள்ள அந்நஸூக்தஞ் சபிக்கவேண்டும். தூபோபசார சமயத்தில் **"ஓம்ஹாம் சங்கராயநம:"** என்று உச்சரித்துக்கொண்டு **தூரஸி** என்னும்

மந்திரத்தையும் ஜபித்து தூபமாக்ராபயாமி என்று சொல்லிக்கொண்டு தூபத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். தீபோபாசாரஞ் செய்யுஞ்சமயத்தில் "ஓம்ஹாம் சூர்யாயநம:" என்று உச்சரித்து, "உத்தீப்யஸ்வஜாதவேதோ" என்னும் மந்திரத்தையும் ஜபித்து, தீபம்ஸந்தர்சயாமி என்று சொல்லிக்கொண்டு தீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். புஷ்பதீபோபாசாரஞ் செய்யுஞ்சமயத்தில் "ஓம்ஹாம் பரபிரம்மணேநம:" என்றுஉச்சரித்து, "ஸப்ரத ஸபாம்மே கோபாய" என்னும் மந்திரத்தையும் உச்சரித்து, புஷ்பதீபம் என்னும் அலங்காரதீபத்தால் உபசரிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு பலஅடுக்கு புஷ்பதீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். புருஷமிருகதீபோபசாரஞ் செய்யுஞ்சமயத்தில் "ஓம்ஹாம் ஸரஸ்வத்யைநம:" என்று சொல்லிக்கொண்டு, "புருஷமிருகச் சந்திரமஸ" என்னும் மந்திரத்தையும் ஜபித்து, புருஷமிருகதீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். நாகதீபோசாரஞ்செய்யுஞ்சமயத்தில் "ஓம்ஹாம் நாகராஜாயநம:" என்று உச்சரித்து, "நமோ அஸ்து ஸர்பேப்ய:" என்னும் மந்திரத்தையும் உச்சரித்துக்கொண்டு நாகதீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். கஜதீபோசாரஞ் செய்யும்சமயத்தில் "ஓம்ஹாம் விக்னேச்வராயநம:" என்றுஉச்சரித்து, "கணாநாம்த்வா" என்னும் மந்திரத்தையும் ஜபித்துக்கொண்டு கஜதீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். வியாக்ரதீபோபசாரஞ் செய்யுஞ்சமயத்தில் "ஓம்ஹாம் பராசக்தியைநம:" என்று உச்சரித்து, "ஸிம்ஹேவியாக்ர" என்னும் மந்திரத்தையும்ஜபித்து, வியாக்ரதீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். ஹம்ஸதீபோபசாரஞ் செய்யுஞ்சமயத்தில் "ஓம்ஹாம் ப்ரஹ்மணேநம:" என்று உச்சரித்து, "ஹம்ஹச்சுசிஷத்" என்னும் மந்திரத்தையும் உச்சரித்துக்கொண்டு, ஹம்ஸ-தீபத்தைச்மர்ப்பிக்கவேண்டும். குதிரைதீபோபசாரஞ் செய்யுஞ்சமயத்தில் "ஓம்ஹாம் சோமாய நம:" என்று உச்சரித்து, "ஆக்ரம்ய வாஜிந்ப்ரதிவீ" என்னும் மந்திரத்தையும் உச்சரித்துக்-கொண்டு குதிரைதீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். ஸிம்மதீபோபசாரஞ் செய்யுஞ்சமயத்தில் "ஓம்ஹாம் துர்க்காயைநம:" என்றுஉச்சரித்து, "யாதேவீசுபகாசுபத்நீ" என்னும் மந்திரத்தையும்ஜபித்து, ஹிம்மதீபத்தைச்சமர்ப்பிக்கவேண்டும். சூலதீபோபசாரஞ் செய்யுஞ்-சமயத்தில் "ஓம்ஹாம் த்ரிமூர்த்தயேநம:" என்று உச்சரித்து, "அபிஸமேதியத் ப்ரதிவ்-யாகும்ஹருதயசூலம்" என்னும் மந்திரத்தையும் ஜபித்து, சூலதீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். துவஜதீபோபசாரஞ் செய்யுஞ்சமயத்தில் "ஓம்ஹாம் வாயவேநம:" என்று உச்சரித்து, "கேதும் கிருண்வந்நகேதவே" என்னும் மந்திரத்தையும்ஜபித்து, துவஜதீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். விருஷபதீபோபசாரஞ் செய்யுஞ்சமயத்தில் "ஓம்ஹாம் விருஷபாயநம:" என்று உச்சரித்து, "யஸ்ஸுா சிருங்கஸ்ஸுா விருஷப:" என்னும் மந்திரத்தையும்ஜபித்து, விருஷபதீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். பிரமாதீபோபசாரஞ் செய்யும்பொழுது "ஓம்ஹாம் பிராமரீதேவ்யைநம:" என்று உச்சரித்து, தேவீம் வாச மஜனயந்ததேவா:" என்னும் மந்திரத்தையும் ஜபித்து, (வண்டு) பிரமரதீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். குக்குடதீபோபசாரஞ் செய்யுஞ்சமயத்தில் "ஓம்ஹாம் ஸ்கந்தாயநம:" என்று உச்சரித்து, "நிகிருஷ்வைரஸமாயுதை" என்னும் மந்திரத்தையும்ஜபித்து, குக்குடதீபத்தைச்சமர்ப்பிக்கவேண்டும். (ஆமைஂ கூர்மதீபோபசாரஞ் செய்யுஞ்சமயத்தில்

"ஓம்ஹாம் மஹாவிஷ்ணவேநம:" என்று உச்சரித்து, **"இதம்விஷ்ணுர் விசக்ரமே"** என்னும் மந்திரத்தையும்ஜபித்து, கூர்மதீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். (ஹோம-சாதனம்) ஸ்ருக்தீபோபசாரஞ் செய்யுஞ்சமயத்தில் **"ஓம்ஹாம் வஹ்நயேநம:"** என்று உச்சரித்து, **"அக்னஆயாஹி வீதயே"** என்னும் மந்திரத்தையும் ஜபித்து, ஸ்ருக்தீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். சத்திதீபத்தைச் சமர்ப்பிக்கும்பொழுது, **"ஓம்ஹாம் சக்தயேநம:"** என்று உச்சரித்து, **"கௌரீவிமாய"** என்னும் மந்திரத்தையும் உச்சரிக்கவேண்டும்.

<u>பஞ்சஆராத்ரிக பூர்ணகும்பபூஜை :-</u> 5ஆராத்ரிகங்கள் பூர்ணகும்பம் இவற்றை நிரீக்ஷணம் முதலிய நான்கு ஸம்ஸ்காரங்களால் சுத்திசெய்து, பூர்ணகும்பத்தில் **ஓம்ஹாம் ஆத்மதத்வாய நம: ஆத்ம தத்வாதிபதயே ப்ரஹ்மணேநம: ஓம்ஹாம் வித்யாதத்வாயநம: வித்யா-தத்வாதிபதயே விஷ்ணவேநம: ஓம்ஹாம் சிவதத்வாயநம: சிவதத்வாதிபதயே ருத்ராய நம:** என்று உச்சரித்து, கும்பத்தைப்பூசித்து ஈசானதிக்கிலுள்ள ஆராத்ரிகத்தில் **ஓம்ஹௌம் சாந்தியதீதகலாயைநம:,** கிழக்குத்திக்கிலுள்ள ஆராத்ரிகத்தில் **ஓம்ஹாம் சாந்திகலாயை நம:,** தெற்குத்திக்கிலுள்ள ஆராத்ரிகத்தில் **ஓம்ஹாம் வித்யாகலாயைநம:,** வடக்குத்-திக்கிலுள்ள ஆராத்ரிகத்தில் **ஓம்ஹாம் ப்ரதிஷ்டாகலாயைநம:,** மேற்குத்திக்கிலுள்ள ஆராத்ரிகத்தில் **ஓம்ஹாம் நிவிருத்திகலாயைநம:** என்று அருச்சித்து, ஈசானம் முதலான பஞ்சப்ரஹ்மமந்திரங்களால்பூசித்து, திக்பந்தனம் அவகுண்டனங்களைச்செய்து, தேனுமுத்திரை, பத்மமுத்திரை, வில்வமுத்திரை, அஸ்திரமுத்திரை மஹாமுத்திரைகளைகாட்டி, சமர்ப்பித்து, ஆராத்திரிகங்கட்குத் தூபதீபங்கள்சமர்ப்பித்து, பின்பு எடுத்து **ஹிரண்யபாத்ரமதோ: பூர்ணம் ததாதி** என்னும் மந்திரத்தை ஜபித்துக்கொண்டு, பூர்ணகும்பதீபத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். **ஸத்யோஜாதம் பிரபத்யாமி** என்னும் மந்திரத்தைஉச்சரித்து, மேற்குத்திக்கிலுள்ள ஐந்துசுடர் முகமுடைய ஆராத்ரிகத்தைச்சமர்ப்பிக்கவேண்டும். **வாமதேவாய நமோ ஜ்யேஷ்டாய** என்னும் மந்திரத்தைஉச்சரித்துக்கொண்டு, வடக்குத்திக்கிலுள்ள நான்குசுடர்முகமுடைய ஆராத்ரிகத்தை சமர்ப்பிக்க வேண்டும். **அகோரேப்யோ தகோரேப்யோ** என்னும் மந்திரத்தைஉச்சரித்துக்-கொண்டு தெற்குத்திக்கிலுள்ள மூன்றுசுடர்முகமுடைய ஆராத்ரிகத்தைச்சமர்ப்பிக்கவேண்டும். **தத்புருஷாயவித்மஹே** என்னும் மந்திரத்தைஉச்சரித்து கிழக்குத்திக்கிலுள்ள இரண்டுசுடர்-முகமுடைய ஆராத்ரிகத்தைசமர்ப்பிக்கவேண்டும். **ஈசானஸ்ஸர்வவித்யாநாம்** என்னும் மந்திரத்தைஉச்சரித்து, ஈசானதிக்கிலுள்ள ஒருசுடர்முகமுடைய ஆராத்ரிகத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். பின்னர், **அக்னிர் ந:பாது கிருத்திகா:** என்னும் மந்திரத்தைஉச்சரித்துக்கொண்டு நக்ஷத்திரதீபம் சமர்ப்பிக்கவேண்டும். **சோமோ வா ஏதஸ்ய ராஜ்யமாதத்தே** என்னும் மந்திரத்தைஉச்சரித்துக்கொண்டு, கருப்பூரதீபஞ் சமர்ப்பிக்கவேண்டும். **பிருஹத்ஸாமக்ஷத்ர-பிருத்** என்னும் மந்திரத்தையுச்சரித்து,

பஸ்மத்தாலாகிய ரக்ஷையைச்சாத்தவேண்டும். சந்திரமா மநஸோ ஜாத: என்னும் மந்திரத்தைஉச்சரித்துக்கொண்டு, கண்ணாடியைச் சமர்ப்பிக்க வேண்டும். அக்னிமீளே என்னும் மந்திரத்தையேனும் தூரமஸ்மச்சத்ரவோ யந்துபீதா: என்னும்மந்திரத்தையேனும் உச்சரித்துச் சத்ரத்தை(குடையை)சமர்ப்பிக்கவேண்டும். ராஜாதி-ராஜாயப்ரஸஹ்யஸாஹிநே என்னும் மந்திரத்தைஜபித்துக்கொண்டு இரட்டைசாமரத்தைவீசிச்- சமர்ப்பிக்கவேண்டும். ஓம்மாதரிச்வனே நம: என்னும் மந்திரத்தால் பனைஒலைவிசிறியை அருச்சித்து சந்நோதேவீரபிஷ்டயே என்னும் மந்திரத்தால் வீசவேண்டும். அக்நஆயாஹி-வீதயே என்னும் மந்திரத்தால் வியஜநத்தை (விசிறியை) வீசிச்சமர்ப்பிக்க வேண்டும். பிறகு கற்பூரதீபம் சமர்ப்பித்து, அர்ச்சனைசெய்து, யோபாம்புஷ்பம்வேத என்னும் மந்திரத்தால் மந்திர புஷ்பம் சமர்ப்பிக்கவேண்டும். பிறகு, நான்குவேதங்கள், சூத்ரங்கள், புராணஸ்-தோத்திரங்கள், பக்தஸ்தோத்திரம், ஆசீர்வாதம், அறிவைவிளக்கும் கீதம், வாத்தியம், சங்கு, தாளம், மிருதங்கம், வீணை, வேணுகானம், நர்த்தனம் ஆகியவற்றை விக்ஞாபனஞ்செய்து கற்பூரஆராத்ரிகத்தைச்செய்யவேண்டும். பிறகு ஓம்ஹாம் ஆத்ம-தத்வாயநம:, ஓம்ஹாம் வித்யாதத்வாயநம:, ஓம்ஹாம் சிவதத்வாயநம: என்று அருச்சித்து பவித்ரம் சமர்ப்பித்தற்பொருட்டு ஒருபுஷ்பத்தை ஈசுவரருக்குச் சமர்ப்பிக்கவேண்டும். பிறகு அர்ச்சனை முதலியஉபசாரங்கள்செய்து, பூசைக்குஸாத்குண்யம் உண்டாகும் நிமித்தமாக இயன்றஅளவில் பஞ்சாக்ஷரத்தை ஜபித்துமுடித்து, அதனை கீழ்காணும் மூன்றுசுலோக-மந்திரங்களைக் கூறியபின்பு:

குஹ்யாதிகு ஹ்யகோ ப்தாத்வம் கிரஹாணாஸ் மத்கிருதம் ஜபம்.
ஸித்திர் பவது மே தேவ த்வத் ப்ரசாதாத் த்வயி ஸ்திதே.
யத் கிஞ்சித் கர்ம ஹே தேவ ஸதா சுகிருத துஷ்கிருதம்.
தன்மே சிவபதஸ்தஸ்ய புங்க்ஷூவ க்ஷபய சங்கர.
சிவோ தாதா சிவோ போக்தா சிவஸ் ஸவர்மிதம் ஜகத்.
சிவோ யஜதி ஸர்வத்ர யஸ் சிவஸ் ஸோஹ மேவது.

(இதன் பொருள்களை சிவார்ச்சனாசந்திரிகையில் காண்க). என்று கூறி தான் செய்த மந்திரத்தின் ஜபத்தை மலர்களுடன்சேர்த்து, சுளுகோதகத்துடன் சிவனிடம் சமர்ப்பிக்க-வேண்டும்.

<u>சிவாகமங்களில் பிரதோஷகாலபூஜா விதிகளான சான்றுகள் : -</u>

நடேசபூஜை = நடேசம் பூஜயேத் பூர்வம் நைவேத்யம் தூபதீபகம்.
மூலபேரஸ்ய நைவேத்யம் தூபதீபம்ச காரயேத்.
மஹேச்வராதி பேராணாம் கௌர்யை சைவ நிவேதயேத்.

உபசாரான் ஸமப்யர்ச்ய உத்ஸவம் காரயேத் ததா.

ஆலயபஞ்சநந்திகள் = ஆத்யம் கைலாச நந்தீச விஷ்ணுநந்தீ த்விதீயகம்.
திருதீயம் அதிகாராக்யம் ஸாமான்யம்து சதுர்த்தகம்.
மஹாநந்தீ பஞ்சமம் ஸ்யாத் உச்யதே நந்திபஞ்சகம்.

காலநிச்சயவிதி = ஆதித்யாஸ்தம் ஸமாரப்ய ஸத்ரிபாத திரிநாடிகா.
பிரதோஷகால விக்யாத : தத்காலே சிவமர்ச்சயேத்.

பூஜையின் நான்குவகை: தீபாந்தம்வா ஹிவிஷ்யாந்தம் உத்ஸவாந்தம் நடாந்தகம்.
தீபாந்தம் முக்திதம் புரோக்தம் நைவேத்யாந்தம்து
புக்திதம்.
ஸ்ரீபிரதம் சோத்ஸவாந்தம்து நடனாந்தம்து
ஸௌக்யதம்.
(ரௌரவாகமத்தில் - 59ல்)

மூவகைபூசை = தீபாந்தமர்ச்சனம் புரோக்தம் நைவேத்யாந்தம்து பூஜனம்.
பல்யந்தம் சாந்திகம் புரோக்தம் பூஜேயம் திரிவிதோதிதா.
(பூ.காமிக.8.366)
ஸாவச்யம் துாபதீபம்ஸ்யாத் ஸௌபாக்யம் ஹவிஷாந்தகம்.
பல்யந்தம்சாந்திகம் புரோக்தம் நிருத்தாந்தம் பௌஷ்டிகம் ததா.
(பூ.காரணம் 30-468)

நடேசரை தென்முகக்கடவுளாகவே பூசிக்க வேண்டும் என்பதற்கான ஆகமசான்று :

அகோரம் தக்ஷிணாமூர்த்திம் ஆபதுத்தாரணம் ததா.
பைரவம் விஷபேஷம்ச நடேசம் நாரசிம்ஹகம் (சரபர்).
சண்டேசம் யக்ஷராஜம் (குபேரர்)ச தக்ஷிணாபி முகம் யஜேத்.
(உ.காரணம் 73ல்)

பிரதோஷசரிதம் : - விஷமுண்டநீலகண்டரின் வரலாற்றுஆகமசான்று.

ஆசீவிஷ மஹா வேகை ரசுரான் தேவதா கணான்
பிரார்த்தயேத் பரமேசானம் விருஷ மாருஹ்யதச் சிவம்
பபௌ தேவபயம் ஹித்வா ஸர்வோபத்ரவ நாசனம்
தஸ்மின் காலே மயா பீதம் தத்விஷம் லோகரக்ஷதம்.
பிரதோஷ ஸமாயத் பூர்வம் காளம் ஹித்வா விசேஷத:

பிரதோஷபூஜாவிதி : பிரதோஷ ஸமயே பூஜாம் உத்தமம் பூஜனம் குரு.
திவஸஸ்யஅஷ்டமே பாகே பூஜாம் கிருத்வா ஷடானன.
கவ்யைப் பஞ்சாமிதபலைர் ததி க்ஷீர சுகந்தகை :
ஸ்பனாந்தம் யஜேத் தத்ர சுத்தவஸ்திரை ரலங்கிருதம்.
அஷ்டபுஷ்பம் ஸமப்யர்ச்ய நைவேத்யம் கிரமசஸ் தத :
தூப தீபம் துவதா ராத்ரியா கும்ப மாராத்ரிகம் ததா.
பஸ்ம தர்பண சத்ரஞ்ச வியஜனந் தாலபிருந்தகம்.
கேய நிருத்தாந்த மப்யர்சிய கௌரீபூஜாம் ஸமாரபேத்.
நித்யோத்ஸவம் தத: பச்சாத் விருஷபாரூட மர்ச்சயேத்.
பிராதக்ஷிண்ய கிரமேணைவ மண்டபே வேசயேத் தத:
நித்தியபூஜாம் பிரகுர்வீத பூர்வவத் கல்பயேத் தத:
ஏவம் ய: குருதே மர்த்ய: ஸ புண்யாம் கதிமாப்னுயாத்
(உத்தரகாரணாகமம் 26வது படலம்)

பிரதோஷகால நிர்ணயம்பற்றி சுவாயம்புவாகமத்தில் கூறப்படும் ஆகமசான்று,

காலவிதி = ஆரப்யாஸ்தமனம் பாநோர் ஸத்ரிபாத திரிநாடிகா.
பிரதோஷஇதி நிர்திஷ்ட: தத்ர சம்பும் ஸமர்ச்சயேத்.
ரவேரஸ்தமனாத் ஊர்த்துவம் திரயோதச் யதிகா யதா.
பிரதோஷபூஜா தத்ரைவ கர்த்தவ்யா காம்யஸித்தயே.

காலமுறைமை : பிரதோஷயஜனாந்தேது சாயரக்ஷாம் ஸமாசரேத் (அம்சுமதாகமம்)

பிரதோஷபூஜாபலன் : பிரதோஷயஜனம் வக்ஷ்யே சுருணு த்வம் தத் பிரபஞ்ஜன
ஆயுராரோக்கிய மைச்வரியம் ஸர்வயக்ஞ பலபிரதம்.
ஸர்வபாபஹரம் புண்யம் ஸர்வசத்ரு விநாசனம்.

பிரதோஷசரிதம் : திரயோதசி தினே ஸாயம் க்ஷீராப்தி மதனோத்பவம்.
கபளீகிருதவான் ருத்ர: காலாக்னி ஸதுருசம் விஷம்.
தேவானாம்ச ஹிதார்த்தாய விருஷமாருஹ்ய ஸத்வரம்.
தஸ்மின்காலே மயாபீதம் கரளம் லோகரக்ஷயா.
கரோதிபூஜாம் யோ பக்தியா ஸர்வபாபைப் பிரமுச்யதே.
ஸாயம் ஸம்ஹார காலத்வாத் ஸர்வதோஷா பநுத்தயே.
விச்வரக்ஷாகரம் தர்மம் விருஷபம் பிரதமம் யஜேத்.

(சூக்ஷ்மாகமம்)

பூஜாகாலம் : நித்யம் நைமித்திகம் சைவ ஸமகாலே சமாசரேத்.
ஸ்நாநே ஸ்நாநம் பிரகர்த்தவ்யம் நைவேத்யேச நிவேதனம்.
ஹூதம்வை ஹோமகாலேச பலிகாலே பலிபிரமம்.
தூப தீபம் ச தத் காலே ஹி ஏவமேவம் ஸமாசரேத்.

சிவசேசவாவிதி : விருஷஸ்ய விருஷணம் ஸ்பிருஷ்ட்வா ஈஸ்வரஸ்ய
அவலோகனம்.
சிருங்கமத்யே சிவம் திருஷ்ட்வா புனர்ஜமன்ம ந வித்யதே.

பிரதோஷகாலத்தில் விலக்கத்தக்க எட்டுசெயல்கள் :

பிரஸ்தானம் போஜனாப்யங்கம் ஜப ஸ்வாத்யாய மைதுனம்.
தபஸ் ச ஹரிசேவா ச பிரதோஷே அஷ்ட வர்ஜயேத்.

பிரதோஷகாலத்தில் செய்யத்தக்க எட்டுசெயல்கள் :

சிவார்ச்சனம் ஜபோ தியானம் ஸ்தோத்திரம் கீதம் பிரதக்ஷிணம்
கீர்த்தனம் ச நமஸ்காரம் பிரதோஷே அஷ்டௌ ஸமாசரேத்.

நடேச்வரஸ்வரூபம் பஞ்சகிருத்யத்தை உணர்த்தும் நடராஜஉருவபாவனைமுறை :

டமரோஸ் சிருஷ்டிர் ஜாயதே அபயாத் ஸ்திதி ருச்யதே.
அக்னேஸ் து புரோக்தஸ் ஸம்ஹாரோ திரோதானம் து குஞ்சிதாத்.
அனுக்ரஹோ ஊர்த்வபத: கிருத்யம்பஞ்ச ஸபாபதே.

ஆலய ஆறுகாலபூசையில் காரணாகமம் கூறும் பிரதோஷபூஜாகாலம் :

பாஸ்கராஸ்தமனாத் பச்சாத் ஸார்தேன ஸப்தநாடிகா.
பிரதோஷமிதி விக்யாதம் அர்யாமமந்ததச் சுருணு.

நித்திய பிரதோஷகாலம் 6 முதல் 7.30 வரை.
நைமித்திக பிரதோஷகாலம் 4.30 முதல் 7.30 வரை எனக்கொள்க.

விருஷபநிவேதனம் (காப்பரிசி உணவு) :

தண்டுலம் முத்க பின்னம் ச குளம் ச நாரிகேளகம்.
அகிலம் மிச்ரயித்வா து நந்தினே விநிவேதயேத்.

இதன்படி உடைத்தபச்சஉரிசி மற்றும் பயற்றடன் தேங்காய்திருவல், வெல்லம், வெள்ளை-எள்ளு, ஏலக்காய் சேர்த்த பொடிசூர்ணம் நந்திநிவேதனமாகும். இதனை நந்தி காப்பரிசி என்பார்கள்.

இவ்வாறாக சைவாகமங்களில் கூறப்படும் விதிமுறைகளையும், ஆலயசிஷ்டாசார வழக்கத்தையும், பூஜாபதத்தியையும் தவறாது பின்பற்றி, பிரதோஷகாலத்தில் எங்கும், யாவரும், அந்தந்த மாலைநேரத்தில் சிறப்பாக சிவபூஜை செய்தும், விரதமிருந்தும், சிவாலயதரிசனம் செய்தும், இஷ்டஸித்திகளைப்பெற்று உய்வது முறையான சைவாகம நன்நெறியாகும். நன்றி, சுபம்.

வாழ்கசீர் அடியாரெல்லாம்

-----------*********-----------

உ

சைவஸித்தாந்தத்தில் பாசவகைப்பொருளின் இயல்புத்தொழில் விளக்கம்

ஸர்வார்த்த பாவகம் ஸத்யம் வடமூல நிவாஸி யத்
ஜோதிஸ் தத் தக்ஷிணாமூர்த்தி: ஆவிரஸ்து மமாக்ரத:.

கட்டுரையாளர்
சிவாகமசிரோமணி. சித்தாந்தரத்னம்.
சிவஸ்ரீ. T.V. ராஜப்பா குருக்கள்
திருச்செங்கோடு.

சித்தாந்தத்தில் பாசவகைப் பொருள் யாது? அப்பொருளின் இயல்பு யாது? அல்லது அப்பொருளின் இயல்புத்தொழில் யாது? இதுபற்றிய விளக்கத்தினை இனி காண்போம். சைவசித்தாந்தத்தில் மூவகைப்பொருள்கள் நித்தியமாக விளக்கப்படுகின்றன. சித்தாந்தத்தில் **பாசவகைப்பொருள்** என்பதற்குமுன்பாக, இரண்டு பொருள்கள் இருக்கின்றன. அவை (1) பதி எனும் பரம்பொருள், (2) பசு எனும் உயிர்கள், (3) மூன்றாவது **பொருளே பாசம்** எனப்படுவதுஆகும். இவைகள் மூன்றும் ஒன்றுக்கொன்று, தொடர்புடையகாரணத்தால், இப்பிரவசனத்தில் (கட்டுரையில்) ஒருசிலசந்தர்ப்பங்களில் மூன்றுபொருள்களையுமே கூறவேண்டியதும் அவசியமாகிறது.

பாசவகைப் பொருள் என்று தலைப்பில் கூறுமிடத்து, அவ்விடத்தில் **ஆணவம், கன்மம்,** மாயை ஆகியவைகளே முக்கியமான மூவகைபொருள்களாக பாசத்திற்குக் கூறப்படுகிறது. இம்மூன்றும் பந்திக்கக்கூடியவை. இரண்டாவாகக்கூறிஉள்ளது பசு எனப்படுகிற **பசுப்பொருள்** அதாவது (ஆன்மா) இந்த ஆன்மாவை உய்விக்க சிருஷ்டிக்கக்கூடியது முதலாவதாகஉள்ள **பதி** எனப்படுகிற **பதிப்பொருள்,** அதாவது பரமேச்வரன். ஆகியவை முப்பொருள்கள். (1) பதிப்பொருள், (2) பசுப்பொருள், (3) பாசப்பொருள் என்பனவே. பாசப்பொருளின் வகைகளே (1) ஆணவம், (2) கன்மம், (3) மாயை என்பன மும்மலம் என்று மூவகையாக கூறப்படுவனவாகும்.

I. ஆணவபாசம்

"பஞ்சசு பாசேஷு பிருதக்பூதம் ஆணவம்மலம்". பதி இலக்கணத்திற்கும், பசு இலக்கணத்திற்கும் வேறுபட்டதான, **ஆணவம், கன்மம், மாயை, திரோதாயீ, மாயேயம்** எனப்படுகிற ஐந்துவகை பாசங்களுள் தனிப்பட்டதானது **ஆணவம்.** இதனையே மல சப்தத்தோடு சேர்த்து **ஆணவமலம்** என்று கூறுவது மரபுஇயல்பாகும். "மலினீ கரோதி

திருக்கிரியாத்மகம் தேஜ: பிரச்சாதயதி இதி மல:" இதன் பொருள், ஞானக்கிரியா-ரூபமானஒளியை, மறைப்பதால் இது மலம் என்று பெயர்பெறுகிறது. இதனை மலசப்த: ஆச்சாதக பர்யாய: என்று கூறுவர். பாசவகைப்பொருளான இந்த ஆணவமலத்திற்கு,

பசுத்வ பசு நீஹார மிருத்யுர் மூர்ச்சா மலாஞ்ஜநை:-
அவித்யாஆசிருதி ருக்கிலானி பாபமூலம் க்ஷயாதிபி:

இதன்படி வேறுபெயர்களாக [1]பசுத்வம், [2]பசு, [3]நீஹாரம், [4]மிருத்யு, [5]மூர்ச்சை, [6]மலம், [7]அஞ்சனம், [8]அவித்தை, [9]ஆவ்ருதி, [10]ருக், [11]க்லானி, [1]பாபமூலம், [12]க்ஷயம், என்று பல்வேறு சிறப்புமறு-பெயர்கள் ஸ்ரீ மிருகேந்திராகமத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

தோற்றம் :- எதற்குத் தொடக்கம் காணப்படவில்லையோ அது அநாதி. முதலில் கூறப்பட்ட பதி, பசு ஆகியவைகள்போல், இந்த பாசப்பொருளாகிய ஆணவமும் அநாதியாகும். ஆச்சாதனக் கிரியாசம்பந்தமுடைய ஆன்மாவிற்கு, அநாதித்தன்மையை சொல்லும்வாயிலாக, அதனை பந்தித்திருக்கும் மலத்திற்கும் அநாதித்தன்மை கூறப்பட்டது.

"ஆச்சாதனக் கிரியா ஸம்பந்தஸ்யாபி அநாதித்வ பிரதிபாதனதுவாரா
தத்ஸம்பந்திநோ மலஸ்யாபி அநாதித்வம் உக்தம்".

இம்மலம் ஆன்மாக்களுக்கு பசுத்வம் என்று கூறப்படுகிறது. இம்மலத்தோடு கூடிய ஆன்மாவிற்கே பசு என்று பெயர். இம்மலம் இல்லாத ஆன்மா முக்தான்மா எனப்படுவதாகும். "பசு: பசுத்வ ஸம்யோகாத் நமுக்த: பசுருச்யதே." இம்மலம் ஒன்றாக இருந்தும் பலப்பல சக்திகளை உடையது. இம்மலம் ஆகந்துகமும் அல்ல.

ததேகம் ஸர்வபூதாநா மநாதி நிதனம் மஹத்.
பிரத்யாத்மா ஸ்வகாலாந்தாஅபாய சக்தி ஸமூஹவத்.

இம்மலம் பதினான்கு வகைப்பட்ட பிராணிகளுக்கும் ஒன்றே. நீஹார: என்ற பெயர் உள்ள இம்மலமானது தோற்றமின்மையால் அனாதி எனவும், மனுஜஸஹபவ: ஆன்மாக்களுக்கு உள்ளபடி பிறப்பின்மையால், ஆனால் அதனுடன் இது ஆன்மாக்கட்கு அனாதி சித்தமாய் மறைவாயிருக்கும். தாம்ரகா காலிகேவ = செம்பிற்களிம்பு எவ்வாறு ஸஹஜமோ, அவ்வாறே ஆன்மா தோன்றுமிடத்து ஆணவமலம் உடனாயிருக்கும். செம்பை மறைத்திருக்கும் களிம்பானது ரசசக்தியால் பேதிக்கப்பட்டு எப்படி நீங்குமோ, அப்படியே ஆன்மாவை மறைத்திருக்கும் மலமும், சிவசக்தியால் பேதிக்கப்பட்டு நீங்கும். திரிலோசனசிவாச்சார்யார் தமது சித்தாந்த-ஸாராவளியில் இம்மலத்தைஏக: என்று சொல்லுமிடத்து, அனேகசக்தி:என்றும் கூறுகின்றார். ஏக சப்தத்தினால் ஆணவமலமஎன்பது ஒன்றாகஉள்ளபோதும், இதற்குஈ ஆன்மாக்கள்தோறும், ஞானத்தை மறைக்கும், பலசக்தியுள்ளமையால், இது அனேகசக்தி என்று கூறியதன் பொருளாகும்.

ஸஹஜமலசப்தத்தினால், இம்மலமானது தாம்ரக காளிகவத் யோகாத் ஸஹஜஸ் ஸமுதாஹ்ருத: என்பதால், ஆன்மாவுடன் பிரியாமல்சேர்ந்தேஇருப்பது, ஆணவமலமே என அறியவும். கன்மமலம் - மாயாமலம் இரண்டிற்கும் இம்மலமே காரணம் ஆதலால், ஆணவமலமாகிய இதற்கு **மூலமலம்** என்றும் பெயருண்டு. ஆணவம் ஓரளவில் இருள் போன்றது, என்றாலும், இருளினும் மிகக்கொடியதாகும். எவ்வாறெனில், இருள் பிறபொருள்களை மறைப்பினும், தன்னை மறைப்பதில்லை. ஆணவம் தன்னையும் காட்டாமல் மறைத்துக் கொள்கிறது. அதாவது அறியாமையுடைவர்களுக்கு நாம் அறியாமையுடையவர்களாய் இருக்கிறோம். என்பது தெரியவதில்லை. அறிவோடு இருப்பது போலவே தோன்றும்.

ஒருபொருளும் காட்டாது இருள் - உருவம்காட்டும்
இருபொருளும் காட்டாது இது. (திருவருட்பயன்) கூறுகிறது.

ஆணவத்து இயல்பு :- மாயை கன்மங்கள் சேராதபொழுது ஆணவம் அறிவை அடியோடு மறைத்துநிற்கும். மாயை, கன்மங்கள் சேர்ந்தபொழுது வழியைக்குழியென்றும், குழியை வழியென்றும் உணர்வது போன்ற தவறான உணர்வை உண்டாக்கி, ஆன்மாவை மேல்நிலைக்குச் செல்லாமல் கீழ்நிலைக்கே செல்லுமாறுசெலுத்தும். ஆணவமலம் ஒன்றாய் இருந்து பல ஆன்மாக் களுடன் கூடிமறைப்பது, எதுபோல? என்றால், இருள் ஒன்றாய் இருந்து பல கண்களுடன் கூடி மறைப்பதுபோல் ஆகும். இதற்கு பல ஆன்மாக்களுடன் கலந்துநிற்கும் தன்மை உள்ளமையால் ஆணவமலம் வ்யாபகம் உடையதாகும். அவ்வாறு ஆன்மாக்களுடன் கலந்துநிற்கும் இறைவன் வியாபகத்திற்கும், ஆணவமல வ்யாபகத்திற்கும் வேற்றுமை உண்டு. **இறைவனின் வியாபகம்** = ஆன்மாவின் வியாபகத்திற்கு மேம்பட்டதாய், அதனால் அக்ஞானகாலத்தில் விளங்கித் தோன்றாமையும், முக்திகாலத்தில் விளங்கித்தோன்றுதலும் நீங்காது இருப்பதாகும். **ஆணவ-மலத்தின் வியாபகம்** = ஆன்மாவின் வியாபகத்திற்கு மேம்படாமலும், குறையாமலும் சம-வியாபகமாய், அதனால் குரு அருளால், முக்திகாலத்தில் நீங்கப்பெறுவதாயும் இருக்கும். ஆன்மாக்கள் **கேவலநிலை** என்பதில் நிற்கும்பொழுது ஆன்மாக்களுக்குஉள்ள அறிவையும், செயலையும் நிகழவொட்டாமல், தனது மறைப்புஆற்றலால், மறைத்துநிற்பது ஆணவமலத்தின் செயலாகும். ஆன்மாக்களுக்கு **ஸகலநிலை** என்பது, பிறவிக்கு வந்தபிறகு ஆணவம், கன்மம், மாயை என்று மும்மலங்களையும் ஆன்மா சார்ந்திருக்கும் தன்மை. **சுத்தநிலை** என்பது மும்மலச்சார்பையும்விட்டுத் திருவருளைமட்டுமே சார்ந்து, பிறவி நீங்கப்பெற்ற ஆன்மாவின்நிலை. **"அக இருள் ஆணவமலம்"** எவ்வாறு? இருள்மிகுந்த இரவில், வழியிலே சுவர் இருந்தால், சுவர் சுவராகத்தோன்றாது, அதுபோல, பதி, பசு, பாசங்களின் தன்மை, நமது அறிவுக்கு எட்டாமல் மறைக்கப்படுவதற்குக்காரணம், அவற்றை மறைக்கும் இருள் போன்ற ஒருபொருள் இருத்தல் வேண்டும். அப்பொருளே அகஇருளாகிய **ஆணவமலம்** ஆகும்.

இருள்ஆனது அன்றி இலது: எவையும் ஏகப்பொருள் ஆகி நிற்கும் பொருள். "பிரளயத்திலும் ஆணவம் ஆன்மாவோடு உள்ளது"

எவ்வாறு? ஸர்வஸம்கார காலத்தில் மாயாமலமும், கன்மமலமும் ஆன்மாவை விட்டு ஒதுங்கி நின்று மஹாசிருஷ்டி தொடக்கத்தில் ஆன்மாவைச்சாரும். ஆனால் ஆணவமலமானது ஸர்வபிரளயகாலத்திலும் ஆன்மாவை விட்டு நீங்காது ஆன்மாவோடு நிற்கும். எனவே ஆணவம் அநாதியாய் ஆன்மாவோடு உள்ளது எனப்படும். **எண்ணற்ற ஆன்மாக்களைப் புணர்வது ஆணவம்.** உதாஹரணம் நாயகன் - ஆன்மா, நாயகி - ஆணவம். ஒரு நாடகத்தைப் போன்று, கற்புடைய பெண்கள் பிறஆடவர்களோடு சேராதவர்களாய், தம்முடைய சொந்த கணவர்களுக்கு மட்டும் தம்மைக்காட்டிநிற்பர். நாயகியாகிய ஆணவமலமானது எண்ணில்லாத ஆன்மாக்களைப்-பொருந்தி கலந்துநின்றும், தனது நாயகர்களாகிய ஆன்மாக்களுக்குத் தன்னை காட்டாமல் இருக்கும் தன்மையால், இது பதித்துவம், பசுத்துவம்போன்று அநாதித்துவமாக இருப்பினும் ஆணவம் ஆன்மாக்களுக்கு ஓர் மாசுப்பொருளேயாகும்.

<u>ஆன்மாக்களுக்கு மெய்யுணர்வைத் தடுப்பது ஆணவமே : -</u> ஆன்மாக்கள் அறிய வேண்டிய தத்துவங்கள் - பதி, பசு, பாசம், சரியை, கிரியை, யோகம், ஞானம் முதவியனவாகும். ஆனால் அறிய முடியாதநிலை. காரணம் நமக்கு ஏற்படும் மயக்கஉணர்வு. அதற்குக்காரணம்-ஆணவமலம். "உணரும் பான்மை தெரியாத தன்மை இருளார் தந்தது" (திருவருட்பயன்). <u>ஆணவம் ஆன்மாக்களின் குணமா?</u> = ஆணவம் என்ற பொருள் இல்லையானால் ஆன்மாவுக்குப் பிறவித்துன்பம் கிடையாது. ஆணவமலமே அனைத்து துன்பங்களுக்கும் காரணம். அது ஆன்மாவிற்கு குணமாக இருக்குமேயானால்? முக்தியின்போது சிவஞான-மானது ஆணவமல கார்யங்களை ஆன்மாவிடமிருந்து போக்கும்போது, குணம் கெடுவதோடு, குணத்தையுடைய பொருள்ஆகிய ஆன்மாவும் கெட்டுப்போகும். முக்தியும் பயனற்றுப் போகும். எனவே ஆணவம் ஆன்மாவுக்கு குணமன்று.

<u>இத்தகைய ஆணவத்தைக் கெடுக்கும் ஒருகருவி உண்டா?</u> இயல்பிலே மலம் இல்லாத-வனாகிய இறைவன்தான், உயிர்களைப் (ஆன்மாக்களை) பற்றியுள்ள ஆணவாதி பாசங்களை நீக்க வேண்டும். ஆன்மாக்களை இயல்பிலே பற்றியுள்ள ஆணவ மலத்தை நீக்குதற்கு இறைவன் என்ன செய்கின்றான்? என்றால், செம்பிலுள்ள களிம்பைப் போக்குதற்குப் புளி, சாம்பல் முதலியவைகளை சேர்ப்பது போல், மாயையும் கன்மமும் ஆணவமலத்திற்கு மாற்றுமலங்களாம். மாயை ஆணவத்திற்கு மாற்றாதலால், ஆணவம் கண் ஒளியை மறைக்கின்ற புற இருள் போல, அறிவை மறைக்கின்ற அக இருளாயின், மாயை அவ்விருளை சிறிதே நீக்குகின்ற விளக்காகும். விளக்கு இருளைச் சிறிதே நீக்குமேயன்றி முற்றும் நீக்காது. சூரியனே இருளை முற்றநீக்கும். அதுபோல, இறையருள்தான் ஆணவத்தை முற்ற நீக்கும்.

ஆணவமலத்தின் இயல்புத்தொழில் : -

"மோஹோ மதச்ச ராகச்ச விஷாத: சோஷ ஏவ ச. I
வைசித்ரியம் சைவ ஹர்ஷாக்ய: ஸப்தைதே ஸஹஜா மலா: II

(1) **மோஹம்** - குருவினாலும், நூல்களினாலும், தீயன என்று அறிந்தவற்றில் நீங்காமல் நிற்கும் மயக்கம், (2) **மதம்** - தன்னைப் போல் ஒருவரும் இல்லை என்று எண்ணும் நிலை, (3) **அராகம்**- கிடைக்காத பொருளினிடத்தில் ஆசைப்படுதல், (4) **விஷாதகம் (கவலை)** - கிட்டிய பொருள் பிரிந்தபொழுது வருந்துதல், (5) **சோஷம் (தாபம்)** - சுற்றத்தை விட்டுப்பிரிவதற்கும் பிரிந்ததற்கும் ஆற்றாமை, (6) **வைசித்ரியம்** - எந்தச்செயலும் வினையின் வழியாய் நிகழ்வது என்று எண்ணாமல் தான் செய்ததாகவும் பிறர் செய்ததாகவும் எண்ணுதல், (7) **ஹர்ஷம் (வாட்டம்)** - ஆற்றாமையால் மலர்ச்சிஇன்றிவாடுதல். மேற்கூறிய இந்த ஏழுகுணங்களினாலும் ஆணவமலம் உயிர்களை வேதனைப்படுத்தும், உயிர்கள் இக்குணங்களின்வசப்பட்டு இவற்றைத் தாண்ட-மாட்டாது துன்பப்படும்.

ஆணவமலமே இருவினைகட்கும் நிமித்த காரணமாகும் : - ஆணவமலம் ஆன்மாவைத் தன்வசப்படுத்தி, யான், எனது என்னுஞ்செருக்கினையும், விருப்புவெறுப்புக்களையும், கொடுக்கும்பொழுது, அம்மலத்தின் வசப்பட்ட ஆன்மா, ஹிதம், அஹிதம் என்னும் நல்வினை தீவினைகளைச் செய்யும். எவ்வாறோ? எனில் மதுவின்மயக்கத்தில் வசப்பட்ட ஒருவன், மதுவின் செயலால் அறிவுமயங்கி இது, தக்கன, இது தகாதன, என்னும் அறிவின்றி, நேர்ந்தனவெல்லாம் செய்வது போல, ஆன்மாவும் ஆணவமலத்தின் வசப்பட்டு அறியாமைகொண்டு இது நல்லது, இது தீயது என்று அறியாது, புண்யபாபங்களைச் செய்யும். அநாதியில் ஆணவமலத்தோடு கூடி அறிவும், இச்சையும், தொழிலும் நிகழப்பெறாமல் மயங்கிக்கிடந்த ஆன்மா, அம்மலத்தின் சேஷ்டை நீங்குமாறு தனக்குத்துணை செய்யவல்ல கன்மமாயைகளை விரும்ப, நிமலன் அவற்றைக்கூட்டிக் கலை, வித்தை, அராகங்களினால் மலசக்தியைச் சிறிது ஒதுக்கி அறிவு, இச்சை தொழில்களைச் சிறிதுவெளிப்படுத்தி கிஞ்சிக்ஞத்வம், (கொஞ்சம் அறியும்தன்மை, கொஞ்சம் செய்யும்தன்மை), கிஞ்சித்கர்த்ருத்வ வசதியுண்டாகும்படி செய்தமையால், கொஞ்சமே கர்த்திருத்துவ சக்தியடைந்த ஆன்மா, கன்மமலத்தோடு கூடி, கன்மங்களைச் செய்வதாகிறது. ஆன்மா காம்யகன்மங்கள் செய்வதற்கு ஏற்ற அகந்தையையுண்டாக்கி, நிமித்தமாய் நின்றது ஆணவமலம் ஆதலால், நல்வினை தீவினைகளை ஆன்மா செய்தற்கு, நிமித்தகாரணமா-யிருப்பது ஆணவமலமே என்று சொல்லப்படும். இன்னும் ஆணவமலத்தின் சக்தி பலவகைப்-பட்டுப் பலவிதகுணங்களை ஆன்மாவுக்குக் கொடுத்துப் பலவித கன்மங்களைச்செய்யுமாறு ஏவுவதால், அம்மலத்தின் வழியாக வந்த கன்மங்களும் (பஹு) பலவிதமாயின. அவையெல்லாம் தத்தம் பாகுபாட்டிற்கேற்ற பலன்களைக் கொடுக்கும் நிமித்தம், பலபலபுவனங்களிலேசென்று அடையவேண்டியனவாயின. தனுகரணங்கள் பெற்ற

சகலநிலையிலேயே, அத்தொடர்புகள் வருதலாலும், கன்ம மலத்திற்கும் ஆன்மாவிற்குமுள்ள ஸம்பந்தத்தை ஆணவமலத்துக்குள்ள சம்பந்தம் போலச் ஸஹஜம் என்று சொல்லாமல், ஆகந்துகம் என்று சொல்லுவார்கள். ஆன்மா அநாதியே தனக்குயிராயுள்ள சிவத்தைப்பற்றாது தனக்கு வேறாய் ஜடமாயுள்ள மலத்தைப் பற்றி நின்றது. அந்தமலத்துக்கும் ஆன்மாவுக்குமுள்ள சம்பந்தமாகிய தொடர்பு ஸஹஜம் என்று சொல்லப்படும். ஆன்மா அநாதியே சிவத்தைப்பற்றிஇருந்தால், சிவத்தின் குணமாகிய ஞானானந்த நிலையையடையும். அப்படியின்றி ஆன்மா அநாதியேமலத்தைப் பற்றியபடியால், மலம் தன்குணமாகிய அறியாமையைக்கொடுக்க, ஆன்மா அறிவிருந்தும் அறியாது, மயங்குவதாக ஆயிற்று. கண் எல்லாவற்றையுங்காணும் இயல்புடையதாயினும் இருளில் அகப்பட்டபொழுது, ஒன்றையுங்காணமாட்டாமைபோல, ஆன்மா அறிவுடையதாயினும், மலத்தின் வயப்பட்ட இந்தநிலையில் ஒன்றும் அறியாதிருக்கும். ஒவ்வொரு ஆன்மாவுக்கு ஒவ்வொரு ஆணவமலமாய் எண்ணில்லாத ஆன்மாவுக்கு, எண்ணில்லாத மலம் இருந்து மறைப்பதல்ல. எண்ணில்லாதனவாகிய கண்களை, ஒரேஇருள் எப்படிமறைக்கிறதோ, அப்படியே எண்ணில்லாத ஆன்மாக்களையும், ஒரேமலம் மறைத்துநிற்கும். மலமறைப்பினாலே ஆன்மா தன்னையுமறியாது, சிவத்தையும் அறியாது, தன்னை மறைக்கும் பாசத்தையும் அறியாது. ஆணவமல மறைப்பினாலே வருந்திய ஆன்மா, அம்மறைப்பின்றி நீங்கும்படி, தன்னறிவு வெளிப்படுதற்கு, வியஞ்சகமாகிய மாயாதனுகரணங்களை விரும்பிற்று. தன்செயல் வெளிப்படுதற்கு ஹேதுவாகிய கன்மத்தையும் விரும்பிற்று.

<u>அநாதியாயுள்ள ஆணவமலம் இடையில் நீங்குமா? நீங்கும் :-</u> நீங்குதல் நீங்காமை அவற்றின் சம்பந்தத்தால்ஆகும். குண, குணி சமவாய சம்பந்தமுடையன. ஆதனால் அவை நீங்கமாட்டா. வேறுபட்ட இயல்பினையுடைய இரண்டுபொருள் ஒன்றோடொன்று கூடியிருப்பது-முண்டு. அத்தன்மை பெற்ற பொருள்கள் கூடியிருப்பினும் வேறுபட்டே இருத்தலால், அவை பின் ஒருகாலத்தில் பிரிதற்குச் சந்தேஹமில்லை. அன்றியும், ஆன்மாவுக்கும் மலத்துக்கும் உள்ள சம்பந்தம் அப்படியுமன்று. ஆன்மா பளிங்கினைப்போன்றது. பளிங்கு தன்மையடுத்த பொருள்-களில் செம்மை, கருமை, பொன்னிறம் முதலிய நிறங்களைத்தன் நிறமாகக்கொண்டு நிற்றலை அறிகின்றோம். ஆயினும் பளிங்கின் நிறத்திலாவது செம்மை, கருமை, பொன்னிறங்கள் சார்ந்திருக்கவில்லை. இருப்பதுபோல் ஒருகாட்சிமாத்திரம் காணப்படுகின்றது. பளிங்கினிடத்தில், உள்ளபடி அந்நிறங்கள் பற்றியிருக்கவில்லை என்பது கொண்டு, அக்காட்சியையும் இல்லை என்று சொல்லமுடியாது. இப்படி, உள்ளதுபோலக் காணப்படுவதும், உண்மையை ஆராய்ந்தால் இல்லாததுமான ஆன்மாவின் மலபந்தமும் அவ்வாறே, அன்மா(அறிவுடையது) சித்துப்பொருள் ஸதூலசித்தாக இருக்கும். அதனால் ஆணவம்முதலிய மலங்களின்குணங்களைத் தன் குணமாகக் கொள்ளுகிறதன்மை, ஆன்மாவுக்கு உள்ளதாயிற்று. கண் இருளுடைய பொருள் அல்ல. ஆயினும் இருளோடுகூடி, இருளின்

வசப்பட்டிருக்கும் போது, கண் அவ்விருளினால் மறைக்கப்பட்டு, ஒரு விஷயத்தையும் காணாது. அதனால் கண் கெட்டுவிடவில்லை. கண் ஒளிக்கு கேடுஉண்டாகவும்இல்லை. கண்ணும், கண்ஒளியும், தன் நிலைமாறாமலே இருக்கின்றன. இருந்தும், இருளின் மறைப்பால் ஒன்றினையும் காணவில்லை. அதுபோலவே ஆன்மாமலபந்தமுற்றிருப்பினும், ஆன்மாவக்காவது ஆன்மசிற்சக்தியாகிய அதன் குணத்துக்காவது யாதொரு மாறுதலும் உண்டாவதில்லை. ஆன்மா தன்நிலையோடு யாதொரு கேடுமின்றி, உள்ளபடியே இருக்கின்றது. இருளில் இருக்கும் நிலையில், தனக்கு யாதொரு கேடுமில்லையாயினும் ஒன்றைகாணதலும், ஒன்றைச்செய்தலும் இயலாது மயங்கி இருத்தல் போல, ஆன்மா ஆணவமலத்தோடு கூடியிருக்கும்போது, தனக்கேனும் தனது சிற்சக்திக்கேனும் யாதொரு கேடும்இன்றி ஒன்றினைச்செய்தலும் இல்லாது மயங்கி நிற்கும். இப்படி இருக்கும் நிலையை உபாதிநிலை என்பர். அதாவது, இல்லாத ஒன்று பிறிதொன்றின் சம்பந்தத்தால் உள்ளதுபோலக் காணப்படுதல் உபாதி என்று சொல்லப்படும். ஆன்மாவின் குணமல்லாத, பிறிதொன்றின் குணத்தால், ஆன்மாவுக்கு வந்த இக்கேடு, உபாதியே ஆகும். ஆயினும் இந்த உபாதி நிலையில் ஆன்மா தனக்கும் மலத்துக்கும் வேற்றுமையறியாதும், தன்குணத்துக்கும் மலகுணத்துக்கும் வேற்றுமையறியாதும், மலகுணத்தையே தன் குணமாகக் கொண்டு நிற்கும். முதல்வனுடைய திருவருளினாலே இவ்வேறுபாடுகள் தோன்ற, உண்மை வெளிப்பட்டு, அவை மலகுணமேயன்றித் தன்குணமன்று என அறிந்து, அவற்றின் சார்பைவிட்டு நீங்கி, இருளிலிருந்த கண்ஒளியின் வயப்பட்டபொழுது, இருளின் உபாதியின்றி, எல்லா-வற்றையும் கண்டு சகித்திருத்தல்போலவும், அடுத்தபொருளின் நிறத்தைக்கவராது சுத்தமாயிருந்த தன்மை போலவும், சிவப்பிரகாசத்தின் வயப்பட்டு, மலஉபாதியின்றி சிவானந்த அனுபவமுடையதாய் விளங்கும். இங்கு கண்ணின் உவமையில், கண்ணுக்கேனும், இருளுக்கேனும், சூரியனுக்கேனும் முன்னும்பின்னும் ஓர்காலத்தும் ஒருவேறுபாடும் உண்டாவதில்லை. மேலும் பளிங்கின் உவமையிலும் பளிங்குக்கேனும் அடுத்து நின்று நிறம்காட்டும் பொருளுக்கேனும், சூரியனுக்கேனும், முன்பும், பின்பும் யாதொரு வேறுபாடும் உண்டாவதில்லை. இந்த உதாரணங்களினாலே, அநாதியுள்ள ஆணவமலம் பின்இல்லாது போவதற்கு யாதும் ஒரு இழுக்குஇல்லை, ஆகையினாலே, ஆணவமலம் அநாதியாயினும், இடையில் நீங்கும் என்பதை அறியலாம்.

II. கன்மபாசம்

நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி சதைரபி என்கிறது சிவாகமம். இதன்பொருள், "கோடிக்கணக்கான யுகங்கள் சென்றாலும், அனுபவியாமல் கன்மம்அழிவதில்லை" என்கிறது பௌஷ்கராகமம்.

வாக்தீ கார்யார்த்த ஸாத்யம் பலஜனகதரம் கர்மதர்மாதி போக்யம்.
ஸ்வாபே மாயாப்தபாகம் ஸ்திதிமதி ஸஹிதம் போகதம் ஸ்யாத் கலாந்தம்.

பொருள் = கன்மமானது வாக்கு, மனம், புத்தி, மெய், பொருள் இவைகளால் ஈட்டத்தக்கதாயும், தனு, கரணம், புவனம் முதலிய காரியங்களைக் கால அளவிட்டுத் தரிப்பதாயும், அனுபவிக்கத்-தக்கதாயும், நல்வினை, தீவினை ரூபமுடையதாயும்இருக்கும். அது ஸர்வபூத ஸம்ஹாரகாலத்தில் மாயையால் பரிபாகத்தை அடைவதாயும், மாயையில் ஸம்ஸ்காரரூபமாக இருக்கிறதாயும், பிருதிவிதத்துவ முதல் கலாதத்துவ பர்யந்தமுள்ள ஆன்மாக்களுக்கு இன்பதுன்பரூபமாகவுள்ள போகத்தைக்கொடுக்கக்கூடியதாயும் உள்ளது என்கிறதுசித்தாந்தசாராவளி. "பதிகர்மவசதோ புவனஜ தேஹேஷ் வயம்ச ஸர்வேஷு" ஆன்மாவானது கன்மவசத்தால் உலக சம்பந்தங்களாயுள்ள ஸ்தூலதேகங்களில் அலைகின்றது என்று கூறுகின்றது தத்வஸங்-கிரஹம். ஆக கன்மபாசமானது நல்வினை, தீவனை எனப்பட்டு, ஜாதி, ஆயுள், போகம் எனப் பயனை அளிக்கும் முறையில் மூவகைப்படும்.

தர்மாதர் மாத்மகம் கர்ம தச்ச திரிவித மர்தத:
ஜாத்யாயுர் போகதம் யேந நாமிச்ரம் பச்யதே க்வசித்.

கன்மம் என்பது முற்பிறவியில் ஆன்மாவினால் செய்யப்படும் நல்வினை, தீவினை எனும் முயற்சியாகும். ஆன்மாக்களின் கன்மம் இருவகைப்படும் என்கிறது மதங்காகமம்.

லோகேபி சுப்ரதிதம் ஸ்யாத் த்விவிதம் கர்ம கர்மிணாம்.
கிரியா வஸானிகம் திருஷ்டம் அதிருஷ்டம் தத்ர ஸம்க்ஷயே.

கன்மமலத்தை ஜனகம் என்று சதரத்தினசங்கிரஹம் எனும் நூல் கூறுகிறது. அதாவது,

கர்ம வ்யாபார ஜன்யத்வாத் திருஷ்டம் சூக்ஷ்மஸ்பாவத:
ஜனகம் தாரகம் போக்யம் அத்யாத்மாதி த்ரிஸாதனம்.

செய்கையால் உண்டாகிறபடியால் கன்மம் என்றும், இந்த கன்மமானது ஆன்மாவில் சூக்ஷ்மத்-தன்மையாக இருப்பதால் அதிருஷ்டம் என்றும் சொல்லப்படுகிறது. செயலால் முடிவடைவது காணக்கூடிய த்ருஷ்டம். கண்புலனுக்குப்படாதது அதிருஷ்டம். கன்மமானது ஸஹகாரியாக இருந்து, தனு, கரண, புவனங்களை உண்டாக்குவதால் அது ஜனகம் எனப்படும். ஏனென்றால், ஆன்மாக்கள் கன்மத்தின் பயனை நுகர்வதற்காகவே அந்த அந்த தேகம், இந்திரியம், உலகம் முதலியவை படைக்கப்படுகின்றன. ஆன்மாக்கள் செய்தவினைகளுக்குத் தக்கவாறு உண்டான தனு, கரண, புவனம், போகங்களை குறிப்பிட்ட காலம் வரை தரிப்பதாயுமுள்ளது. கன்மத்தை அனுபவிப்பது என்பதும், சுகதுக்கரூபமான பயனின் மூலமாகவே ஏற்படுகிறது. கன்மமானது மனம், மொழி, மெய் இவற்றின் செயல்களைக்கொண்டது. ஆன்மாவிற்கு ஹசுகிருதம் துஷ்கிருதம் சைவ கச்சந்த மனுகச்சதி" என்கிறது ஞானபாதம். தேவதாத்யானம், ஸ்தோத்ரம், யாகாதிகர்மாகள்

முதலியன சுகிருதம். பிறர்பொருளைக்கவரவிரும்புதல், இழிவாகப் பேசுதல், இடையூறுசெய்தல் முதலானவைகள் துஷ்கிருதம் என்று அறியத்தக்கது. கன்மமல காரியத்திற்கு மனம், மொழி, மெய்களே ஓர் முக்கிய காரணமாகும். அதனாலேயே நல்வினை, தீவினைகள் ஏற்படுகின்றன. ஆன்மாக்கள் உள்ளத்திற்குத் தக்கவாறு எண்ணுதல், மனத்தின்செயல், உண்மைபேசுதல், பொய்பேசுதல், ஞானத்தைஉபதேசித்தல், பிரியமாகப்-பேசுதல், அப்பிரியமாகப்பேசுதல், இவைகள் வாக்கின்செயல்கள். துன்புறுத்துதல், துன்புறுத்தாமல் இருத்தல், மதுபான காரியங்கள், இன்பத்தில் ஈடுபடுதல் முதலியன மெய்யின் செயல்கள். பாசப்பொருளாகிய கன்மம், பசுப்பொருளாகிய ஆன்மாக்களுக்கு மூன்றுவிதமாக சுகதுக்கங்களைக்கொடுக்கின்றன. அத்யாத்ம மதிபூதம்ச ஆதிதைவிக மேவச. திரிவிதம் துக்கமாப்நோதி என்றநிலையிலே ஆன்மாவானது மூன்றுநிலைகளிலேயே கன்மத்தை அனுபவிக்கின்றது. அவை ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் எனப்படுவன ஆகும். கன்மமானது, சத்யமாகிய ஆன்மஞானமும், அசத்யமாகிய மாயாகாரியமும், கூடின-விடத்திலே உண்டானதாகையால் நல்வினை, தீவினை என்னும் இருவகையாயுள்ளது. சத்தியத்தைக் காரணமாகக்கொண்ட கன்மம் நல்வினைரூபமாகவும், அசத்யத்தைக் காரணமாகக்கொண்ட தீவினைரூபமாகவும் உள்ளன.

> தத் ஸத்யாநிருத யோநித்வாத் தர்மா தர்ம ஸ்வரூபகம்.
> ஸ்வாபே விபாக மப்யேதி தத் ஸ்ருஷ்ட்வ ா வுபயுஜ்யதே.
> மாயாயாம் வர்ததே சாந்தே நாபுக்தம் க்ஷயமேதிச.

அவ்விதமான கன்மம் எல்லா உயிர்களின் ஸம்ஹாரகாலத்தில் முற்றும் பக்குவத்தை அடைகிறது. அது பக்குவத்திற்கேற்ப ஸ்ருஷ்டிகாலத்தில் உபயோகத்தை அடைகிறது. ஸ்ருஷ்டி ஏற்பட்ட உடனேயே கலாதத்வம் முதல் ப்ருத்வீதத்வம் வரை உள்ள ஆன்மாக்களுக்குப் பக்குவத்திற்கேற்றவாறு அவற்றது போகம் உண்டாகிறது. பிராயச்சித்தே தவா போகே யுகபத் வா க்ரமேண வா. எனும் வசனப்படி பிராயச்சித்தத்தாலும், போகானுபவத்தாலும் கன்மம் அழியக்கூடியது. ஆன்மாக்களுக்கு பந்தத்தைச்செய்வதால் பாசபஞ்சகவிஷயத்தில்

> மல: கர்ம மஹாமாயா மாயோத்தமகிலம் ஜகத்.
> திரோதானகரீ சக்தி: பாசத்வே நார்த்த பஞ்கம்.

என்று கன்மமலமானது கூறப்பட்டுள்ளது. பந்தித்திருக்கும் ஆன்மாக்களுக்கு இருவினை என்பது முயற்சி என்றும், அதுவே கன்மமலம் என்றும், அக்கன்மத்திற்கு மூலம் உண்டு என்றும் கூறுகிறது. அம்முயற்சியே பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமியங்களாகும். கன்மம் என்பது முப்பிறவிலே ஆன்மாவினால் செய்யப்படும் நல்வினை, தீவினை என்னும்

முயற்சியாகும். இதுவே **ஆகாமியம்**. அந்த முயற்சி பலனுக்கு வரும்வரையில் கட்டுப்பட்டு, புண்யம், பாபம் என இருவகைப்படுவது **சஞ்சிதம்** எனப்பெறும். அந்த புண்யபாபம் பலனுக்கு வரும்பொழுது இன்பம், துன்பம் என இருவகைப்படுவது **பிராரப்தம்** ஆகும். இவ்வாறு ஆகாமியத்தால் சஞ்சிதமும், பிராரப்தமும், அந்த பிராரப்தத்தை அனுபவிக்கும் முறையில் மீண்டும் மேல் **ஆகாமியமும்** உண்டாகும். பிராரப்தம் ஏற்பட்டு என்பது ஆகாமியத்தின் பலனே. ஆக ஆகாமியமே முன்னர் உண்டாயிற்று. அந்த ஆகாமியம் நல்வினை, தீவினைகளை பிராரப்தத்திற்கு முன்னர் செய்வதற்கும் ஒரு காரணம் வேண்டும். இல்லையேல் ஆகாமியம் நிகழாது. ஆகவே, ஆகாமியம் ஆகிய நல்வினை, தீவினை நிகழ்வதற்கு முன்னர் ஏற்பட்ட மூலகன்மமே **அந்தக்காரணம்** ஆகும். ஆக ஆன்மாக்களுக்கு அல்லது ஆன்மாவிற்கு முன்னதாகவே **மூலகன்மம்** என்று ஒன்று உண்டு. அது ஆணவம், மாயை போல் அநாதியே. அதுவே காரணகன்மம் என்றும் கூறப்படும். **"கன்மமும் மூலம்காட்டிக் காமிய மலமாய் நிற்கும்"** என்பதில் கன்மமும் என்றதால், கன்மம் உயிரின் விருப்பு, வெறுப்பு காரணமாக நல்வினை, தீவினை என்னும் காரியகன்மமாக மட்டும்இன்றி, அந்தக்காரியத்திற்குக் காரணம் ஆகிய மூலகன்மம் எனும் காரணகன்மமாகவும் உள்ளது என்பதுபெறப்படும். மூலகன்மம் தொடர்ச்சியாய், இறைவன் ஆணையால் ஆன்மாக்கட்கு பல்வேறுவகைப்பட்ட சரீரங்களைத்தோற்றுவிக்கும். கன்மம் என்பது செயல்வடிவமான ஓர் பாசப்பொருளாகும். செயல் என்பது ஏதாவது ஒருபொருளைப்பற்றியே இருப்பதுவேஅன்றி, தனியே இருக்கமாட்டாது. ஆகையால், கன்மம என்பது மாயை என்னும் பொருளைப்பற்றியே இருக்கும். மாயையினால் ஆகிய தனு, கரண, புவன, போகங்கள் ஆன்மாக்களுடைய புண்யபாபங்களுக்குத் தக்கவைகளாகத்தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றி, சிவஞானமாகிய பேராளியை, ஆன்மாபெறும் முக்திநிலைவரையும், ஆணவஇருளை ஒருவாறு நீக்கக்கூடிய அறிவைக்கொடுக்கும் கருவிகளாக இந்த மாயாகன்மங்கள் ஆன்மாவிற்கு உதவுகின்றன. ஆறுவகை அநாதிப்பொருள்களிலே உள்ள கன்மமலத்தின் அனாதித் தன்மையானது இருவகைப்படும். அவை **(1) பிரவாஹஅநாதி, (2) அநாதி** என்பவை. தோற்றமும், முடிவும் இன்றி என்றும் ஒரேதன்மையாய் இருப்பது அநாதி. தோன்றி, அழிந்து, தொடர்பாய் வருவது **பிரவாஹநாதி** ஆகும். முயற்சியால் வினையும், வினையால் முயற்சியும், வித்தும், மரமும் போல் ஆகும். உடலைக்கொண்டு செய்யும் முயற்சியால் வினைஉண்டாகும். அவ்வாறாயின் இந்த உடல் உண்டாவதற்கு காரணம் யாது? என்றால், முன்பிறவியில் நாம் இறந்தபோது விடப்பட்ட, முன்உடம்பினால் செய்யப்பட்டவினையேஆகும். அந்தவினையே இந்த உடம்பை உண்டுபண்ணும். இவ்வாறு உடம்பால் வினையும், வினையால் உடம்பும் தொடர்ந்து வருவது, வித்தில் மரமும், மரத்தில் வித்தும் வந்து பொருந்துவது போல் ஆகும். வினை, உடம்பு என்னும் இவ்விரண்டும் ஒன்றுக்குஒன்று காரணகாரியமாய் தொன்று தொட்டு ஒன்றன்பின்ஒன்றாக வருவதால், அவற்றிற்கு முற்பாடு, பிற்பாடு கூறமுடியாது. இப்படி எதுமுதலில் உண்டாகிவரும்? என்பது எளிதில் அறியமுடியாதபடி வருவதையே **பிரவாஹநாதி** என்பார்கள். இதற்கு

எடுத்துக்காட்டு ஆற்றுநீர் ஓடும்போது ஒன்றுபோக, ஒன்றாய் நீரின்பெருக்கு வந்துகொண்டேயிருக்கும். அதுபோல் உடம்பும், வினையும் ஒன்றுபோக ஒன்றாய், தொன்று-தொட்டு அநாதியாய், வந்துகொண்டே இருக்கும். வித்தும், மரமும் ஒன்றுக்குஒன்று காரண-காரியமாய் இருப்பினும், பதிப்பொருள் இவ்இரண்டில் ஒன்றைத்தான் முதலாவதாக உற்பத்தி செய்திருக்கவேண்டும். அது மரமாகவே இருக்கவேண்டும். இதுபோலக் கேவலநிலையில் அறிவுத் தொழிற்பாடுஇன்றிக்கிடந்த ஆன்மாவுக்கு, குருடனுக்குக் கோல்கொடுப்பது போல் இறைவன் சூக்ஷ்மதேஹத்தைக் கருணையினால் கொடுப்பான். அந்த சூக்ஷ்மதேஹத்தை இறைவன் தருவது வினைகாரணமாக அன்று. உயிர்கள் அறியாமை உட்பட்டு வருந்தும் காரணத்தால் தரப்பட்டதுஆகும். அந்த சூக்ஷ்மதேஹம் முக்தியடையும்வரை எத்துணைப் பிறவிகளை எடுத்தாலும், ஆன்மாவுடன் ஒன்றாகவே இருந்து, முக்தி அடையும்போது நீங்கும். அந்த சூக்ஷ்மதேஹம் எல்லா ஆன்மாக்களுக்கும் ஒரேதன்மையாகவே இருக்கும். இருப்பினும் ஆன்மாவைப் பொருந்தியுள்ள அறியாமை பல்வேறுவகைப்படும். ஆதலின் அவ்வறியாமைக்குஏற்ப ஸ்தூலதேஹமும், அந்த ஸ்தூலதேஹத்தால், வினையும், ஆன்மாக்கள் தோறும், மாறிமாறி வரும். ஆதலால், கன்மம், தேஹம் என்னும் இரண்டிற்கும், மூலமாகிய சூக்ஷ்மதேஹம் என்ற ஒன்றுஉண்டு என்பதால், கன்மத்துக்கும், சரீரத்துக்கும் முற்பாடு, பிற்பாடு கூறமுடியாததன்மை தெளிவாயிற்று. வெட்டப்பட்டமரத்தின் வேரில் மற்றொருமரம், ஆற்றல் வடிவில்இருந்து தோன்றுவதுபோல, சூக்ஷ்மசரீரத்திலிருந்து, ஸ்தூலசரீரங்கள் ஆற்றல்வடிவில் இருந்து தோன்றும்.

III. மாயாபாசம்

மாயா என்றால் ஒடுங்கிவிரியும்பொருள் என்றகருத்தினைக்கொண்டது. இது சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்ற மூன்று பிரிவினைஉடையது. பிரகிருதிமாயைக்கு கீழுள்ள தத்துவங்கள் இருபத்துநான்கு. பிரகிருதிமாயைக்கு மேல் அசுத்தமாயையும், அதற்கு மேல் சுத்தமாயையும் அமைந்திருக்கிறது. உலகிற்கு முதற்காரணம் எனப்படும் அசுத்த-மாயையின் இலக்கணம் என்னவென்றால்? = மாயை என்பது உற்பத்திஇல்லாதது, ஆதலால் அது நித்யமானது, கண்ணுக்குத் தோன்றாமையால் அருவமானது, வித்துஆகியும், அறிவு இல்லாததால் ஜடம்ஆகியும், எந்தஇடத்திலும் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன, போகங்களைக் கொடுப்பதால் வியாபகமானது, பதிப்பொருளின் வியாபகத்துள் அடங்குவதால் அதற்கு ஓர்வைப்பு சக்தியாகவும், புவனமும், போகமும், தனுவும் கரணமுமாக ஆன்மாக்களின் பொருட்டு விரிவதால் ஒரு மலமாகவும், ஆன்மாக்களுக்கு விபரீதஉணர்வினைச்செய்வதால் மயக்கமாயும் இருக்கக்கூடியது.

யா(அ)த: குண்டலினீ சக்திர் மாயா கர்மா நுஸாரிணீ.
நாத பிந்த்வாதிகம் கார்யம் தஸ்யா இதி ஜகத் ஸ்தஜதி:

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

வாசகமந்திரங்களுக்கு முதற்காரணமான பரபிந்து எந்தமஹாமாயை உண்டோ, அம்மாயை சுத்தமாயை எனப்படுவதாய் சிவத்துக்கும், பரிக்ரஹ சக்தியாகும்.

மாயாபாச லக்ஷணம்பற்றி சித்தாந்தஸாராவளி சுலோகம் கூறுவதாவது,

மாயாக்யம் சித்ரசக்தியா பரிகத மகலம் கஷ்ட வர்த்மைக பீஜம்.
நித்யம் கர்மாந்த ரோதி ஸ்வகிருதி நிவஸநம் தத்கிருதேர் வியாபகம்ச.
கார்யா (அ)சித்வ பிரகாசாத்அசித் (அ)சிவகரம் மோஹகம் ஸ்வாப காலே
ஸர்வாத்மா வாஸமேவம் பரமபிச ஸிதம் காரணம் போதகம் தத்.
(சித்தாந்த ஸாராவளி)

மாயாதத்வம் என்பது அளவிறந்த சக்திரூபமானகாரியங்களை உடையது, கலையற்றது, சூக்ஷ்மமானது. அசுத்தாத்துவாவிற்கு முதற்காரணமாயுள்ளது, அழிவற்றது, பூர்வகன்ம பயனைப்புசித்துக் கழிக்குமளவிற்கு பந்தகமாய்இருப்பது. தன்காரியமாகிய தத்துவங்களுக்கு ஆதாரமானது. தன்காரியத்திற்கு வியாபகமாயிருப்பது. தன்காரியங்களான தனு, கரண, புவனாதிகளில் அசேதனத்தன்மை உள்ளதால் தானும் அசேதனமானது. அக்ஞானத்தைக் கொடுப்பது. ஆன்மா அல்லாததில் ஆன்மா என்ற மயக்கஅறிவை உண்டாக்குவது. ஸம்ஹாரகாலத்தில் ஸகலர், பிரளயாகலர் ஆகிய எல்லா ஆன்மாக்களுக்கும் இருப்பிடமாயிருப்பது. இத்தகையது அசுத்தமாயை. இதற்கு மேலான சுத்தமாயை இவ்விதமே பலவித சக்தியுடையது. சூக்ஷ்மமானது, அழிவற்றது, ஆனால் அது சுத்தஸ்வரூபமானது. சுத்தாத்துவாவிற்கு உபாதான காரணமாய் உள்ளது. சிவம்முதலான சுத்தவஸ்துக்களை தெரிவிக்கின்றதாயும் இருப்பதாம். எல்லாகாரியங்களுக்கும் உபாதானமாகஇருந்து, போஷகமாகஇருப்பதாலும், ஈஸ்வரனைபோல புருஷார்த்தத்திற்கு ஸாதகமாகஇருப்பதாலும், ஈச்வரத்தன்மை எய்துகிறது. பாசப்பொருளாகிய மலங்களின் நீக்கம், ஒடுக்கம், மலமின்மை என்று நூல்களில் வரும் சொல்தொடர்களுக்கு "வீடுபேற்றில் மலம் நீங்கிவிடுகிறது என்றோ", "மலம் ஒடுங்கிப்போகிறது என்றோ", "மலம் இல்லாமல் போய்விடுகிறது என்றோ" பொருள் கொள்வது பொருந்தாது? ஏன் என்றால் மலம் நித்யவஸ்து. நித்யவஸ்துவிற்கு ஒருபோதும் அழிவுஇல்லை. எனவே ஆணவமலம் தன்நிலையில் சக்திஇழந்து, அப்படியேதான்இருக்கிறது. ஆத்மாதான் ஆணவமலத்தைப் பற்றுவதைவிட்டு நீங்கவோ, இறைவனைப் பற்றி அவன் திருவருளில் ஒடுங்கவோ வேண்டும். எனவே ஆணவமலம் நீங்கியது என்பதற்குப் பொருள் (உயிர்) ஆன்மா மலப்பற்றைவிட்டு நீங்கியது என்பதேஆகும். ஜடப்பொருள் தானே செயல்படுவதில்லை. முக்திபெற்ற ஆன்மாக்கள் வேறுஒன்றினையும் நோக்காது, இறைவன் அடிக்கீழ் அடிமையாய் நிற்பர். அவ்வாறு இறைவனையே சார்ந்து நிற்கும் சிறப்பு காரணமாக அத்தகு ஆன்மாக்கள் மலத்தால் தாக்குறாமல் இருக்கிறார்கள் அவ்வளவே.

இவ்வாறாக இதுவரை மூவகைபாசப்பொருள்கள் சுருக்கமாக விளக்கப்பட்டது. நாம் அனைவரும் சைவாகமங்கள் கூறும் முப்பொருள்களையும் நன்குஉணர்ந்து இறைவனைப்பற்றி நின்று, பூசை, தியானம், யோகம் இவைகளால் நால்வகை சைவாகம நன்நெறிகள் வாயிலாக இறைதன்மையைப் பெற முயல்வோமாக. வாழ்க சீர் அடியார் எல்லாம். நுன்றி,

மேன்மைக்கொள் சைவநீதிவிளங்குக உலகமெல்லாம்.

வாழ்க சிவநெறி! வளர்க ஆகமம் ! வாழ்க உலகெலாம்!.

சுபம்

-----------*********------------

உ

<u>சிவமயம்</u>

விசேஷதிரவிய அபிஷேகவிதானம்

(சிறப்புப்பொருள்களின் திருமஞ்சனமுறை)

"ஹாலாஸ்ய நாதாய நமச்சிவாய "ஹாலா"லாலங்க்ருத கந்தராய.
மீனேக்ஷணாயாப் பதயே சிவாய நமோநமஸ் சுந்தரதாண்டவாய.

கட்டுரையாளர்
சிவாகமகலாமணி, வியாகரண சிரோமணி.
சிவஸ்ரீ. S. கற்பூரபட்டர்.
மதுரை.

கோயிலும், பூசையும் நமக்கு உண்மையை விளக்கி ஞானத்தை உண்டாக்குவதற்கு இன்றியமையாக்கருவியாயுள்ளன. மும்மலநோயைநீக்கும் வைத்தியநாதராகிய ஸர்வேச்வரராகிய பரமசிவனார், சைவாகமங்களில் பூசையை செய்யுமாறு விதித்திருத்தல் உயிர்கள் உண்மையை உணரந்து பூசையை செய்து, அதனால் சிவஞானமேலீட்டால் சிவாத்துவைத முக்தியில்சேருதல் பொருட்டேஆகும்.

<u>வழிபாட்டின் சிறப்புகள் :-</u> "சிவஏகோ த்யேய:" என்பது வேதோபநிஷதவாக்யம். சிவன் ஒருவனே தியானிக்கத்தக்கவன் என்பதே இதன்பொருள். எனவே இதனால் தியானிக்க வேண்டிய, அவன்ஒருவனே பூசிக்கத்தக்கவனும் ஆகிறான். "தொழுவாரவர் துயராயின் தீர்த்தல் உனதொழிலே" (சுந்தரர் 7-1-பா9) & "தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி" (அப்பர் 6-5-8). பூஜை என்பதனை சிவாகமம் விளக்குகையில்,

பூர்யந்தே ஸர்வ கர்மாணி ஜாயதே ஞான மாத்மனி.
பூர்ணாத் ஜாயதே யஸ்மாத் பூஜாசப்த இ"ோச்யதே.

என்ற காரணாகம சொல்விளக்கப்படி பூஜை எனும் சொல்லில் உள்ள பூ என்ற எழுத்துவினைகள் முற்றுபெறுவதையும், ஜா என்ற எழுத்து ஞானம் ஜனிப்பத்தையும் உணர்த்துவதாகும். வழிபாடே பிறவா பெருவாழ்வைத் தருகிற உத்தமக்கிரியைஆகும். வாழ்க்கையின் அடிப்படை நோக்கமாய், கடமையாய், பயனாய் விளங்குவது சிவபூஜையே ஆகும்.

பூஜை எனப்படுகிற இந்த தேவார்ச்சனமானது, இருவகையாகும். அவை **ஆத்மார்த்த பூஜை**, அல்லது **ஸ்வார்த்தபூஜை** எனப்படுகிற தன்நலம்பொருட்டு தம்வீட்டில்செய்யத்தக்க-கிரு"ார்ச்சனம். மற்றொன்று **பரார்த்தபூஜை, விமானார்ச்சனம்** எனப்படுகிற பொதுநலன்-பொருட்டு கிராமாதிகளில் செய்யவேண்டிய **ஆலயார்ச்சனம்** எனப்படும். இந்த ஆத்மார்த்தம் மற்றும் பரார்த்தம் ஆகிய இருவகைபூசையும், **நித்தியபூஜை** என்றும், **நைமித்திகபூஜை** என்றும், **காமியபூஜை** என்றும் மூன்று வகைப்படும். **நித்யபூசை** தினமும் குறிப்பிட்டகாலத்திலேயே இடைவிடாதுசெய்யப்படுவது. **நைமித்திகபூசை** என்பது பிரதோஷம், சிவராத்திரி, திருவாதிரை, பௌர்ணமி, புண்யகாலம் இவைகூடிய சிறப்புநாட்களில் குறிப்பிட்ட ஒருகாரணத்திற்காக செய்யப்படுவது. **காமியபூசை** என்பது விருப்பம்ஈடேருவதற்காக விசேஷமுறையில் வழிபடுவது. இவை மூன்றிலும் **அபிஷேகம்** என்பது தவறாமல் இடம்பெறும். அபிஷேகம் இல்லாமல் பூசைஒருபோதும் செய்யப்படுவதில்லை. அடிப்படையாகவும், பொதுவாகவும் உள்ள பதினாறு உபசாரங்களை காரணாகமம் கூறுவதாவது : (1) ஆவா"ானம் = இறைவனை அழைத்தல், தன்னை நோக்கியே இருக்கச்செய்தல், (2) ஸ்தாபனம் = நிலைபெற்று இருக்கச்செய்தல், (3) பாத்யம் = திருவடிகளில் நீராட்டல், 4) ஆசமனம் = திருவாயில் பருகிட கையில்நீர் அளித்தல், (5) அர்க்கியம் = திருமுடியில் பன்னீர்நீர்தெளித்து மகிழ்வித்தல், (6) அபிஷேகம் = திருமஞ்சனத்தால் முழுக்காட்டுதல்,(7) வஸ்திரகந்தம் = சந்தனம்பூசியபின்பு ஆடைஅணிவித்தல், (9) புஷ்பபூஜனம் = மலர்மாலையை சூட்டி மலர்களால்பூசித்தல், (10) தூபதீபம் = நறுமணப்புகையினை முகரச் செய்து, ஒளிதீபத்தை காண்பித்தல், (10) நிவேதனம் = அன்னம் மற்றும் பழவர்க்கத்தைப் படைத்து , நிவேதனம் செய்தல், (11) பலி = வாயில்தெய்வம் முதலானோர்க்கு பலிஅளித்தல், (12) ே"ாமம் = வேள்வித்தீயில் (நித்ய தீவழிபாட்டை) ஆகுதியைசெய்தல், (13) ஸ்ரீபலி = அன்னலிங்கம் மற்றும் அஸ்திரதேவர் புறப்பாட்டுடன்கூடிய நித்யோத்ஸவத்தின்போதும் எண்திசையில் முறையே திக்பாலகர்களுக்கு பலிதருதல், (14) கேயவாத்யம் = வேதாதிகள், துதிகள், வாய்ப்பாட்டுடன் வாத்தியவகையின் இசைமுழக்கம், (15) சுத்தநிருத்தம் = நாட்டிய உபசாரம், (16) உத்வாஸம் = இறைவனைவழி அனுப்பி வைத்தல், அவர்விருப்பப்படி வியாபித்து இருந்திடவேண்டுதல், அபிஷேகமேபூசை எனப்படுவதாகும்.இதற்கு முன்னும் பின்னும் இடம் பெறுபவையே மற்றவை என்று உணரலாம். பாவங்களைப்போக்கி, ஸகலசித்திகளை நிலைக்கச் செய்வதால் இச்செயல் **ஸ்நபனம்** எனப்படுவதாக காரணாகமத்தில் இச்சொல்லிற்கு விளக்கம் காணப்படுகிறது.

ஸ்நகாரம் ஸர்வஸித்தி ஸ்யாத் பகாரம் ஸ்திதி ருச்யதே.
நகாரம் பாபநாசம் ஸ்யாத் தஸ்மாத் ஸ்நபன முச்யதே.

இந்த ஸ்நபனம் என்பது அபிஷேகப்பொருட்களை கலசத்தில் அல்லது உரியபாத்திரத்தில் மூடிவைத்து, பூசித்து, லிங்கசுத்தியின் முடிவில் முறையே எடுத்து அபிஷேகித்தல்வேண்டும். இது பலவகை எண்ணிக்யைில் கலசாபிஷேகங்களாக செய்யத்தக்கது.

ஜலேந ஸ்நாபயேத் பச்சாத் ததி க்ஷீர கிருதை ரபி.
நாளி கேரோத கேனைவ மதுநா பிரம்ம பஞ்சகை:

எனும் பூர்வகாரணாகம வசனத்தால் அபிஷேகத்திற்கான ஐந்துபொருள்களாக [1]தயிர், [2]பால், [3]நெய், [4]இளநீர், [5]தேன் ஆகியவைகளை பஞ்சகலசஸ்நபனபொருள்களாக அறிக. ஸ்நபனகலச எண்ணிக்கை நித்யபூசைக்கு 1 கலசம் முதலாக, 5, 9, 16, 25 வரையில் செய்யத்தக்கது. நைமித்தக காமியபூசைகளுக்கு 108 முதல் 1008 மற்றும் 10008 வரை செய்யத்தக்கதாகும்.

இத்தகைய அபிஷேகப்பொருட்களை வரிசைப்படுத்திக்கூறும்முறையினை நமது செல்வ-வசதிக்கேற்ப நாமே தேர்வுசெய்யும்வகையில், பலவாறாக ஆகமங்கள் கூறியுள்ளன. அவற்றுள் ஒன்றைமட்டுமே பின்பற்றி தெய்வத்திற்கு திருமஞ்சனத்தைச் செய்வதுமுறை. மேலும் சித்தாந்த- ரத்னாகரம் எனும் நூலில் மற்றொரு விரிவானமுறை கூறப்பட்டுள்ளது. அதாவது, சகலாகம- ஸங்கிர''ம் என்னும் நூலில், மாறுபாட்டுடன் 16வகைநீராட்டல்முறை காணப்படுகிறது.

பிரதமம் கந்ததைலம்ச த்விதீயம் பஞ்சகவ்யகம்.
பிஷ்டம் திருதீய மித்யுக்தம் சது ராமலகம் பவேத்.
பஞ்சமம் ரஜனீ ஸ்நாநம் ஷஷ்டம் பஞ்சா மிருதம் பவேத்.
ஸ்பதமம் பயஸா ஸ்நாநம் அஷ்டமம் ததி ருச்யதே.
நவமம் கோ கிருதம் சைவ தசமம் மது விந்யஸேத்.
ஏகாதசம் சேக்ஷு ஸாரம் பலம் துவாதச முச்யதே.
கதலீ பநஸாம் ரம்ச கந்தோதக மதப் பரம்.
திரயோ தசம் ததா நாரி கேளம் அன்னம் சதுர்தசம்.
பஞ்சா தசம் சுகந் தாம்பு ஷோடசம் ஸ்நபனம் பவேத்.

மேற்கண்டவசனத்தால், சந்தனதைலக்காப்புமுதலாக, சந்தனக்குழம்புநீரின்கலசாபிஷேகம் வரையிலாக, பதினாறுவகைகள் ஆகும். சந்தனத்திற்கு எப்பொழுதும் அதிதேவதை சிவனே ஆவதாலும், அதுவே ஸ்ரீவிருக்ஷமான லக்ஷ்மியின் மரமாவதாலும், லக்ஷ்மீகரமாக சந்தன-தைலத்தில் துவங்கப்பட்டு சந்தனநீருடனே மங்களகரமாய்முடிக்கப்படுவது இங்கு எண்ணி உணரத்தக்கது. இதன்படி (1) சந்தனதைலம், (2) பஞ்சகவ்யம், (3) அரிசிமாவு, (4) நெல்லிப்பொடி, (5) மஞ்சள்பொடி, (6) பஞ்சாமிருதம், (7) பால், (8) தயிர், (9) பசுநெய், (10) தேன், (11) கரும்பு சாரு, (12) மா, பலா, வாழை எனும் முக்கனிகள் & பழரசங்கள் (13)

இளநீர், (14) அன்னம், (15) சுகந்தபரிமளத்திரவியபொடிதீர்த்தம், (16) சந்தனஜல ஸ்நபனகலசதீர்த்தம் ஆகியவை அபிஷேகிக்கத்தக்கவையாம்.

சிவாகமவசனத்தின்படி 25 வகை அபிஷேகமுறை. (1) சந்தனதைலம், (2) அரிசிமாவு, (3) நெல்லிப்பொடி, (4) மஞ்சள்பொடி, (5) ஜலதிரவிய(பரிமளப்)பொடி, (6) பஞ்சகவ்யம், (7) பஞ்சாமிருதம், (8) நெய், (9) பால், (10) தயிர், (11) தேன், (12) கரும்புசாரு, (13) சர்க்கரை, (14) பழவகைகள், (15) பழச்சாருவகை, (16) தேங்காய் இளநீர், (17) அன்னம், (18) சந்தன சாந்து, (19) கும்பதீர்த்தம், (20) பத்ரோதகம், (21) ச''ஸ்ரதாராபிஷேகம், (22) காளைக்கொம்பு-தீர்த்தம், (23) ரத்னோதகம், (24) தர்பைஜலம், (25) அர்கியோதகசங்கோதகம் ஆகியவை. இவற்றுடன் மேலும் சிலவற்றின் சேர்க்கையாக, [1]ஜலதிரவ்யபொடி,[2]பத்ரோதகம், [3]தாரோதகம், [4]சிருங்கோதகம், [5]ரத்னோதகம், [6]குசோதகம், [7]அர்கியோதகம் ஆகியவை அதிகப்படியாக அறியப்படுகிறது. மேலும் [8]உஷ்ணோதகம், [9]சீதோதகம், [10]பரிமளதிரவ்யோதகம், [11]புஷ்போதகம், [12]சங்கோதகம், [13]சிவோதகம் ஆகியவற்றுடன் கூடியதாக மற்றொரு 25 பொருள்களின் வரிசை முறையை சைவாகமத்து **ஸகலாகம ஸாரஸங்கிர''ம்** எனும் நூலில் காணலாம். சிவனுக்கு ம''ன்நியாஸ ஏகாதசருத்ர பாராயணத்துடன் செய்யத்தக்க, பதினோருமுறை ஜபகாலத்தில் செய்யத்தக்க ஏகாதசருத்ராபிஷேகதிரவியங்களை, கலசாபிஷேகத்துடன் 12 வகையாக கூறப்படுவதைக் காண்போம். காரணாகமவசனத்தின்படி, ஏகாதசவாரருத்ராபிஷேகத்தின் பதினோரு பொருட்கள் முறையே (1) சந்தனதைலம், (2) பஞ்சகவ்யம், (3) பஞ்சாமிருதம், (4) நெய், (5) பால், (6) தயிர், (7) தேன், (8) கரும்புசாரு, (9) பழரசங்கள், (10) தேங்காய் இளநீர், (11) சந்தனக்குழம்புநீர் ஆகியன. பின்பு ஸ்நபனபூஜாகலாசபிஷேகம் செய்யத்தக்கதாகும்.

<u>அபிஷேகதிரவியங்கள் தரும்பயன்கள் :-</u> காரணாகமத்தின்படி, **ஜலம்** இஷ்டத்தைத்தரும், **கந்ததைலம்** சுகம்தரும், **பஞ்சகவ்யம்** பாபத்தைப்போக்கும், **பஞ்சாமிருதம்** புஷ்டியளிக்கும், **நெய்** மோக்ஷங்கொடுக்கும், **பால்** ஆயுளைக்கொடுக்கும், **தயிர்** மகனை, பிரஜாவிருத்தியைத்-தரும், **அரிசிமாப்பொடி** கடனை (காயத்தை / சண்டையை) நீக்கும். நெல்லிமுள்ளிரோகத்தைப்-போக்கும், **கரும்புசாறு** ஆரோக்கியம்தரும், **தேன்** சுகம்தரும், **முப்பழபஞ்சாமிருதம்** செல்வ- சம்பத்துதரும், **வாழைப்பழம்** விளைபயிர்களைவளர்க்கும், மரஇலைத்தளிர்களாலான பல்லவோதகம் உலகவசியம் ஏற்படுத்தும். **மாம்பழம்**, புத்திரனைத்தரும், **மாதுளை** கோபத்தைப் போக்கும், **கொளஞ்சிபழம்** சோகம்போக்கும், **நாரத்தையின் இருவகை** (சாத்துக்குடி& ஆரஞ்சு) தே''ஆரோக்யத்தையும், மனதைஒழுங்குபடுத்தி, நேர்மையையும் அளிக்கும். **எலுமிச்சம்பழம்**, மிருத்யுவைவிபத்தைபோக்கும், **சர்க்கரை** சத்ருவைபோக்கும், **இளநீர்** சுகபோகமளிக்கும், **அன்னாபிஷேகம்** சாம்ராஜ்யம்தரும், **சந்தனஜலம்** லக்ஷ்மியை, (தனத்தை) செல்வத்தைக்கொடுக்கும்.

CENTRE ... Puducherry ... STUDIES

<u>பஞ்சகவ்ய அபிஷேகவிதி (பசுவின் ஐங்கலமாட்டும்முறை)</u> : - இறைவனுக்கு மிகவும் பிரியமானதும், பெரும்புனிதமளிப்பதும், இஷ்டபயனை அளிப்பதும் பஞ்சகவ்யஅபிஷேகம்ஆகும். பால், தயிர், நெய், சாணம், ஜலம் எனப்படுகிற ஐந்தும் பஞ்சகவ்யம் எனப்படுபவைஆகும். கவ்யம் என்ற சொல்லுக்கு (கோ = பசு என்பதால்) பசுவினுடையபொருள்கள் என்பதே உரியபொருளாகும்.

க்ஷீரம் ததி கிருதம் சைவ கோமூத்ரம் கோமயம் ததா.
பஞ்சகவ்ய மிதி புரோக்தம் பூஜயேத் பிரம்ம பஞ்சகை: (காரணாகமம்)

தாயிக்குஇழைத்தக்குற்றமும், தந்தைக்கு இழைத்தக்குற்றமும், பசுவைக்கொன்ற மகாபாவமும் பிறர்செய்தநன்றிமறந்த, பெரும்பாவமும், பிராம்மணரை வதைத்தபாவமும், குருவுக்குதுரோகம் செய்தபெருங்குற்றமும், முதலிய பஞ்சமாபாதகச்செயல்புரிந்தகுற்றமும், முறையான பஞ்சகவ்ய அபிஷேகம் செய்தவுடன் அக்கணமே விலகிடும் என்றும் மேலும் இதனைச்செய்பவன், இவ்வுலகில் செவல்வந்தனாயும், ஸ்ரீமானாயும் வாழ்ந்து ஆயுள் முடிவில் ருத்திரரின் திருவடிநிலையையும் பெறுவார் என்கிறது.

கோமயம் ரோகநாசம் ச கோஜலம் ஸர்வ ஸித்திதம்
கிருதம்வை குஷ்டநாசம் ஸ்யாத் ததி வியாதி விநாசனம்.
க்ஷீரம் மோக்ஷ ப்ரதம் வித்யாத் பஞ்சகவ்ய பலம் பவேத்.

<u>பஞ்சாமிருதபூஜாவிதி (ரஸபஞ்சாமிருதம் & பலபஞ்சாமிருதம்)</u> : -

க்ஷீரம் ததி கிருதம் சைவ மது சர்க்கர ஸம்யுதம்.
பஞ்சாமிருத மிதம் பிரம்ம பூஜயேத் சூக்த மந்த்ரத:

தானியஸ்தண்டிலத்தின்மீது, ஐந்துபாத்திரங்களில் முன்புபோலவே ஒன்பதுகட்டமாக நவபதத்தை செய்து, அதன்நடுவிலும், நான்குதிசையிலுமாகமுறையே பசுவின் [1]பால், [2]தயிர், [3]நெய், [4]தேன், [5]சர்க்கரை ஆகியவை ஐந்தும், சுவைமிக்க திரவரஸக்கலவையானது ரஸபஞ்சாமிருதம் என்பதாகும். இவை பஞ்சகவ்யத்தைப்போலவே பஞ்சபிரம்மசூக்தமந்திரங்களால் பூஜிக்கப்பட்டு, முடிவில் ஒன்றுசேர்த்து அதில்அமிருதேச்வரரைப்பூசித்து பின்புஇதனால் அபிஷேகம் செய்ய வேண்டும். அபிஷேகத்திற்குமுன் இறைவனை அனந்தாஸனத்திலோ, சிம்மாஸனத்திலோ இருப்பவராக முதலில் ஆஸனபூசையைச்செய்து, ஆவா‍ஹித்து, பின்பு அபிஷேகிக்கவும்.

ஸ்நானம் வஸ்த்ர விலேபனம் ச குசுமம் தூபோ(அ)த தீபோ ஹவி:
தாம்பூலம் முகவாஸ கந்த ஸஹிதம் கீதம் ச நிருத்தம் மஹத்.
ஹோமோ பூதபலி ப்ரதான ஸஹிதோ நித்யோத்ஸவோ வா பலி:
ஸங்கீதம் ச ஸமஸ்த மேதத் உதிதம் சம்போர் விபூதௌ ஸதி.

எனும் பூர்வாகமிகஅர்ச்னாவிதிபடலசுலோகம்384-ல் மேற்கண்டவாறு ஷோடசஉபசாரத்துடன், சிவபூசை கூறப்பட்டது. அபிஷேகம்முதலானவற்றின் பயன்களை, சிவாகமங்கள் சிறப்பித்துக்கூறி செய்திடவலியுறுத்துகின்றன.

<u>அன்னாபிஷேகமகிமை :-</u> சைவாகமங்கள் ஐப்பசிமாதபவுர்ணமியில் மிகச்சிறப்பாகவும், மற்றயவிசேஷநைமித்திக அபிஷேககாலங்களில் முக்கியமான ஒருவகையாயும், சுத்தமான அன்னாபிஷேகம் செய்யப்படவேண்டும் என்கின்றன.

<u>நெய்அபிஷேகமகிமை :-</u> பன்னிருமாதத்திலும், வருகிறதிருவாதிரைநக்ஷத்திரவிழா பூசை-யிலும், தேய்பிறையில் வருகிற சிவதிதியாகிய சதுர்தசியிலும், அஷ்டமிதிதியிலும், விசேஷ நைமித்திகபூஜாகாலத்திலும், சைவாகமங்கள் புதியதும், உருக்கியதுமான பசுநெய்யின் அபிஷேகத்தைவிதித்துள்ளன.

இவ்விதமாக ஆகமங்களில் கூறப்படுகிற பலவகை பொருட்களால் செய்யத்தக்க சிறப்பு திருமஞ்சனத்தைச்செய்து, சிவனருளால் இஷ்டஸித்தியைப்பெற்று யாவரும் இனிதுவாழ்வோமாக. எளியபொருள்களையும், பக்தியோடும், சிரத்தையோடும், புனிதம்கெடாதவாறு முறைப்படி சேகரித்து, அவற்றை சிவனுக்கு அர்ப்பணம் செய்வதால் யாவரும் பிறவிப்பயனை எளிதில் பெற்று உய்ய, **ஆகமங்களின் அபிஷேகவிதி** பெரிதும் உதவுகின்றன. அருள்நெறியாம் ஆகமநெறியில் நாமும் வாழ்ந்து, வழிபட்டு சிவனருள் பெற்றுஉய்வோமாக.

மேன்மை கொள் சைவநீதி விளங்கு உலகமெல்லாம்.

************* **சுபம்** *************

உ

ஸ்ரீ அம்பாள் துணை

ஸ்ரீ குருப்யோ நம:

சிவஞான தீக்ஷையின் தசகாரிய விளக்கம்

கட்டுரையாளர்

கயிலை அருட்செல்வர், சிவாகமசெல்வர்,

சிவாகம வித்யாபூஷணம், ஸ்ரீவித்யா பாஸ்கரர்,

சிவஸ்ரீ. T.S. சுவாமிநாத சிவாசார்யர். B.A.,

திருவெண்காடு.

கல்லா னிழன் மலை வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே (மெய்கண்டார்).

சைவத்துக்கு ஆதார அச்சாக விளங்கும் சிவாகமங்களின் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் பாதங்கள் நான்கில் ஞானபாதத்தில் சிவஞானம்பெற தீட்சையின் தசகார்யங்-களை எனது சிறிய அறிவிற்கு எட்டிய வகையில், எமது குருநாதரின் அருளுடனும், எமது ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீபிரம்மவித்யாம்பிகை ஸமேத ஸ்ரீசுவேதாரண்யேஸ்வரரின் திருவருளை துணைக்கொண்டு கூற முயலுகின்றேன்.

நமது வாழ்வியல் பொருளாகவும், அருளாகவும், ஆலயங்களும், வேதஆகமங்களும் அமைந்துள்ளது. வேதசிவாகமவிருக்ஷத்து மூலபிரகிருதிபற்றிய, அறுவிதசமயத்தினரும் உச்சியிற் பழுத்த பழம் "சிவாத்துவித வேதாந்தம்" என உரைத்தனர். "சித்தாந்தோ வேதசார த்வாத்" என சுப்ரபேதஆகமம் கூறுகிறது. சைவசித்தாந்தம் வேதசாரமாக இருக்கிறது. (1) "சித்தாந்தம்வேதசாரம்", (2) "வேதசாரமிதந்தந்திரம்", (3) "வேதாந்தாரத்தமிதம் ஞானம் சித்தாந்தம் பரமம் சுபம்" என்றும், சைவசித்தாந்த ஞானமானது, வேதப்பொருளின் பரமஉத்தம ஞானம் என்று ரௌரவஆகமமும் கூறும். "வேதாந்த தெளிவாம் சைவசித்தாந்தம்" என சிவப்ரகாசம் கூறுகிறது. பதி, பசு, பாசங்களின் பொது இயல்பு, சிறப்பியல்பு இரண்டையும், ஒருபொருள் கொண்டு உணர்த்த, ரௌரவாகமத்து 73வதுபாடலமாகிய, பாசவிமோசனபடலம் எனப்படும் ஞானபாதத்தின் 12சூத்திரங்களைக்கொண்ட, வேதமொழியின் ஸமஸ்கிருத சிவஞானபோதம் முதலில் சிவபெருமானால் நந்தியெம்பெருமானுக்குஅருள, நந்தியெம்-பெருமான், அதனையே சனத்குமாரமுனிவருக்கு உபதேசிக்க, அவர் சத்தியஞானதரிசினி-களுக்கு உபதேசிக்க , அவர் பரஞ்சோதி முனிவருக்கு உபதேசித்தார். பிறகு பரஞ்சோதிமுனிவர்

"ஆகமசிவஞானபோதத்தை" திருவெண்காடு தலத்தில் வாழ்ந்த அச்சுதகளப்பாளர் தம்பதிகளுக்குப் பிறந்து சுவேதவனப்பெருமாள் என்று பெயர் கொண்ட மெய்கண்டார்க்கு இதனை உபதேசித்து, "இதனை உணர்ந்து உய்தற்பொருட்டு தமிழிலே செய்க" என்று அருளிச்செய்தார். அவ்வாறு அருளிய இந்த தெய்வமொழிசிவஞானபோதமே தமிழ்சிவஞான-போதத்திற்கு முதல் நூலாகும். இதனை "ரௌரவ தந்திராந்தர்கதம் சிவஞானபோதாக்யம் சாஸ்திரம்" ரௌரவஆகம தந்திரத்துள்ளே அடங்கியது சிவஞானபோதம் என்ற ஞான-சாஸ்திரம் என்று ஸ்ரீலஸ்ரீ சிவாக்ரயோகீந்திர ஞானசிவாச்சாரியயார் அவர்கள் தமது சிவஞானபோதமஹாபாஷியத்தில் கூறியுள்ளார். (இவர் சூர்யனார்கோவில்ஆதீனத்தின் அதிபராவார்). சைவசித்தாந்தில் தசகார்யங்கள் என்பவை முறையே : (1) தத்வரூபம், (2) தத்வ-தரிசனம், (3) தத்வசுத்தி, (4) ஆன்மரூபம், (5) ஆன்மதரிசனம், (6) ஆன்மசுத்தி, (7) சிவரூபம், (8) சிவதரிசனம், (9) சிவயோகம், (10) சிவபோகம் என்பன ஆகும். இவற்றுள் முதல் மூன்றும் பாசத்தொடர்புடையது. இரண்டாவதுபகுதி மூன்றும் பசுத்தொடர்புடையது. மூன்றாவதுபகுதி நான்கும் பதிதொடர்புடையது. இனி இவைகளைப் பற்றி காண்போம்.

(1) தத்வரூபம்

இச்சொல்லில் தத்துவம் என்பது இறைவன் நமக்குத்தந்த அகக்கருவிகள் என்று கொள்ளலாம். இது ஆன்மதத்வம் இருபத்து நான்கும், வித்யாதத்வம் ஏழும், சிவதத்வம் ஐந்தும் ஆக முப்பத்தாறு தத்துவங்களும் ஆகும். இவை [1]பொதுவாகவும், [2]சிறப்பாகவும், [3]பொது-சிறப்பாகவும் மூன்று வகைப்படும். இதனை :

தத்வ ரூப மாகுந் தரமரு வுருவ மெல்லாந்
தத்வத் தூல சூக்ம பரங்களுமாகி நிற்குந்
தத்துவந் தன்னிற் சாரும் அணுக்கள் சாதாதியத்தில்
தத்துவ சத்தம் சாரும் சகலமும் தத்துவங்காண். (சிவஞான சித்தியார் சூத்-2 பாடல் 161).

புவனவடிவங்களாகிய தத்துவங்கள், எல்லோருக்கும் பயன்படும் கருவிகளாக, பொது-வாகவும், சூட்சுமதேகவடிவமான தத்துவங்கள் போகத்தைநுகர உதவும்கருவிகளாக சிறப்பாகவும், ஸ்தூலதேகவடிவங்களான தத்துவங்கள் தனக்கு போகத்தைநுகரவும், அதனை அனுபவிக்கவும், பயன்படும் கருவிகளாக பொதுவும்சிறப்பும்கொண்டதாகவும் மூவகையில் விளங்குகின்றன. தத்துவங்கள் அழியாது, மஹாபிரளய காலம்வரை நிலைத்து இருக்கும். அவை அகக்கருவிதத்வம் 36என்றும், புறக்கருவிதத்வம் 60என்றும் பிரிந்து விளங்குகின்றன.

(அ) <u>சிவதத்துவம் ஐந்தின்ரூபம் : -</u> சிவம், சக்திக்குரிய ஞானம், இச்சை, கிரியை ஆகிய மூன்றின் உள்ளே, எப்போதும் வியாபித்திருக்கும். அது இச்சாசக்தி விலக, ஞானமும்,

கிரியையும் தனித்தனியாக வியாபிக்கும் நிலையில் : (1) சிவதத்வம் ஞானமாகவும், (2) சக்தி-தத்வம் கிரியையாக செயல்படும், (3) சதாசிவதத்வம் ஆகிய (சாதாக்யம்) ஞானமும், கிரியையும் சமநிலையில் செயல்படும், (4) ஈஸ்வரதத்வம் கிரியைமிகுந்து, ஞானம் குறைந்தும் செயல்படும், (5) சுத்தவித்யதத்வம் ஞானம் மிகுந்து, கிரியை குறைந்தும் செயல்படும். "சாதாக்யஸ்ய ததூர்த்வேது விந்யசேத் நிருத்தரூபக:" என்பதாக பூஜையில் நியாசம் செய்வதில் சதாசிவத்துக்குமேல் தாண்டவேச்வரனானசிவனை நியசிக்கவும், என்கிறது மகுடாகமம்.

(ஆ) <u>வித்யாதத்துவம் ஏழின்ரூபம் : -</u>

(1) அசுத்தமாயாதத்துவம் நித்யமாய், உருவமற்றதாய், ஒன்றாய், பிரபஞ்சத்துக்கு வித்தாகி சிவத்துக்கு ஒரு பரிகிரஹசக்தியாய், தனு, கரண, புவன, போகங்களை உயிர்களுக்கு தருவதாய் விளங்குவது ஆகும். (2) காலதத்வம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று வகைப்பட்டு, காரியபிரபஞ்சத்தை காலவரையறைசெய்து, கர்மத்தை எல்லைப்படுத்தி நிற்பதாகும். (3) நியதிதத்வம் அவரவர் கன்மவினைகளை அவரவர்களே அனுபவிக்க நியமிப்பதாகும், கர்மபலன்களை தரும்.

அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்
எவர் எவருக்கு உதவினர் எவர் எவர்க்கு உதவிலர்
தவறு அவர் நினைவது தமை உணர்வதுவே. (குருஞானசம்பந்தர் "சிவபோகாசாரம்")

(4) கலாதத்வம் : ஆன்மாவைப் பற்றி மறைத்து இருக்கும் ஆணவமலத்தின் ஒருபகுதியை நீக்கி, சிற்றறிவைத்தரும் தன்மை உடையது. இதனால் இது ஆன்மாவுக்கு கிரியை உண்டாக்குவது ஆகும். (5) வித்யாதத்வம் : ஆன்மாவின் ஞானசக்தியை, ஒருசிறுபகுதியை விளக்கிவைப்பதாய் நிற்கும். இது ஆன்மாவுக்கு ஞானத்தைத்தரும். (6) அராகம் (இராகதத்வம்): ஆன்மாவின் (இச்சையை) விருப்பத்தைத்தூண்டி, போகத்தை அனுபவிக்கச்செய்யும். ஆன்மாவுக்கு இச்சையைதரும். (7) புருஷதத்வம் : மாயையில் தோன்றிய கலை, வித்யை, ராகம் என்பன ஆன்மாவின் கிரியை, ஞானம், இச்சை ஆகியவை விளக்கியபோது, காலம் நியதிகளுக்குட்பட்டு இவை ஐந்தும்பஞ்சகஞ்சுகமாக, இச்சை, கிரியை, ஞானம் மூன்றையும் ஒரேசமயத்தில் கொண்டு, போகத்தில் உள்முகமாய் நிற்கும்.

புருஷஸ்ய து அந்தரங்கதயா தத்வபஞ்சகம் பரிகீர்த்திதம்.
நியதி: கால ராகச்ச வித்யாச ததநந்தரம்.
கலாச பஞ்சகமிதம் மாயோத்பன்நம் முனீஸ்வர. (சுவேதாஸ்வதரசுருதி)

(இ) ஆன்மதத்துவம் இருபத்துநான்கின் ரூபம் : -

(1) பிருதிவீதத்வம் கடினமாதல், பளுவை (சுமையை) செய்யும். மணம் தருவது. 5 குணமும், தொழிலும் உடையது (மண் சம்பந்தம்) இதன் அதிபதி ஸ்ரீகண்டர். (2) அப்புதத்வம் குளிர்தல் பதம் செய்தல், சுவை தருவது, 4 குணமும், தொழிலும் உடையது. (நீர்) இதன் அதிபதி ஜலேசர். (3) தேயுதத்வம் சுடுதல், ஒன்றுவித்தலாகிய (உஷ்ணம்) ஒளிதருவது. 3 குணமும், தொழிலும் உடையது. (நெருப்பு) இதன் அதிபதி துவிஷாம்நிதி. (4) வாயுதத்வம் சலித்தல், (பரந்தவற்றை அசைவித்தல்) தொடுஉணர்வு தருவது திரட்டுதல், 2குணமும், தொழிலும் உடையது (காற்று). இதன் அதிபதி மாதரிச்வா. (5) ஆகாசதத்வம் வெளியாதல், (இடம் கொடுத்தலாகிய இடைவெளி) ஓசைஉடையது. (சப்தம்) ஒரு குணமும், தொழிலும் உடையது. (விண்) இதன் அதிபதி சூக்ஷ்மர். (6) சப்ததத்வம் ஆகாயம் தோன்ற காரணமாய் உள்ள சூட்சுமதன்மாத்திரை ஆகும் (ஓசை). இதன் அதிபதி சூக்ஷ்மநாதர். (7) ஸ்பரிசதத்வம் வாயு (காற்று) தோன்றுவதற்கு காரணமாய் உள்ள சூட்சுமதன்மாத்திரை ஆகும். (தொடுஉணர்வு) இதன் அதிதி பலவத்தரர். (8) ரூபதத்வம் தேயு (உஷ்ணம்) தோன்றுவதற்கு காரணமாக உள்ள சூட்சுமதன்மாத்திரை ஆகும். (உருவம்) இதன் அதிபதி பானுமான். (9) ரசதத்வம் அப்பு (தண்ணீர்) தோன்றுவதற்கு காரணமாகஉள்ள, சூட்சுமதன்மாத்திரை ஆகும். (சுவை) இத்தத்துவத்தின் அதிபதி ஜலதர் ஆவார். (10) கந்தத்வம் (பிருதிவீ) மண் தோன்றுவதற்கு காரணமாகஉள்ள, சூட்சும தன்மாத்திரை ஆகும். (மணம்) இத்தத்துவத்தின் அதிபதி கந்தாங்கர் ஆவார். (11) வாக்தத்வம் ஆகாயத்தில் நின்று எதிரொலிக்கும், பேசும்தன்மை கொண்டது. (பேச்சு) இத்தத்துவத்தின் அதிபதி துந்துபி ஆவார். (12) பாததத்வம் வாயுவினிடத்தில்நின்று, கமனம் செய்யும் தன்மை கொண்டது. (கால்) இதன் அதிபதி ரமணர். (13) பாணிதத்வம் தேயுவிடத்தில் நின்று, இடுதல், ஏற்றல் இவற்றை செய்யும் தன்மைஉடையது. (கை) இதன் அதிபதி ஸாமதர். (14) உபஸ்ததத்வம் பிருதிவியை இடமாகக்கொண்டு ஆனந்தம் செய்யும் தன்மைஉடையது. (கருவாய்) இதன் அதிபதி கணாநந்தர். (15) பாயுதத்வம் அப்புவினிடமாக கொண்டு மலசலங்களை பிரிக்கிறது. (எருவாய்) இதன் அதிபதி தூர்ணகிருத் என்பவராவார். (16) துவக்தத்துவம் வாயுவின் இடமாக நின்று, உணர்தல், ஸ்பரிசத்தைஅறிய கருவியாக உள்ளது. (தோல்) இத்தத்துவ அதிபதி ஸர்வாங்கர். (17) ஜிஹ்வாதத்துவம் இது அப்புவின் இடமாக நின்று, இரசத்தை (சுவை) அறிய கருவியாக உள்ளது. (நாக்கு) இதன் அதிபதி மஹாவத்திரர். (18) சக்ஷுஸ்தத்துவம் இது அக்னியை இடமாக நின்று, ரூபத்தை (ஒளியை) அறிய கருவியாகஉள்ளது. (கண்) இதன் அதிபதி பிரகாசகர். (19) நாஸாதத்துமவ் இது பிருதிவியைஇடமாக கொண்டு, கந்தத்தை (வாசனையை) அறிய கருவியாக உள்ளது. (மூக்கு) இதன் அதிபதி விலும்பகர். (20) சுரோத்ர-தத்வம் இது ஆகாயத்தை இடமாக கொண்டு சப்தத்தை (ஒலியை) அறிய கருவியாக உள்ளது. (காது) இதன் அதிபதி வியோமசாரீ. (21) பிரகிருதிதத்துவம் இது முக்குணங்களுக்கும் பிறப்பிடமாய்,

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

மூலமுக்கியகாரணமாய் உள்ளது. (பிரதானம்) இதன் அதிபதி சூக்ஷ்மதேஹர் ஆவார். (21 அ) குணதத்துவம் பிரகிருதிதத்துவத்தில் கலையினின்றும் அவ்யக்தமாய் தோன்றி மூலப்ரகிதியிடம் [1]சாத்விகம், [2]இராஜஸம், [3]தாமஸம் என மூன்று குணங்களாய் வெளிப்பட்டதாய் வியக்தமாய் இருந்து, இது ஒன்பது வகைப்படுகிறது. இதன் அதிபதி திரிதேஹர் என்பவராவார். (22) புத்திதத்துவம் குணதத்துவத்திடம் தோன்றி ஆன்மாக்கள்செய்யும், நல்வினை, தீவினைக்குஈடாக வந்த விஷயங்களை நிச்சயிப்பது. (அறிவு) இதன் அதிபதி புத்திமான். (23) அஹங்காரதத்துவம் என்பது தான் என்ற அகங்தைபடுத்தவும், எனது என்ற உரிமை-படுத்தவும், காரணமாய்நின்று செயல்படுவது. (அகந்தை) இதன் அதிபதி அஹங்கிருதி என்பவராவார். (24) மனஸ்தத்துவம் தைஜஸ அகங்காரத்தின்றுதோன்றி, எதிர்ப்பட்ட ஒரு விஷயத்தை இதுயாது, என, சித்தரூபமாய் சிந்தித்து, பின் சந்தேகப்பட்டு, நிச்சயிக்க ஆசையை பிறப்பிக்கச்செய்வது சித்தம். இதன் அதிபதி சங்கல்பர் ஆவார். இவ்வாறாக 24 ஆத்மதத்து-வங்களின் உருவங்களையும், அவற்றை இயக்கும் செயலதிபர்களையும் அறிந்தோம்.

2. <u>தத்வதரிசனம்</u>

<u>பாசம் உணர்தல்)</u> : - இதனை பூதசுத்தியில் யோகநிலையில் அந்தர்யாக மந்திரங்களின் பயிற்ச்சி முறையால் அறியலாம் : (1) பிருதிவி, நாற்கோணவடிவம், பொன்னிறம். அதன் கூறு = மயிர்வளரும், எலும்பு: உருக்கும், மாமிசம் : தசை முற்றும், தோல் : வற்க்கென்றும், நரம்பு : கதித்தோடும். (2) அப்பு பிறைவடிவம், வெண்ணிறம், இதன் கூறு = நீர் : விழும், உதிரம் : பரக்கும், சுக்லம் : வர்த்திக்கும், மூளை : மெத்தென்றிருக்கும், மஜ்ஜை : நிறைக்கும். (3) தேயு, முக்கோணவடிவம், செந்நிறம், இதன் கூறு = பசி : தாபிக்கும், நித்ரை மயக்கும், பயம் : அஞ்சுவிக்கும், மைதுனம் : சங்கமம் செய்யும், சோம்பல் : முறிப்பிக்கும், (4) வாயு, அறுகோணவடிவம், புகைநிறம், இதன் கூறு = ஓடல் விரைவிக்கும், இருத்தல் : அழுத்துவிக்கும், கிடத்தல் : போடுவிக்கும், நடத்தல் : எழுப்புவிக்கும், நிற்றல் :நிற்பிக்கும். (5) ஆகாசம், வட்டவடிவம், நீலநிறம். ஆதன் கூறு = காமம் : மோகிப்பிக்கும், மதம் : அங்கரிப்பிக்கும், குரோதம் : கோபிக்கும், லோபம் : பிசினிபிக்கும், மாச்சர்யம் : இகழ்விக்கும். (6) சப்தம், நீலநிறம், (7) ஸ்பரிசம், புகைநிறம், (8) ரூபம், செந்நிறம், (9) ரஸம், வெண்ணிறம், (10) கந்தம், பொன்னிறம், (11) வாக்கு, நீலநிறம், (12) பாதம், புகைநிறம், (13) பாணி, செந்நிறம், (14) பாயு: வெண்ணிறம், (15) உபஸ்தம் : பொன்னிறம், (16) மெய்: (உடல் தோல்), புகைநிறம், (17) வாய் (நாக்கு) வெண்ணிறம், (18) கண், செந்நிறம், (19) மூக்கு: பொன்னிறம், (20) காது : நீலநிறம், (21) மனம் : வெண்ணிறம், (22) புத்தி : செந்நிறம், (23) அகங்காரம், கருமைநிறம், (24) சித்தம்: வெண்ணிறம், (25) பிரகிருதி : சங்குநிறம், (26) கலை : குந்தபுஷ்பநிறம், (27) நியதி : பொன்னிறம், (28) காலம் : வெண்மை, செம்மை, கருமைநிறம், (29) ராகம் : கருமைநிறம், (30) அசுத்தமாயை : இருள்நிறம், (31) புருஷன் : கருமை, வெண்மைநிறம், (32) சுத்தவித்தை : பொன்னிறம், (33) ஈஸ்வரம் : இருள்நிறம், (34)

சாதாக்யம் : ஸ்படிகநிறம், (35) சக்தி : இரத்தநிறம், (36) சிவம் : ஸ்வேதம் (வெண்மைநிறம்). அடி அண்ட ஆகாசத்தின் மேலுள்ள, காலாக்னி ருத்ரர் கோடியில் 1கோடி யோசனைதூரம், அவரது அக்னிஜ்வாலை, 10கோடி யோசனைதூரம், அதன் புகை 5கோடி யோசனைதூரமாகும். அவரது சிம்மாசனத்தின் உயரம் 1000 யோசனைஅளவாகும், அவரது திருமேனி 10000 யோசனைதூர உயரமாகும். காலாக்னி புவனத்துக்கு மேல், 28கோடி நரகங்கள், அதற்கு மேல் கூச்மாண்டபுவனம் உள்ளது, அதற்கு மேல் ஆகாயவெளி 9லட்சம்யோசனை, அதற்கு மேல் சப்தபாதாளம் : (ஏழுகீழ்உலகு) அதற்கு மேல் கனிஷ்டபாதாளம், அதற்கு மேல் ஹாடகேஸ்வரபாதாளம், அதற்கு மேல் வெளி (ஆகாயம்), அதற்குமேல் ஆதிசேஷனால் தாங்கப்படும் பூமி. பிருதிவிதத்வம் 100கோடி யோசனைதூர நீளம், அகலம், உயரம் உடையதாய் 1000கோடி அண்டமுடையது. இந்த பிருதிவிதத்வம், 10மடங்கு விரிவுஉடையது. அப்தத்வம் இதில் 10மடங்கு விரிவுஉடையது. தேயுதத்வம் இதில் 10மடங்கு விரிவுஉடையது. ஆகாயதத்வம் இதில் 10மடங்கு விரிவுஉடையது. அகங்கார, ஞானேந்திரியம், கன்மேந்திரியம், தன்மாத்திரைகள் மனம் ஆகியவை, இதில் 10மடங்கு புத்தி, இதில் 10மடங்கு குணம், இதில் 10மடங்கு பிரகிருதி. பிரகிருதியில் 100மடங்கு இராகம், இதில் 100மடங்கு வித்தை, இதில் 100மடங்கு நியதி, இதில் 100மடங்கு கலை, இதில் 100மடங்கு சுத்தவித்தை, இதில் 1000மடங்கு ஈஸ்வரதத்வம், இதில் 1000 மடங்கு சாதாக்யதத்வம் (சதாசிவம்). சதாசிவதத்துவத்தில்: இலட்சம் மடங்கு சக்திதத்துவம், இதில் இலட்சம் மடங்கு சிவதத்துவம் என தத்வரூபம் நிறம், நிலை, அளவு முதலியவற்றுடன் கூறப்படுகிறது. பிருதிவி முதலாக, தத்வபிரபஞ்சம் அனைத்தையும் ஆன்மாவானது அசத்தாகிய ஜடம் என காண்பது "தத்வதரிசனம்" எனப்படுவதாகஆகும்.

<u>மாயை :</u> - இது (1) சுத்தமாயை, (2) அசுத்தமாயை, (3) பிரகிருதிமாயை என மூவகை.

1) சுத்தமாயை : ஆணவம் கன்மங்களோடு கலாவானதுது முதற்காரணமாக இருக்கும். அசுத்தமாயை, மற்ற இரண்டு மாயைகளையும் வியாபித்து மேலாக இருக்கும். சுத்தமாயைக்கு சூட்சுமவாக்கு நாதமாத்திரையாக இருக்கும். ஞானத்திற்கு ஏதுவாக உடையது. இதுவே விருத்திகளாகிய அவை அழியும்தன்மைகொண்டது. ஆனால் சூட்சுமை அழிவதில்லை. சுத்த- மாயா சூட்சுமைவடிவமாய் நிலைபெற்று இருக்கும். தவச்சிறப்பால் இதை காணப்பெறுவோர்க்கு அசுத்த, சுத்தமாயை புவனத்தில்உள்ள, அபரமுக்தியைப் பெரும் போகம் கிட்டும். இந்த வாக்கு நிவர்த்திகலை முதலாக 15 தத்துவங்களில் இருக்கும். சுத்தமாயை, விருத்திஅடைந்து காரியப்படும். ஆனால் பரிணாமமாய் காரியப்படாது. பால் தயிராவது பரிணாமத்துக்கு உதாரணம். "படங்குடிலானால் போல்வன" விருத்திக்கு உதாரணம். பாலில் தயிர் முழுவதும் பரிமளித்தல். எனவே விருத்தி என்பது சூட்சும பரிணாமம் இதையே குடிலை என்பார்கள். 2. அசுத்தமாயை : இறைவன் நிமித்தகாரணன். மாயை உபாதானகாரணம். குயவன் பானை செய்வான். குயவன் நிமித்தகாரணம், மண் உபாதானகாரணம், தண்டம்சக்கரம் துணைக்-காரணம். இம்மூன்றும் தொழில்படுவதன்

முடிவு, பானை. இதைப்போல் இறைவன், மாயை, பிரபஞ்சம் ஆகிய இம்மூன்றும் முறையே [1]முதல்காரணம். [2]உபாதாரணகாரணம் [3]துணைக்-காரணமாக செயல்பட்டும், இதில் மாயா என்பதன் விளக்கமாவது. "மா" என்பது உலகம் எதில் மறைகிறதோ என்பதையும், "யா" என்பது எதிலிருந்து தோன்றுகிறதோ என்பதையும் உணர்த்துவதாய் விளங்குவதால், அது மாயை. அசேதனமான உலகிற்கு அசேனமாகஉள்ள காரணம் இருத்தல்வேண்டும். அதுதான் மாயை. ஆன்மாக்களுக்கு வேண்டிய, தனு, கரணம், புவனம், போகங்கள் மாயையில் இருந்து உண்டாகின்றன. இவை தானாக உற்பத்தி ஆவதில்லை. ஏனென்றால், அது அசேதனபொருள். சிவபெருமான் தூண்டுதலால் மாயையை பரிணமிக்க செய்யும். ஆணவம் கன்மம், இவையுடன் சேரும்போது அசுத்தமடைந்து அது அசுத்தமாயை ஆகிறது. **3. பிரகிருதி மாயை :** இது அசுத்தமாயையின் ஸ்தூலபரிணாமமாய் தோன்றுவது. சுத்தமாயை மற்ற இரண்டையும் வியாபித்து, மேலாய் விளங்குவதாய், தனக்குட்பட்டு நிற்கும் பிரகிருதிமாயையில், குணதத்துவம் முதலான போக்கியங்களைத்தரும் தத்துவங்கள் 24-ம்தோன்றும். பிரகிருதியை குணபூதம் எனவும் சித்தமாகவும் கொள்ளலாம்.

<u>ஆணவ மலம் :</u> இதனால் உண்டாகும், அசட்டுகுணங்கள் எட்டுவகை. 1) தனக்கு தெரிந்ததையே சாதித்தல் (தனக்கு தெரியாத விஷயம் உலகில் உள்ளது என்பதை மறுத்தல் (நாத்திகவாதம் - இதன் அடிப்படையே) 2) தான் சொல்வதை பிறர் கேட்கவேண்டும் என்னும் ஆவல். 3) எடுத்ததெற்கெல்லாம் கோபப்படுதல், 4) தன்னிடம் இல்லாத பொருள்மேல் ஆசைப்-படுதல், 5) கொலை செய்தல், கொன்றதை உண்பதும் (கொன்னால் பாவம், தின்னால் போச்சு என எண்ணுதல்), 6) எப்போதும் கவலைப்பட்டு வருத்தப்படுதல், 7) நான் எனும் அகங்காரமும், என்னுடையது என்ற முனைப்பும் பெற்றுஇருப்பது, 8) தன் குற்றத்தை உணர்ந்துகொள்ள முடியாமல் பிறர் குற்றத்தை சொல்லி ஏளனம், செய்து மகிழ்வது.

<u>கன்ம மலம் : -</u> இதில் உண்டாகும் அசட்டுகுணங்கள் 6வகை. அவை 1) சோம்பேறியாக இருப்பது, 2) எப்போதும் தூங்குவது, 3) புண்ணியத்தை செய்வது, 4) பாவத்தை செய்வது, 5) செய்யவேண்டிய தனதுதொழிலை செய்யாமல் விடுவது, 6) தனது குற்றத்தை பிறர்மேல் சுமத்துவது, (உ-ம்) வாசற்படியில் மோதிக்கொண்டவன், தன்னை படிதட்டியது எனக்கூறுவது போன்றதாகும்.

<u>மாயா மலம் :</u> இதன் அசட்டுகுணங்கள் 7வகை. அவை 1) எவ்வளவு படித்திருந்தாலும் உண்மை அறியமுடியாமை, 2) களவு, கெடுதல் என தெரிந்தும் செய்யாமல் இருக்க இயலாமை, 3) கண்டபடி சொல்லும் அதனால் நேர்மை வராது, 4) படித்தபடி நடக்க நினைத்தாலும் நடக்க இயலாமை, 5) பெரும் பணம்படைத்தவனாக இருந்தாலும் பிறருக்கு உதவும்மனம் வராதநிலை, 6) இறப்பு நிச்சயம் என்பதைக்கண்டும், கேட்டும், உணர்ந்தும், அதை குறித்து மனம் தெரியப்-படாதது, 7) பிறருடைய வளர்ச்சிக்கண்டு மனம், பொறாமைகொண்டு இருப்பது. இவ்வாறு 21 அசட்டுகுணம் கொண்டவை 1) ஆணவம், 2)

கன்மம், 3) மாயை எனும் மூன்றும் ஆகும். இதனை வாரியார்சுவாமிகள் தனது சொற்பொழிவுகளில் சிறந்த உதாரணம்கூறி விளக்குவார். அது, இரண்டு பெண்மணிகள் பேசிக்கொள்கிறார்கள், மகனைப்பற்றி, ஏதோ தேர்தல் வேலையாம், எங்கே போகிறான்? எங்கே வருகிறான்? என்று கேட்டால் "உனக்கென்ன தெரியும்? என கொக்கரிக்கிறான், ஆணவம்பிடித்து அலைகிறான், என அங்கலாய்த்து கொள்வார் என்று கூறி விளக்குவார். <u>கன்மம் :-</u> ஆசிரியர், அருமையாக அன்று பாடம்நடத்தி இருப்பார். அன்றையதினம் அவன் பள்ளிக்கூடம் போகமுடியாமல் விடுப்பு எடுத்திருப்பான். உடல்நலமில்லாதிருப்பான், மற்ற மாணவர்கள், மறுநாள், நேற்று ஆசிரியர் மிகவும் அருமையாக புரியம்படி பாடம் நடத்தினார் என்பார். இது கர்மவினையான உடல்நலமின்மையாகவந்து தடுக்கிறது. இதையே வாரியார்சுவாமிகள் கூறும்போது, இருபெண்மணிகள் பேசிக்-கொள்கிறார்கள். ஏதோ தேர்தலாம், விளம்பரபோஸ்டர் ஒட்டப்போனான், எப்பசாப்பிட்டானோ, தெரியவில்லை, அவன் கன்மத்தை அவன்தானே தொலைக்கணும், என பேசிக்கொள்வார்கள் என்பார். <u>மாயை :-</u> ஆசிரியர் பாடம் நடத்துவார். மாணவருக்கு புரிவது போல தோன்றும், கவனமில்லாமல் இருப்பதால் மறந்துவிடும். இது ஒரு தடை, இது மாயையின் செயல் "அடாடா கவனிக்கவில்லையே" என பிறகு மனம் எண்ணும். இதையே வாரியார்சுவாமிகள் இரு பெண்மணிகள் பேசிக்கொள்கிறார்கள். வீட்டுக்கார பெண்மணியிடம் உன் பையன் எங்கே? என்று கேட்க, அவன் உள்ளே மனைவியிடம் பேசிக்கொண்டிருப்பதை, அவன் உள்ளே மாயையில் முழ்கிக்கிடக்கிறான் என்று கூறுவாள் என்று கூறி ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை விளக்கிஉள்ளார்.

<u>தனு, கரணம், புவனம், போகம், போக்யம் :</u> இவை நான்கின் விளக்கம் வருமாறு. தனு = உடம்பு. இதனை மெய் என்று கூறுவர். கரணம் = (1) மனம், (2) புத்தி, (3) சித்தம், (4) அகங்காரம். இவற்றின் விளக்கம் பக்கத்து வீட்டு நண்பர் செல்போன் ஒன்று வாங்கி இருப்பார். அதை பார்த்த உடன் நாமும் அதுபோல் வாங்கவேண்டும் என்று, அதன் மாடல், எண், போன்றவற்றைப் பதிவு செய்துகொள்வது **சித்தம்** ஆகும். அதுபோல எப்படியும் வாங்கவேண்டும் என்று நினைப்பது இருப்பது **மனம்.** இது தேவையா? அல்லது வேறுபொருள் வாங்கலாமா? அல்லது அந்த பணத்தை வங்கியில் போடலாமா? என ஆராய்ந்து கொண்டிருப்பது **புத்தி.** இந்த கட்டத்தில் மனதுக்கும், புத்திக்கும் ஒரு போராட்டம் நடைபெற்று, வினைவழியே அப்பொருளை (செல்) வாங்கிமுடிப்பது **அஹங்காரம்.** இதுதான் **அந்தக்கரணம்** எனப்படுபவைஆகும். இவற்றை உள்உணர்வுக் கருவிகள் என்பர். **வினைவழி** கர்மவினையானது **ஆகாம்யம், சஞ்சிதம், பிராரப்தம்** என்று மூவகை என்று கூறுவர். இந்த **I.** ஆகாம்யம் என்பது மூன்றுவகையாகும். (1) மண்ணில் பிறவியிலேயே கிடைக்கும் வினை, (2) இறந்தபின் சொர்க்கம், நரகம் என கிடைக்கும் வினை, (3) அடுத்த பிறவியில் பற்றும் வினை. **II.** பிராரப்தம் இந்தவினையை அனுபவித்துத் தான் தீர்க்கவேண்டும். (உ-ம்) ஒருபெண்ணுக்கு தாய் உடனிருந்து எவ்வளவு உதவிகள் புரிந்தாலும், பிரசவகாலவலியை

அவள்தான் ஏற்று அனுபவிப்பதுபோன்றதாகும். **III. சஞ்சிதம்** இதற்கு (சேமிப்பு) வினைமூட்டை என்று கூறுவர். பாவம், புண்ணியம் என்பவை இரண்டும் இப்பிறவி, முற்பிறவிகளில் செய்தது, அடுத்தபிறவிக்கும் அது பற்றும். இது தருமத்தை நன்முறையில் செய்பவர் இப்பிறவியில் துன்பத்தை பெறுவதும், அடாது தீயவற்றைச் செய்பவர் இப்பிறவியில் நன்மையைப் பெறுவதும் போலாகும். **ஆங்காரம்** இது மூவகையாகும். இதில் 1) **தைஜஸஅகங்காரம்**. இது ஸத்வகுணமுடையது. இதில் ஒருபிரிவு மனம். ஒருபிரிவு **ஞானேந்திரியம்**. 2) **வைகார்யாஅகங்காரம்**. இது ரஜோகுணம்-உடையது. இதில் கர்மேந்திரியம் அடங்கும். **3) பூதாதிஅகங்காரம்** (தமோகுணமுடையது. தன்மாத்திரைகளான ஸப்தம் முதலான விஷயங்களாகும். **அவஸ்தைகள்** இது ஐவகைப்படும். அவை (1) ஜாக்ரத் = நனவு, (2) **சொப்பனம்** = கனவு, (3) சுஷுப்தி = உறக்கம், (4) **துரியம்** = பேரூறக்கம், (5) **துரியாதீதம்** = உயிர்ப்படங்கள் (தனித்த / கேவலநிலை) என்பவை ஆகும். இவற்றின் விளக்கமாவது, (உ-ம்.) ஒருவன் தன் வைரமோதிரத்தை பாத்ரூமில் வைத்து மறந்து-விட்டான். ஆனால் உடன் நினைவுக்கு கொண்டுவர முயற்சிப்பது **துரீயாதீதம்**, அதன்பின் மூச்சுவிடுவது **துரியம்**, பின்பு அழுதல் **சுஷுப்தி**, தான் வைத்த இடம் இதுதான் என கூறுவது **சொப்பனம்**. பின் வைத்த இடத்தை உணர்ந்து எடுத்துவருதல் **ஜாக்ரத்** எனப்படும். **வித்யா-தத்துவம்** ஏழு புருஷனுக்கு, நியதி, காலம், ராகம், வித்தை, கலை, என்ற ஐந்து தத்துவங்கள் அந்தரங்கமாக உள்ளது. இவை மாயாதத்துவத்தில் உண்டானவை. புருஷனுக்கு இந்த 5-ம் **பஞ்சகஞ்சுகம்** எனப்படும். இவற்றால் அனுபவிப்பதே புருஷன் (ஆத்மா) இந்த புருஷதத்துவம் பிரகிருதிக்கு மேலும், நியதிக்கு கீழும் உள்ளது ஆகும். இது உபசரிப்பாக தத்துவம் எனப்படுகிறது. **நாதம்**, **விந்து** விளக்கம் சிவம் ஞானமாக இருக்கும். சக்தி கிரியையாகயிருக்கும். சிவமாகிய மெய்ஞானத்தைத்தூண்டி, செயலாக தொழிற்படுத்தும் நிலையில், இச்சிவம் நாதம் எனவும், இச்சிவம் திருவருள்வடிவாகி, ஆற்றலுக்கு நிலைகளமாக உள்ள சக்தியை விந்து என்றும் கூறுவர். இதனையே அகத்துள்நின்று செயல்படும்தன்மையால் புறத்துநிகழும் தொழில் என்பர் இதுவே கிரியை எனப்படுவதும் ஆகும்.

நாதோ லிங்க மிதிக் யேம் பிந்து: பீட மிதி ஸம்ருதம்.
நாத பிந்து யுதம் ரூபம் கர்ம சாதாக்ய முச்யதே . (வாதுளாகமம்)

சிவன் நாதரூபமாகவும், லிங்கமாகவும், சக்தி விந்துரூபமாகவும், பீடரூபமாகவும், இணைந்து, சக்தியும், சிவமும் எப்போதும் தீயும் சூடும்போல கூடியிருந்து, காட்சிதருவதே, ஆதிமூர்த்தமான **சிவலிங்கம்**. இது சகளம், நிஷ்களம், சகளநிஷ்களம் எனும் மூவகை வடிவம் கொண்டுள்ளது.

<u>சக்தி தத்துவத்தில் பஞ்சகலை :</u> (1) **நிவர்த்திகலை,** உயிர்களுக்கு பிரபஞ்ச விடுதலையை உண்டுபண்ணும்கால் நிகழ்வது. (2) **பிரதிஷ்டாகலை,** விடுதலையடைந்த உயிர்களுக்கு

மீண்டும் பிரபஞ்சத்தை பற்றதவாறு செய்வது. (3) வித்யாகலை, விடுதலை அடைந்த உயிர்களுக்கு உண்மை பொருளை உணர்த்துதல், (4) சாந்திகலை, உண்மை பொருளை உணர்ந்த உயிர் அடங்கி இருக்கச்செய்யும்போது நிகழ்வது, (5) சாந்தியதீதகலை, இறையோடு அடங்கிய உயிர், அடங்கியிருக்கிறோம் என்ற போதம்இறந்து அதீதபடச்செய்யும்போது நிகழும். இவை [1]ஐந்து-கலைகள் மற்றும் [2]மந்திரம், [3]பதம், [4]வர்ணம், [5]புவனம், [6]தத்துவங்கள் ஆகியவை ஆறும், அத்வா-நிலையில் ஷடத்வா என்றுஇருக்கின்றன. அத்வா என்ற சொல்லுக்கு, இறைவனை அடைய-உதவும் வழி என்று பொருள்.

3. தத்வசுத்தி

பாசசுத்தி :- சிவபெருமான் அறிவித்தலாகிய (குருவடிவாய்) சூட்சுமபஞ்சகிருத்யம் செய்யும் போது ஐம்புலன்களின் விஷயங்களை ஆன்மாவானது கண்டு, கேட்டு, உண்டு, உயர்ந்து, தீண்டி, உணர்ந்து அவருக்குள் அடங்கி ஒன்றுதலுமின்றி, வேறாதலுமின்றி உடனாய் நிற்பார்.

பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக.
நெறி நின்றார் நீடுவாழ்வார். (திருக்குறள் - 6)

Those shall long prosper who stand in the righteous way of him.
Who has put out the five desires born on the senses.

இந்நிலையில் ஒன்றாதல், உடனாதல், வேறாதல், என்பவைகளைப்பற்றி இனி இங்கு மாதா, பிதா, குரு, தெய்வம் என்கிற நிலைகளில் பார்க்கலாம். ஒன்றாதல் = இந்நிலையில், மாதா : குழந்தை தாயின் வயிற்றில் ஒன்றாய் இருக்கும் (தாய் வயிற்றினில் சுமப்பாள்). பிதா : குழந்தை தந்தையின் கையைப்பிடித்து பள்ளி செல்வான் (தற்காலத்தில் வண்டியில் தந்தையுடன் செல்வான்) குரு : மாணவன், தான் அரிச்சுவடிபயில குருவானவர் மாணவரின் கையைப்பிடித்து, தானும் சேர்ந்து அ முதல் எழுதுவார் (சிலேட்டில் பலபத்தை இருவரின் கைகளால் பிடித்து எழுதுதல்). தெய்வம் : ஆன்மாசுத்தி ஆனவுடன் இறைவனுடன் ஒன்றாவான். சீடன் (முக்தன், சித்தன்) அறிந்தவுடன் குருவைப்போல் விளங்குகிறான். உடனாதல் = இந்நிலையில், மாதா : குழந்தை தாயின்இடுப்பில் சிறிதுகாலம் இருக்கும் (நடக்கும் வரை இடுப்பில் சுமப்பாள்). பிதா : குழந்தை தந்தையுடன் சிறிதுகாலம் இருக்கும் (திருமணம் முடியும் வரை உடனிருப்பான்). குரு : மாணவன் கல்வி முடியும் வரை குருவுடன் இருப்பான் (படிப்பு முடியும்வரை இருப்பான்). தெய்வம் : ஆன்மா இறைவனை ஆலயத்தில் தரிசிக்கும் போது, உடனிருந்து அருள்புரிகிறான். அனைவருள்ளும் அந்தர்யாமியாய் இருந்து தூண்டுகிறான். வேறாதல் : இந்நிலையில், மாதா : குழந்தை வயது- வந்து, வேலை நிமித்தமாக வேறு ஊருக்கு சென்றுவிடுகிறான். பிதா : குழந்தை தந்தையுடனும் பணிநிமித்தம் வேறு ஊருக்கு குடும்பத்தை விட்டு சென்றுவிடுகிறான். குரு : மாணவன்

கல்விமுடிந்தபின் குருவிடமிருந்து பாடசாலையை கைவிட்டு பிரிந்துசெல்கிறான். தெய்வம் : ஆன்மா இறைனை ஆலயத்தில் தரிசிக்கும்முன் வேறாக இருப்பான்.

அது என்னும் ஒன்று அன்று வேறாதல்
அது என்றறிய இரண்டல்லன் உடனாதல்
ஆங்கறிவுள் நிற்றல் அறியும் அறிவே சிவம் ஆகும் ஒன்றாதல் (சிவஞானபேதம்)

இந்த செயல்பாட்டால், சிவபரம்பொருள் விகாரம் அடைவதில்லை. அவர் நிர்விகாரியாக விளங்குகிறார். ஆன்மாக்களுக்கு பசுத்வம் நீக்கி, சிவத்வத்தை அறிவிக்கும் இரக்கமாகிய கருணையேயான சிவத்துள் இருக்கும் அருளே சக்தியாகும். "குணபூதா பராசக்திஸ் ததாச்ரய குணீசிவ:" (காலோத்தராகமம்). பராசக்தி குணம் (அருள்) இவருக்கு பற்றுகோடாக உள்ள சிவம்குணியாக இருப்பார். சிவனது(அபின்னா)சக்தி. குணத்தைஉடையது குணி எனப்படுகிறது. "அருளது சக்தியாகும்" (சிவஞானபோதம்). "தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி" (வேத மந்திரம். கடவல்லி). சிவனது சக்தியின் பிரகாசத்தால், பிரபஞ்சமெல்லாம் பிரகாசிக்கிறது. அதன் காரியம் உள்முகமாகும். அது சிவசக்தி எனப்படும். ஸத்து, அஸத்து, ஆகிய இரண்டின் தன்மையை இனி பார்ப்போம். சிவபெருமானானவர் நம்மால் பசுஞானம் எனப்படும் பாசஞானங்-களால் அறியப்படுவாராகில், அவர் (அறிவற்ற) அசேதனபொருள் போல், இறைஅழியும் பொருளாகிய அசத்தாக ஆகிவிடுவார். எவ்வழியிலும் உணரப்படாவதர் என்றால் இல்லை என்று சூன்யமாகிவிடுவார். இல்லாப்பொருளாக ஆகி அது குதிரைக்கொம்பு என்பது போலாகும். எனவே இந்த காவைதல் காணாதல் எனும் இரண்டுஇயல்புமின்றி, பசுஞானத்தாலும், பாச-ஞானத்தாலும் உணரப்படாத ஆன்மா, பதிஞானமாகிய சிவஞானத்தால் சிவனை அறியுமாறு இருப்பதால் அவர் சிவசித்து ஆவார். இதனை கீழ்காணும் பெரியபுராணப் பாடலால் அறியவும்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலா கலைஞானம் உணர்வரிய மெய்ஞானம்

தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில். (பெரியபுராணம்) திருஞானசம்பந்தர் ஞானப்பாலைஅருந்தியஉடன், பிறவிநோய்தீர்க்கும் பாங்கினில், ஓங்கிய-ஞானத்தையும், அவரது புகழைப்பாடும் கலைஞானத்தையும், உணர்வுசூழ்கடந்த மெய்-ஞானத்தையும் பெற்றார் என்பது, இப்பாடலின் பொருள் ஆகும்.

பிருதிவ்யாதி ஆத்ம தத்வாந்தம் ஆத்மதத்வ முதீரிதம்.
வித்யாதத்வாதி மாயாந்தம் வித்யாதத்வ முதீரிதம்.
தஸ்யோர்த்வம் சிவதத்வம் து தத்வத்ரய முதாஹ்ருதம்.
ஏவம் சர்வம் க்ரமேணைவ தத்வத்ரய லயோபவேத். (சிந்திய விஸ்வாகமம்)

(பொருள்) பிருதிவ்யாதி ஆத்மதத்துவம் இருபத்திநான்கும், வித்யாதத்துவம் ஏழும், சிவத்தத்துவம் ஐந்தும், முறையே ஒன்றில்ஒன்று தோன்றிய முறையிலேயே லயத்தை அடையும்.

சீரும் பொலிவும் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
யாரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெருவார் (திருப்பல்லாண்டு)

இப்பாடலில் அறிவு என்பது சிவஞானமே என்று அறிந்திடுக.

நான்கு வருணத்தாரும் **சிவதீக்ஷை** பெறலாம். அதிலும் பஞ்சரிஷிகளின் கோத்திரங்களில் வந்த ஆதிசைவர், சமய, விசேஷ, நிர்வாணதீக்ஷைகளுடன் செய்யப்படுகிற ஆச்சார்யா-பிஷேகத்தில், நிர்வாணதீக்ஷையில், அத்துவசுத்திகிரியையில், நிவர்த்திகலாசுத்தியில், பிருதிவீ-தத்வமும் பிருதிஷ்டாகலாசுத்தியில், அப்பு முதல் பிரகிருதி வரை 23 தத்துவங்களும் வித்யா-கலாசுத்தியில், மாயை முதல் புருஷன் முடிய, 7 தத்துவங்களும், சாந்திகலாசுத்தியில், சுத்த-வித்தை, ஈஸ்வரம், சாதாக்யம், ஆகிய 3 தத்துவங்களும், சாந்தியதீதகலையில், சக்தி, சிவம் எனும் இருதத்துவங்களும் ஆக 36தத்துவங்களின் சுத்திகளையும் பெறுவர். சிவஞான-தீக்ஷையில் ஆதிசைவருக்கு, சிவனே குருவாக வந்து, செய்யப்படுகிற (தீக்ஷையில்குரு) நிர்வாணதீக்ஷயின்போது, கீழ்க்கண்டவாறு சிவனை பிரார்த்தனை செய்வார். அச்சுலோகப்-பொருளாவது, பகவானே! இந்தஆன்மா, ஸர்வயோனிகளிலும், ஏககாலத்திலேயே ஸர்வசரீரங்-களிலும், விருத்திபாவித்து, சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலங்களில் வரும், கர்மவாசனை களால்வரும், போகநுகர்ச்சி, சுகதுக்க, போக்யத்தை அனுபவிக்கும், திரும்பவும் ஜனனமாகாமல், மாயா, மல, கர்ம, ரூபமானபாசத்ரயங்களை செய்யுமாறும், வேண்டுவார். இவ்வாறு பிரார்த்தனை செய்து, அக்னியில் ஆறு அத்வாக்களையும் ஒன்றன்பின்ஒன்றாக சுத்திசெய்து, அஞ்ஞான பசுவாகிய இந்தசிஷ்யனுககு, அனுபவம்செய்க. இவ்வான்மாவை கலாத்வா, தத்வாத்வா, புவனாத்வா, வர்ணாத்வா, பதாத்தவா, மந்த்ராத்வா, இவைகளில் சுத்திசெய்து, சிகாசேதம் செய்து, சிவபதம் சேர்க்க பிரார்த்திப்பார். சிஷ்யனுக்கு "சிவத்வம்" பிரகாசிக்க பிரார்த்தனை செய்வார். இவ்வாறு பிருதிவி முதலாக மூலப்ரகிருதி வரை 24 தத்வங்கள் ஸ்ரீகண்டருத்திரரால் லயம்அடையும். மூலப்பிரகிருதிக்கு மேலுள்ள ஆறுதத்வம், தத்வஅதி-தேவரான, அனந்தேஸ்வரரில் லயமடையும். அதற்கு மேலுள்ள சுத்தவித்தை முதல் 3 தத்வங்கள் லயசிவத்திடம் லயமடையும். சக்திதத்வம், சிவதத்வம் இரண்டும், சுத்தசிவத்தில் லயமடையும். இவ்வாறு, தத்வம் அனைத்தும், இடையில் நீங்கிவிடும் என ஆன்மா காண்பதால், உணர்தல் என்ற தத்வசுத்தி எனப்படுவது ஏற்படும் என்பர். இதுவரை மூன்றாம் காரியம் விளக்கப்பட்டது.

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

4. ஆன்மரூபம் (பசு உண்மை)

உளது இலதென்றலின் எனது உடல் என்றலின்
ஐம்புலனொடு ஒடுக்க அறிதலின் கண்படி
உண்டி வினையின்மையின் உணர்த்த உணர்தலின்
மாய இயந்திர தனுவில் உளது ஆன்மா (சிவஞானபோதம் 3வது சூத்ரம்)

ஆன்மா காட்சிப்பொருள் அல்ல. ஏனைய பொருள்கள் போல நம் கண்ணாலே காண-முடியாது. இதுவரை இயங்கிக்கொண்டிருந்த ஓர் உடல் இப்போது இயங்காது, சவமாய், பிரேதமாய் கிடக்கிறது. இதைக்கண்டு அந்த உடலை இதுவரை இயக்கிக்கொண்டிருந்த சக்தி எத்தகையது? இயந்திரங்களை ஒருவித சக்தி இயக்குகிறதே அந்த சக்திக்கும், மனித உடலை இயக்கும் சக்திக்கும் என்ன வித்தியாசம்? அதுமுன்பே உள்ளதா? உடல் அழிந்தபின் அது அழியுமா? நிலைக்குமாயின், உடலை பிரிந்தபின் அதன் நிலை என்ன? இக்கேள்விகளுக்கு விடையாக அமைவது "ஆன்மா". அது கண்ணுக்கு புலப்படாதது. ஆன்மா இறைவனால் படைக்கப்பட்டவை அல்ல. அது என்றும் உள்ளது. அவைகள் இறைவனை போல அநாதியாக உள்ளது. அவை தத்தம் பிறவிகளில் செய்த கர்மவினைக்கு தக்கபடி மாறுபட்டு உடலை பற்றி நிற்கும். ஆணவம் என்றும் உலகம் உற்பத்திக்கும், ஒடுக்கத்துக்கும் மூலகாரணமான பொருள் மாயை என்பதும் ஆகும். இது இருபகுதியாக ம + யா = எனவும், மா என்றால் ஒடுக்கம், யா என்றால் விரிவு என்பதாக பொருள். ஆன்மாவுக்கு மாயை ஒரு பாசமாகும். ஆன்மா உடலோடு சேர்ந்தபின்புதான் அதற்கு அறிவு ஏற்படும். அதற்கு முன் அது அறிவற்று கிடக்கும். ஆன்மாவுக்கு அறிவு பெற துணை செய்யும். மாயை "பாசம்" எனப்படுகிறது. வண்டியில்கட்டிய குதிரையைப்போல ஆன்மா சரீரத்தில் கட்டுப்பட்டு நிற்கிறது. காண்பது கண் அல்ல, கண்ணை கருவியாக கொண்டு காண்பது ஆன்மா. பேசுவது நாக்கல்ல, அதனை கருவியாக கொண்டு பேசுவது ஆன்மா. மனம் ஆன்மா அல்ல, இதை எண்ணுவேன் என எண்ணுவதும், மனதை அடக்குவதும் ஆன்மா, பரசிவத்தை கண்டு ஆனந்தம் கொள்வதும் ஆன்மா. எனவே சரீரம் வேறு, ஆன்மா வேறு, ஆன்மா சிவம் எனவும், அது அற்றநிலையில் சரீரம், சவம் எனவும் கூறப்படுகிறது. பிரபஞ்சமனைத்தும் ஜடம் என முன்பார்த்தோம். சத்து என்பது வாக்குக்கும், மனதுக்கும் எட்டதவனாய் நிற்கும். சிவம் சத்து ஆகும். சத்தாகிய சிவம், அசத்தாகிய பாசம், அறிவற்ற சடமாதலின் ஆன்மா தனித்து நிற்பதில்லை. ஏதாவது ஒன்றை சார்ந்திருக்கும். பெத்த நிலை எனும் கட்டுண்டநிலையில் ஆணவத்தைச்சார்ந்து நிற்கும். முக்திநிலை எனும் கட்டு (தளை) நீங்கிய நிலையில் சிவத்தைச்சார்ந்து நிற்கும். மும்மலமாகிய ஆணவம் அசத்து. அதனை ஆன்மா சாரும் போது அசத்தாகி நிற்கும். சிவம் சத்து. சிவனை சாரும் போது ஆன்மாவும் சத்தாகி நிற்கிறது. எனவே ஆன்மா அசத்தாகவும், சத்தாகவும் எப்படி சார்ந்ததின் வண்ணமாக ஸ்படிகம் போல இருப்பதால் சதசத்து என்று பெயர் கொண்டது. பளிங்கு

எந்நிறத்திற்கு பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கிறதோ அப்பொருளின்நிறத்தைக்காட்டும். தத்துவங்களை ஜடமென்று அறிந்து, ஆன்மா அதனின்று நீங்கி, அறிவாகிய தானே. முதலென்று நிற்றல். "ஆன்மரூபம்" ஆகும்.

5. ஆன்மதரிசனம்

குருவாகிய ஞானாசாரியார் வாயிலாக ஆன்மா திருவருளை தரிசித்து, அந்த திருவருள் துணையுடன்தான் தத்துவங்களுக்கு மேலான சிவரூபமாக (தத்வாதீதம்) நிற்றல், அதனால் ஆன்மாவானது தனக்கு உயிராக உள்ளது. "திருவருள்" என்பதை அறிந்து நிற்பது (காண்பது). "**ஆன்மதரிசனம்**" ஆகும். (உ-ம்) பாண்டியநாட்டு முதலமைச்சராகிய வாதவூரர் குதிரைவாங்க வந்தபோது திருப்பெருந்துறையில் ஞானாசிரியர் வாயிலாக உணர்ந்து, பிரபஞ்சமாயையில் விடுபட்டு, உயிருக்குள் ஜீவனாக இருப்பது திருவருள் (சிவன்) என்பதை உணர்ந்தநிலை. இதுவே ஆன்மதரிசனம் என்று அறிக. **அந்தணனாவதுங் காட்டி வந்தாண்டாய் ஆரமுதே! (திருவாசகம் 373) என் வினை ஒத்தபின் கணக்கிலா திருக்கோலம் நீ வந்து காட்டினாய் (திருவாசகம் 466).** இவ்வாறு திருவாசகத்தால் **ஆன்மதரிசனம்** பெறுவது ஞானத்தில் **சரியை,** கேட்டல் ஞானம் ஆகும். இது பிண்டமாகிய சரீரத்தில் ஞானத்தை அறிவதால் ஞானதரிசனம் என்றும் பெயருடையதாகும். மேலும் திருவாசகத்தில்,

முக்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்து பழவினைகள் மாளும்வண்ணம்
சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனைஆண்ட
அத்தன் எனக்கருளியவர் யார் பெருவார் அச்சோவே! (திருவாசகம் 648)

ஸதசத்து ஆன ஆன்மா என்பது "அறிவிக்கஅறியும்" இயல்புடையது. ஆன்மாவின் செய்தி எந்த இடத்திலும் தோன்றாமல், தத்துவ தாத்வீகங்களை "எனது" என்றும், பசுஞானத்தை "நான்" என்று நின்ற "அசத்யபோதம்" நீங்கி பழைய சிற்றறிவாகி "சுட்டுபோதமும்" வெளியேறி நிற்பது "**ஆன்மதரிசனம்**" எனப்படுவதாகும். **நீயும் நின் செயல் ஒன்று இன்றி நிற்றலே தரிசனம்தான். என்பது உமாபதி சிவாச்சார்யரின் உண்மைநெறி விளக்கம்.** பசுஞானமே ஆன்மதரிசனத்தை அறியும் அறிவாகும். இவ்விதமாக ஐந்தாம் காரியம் விளக்கப்பட்டது.

6. ஆன்மசுத்தி

சிவபெருமான் ஆச்சார்யராக, குருவாக வந்தருளி உபதேசிக்க, ஆன்மா அதனைக்கேட்டு, பின்சிந்தித்து, ஐம்பொறிகளால் வளர்ந்ததன் இழிநிலையைநீக்க, சுத்திசெய்ய உணர்த்துவதாகும்.

ஐம்புல வேடரினயரந்தனை வளர்ந்தெனத்
தம் முதல் குருவு மாய் தவத்தினிதலுணர்த்த விட்
டணீணிய மின்மையிளரன் சுழல் செலுமே. (சிவஞானபோதம் சூத்திரம்-8)

மேலும், ஊனக்கண் பாசமுணரா பதியை
ஞானக்கண்ணினில் சிந்தை நாடி
யுராந்துனைத் தேர்த்தெனப் பாசமொருவைத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ்செழுத்தே. (சிவஞானபோதம் சூத்-9)

ஒரு அரசகுமாரன் (ஆன்மா) காட்டில் ஐந்து வேடர்களிடம் வளர்ந்து வருகிறான். அவனோ தான் அரசனுடைய குமாரன் எனும் உண்மைநிலையை உணராமல் வேடர்மகன் போல இருக்கிறான். அதற்கு அவன் அறியாமையே காரணம். பின்னர் அந்த அரசகுமாரன் தந்தை (சிவன்) அவ்வேடர்களிடத்தில் வந்து அவன் "என் மகன்" என்று உண்மையைக்கூறி அறியாமையை அகற்றி அவனை ஐந்து வேடர்களிடமிருந்து (ஆன்மதரிசனம்) மீட்டு, தனது அரச பெருஞ்செல்வத்தை (சிவதரிசனம்) தந்து தானாக்கி பேணினான். இதில் அரசன் = சிவம், அரசகுமாரன் = ஆன்மா, ஐந்து வேடர்கள் = ஐம்பொறிகளின் சுகதுக்கம், இறப்பு & பிறப்பு = அறியாமை, அகற்றுதல் = மலநீக்கம், மலரடிவைத்தல் = அரசனாக்குதல் எனும் ஆன்மசுத்தியே ஆகும். "தான் பணிணை நீத்தலே ஆன்மசுத்தி" (சிவப்பிரகாசம்) ஆன்மசுத்தியாகியதான், பணி நீக்கி, நின்றதால் பாசம் அழிந்தது. சிவதரிசனத்தில் நிகழும் ஆன்மசுத்தியாகும். இவ்வாறு பக்குவமடைந்த ஆன்மா சிவன் திருவடியை அடையும்பொருட்டு நினைத்தமாத்திரத்தில் நிகழும், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், என்னும் மூன்று முறைப்படியான நிலையில் நிகழும். எனவே சிவரூபத்தில் நிகழும் ஆன்மதரிசனத்துக்குப்பின் சிவதரிசனத்தில் நிகழும் ஆன்மசுத்தி என கொள்ளலாம். ஆன்மசுத்தி பெற ஸ்ரீபஞ்சாக்ஷரம் ஆகிய திருவைந்தெழுத்து மலநாசம் செய்யும் என 9ம் சூத்ரம் கூறுகிறது. சூரியகிரணத்தைப் பார்த்த கண் சூரியன் ஆகாது. அதுபோல திருவருளை சேர்ந்த ஆன்மா அத்திருவருள் செய்யும் பஞ்சகிருத்தியங்களை செய்யவேண்டும் என எண்ணுதல் கூடாது என்று உணர்வதும் ஆன்மசுத்தியாம். இதுவே சிவஞானதீக்ஷையின் முக்கியநிலையாகும்.

7. சிவரூபம்

எவ்வடிவுகளும் தானாய், எழிற்பரை வடிவதாகி,
கௌவிய மலத்(து) ஆன்மாவைக் கருதியே ஒடுக்கி ஆக்கிப்
பௌவம் விண்டகலப் பண்ணிப் பாரிப்பான் ஒருவன் என்று
செவ்வையே உயிரின் காண்டல், சிவரூபம் ஆகும் அன்றே.

(உமாபதி சிவாச்சாரியார் - உண்மைநெறிவிளக்கம்)

பிரபஞ்சத்தில், அசையும்பொருள், அசையாப்பொருள் எல்லாம்: தானே நின்று பொருந்தி (ஒன்றாதல்) பெருமைமிகுந்த காருண்யசக்தியே. அதற்கு திருமேனியாகி ஆணவமலம் பெற்ற ஆன்மாக்கள் பாகபேதங்களை திருவுளத்துக்கொண்டு தனது இச்சா, ஞான, கிரியாவினால் மாயாதத்துவங்களை ஆக்கல் என்ற சிருஷ்டியையும், காத்தல் என்ற ஸ்திதியையும், அழித்தல் என்ற சம்ஹாரத்தையும், மலபரிபாகத்தில் இவை வேறாகும்படி சத்திநிபாதத்தின்வழியாக, புறத்தே கட்புலனுக்குத்தோன்ற, மானிடஉடல்தாங்கி, வந்தருளி, தான் வேறற நிற்கிற முறையை தருகிறவன் ஆன்மாகளுக்கெல்லாம் அறிவுக்கறிவாய் நிற்கிற சிவனே சிவரூபமாகும். ஆணவ-மலத்தில் அமுந்திகிடக்கும் ஆன்மாவை சிவன் பஞ்சகிருத்தியங்களால் மலநீக்கம் செய்து, ஞானத்தில் வடிவாய் இருப்பது என்பதை அறிதலே சிவரூபம் ஆகும். இதற்கு சான்று, "ததாலயஸ்த மாத்மாநம் சிவரூபம் விசிந்தயேத்" (வாதுளாகமம்). மேலும், "தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்" (திருமூலர், திருமந்திரம்). "தேகமாகிய சிவாலயத்தின் கண்ணே ஆன்மாவை சிவலிங்க வடிவாக கொண்டு பூஜிக்க" என்கிறது திருமந்திரம்.

8. சிவ தரிசனம்

குருவாகிய ஆச்சார்யமூர்த்தியின் அனுக்ரஹஞானத்தால் சிவனது திருவடியைப் பற்றி ஞானம் பிரகாசிப்பது சிவதரிசனம். அவன் அருளாலே அவன்தாள் வணங்கி (திருவாசகம்) இறைவனை தரிசிக்க இறைவனின் அருள்தேவை என்கிறது திருவாசகம். தன்னை உணர்த்தும் பகுதியாக, பொருள்போகங்களை, அவன், அவள், அதுவாய், பார்க்குமிடமெல்லாம் அவனது திருவருளே எனக்கண்டு அனுபவிப்பது சிவனது தரிசனம் என்பதாகும்.

ஊனக்கண் பாசம் உணரா பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
யுராத்துனைத்தேர்த்தெனப் பாசமொருவைத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணும் ஐந்தெழுத்தே. (சிவஞானபோதம் சூத்திரம் 9)

ஆன்மாவாகிய அறிவியே சிவத்தை ஞானக்கண்ணினால் கண்டு, நிலையற்ற பிரபஞ்ச-வாழ்வை (பிருதிவி முதல் நாதம் முடிய)விட்டு, சிவனது திருவடியே அடைந்து, பஞ்சாக்ஷரம் மந்திரத்தை விதிப்படிஜபிக்கும். பஞ்சாக்ஷர ஜபம் வாசனாமலத்தை போக்கவல்லது "பாசக்ஷயம்" செய்யும். கேவல அவஸ்தை என்பது சகலஅவஸ்தைகளையுமம் நீங்கி நிற்கும் ஆன்மாவுக்கு தரிசனமாக நிற்கும் ஞானமே சிவதரிசனம் ஆகும். சிவதரிசனம் ஞானநெறியின் முதற்படியாகும். சகலாஅவஸ்தை என்பது நான், எனது என்னும் தன்மை ஆகிய பிருதிவி முதல் நாதமுடிய உள்ள அவஸ்தைகள் கேவலாஸ்வதை என்பது மேற்கூறிய சகலாவஸ்தை நீங்கினாலும், ஆன்மா தனதுசகஜநிலையில் இருக்கும் அதுவே கேவலாஸ்தை. அது அசுத்தமாயையில் உறைந்து, சிருஷ்டி வரையில் ஆணவமலத்தால்

மறைக்கப்படுகிறது. இருவினை ஒப்பு (நல்வினை, தீவனை) மலபரிபாகம் (ஆணவம், கனமம், மாயை) சத்திநிபாதம் ஆகியவை நடந்து இறைவன் குருவடிவாய், லிங்கவடிவாய், சங்கமவடிவாய், அனுக்ரஹ ஞானத்தை தருவதும் சிவதரிசனம். சிவபெருமான் மூவகை ஆன்மாக்களின் தன்மைக்கு ஏற்றபடி அருள்புரிவார். ஆவணமலம் மட்டும் உடைய ஆன்மா "விஞ்ஞானகலர்" இவ்வான்மாவுக்கு அறிவுக்கு அறிவாய் இருந்து ஞானத்தை உபதேசிப்பார். ஆணவமலம், கன்மமலம் இரண்டும் உடைய ஆன்மா பிரளயாகலர், மூன்று கண்கள், நான்கு கரங்கள் வடிவாக குருவாக வருகைதந்து ஞானத்தை உபதேசிப்பார். ஆணவ மலம், கன்மமலம், மாயாமலம் ஆகிய மூன்றும் உடைய ஆன்மா சகலர். இருக்கு மனிதவடிவாய் குருவாய் வந்து ஞானத்தை தருவார். இவ்வாறு முப்பத்தாறு தத்துவங்களை அறிவித்தும், காட்டியும், இவைகளிலிருந்து விடுபட்டு சிவதரிசனம் பெற்ற ஆன்மாக்கள் ஆகிய நம் சமய நாயன்மார்கள் சிலரை இங்கே குறிப்பிடுவோம். சிவதரிசனம் பெற்ற அடியார்கள் பெரியபுராணம் சுந்தரரில் தொடங்கும், சிவாசாரியார் பரம்பரையில் வந்துஉதித்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஞானேந்திரியமான (கண்) "கண்" எனும் கருவி, அதன்வழியாக பார்த்த பொருளே காரணமாகிறது. கண் ஒளி பொருந்தியது. விட்டில்பூச்சி அது விளக்கு ஒளியால் வீழ்கிறது. சுந்தரர் கண்களால், கயிலையில் இருபெண்களை பார்த்த காரணத்தால் பூலோகம் அடைந்து, வினைதுய்த்து, பின்னர் பார்த்த ஊனக்கண்கள் நீங்கப்பெற்று மீண்டும் ஞானக்கண்களை, அடைந்து சிவதரிசனம் கண்டார். மேலும், கண்ணப்பநாயனார், கண்ணை அப்பியதால் அனுக்ரஹஞானம் பெற்று சிவதரிசனம் கண்டார். பிருதிவியாகிய கல்லை, கருவிமலராக்கி பூசித்த, சாக்கியநாயனாரும் பிட்டுக்கு மண் சுமந்து அதனை கருவியாக்கி மணிவாசகர் பெருமையை உலகுக்கு உணர்த்தியது இறைவன் திருவிளையாடலாகிய சிவதரிசனமாகும். அப்புவாகிய நீர் இதனை காரணமாக்கி திருவிளக்கு போட ஒரு சமயம் எண்ணை கிடைக்காதபடியால் நீரை விளக்கிலிட்டு எரித்தவர் நமிநந்தி அடிகள் ஆகிய நாயன்மார். இதனை "நாதர் அருளால் திருவிளக்கு நீரால் எரித்தார் நாடறிய" என்கிறது பெரியபுராணம். தேயுவாகிய நெருப்பு (அக்னி) சோமாசிமாற நாயனார் தனது சோமயாகத்தில் சுந்தரர் துணையாலும் சிவதரிசனம் கண்டார். அப்பூதிஅடிகளும் வேள்வி செய்து சிவதரிசனம் பெற்றார் என்பதை அவர் வரலாறு "அஞ்சிப்போய் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி" (அப்பர் தேவாரம்) என நாவுக்கரசர் அப்பூதிஅடிகள் வேள்வி செய்தும் உய்ந்ததை கூறுகிறார். வாயுவாகிய (காற்று) காரணப்பொருள் "குங்கிலிய கலையநாயனார்" - தூபம்இட குங்கிலியம் சமர்ப்பித்து உய்ந்து சிவதரிசனம் கண்டார். மேலும், திருநீலநக்க நாயனார் சிவபூஜையில், சிலந்திவிழ, வாயுவாகிய, "காற்றை" வாயால் ஊதிய அவர் மனைவியால் சிவதரிசனம் கண்டவர். ஆகாயம் "சப்தரூபமாக உள்ள (மந்திரஒலி) ஒலியினால் "ருத்ரபசுபதி நாயனார்" ஸ்ருதியாகிய வேதஸ்மிருதியை "ருத்ரபாராயணம்" செய்து சிவதரிசனம் கண்டார். மேலும், ஜிஹ்வாதத்துவமான நாக்கு = திருநாவுக்கரசு சுவாமிகள் என்னும் பெயரில் உள்ள நாவு என்பதனை இறைவனே "நாவுக்கு அரசு" என்று கூறினார். இவர் பெருமைமிக்க தொண்டு நிலையில், சிவதரிசனம் கண்டார். நாக்கு =

ரஸதன்மாத்திரையாகிய, ருசியாகிய, சுவைத்தல் செயலைக்கொண்டது. "மீன் தூண்டிலில் உள்ள சிறியபுழு, மீனுக்கு இறையாகும். "அதிபத்தநாயனார்" மீனவர்குலத்தில் பிறந்து, தினம் ஒருமீனை இறைவனுக்கு, சமர்ப்பித்து, சிவதரிசனம் கண்டவர். மூக்கு = கந்தம் வாசனையை அறியும் தன்மாத்திரை உடையது. வண்டு மலரின் மணத்தால் ஈர்க்கப்பட்டு தேன் குடிக்க அதனுள் வீழ்ந்து அழிகிறது. "செருத்துணை நாயனார்" தான் இறைவனுக்கு பூஜிக்கக் கொண்டுவந்த மலரை, பல்லவ அரசியார் மூக்கால்முகர்ந்தபடியால், அரசி என்றும் பாராமல் மூக்கை அறிந்தார். இப்பக்குவத்தால் சிவதரிசனம் பெற்றார். அதனினும்மேலாக, முகர்ந்த மூக்கைவிட, பூவைஎடுத்த கைக்கு, முதல் தண்டனை தரவேண்டுமென்று வாளால் அரசி, கையை வெட்டிய சுழற்சிங்க நாயனாரும் சிவதரிசனம் பெற்றவர்கள் ஆவார். சந்தனம் என்பது ஒருவாசனைப்பொருள். அதனை தினமும் ஆலயத்திற்கு அரைத்துக்கொடுத்துவந்த நாயன்மார், அதுவே ஒரு காரணப்பொருளாய் இறைவன் திருவிளையாடலால் தனது கையை சந்தனக்-கல்லில் அரைத்து சிவதரிசனம் பெற்றவர் மதுரை மூர்த்தி நாயனார். காது = இந்த கருவி சப்தத்தை தன்மாத்ரைகளாக கொண்டது. மானை பிடிக்க வேடர்கள் கொம்புவாத்தியம் ஊதுவார்கள். அந்த சப்தத்தில் மயங்கி ஓடாமல் நின்ற மானை பிடிப்பார்கள். உமையம்மையிடம் ஞானப்பால் அருந்திய திருஞானசம்பந்தர் சுவாமிகள், இறைவனை ஞானத்தால் தரிசனம் செய்த நிலையை, தனது தந்தையார் சிவபாத ஹ்ருதயருக்கு, சுட்டிகாட்டி முதல் வார்த்தை "தோடுடைய செவியன்" என தொடங்கிபாடி அருள்பெற்றார். பெரியபுராணத்தில், சுந்தரர் வரலாற்றில், ஒரு நயமாக காதை சேக்கிழார் பெருமான் பாடலில் கூறுவார். சுந்தரர் அவதார நாடான திருமுனைப்பாடி நாட்டுவளம் பற்றி கூறும் போது: "செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடிநாடே" என்பது வயலில் இறை தேடி மீன்கள் அழும் என்பதை நயமாக, சுந்தரர் கண் காரணமாக பூலோகத்துக்கு வந்தாலும் அவர் பாடப்போகிற தேவாரங்களை "காது" தான் கேட்கப்போகிறது என்று கண்கள் அழுதது என உவமேயமாக மீன்கள் அழுவதாக கூறுவார். உடம்பு (மெய்) ஸ்பரிசம் என்ற தன்மாத்ரை கொண்டது. "காட்டில் யானையை பிடிக்க, பழக்கிய யானையை பயன்படுத்துவர். அது ஒருயானையை இன்னொருயானை உரசிவசப்படுத்தும். மெய்பொருள் நாயனார் போலி சிவவேடம் போட்ட முத்தநாதனை எதிரி என்று அறியாமல் பணிந்து வணங்கினார். வஞ்சகனான முத்தநாதன் மெய்பொருள்நாயனாரை போரில் வென்றான். இறைவன் தோன்றிஉண்மையை புலப்படுத்தினார். அவரும் சிவதரிசனம் கண்டார். சிறுதொண்ட நாயனார் வாழ்வில் இறைவன், சிவனடியார்வேடத்தில் வந்து, பிள்ளைக்கறி கேட்டார். சிறுதொண்டர் தன்மகனையே கறியாக்கி, உணவு படைத்தார். இப்பக்குவத்தினால் சிவதரிசனம் பெற்றார். ஏனாதிநாயனார் போரில் அதிசூரன் என்பவர் போலி சிவவேடம் தரித்து போரிட்டான். சிவத்தொண்டர் என பணிந்தார். அவரது பக்தியை வெளிபடுத்த சிவபெருமான் தரிசனம் தந்தார். அகப்பூசை செய்து சிவதரிசனம் பெற்றவர், மயிலை வாயிலார்நாயனார், ஆன்மார்த்த பூஜையை தினமும் தவறாமல் செய்தவர், சிவதரிசனம் கண்டார். மனம்: மனக்கோயில்கட்டி, கும்பாபிஷேகம்செய்து, சிவதரிசனம் பெற்றவர்,

பூசலார்நாயனார். சில நாயன்மார்களின் வரலாறுகளே இங்கு சிவதரிசனத்திற்கு உதாரணமாக கூறப்பட்டது. ஆனால் ஒவ்வொரு நாயன்மார் வரலாற்றிலும் இதுபோன்று மனப்பக்குவ நிலைகள் உண்டு. எனவே 36கருவி-களாகிய தத்துவங்களின் சகலாவஸ்தை நீங்கி, கேவலாவஸ்தை தன்மை நீங்கி "சிவதரிசனம்" ஆகிய ஞானம் தருவது சிவஞான தீக்ஷையின் சிவதரிசனம் ஆகும்.

9. சிவயோகம்

ஞானயோகமாகிய தெளிவுபெறுதல் சிவயோகம் ஆகும். ஆன்மா திருவருளோடு அழுந்தாது சேர்ந்து அருளாய் நிற்றல் சிவயோகம் எனப்படும். அவனே தானே யாகி அவன்றெி ஏகநாகி இறைபணி நிற்க. (சிவஞானபோதம்). சாதனத்தின் பயன் சிவப்பேறு ஆகும். பஞ்சாக்ஷரஜபத்தால் ஏற்படும் ஆன்மசுத்தியே பாசங்களை நீக்குகிறது. ஆன்மத்தெளிவு ஏற்படுகிறது. "தேற்றனே தேற்ற தெளிவே என் சிந்தனையுள் ஊற்றனே உண்ணாரமுதே உடையான" (திருவாசகம்) "நாழி உப்பு நாழி ஆவது போல்" தண்ணீரில் கரைந்த உப்பு தண்ணீராக மாறுவது போல, ஆன்மா சிவத்தில் கரைகிறது. முக்திநிலையில் ஆன்மா சிவனேயாய் ஒற்றுமைப்பட்டு, இறைபணியில் நிற்றல் ஆகும். சிவதீக்ஷைபெற்ற சிவாசாரியர்கள் சிவபூஜையின் போது, பூதசுத்தியில் பஞ்சசுத்தி செய்து, அந்தர்யாகத்தில், சிவயோகத்தில் திளைத்து, அந்தஒளியில் ஒலியானது இரண்டற கலக்காமல் அவனே தானே ஆகி, பின்னர் உலகத்தவருக்காக இறைவனை பிரதிஷ்டை செய்ய இறைபணியில் நிற்றலாகிறநிலை ஏற்படும். சிவாசாரியார் சிரோவஸ்திரம் தரிப்பது என்பது, ஒளியும் ஒலியும் (நாதம், விந்து) கலந்துவிடாமல் தனித்து அருள்வடிவாக நிற்றல் நிலை எய்தவும், "சிவயோகம்" பூதசுத்தி ஏற்படுகிறது. தன்ந ரூபைக நிஷ்டத்வாத் சட்சுஸ் தைஜஸ மிந்திரியம். (பௌஷ்கரம்) என்ற பௌஷ்கராகம வசனத்தால் கண்ணுக்கு ஒளிஉண்டு என அறியலாம்.

சகமார்க்கம் புலனொடுத்தித் தடுத்துவளி
இரண்டும் சலிப்பற்று முச்சதுர முதலாதாரங்கள்
அகமார்க்க மறிந்த வற்றின் அரும் பொருள்களுணர்ந்தங்
கணைந்து போய் மேலே நின் அலர் மதி மண்டலத்தின்
முகமார்க்க அழுது உடல் முட்டத் தேக்கி
முகச் சோதி நினைந்திருத்தன் முதலாக வினைகள்
உகமார்க்க வட்டாங்க யோக முற்று
முழத்துலுழந்தவர் சிவன் தன் உருவத்தை பெறுவர்.

(சிவஞானசித்தியர் பாடல் 273)

சிவயோகமாவது ஐம்பொறிகளையும் ஒடுக்கி, சுவாசத்தை நிலைநிறுத்தி, மனதை ஒருவழி- படுத்தி, உடம்பினுள் ஆறுஅதாரங்களையும் தரிசித்து, ஆன்மா ஆறுஆதாரங்களுக்கு மேல்-சென்று, பிரம்மரந்திரத்தில் ஒழுகும் அமிர்ததாரையில் உடம்பு

நிலைத்திருக்க, தான் பூரண பிரகாசஒளி நிலையான சிவஜோதியைக்கண்டு, அஷ்டாங்கயோகம் கூடி, சமாதிநிலையை அடைந்து ஆனந்தித்திருப்பது சிவயோகம் ஆகும். சகமார்க்க நெறியாளராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் யோகநிலையில் ஞானத்தை அடைந்தார். அந்த அனுபவத்தை அவரது தோவரத்திலிருந்தே அறியலாம்.

தேடுவன் தேடுவன் செம்மலர்ப்பாதங்கள் நாடொறும் (நாள்தோறும்)
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலே ஓர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன் கைபிடித்து மகிழ்ந்துளே
ஆடவன் ஆடுவன் ஆமாத்தூர் எம் அடிகளே (சுந்தரர் தேவாரம்)

மேலும் பூதசுத்தி அந்தர்யாகத்தை சுந்தரர் அனுபூதிநிலையில் கூறுகிறார். அதாவது,

ஊனுடை யிவ்வுடல் மொடுங்கிப் புகுந்தான் பரந்தான்
நானுடை மாடுடம்பிரான் நண்ணுமூர் நனி புள்ளிதே (சுந்தரர்)

இது சுந்தரரின் சிவபோக அனுபூதிநிலையாகும் என்று இங்கு உணரத்தக்கது. இந்நிலையை கோபாலகிருஷ்ணபாரதியார், நந்தன் சரித்திரத்தில் திருநாளைப்போவார் தனது முதலாளி அய்யனுக்கு, கூறுவது போல் கூறுகிறார்.

வாசியாலே மூலக்கனல் வீசியே
சுழன்று வர பூஜைப் புண்ணிப் பணிந்திடும்
மாசரக்குண்டல் இருக்கு ஆற்றுமே
மேல் ஓட்டுமே வழிகாட்டுமே, ஐயே! மெத்த கடினம்.

இதன் பொருள் : மூலதாரத்தில் உள்ள (சூரியமண்டலம்) மூலக்கனலை மூச்சுக்காற்றால் (வாசியாலே) மேலே கொண்டு போய், அக்னிமண்டலம் (ஜடராக்னி) (வயிறு) பூஜை செய்து மேலே போகும் ஒலியானது சந்திரமண்டலத்தில் அமிர்தம் பொங்கும் (மேலே ஒட்டி வழிகாட்டும்) அவரே தொடர்ந்து பாடுகிறார்.

சங்கை அறவே நின்று பொங்கி வரும் பாலுண்டு,
அங்கம் இளைப்பாறிக் கொண்டு, தங்கபொம்மை
போல நில்லுமே! யாது வெல்லுமே!
அங்கே செல்லுமே! இது அய்யே! மெத்த கடினம்.

சங்கை = எண்ணிக்கை அற்று மூலக்கனல் வீசியதால் பொங்கிய அமிர்ததாரையை பருகி ஒளியாகி தங்கபொம்மை சிவஒளியில் செலுத்துதல் சிவயோகமாம் என்று ஞானிகள் தம்முள்ளே அனுபவிக்கும் சிவானந்த பெருவெள்ளம் பருகி நிஷ்டை கூடிநிற்பர். அவர்களில் சிலர் 1000 ஆண்டுகள்கூட நிஷ்டையில் இருப்பார்கள். எடுத்துக்காட்டு திருமூலர் ஆவார்.

10. சிவபோகம்

"தேஹ பரதே சிவாநந்தம் சிவைகரஸதாம் வ்ரஜேத்" (ரௌரவ ஆகமம்) இதன் பொருள் = தேஹவியோககாலத்தில், ஆன்மா சிவானந்தத்தோடு சிவரஸத்தை அடைக" என்பதாம்.

காணும் கண்ணுக்கு காட்டும் உளம்போல்
காண உள்ளத்தை கண்டு காட்டலில்

அயரா அன்பின் அரன் கழல் செல்லுமே (சிவஞானபோதம் 11ம் சூத்திரம்) சிவயோகத்தில் ஆன்மா அருளால் நிற்கும்போது, அதற்கு மேலாக ஞேயம் (காட்சி) தோன்றும். அந்த காட்சியில் பொருந்தி, தான் தோன்றாமல் இரண்டறக்கலந்து நிற்பது சிவயோகம். இது ஞானத்தின் ஞானநிலை. இது சமாதி, பரமுக்திநிலையை ஆன்மா அடையும். இதுவே லாபம் ஆகும். "முடிவிலாத சிவபோக முதிர்ந்து முறிகி விளைந்ததால்" (சுந்தர் தேவாரம்) (பொருள்) பரம்பொருளாகிய சிவபெருமானை தனக்கு முடிவில்லாத சிவபோகமானது விளைந்ததால் அவர் சிவனோடு கலந்து பேரின்ப பெருவெள்ளத்தில் திளைத்தார் என்பது விளங்குகிறது. அவர் சிவஆக்ஞையை தன்சிரத்தின்மேல்வைத்து, சிவபெருமான் உளப்பாங்கின்படி சிவத்தொண்டுகள் செய்தார் என்பதும், குண்டையூர்கிழாரிடம் நெல்லுபெற்று சிவதருமங்கள் செய்தார் என்பதும், திருவஞ்சைகளத்தில் சிவபெருமானில் ஆட்கொண்டு, சிவயோகத்தில் திளைத்து, தம்முடன் சேரமான்பெருமானையும் சேர்த்து, கயிலாயத்திற்கு செல்ல, குதிரைக்கு காதில் பஞ்சாக்ஷரம் (ஜெபம்) கூறியமையால், பஞ்சாக்ஷரஜபம் கர்மவினைகள் ஒழிந்துவிடும் என்பதையும், சிவபூஜையும், சிவயோகத்தையும், சிவபோகத்தையும்தரும் என்பதையும் உணர்த்துகிறார். நிறைவாக, ரௌரவாகம 12ம்சூத்திரம் ஆன்மா பயனடைதல் பற்றி கூறியதை காண்போம்.

முக்தியை பிராப்ய ஸதஸ் தேஷாம் பஜேத் வேஷம் சிவாலயம்.
ஏவம் வித்யாத் சிவஞான போதே சைவார்த்த நிர்ணயம் (ரௌரவாகமம்)

முக்திநிலையாகிய சிவபோகத்தை மெய்அடியவர்கள் அடைந்து, அவர்கள் வேடமாகிய விபூதி-தாரணம், ருத்ராக்ஷதாரணம் போன்ற ஐந்து சைவபூஷணங்களையும், சிவாலயத்தையும், சிவமெனக்கொண்டு வழிபடவேண்டும். சைவஆகமங்களில் ஆங்காங்கு கூறப்படுகின்ற பதி, பசு, பாசம் எனும் முப்பொருளின் தடஸ்தசொரூபநிலை லக்ஷணங்களை, மாறுபாடுஇல்லாமல், அதன்பொருளைஉணர்ந்து, சிவஞானதீக்ஷையாகிய இப்போதத்தால் அறியலாம். இதனை ஞானசம்பந்தரின், முக்திதலமாகிய, நல்லூர்பெருமணம் என்ற ஆச்சாள்புரம் தலபுராணம், நமக்கு ஒரு நிகழ்வாக தெரிவிக்கிறது. ஞானசம்பந்தர் சிவபக்தர்களுடன் அங்கே இறைவனுடன் இரண்டற கலக்கும் முக்தியை அடைய சிவபக்தர் அனைவரும் ஆலயத்தில் இருந்தபோது, அன்று அவ்வூரில் வசித்த ஒரு பெண்ணாகிய சிறந்தபக்தை, சிவபெருமானிடம் தினமும் ஆலய வழிபாடு செய்து வருபவள், அன்று

வீட்டுவிலக்கு 4ம்நாள் காரணமாக ஆலயம் வர-முடியவில்லை. "மற்றவர்களுக்கு கிடைக்கப்போகும் முக்தி தனக்கு கிடைக்கவில்லையே" என சிவபெருமானைத்துதித்து தனது சூழ்நிலையை கூறி மிகவும் பிரார்த்திக்க, அங்கு அவளுக்கு இருவினைஒப்பு, மலபரிபாகம் ஏற்பட்டு, சக்திநிபாதம் ஆகிய நிகழ்வு நடந்தது. அம்பாள் அப்-பெண்ணுக்கு விபூதி அளித்து, அவளையும் அன்றே முக்தி எனும் சிவபோகத்தில் சேர்த்தாள். எனவே அவ்வூர் அம்பாளுக்கு ஸ்வேத வீபூதி நாயகி என்று பெயர் (திருவெண்ணீற்றுமை) இன்றும். அம்பாள் சன்னதியில் வீபூதி தான் தருவார்கள். சக்தி ஆகிய அம்பாள் நிபாதம் ஆகிய இருவினை ஒப்பு மலபரிபாகம் நடந்த தலவரலாறு ஆகும். நமது சிவாலயங்களில் பதி மூல கருவறையில் இருப்பார். அருகில் போக சக்தி அம்பாள் இருப்பாள். பாசமாகிய திரை இருக்கும், பசுவாகிய ஆன்மவடிவாகிய நந்தியெம்பெருமான் அர்த்தமண்டபத்தில் இருப்பார். இந்த பாசத்திரையை விலக்க ஒரு சிவாச்சாரியார் ஆகிய குரு வேண்டும். அவரே குருக்கள். அவர் பாசம் ஆகிய திரையைவிலக்கி, தத்துவசுத்தி செய்து, திரைவிலக்க, இருவினைஒப்பு, மலபரிபாகம் ஏற்பட்டு போகசக்தி அம்பாளின்அருளால் சக்திநிபாதம் நிகழ்கிறது. சிவதரிசனமும், சிவபோகமும் கிடைக்கிறது. சிவஞானபோதமும் 12ம் சூத்திரத்தில் சிவந்தமலர் போன்ற பாதங்களை அறியவொட்டாது மறைக்கும் ஆணவம், கன்மம், மாயமலங்களை நீக்க, திருவைந்தெழுத்தும், (பஞ்சாக்ஷர ஜபமும்) சிவபூஜையும் அதன்பொருட்டு சிவலிங்கத்தை பூஜித்தல், சிவன்அடியவர்களையும், சிவாச்சார்யார்களையும் வழிபடுதல்வேண்டும். இதனால் அன்பேசிவம் என்ற நிலையும் ஏற்படும். எண்குணத்தையும் அடையலாம் என்பதையும் கூறுகிறது. இதனையே திருக்குறளில் திருவள்ளுவர் குறிப்பிட்டு உள்ளார். அதாவது,

கோளில் பொறியிற் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத்தலை **(9வது பாடலான கடவுள் வாழ்த்து)**

அவரது எண்குணத்தையும் முதல் எட்டுபாடல்களிலும் கூறுகிறார். அவரது எண்குணத்தை சிவாகமங்களில் காண்க என்கிறார் பரிமேலழகர் உரையில். இதனை சர்வஞானோத்தர ஆகமம்,

ஸர்வஞ்ஞதா திருப்தி ரநாதிபோத: ஸ்வதந்திரதா நித்ய மலுப்த சக்தி : .
அனந்த சக்திச்ச நிராமயாத்மா விசுத்ததேஹ: ஸ சிவத்வ மேதி. என்கிறது. இதனை, மணிவாசகரும் திருவாசகத்து சிவபுராணத்தில் சிவத்தின் எண்குணத்தை உணர்த்துகிறார். மேலும், அஷ்டலிங்கதலமும் நமக்கு இதனை உணர்த்துக்கிறது. இனி சிவபோகம் அடைவிக்கும் 8நிலையை காண்போம்.

வ. எண்.	ஆகமம்	பொருள்	திருக்குறள்	திருவாசகம்	எட்டு சம்ஹார தலம்
1.	ஸவதந்திரதா	தன்வயத்தனாதல்	ஆதிபகவன்	ஈசன் அடி போற்றி	அந்தகாசுரன் திருக்கோயிலூர்
2.	விசுத்ததேஹ:	தூயஉடம்பினனாதல்	வாலறிவன்	எந்தைஅடி போற்றி	தட்சன்சிரம் கொய்தது. திருப்பறியலூர்
3.	அநாதிபோத:	இயற்கை உணர்வினராதல்	மலர்மிசை ஏகினான்	தேசன்அடி போற்றி	கஜாஅசுரன்தோல் உரித்தது வழுவூர்
4.	சர்வக்ஞதா	முற்றும் உணர்ந்தவர்	வேண்டுதல் வேண்டாமை இலான்	சிவன்சேவடி போற்றி	ஜலந்திராசுரன் சம்ஹாரம் விற்குடி
5.	நிராமயாத்மா	இயல்பாக பாசங்கள் இல்லாதவர்	இருள்சேர் வினையும் சேராதவர்	நிமலன்அடி போற்றி	திரிபுராசுரர்களை எரித்தது திருவதிகை
6.	நித்யஅலுப்த சக்தி	பேரருள் உடையவர்	பொறிவாயில் ஐந்தவித்தான்	மன்னடி போற்றி	பிரமனின் 5-ம் தலை-கொய்தது திருக்கண்டியூர்
7.	அனந்தசக்தி	முடிவிலாஆற்றல் உடையவர்	தனக்குவமை இலாதவர்	தேவனடி போற்றி	யமனை உதைத்தது திருக்கடையூர்
8.	திருப்தி	வரம்பிலின்பம் உடையவர்	அறவாழி அந்தணர்	அருளும் மலை போற்றி	மன்மதனை எரித்தது திருக்குறுக்கை

இவ்வாறு சிவபோகம்என்பது, சுத்தநிலையில் ஆன்மாவிற்கு எட்டுகுணநிலையை அடைய செய்யும். நாம் இந்த சிவஞானதீக்ஷையை பெற்று வேதசிவாகமநெறியில் நின்று, ஆன்மார்த்த பராத்த பூஜையை செய்ய வேண்டும். ஜீவன் என்னும் ஆன்மாவை, தன்இயல்புநீங்கி, சிவம்ஆக, குருவாகிய சிவாச்சார்ய பெருமக்கள் செய்யும் திருநோக்கம் (சாட்சுஷதீக்ஷை), பரிசம் (ஸ்பரிசம் தீக்ஷை), வாக்கு (வாசிகதீக்ஷை), ஆகியன பிறவிக்கு ஏதுவாகிய பசுத்தன்மை நீங்கி, சிவத்துவம் விளங்குமாறு மும்மலமுடைய சகலராகிய நமக்கு போதித்த, சிவஞானத்தின் அனுபவமே, "சிவபோகம்" என அப்பர் சுவாமிகள் திருவாக்கால் கூறிய சமயதீக்ஷையாகிய "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்". "மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்". பின்னை அவர் ஆரூர் கேட்டாள், இது முதல்படியாகிய கேட்டல் என்றும், விசேஷதீக்ஷையாகிய "பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்". இது அடுத்த நிலையாகிய சிந்தித்தல் என்றும், நிர்வாணதீக்ஷையாகிய, "அன்னையையும் அத்தனையும்

அன்றே நீத்தார்" "அகன்றாள் அகலிடத்தார் தன் ஆசாரத்தை, இது அடுத்தநிலையாகிய தெளிதல் என்றும், "தன்னை மறந்தாள், "தன் நாமம் கெட்டாள் தலைப்பட்டால் நங்கை தலைவன் தாளே" இது (நிட்டைகூடி சிவானுபூதி பெறுதல்). இதில் நாமம் கேட்டாள் என்ற நீட்டல் சிவன் என சமயதீக்ஷையும், ஆனாள் என விசேஷதீக்ஷையும் நாமம் கெட்டாள் என்றது. ஜீவன் சிவன் என ஆனது நிர்வாணதீக்ஷையால், சிவபோகம் அடைதலாகும். இவ்வாறாக சிவபோகத்தை நாம் அறிந்து உணர்ந்திடவேண்டும். சைவசித்தாந்தத்தின் கோட்பாடுகள் 1) உள்ளது அழியாது : இல்லது தோன்றாது. 2) செய்வோனை இன்றிச் செய்வினை இல்லை. 3) சடத்திற்சித்தும் சித்திற்சடமும் தோன்றா. 4) செய்பொருள் வேறு: செயப்படுபொருள் வேறு: இரண்டும் ஒன்றாகமாட்டா. 5) சூனியத்திலிருந்து ஒன்றும் தோன்றஇயலாது. 6) சுட்டியுணரப்பெறும் பொருள்கள் அனைத்தும் அழியும். 7) நித்தப்பொருள் சுட்டியுணரப்படாது. 8) சடப்பொருள்கள் உருவம்மாறும் தன்மையன. 9) உருமாறுதலால் ஒருபொருளும் அழிவதில்லை. 10) நுண்வடிவில் உள்ளதாய். வருவவடிவில் இல்லாத ஒன்றே தோன்றும். 11) காரணப் பொருளின் தன்மையே காரியத்தில் உளதாகும். 12) தனிப்பொருள்கள் கூட்டுப்பொருள் ஆகாது. 13) பொருள்களின் ஆற்றல் அழிவதில்லை. 14) உற்பத்தி யாதற்கு முன்னும் காரியமுள்ளது. 15) மாறுப்பட்ட இரண்டு தன்மை ஒருபொருளுக்கு இயற்கையன்று. 16) அவயவப்பகுப்புடைமை காரியப்பாட்டிற்கு ஏதுவாகும். 17) அருவரும் உருவமும் தம்முள் மாறுகோள் அன்று. 18) பலவாய், ஏகதேசமாய், அநித்தமாய் உள்ளது காலம். 19) தூலமாம் உருவினுக்கு சூக்குமம் முதல். 20) சடமுகமாய்ப் பலவுமாய் உரைக்கப்படுவன எல்லாம் தோன்றி நின்று அழியும். 21) ஒலிக்கும் ஒளிக்கும் உருவம் உண்டு. 22) இயற்கைத் தன்மை என்றும் மாறாது. 23) இயற்கையின் விதிகள் எங்கும் ஒன்றும் ஒரே வகையாக இயங்கும். 24) பருப்பொருளாக இருப்பன நுண்பொருளாக ஆற்றல் மிகுதி. 26) எண்ணங்களுக்கு ஆற்றலும், பயனும்உண்டு. 27) எண்ணங்க0ளுக்கு ஏற்பப்பயன்நிகழும். 28) இடம் எல்லையற்றது. 29) காலம் முடிவில்லாதது. 30) மனம் என்பது ஒரு சடப்பொருளே. 31) ஒரு பொருள் தோற்றத்திற்கு முதல், துணை, நிமித்தம் என மூன்று காரணங்கள் உண்டு. 32) உள்பொருள் காணப்படவேண்டும் என்ற நியதி இல்லை. 33) காணப்படாத அருவப்-பொருளுக்கும் உருவம் உண்டு.

அண்ணலருளால் அருளும் இவ்வாகமம்
விண்ணிலமர் தமக்கும் விளங்கி
எண்ணில் எழுபது கோடி நூறாயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆமே. (திருமூலர்)
மழை வழங்குக மன்னவன் ஓங்குக
பிழையில் பல்வளம் எல்லாம் பிறங்குக
தழைக ஐந்தெழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதீக சைவம் பரக்கவே. (உமாபதி சிவாச்சாரியார். கோயில்புராணம்)

குறிப்பு : இதில் எடுத்தாண்ட நூல்கள் :
1) வேதம் (ஸ்ருதி வாக்யம்), 2) சிவாகமங்கள், 3) சிவானந்த போதவாசனாலங்கார தீபம் (சாம்பவி ஸ்ரீ செந்தில்நாத அய்யர்), 4) சிவஞான போதம் "மெய்கண்டார்", 5) உண்மைநெறி விளக்கம் உமாபதி சிவம், 6) திருமந்திரம், 7) திருஞானசம்பந்தர் தேவாரம், 8) அப்பர் தேவாரம், 9) சுந்தரர் தேவாரம், 10) சிவஞான சித்தியார் சுபக்கம் "திருவிளங்கம்" ஆசிரியர் உரை, 11) ஞானப்பேழைபகுதி 1 மற்றும் 2 ம.அ. ராமகிருஷ்ணன் மதுரை, 12)திருக்குறள்- திருவள்ளுவர்,

-----------*********-----------

ஓம் நமச் சண்டிகாயை

காக்கும் காளியின் காருண்ய மஹிமை

கட்டுரையாளர்
ஆகம ப்ரவீணர், வியாகரண சிரோமணி,
சைவாகமக்ஞ சூடாமணி, ஆகம அருட்செல்வர்
சிவாகம ஸார்வபௌம, சிவாகம வாசஸ்பதி
சிவஸ்ரீ. வி. சோமசேகர குருக்கள்
முதல்வர். சைவாகம கலாசார வித்யா கேந்திரம், சென்னை-1.

நவதுர்காம் மஹாகாளீம் ப்ரம்மவிஷ்ணு சிவாத்மிகாம்.
திரிகால ஞானஸம்பன்னாம் நமாமி புவனேஸ்வரீம்.
காளி! காளி! மஹாகாளி! காளிகே! பாபநாசினி! I
காளி! கராளி! நிஷ்கிராந்தே! காளிகே த்வாம் நதோஸ்மி யஹம் II

முன்னுரை :

ஸ்ரீ மாதா காளியே பரப்ரம்மஸ்வரூபிணி ஆவாள். இவளே ஆதிசக்தி. இந்த ப்ரம்மாண்ட கோளக அனைத்து உலகங்களை தோற்றுவித்தவளும், அவற்றைக்காப்பவளும், அவற்றை அவற்றின் இயல்பு நிலையில் ஒடுக்குபவளும் காளியே. இவள் சிவசக்தியே ஆவாள். தீயினில் வெப்பம் போல சிவமும் சக்தியும் பிரியாது விளங்கும். உலகம் சக்திமயமானது. இத்தகைய ஜகன்மாதாவின் கருணை அளவிடற்க்கரிய மஹிமை உடையதாகும்.

கருத்துரை : -

சக்தி நிலை : - சூரியனின் ஒளிக்கதிர்கள் போல இறைவனின் எல்லையற்ற எண்ணற்ற வல்லமையே சக்தி எனப்படுகிறது. இதனையே ஆற்றல், திறம், குணம், பண்பு என்றெல்லாம் கூறுவர். இந்த சக்தியானது எல்லா பூதங்களிலும் நிறைந்து உள்ளதை "யா தேவீ ஸர்வபூதேஷு சக்திரூபேண ஸமஸ்திதா" என்று மார்க்கண்டேய புராணம் கூறுகிறது. மேலும் இதில் தேவியின் கூற்றாக "ஏகைவாஹம் ஜகத்யத்ர த்விதீயா கா மமாபரா" என்பதனால், உலகில் அவளன்றி வேறெதுவும் இல்லை என அறியலாம். இதனை சிவாகமங்களும் விளக்குவனவாய் சக்தியின் நிலையை "ஜகத் சக்திமயம் வித்யாத் சக்திம் ப்ரேரயிதா சிவ:" என்கிறது. இவளே அனைத்திற்கும், தோற்றத்திற்கும் மூலதுணைக்காரணியாவாள். இவள் சிவனுக்கு ஞான-கிரியாத்மக தேகமாயும், கரணமாயும்

உள்ளதாக "சக்திச் சித்தனு ரீச்வரஸ்ய கரணம் ஶ்ரேயேஷுகார்யேஷுதது" என சைவ ஸித்தாந்தசாராவளி விளக்கும். இது சித்தாகவும், அசித்தாகவும் விளங்கும்.

<u>சாக்தம் :</u> - சக்தியை மேன்நிலையில் விளக்கும் நெறி சாக்தம். சக்தி ஸம்பந்தமுடையது சாக்தம். நவயாமளம் முதலான தந்த்ரநூல்கள் சாக்தாகமங்கள் எனப்படும். சக்தி ஒன்றே முடிவில் எஞ்சி நின்று, மீண்டும் படைத்து உலகுக்கு காரணமாகிறது. சக்தியே மூம்மூர்த்திகள் முதலான யாவர்க்கும் மூத்தவள் என்கிறது சாக்தம். ஸ்ரீ காளியே மஹா மஹா ப்ரம்மவித்யா ஸ்வரூபிணி ஆவாள் என்பது, சாக்தாகமங்களின் முடிவாகும். இவளே நித்யா, இவளே பூர்வஜா எனப்படுகிறாள்.

<u>சக்தி பேதம் :</u> - ஆதியும் அந்தமுமில்லாத நித்யாவாக பரப்ரம்ம ஸ்வரூபிணியாக உள்ள போதும் இவள் பக்தர்களுக்கு பக்தி சுலபாவாகவும், பலவாகவும், சூக்ஷ்மமாகவும், விச்வாத்-மகியாகவும், உலக உருவினளாகவும் குணச்சிறப்புகளால் அறியப்படுகிறாள். உருவமற்ள போதிலும், தன்னை ஆராதிக்கும் ஸாதகர்களின் உபாசனையில் அருள் புரிந்திடவே பகவதிக்கு உருவம், குணம், பெயர் முதலியன அமைகின்றன. சக்தியின் வடிவங்களான, துர்கை, லக்ஷ்மீ, சரஸ்வதீ, மாரியம்மன், காளீ போன்றவற்றில் பராசக்தி ஒன்றே பலவாய் விளங்குகிறது.

அரூபாயா: காளிகாயா: காலமாதுர் மஹாத்யுதே: I

குணக் கிரியானுரூபேண க்ரியதே ரூபகல்பனா II என்று சாக்த நூலான "மகாநிருவாணதந்த்ரம்" விளக்குகிறது. இதனையே சிவாகமம் "ஏகைவார்த்தத ஈசசக்தி ரமிதா யாஅனேகரூபா சிவா" என்றும், பேதைஸ் ஸோபஹிதா ப்ரயாதி குணதோ பேதம் க்ரியா ஞானத: என்றும் கூறும். மேலும் இதனை ஏகைவ சக்தி: பரமேச்வரஸ்ய பின்னா-சதுர்தா விநியோககாலேI போகே பவானீ அவனேது விஷ்ணு: கோபேச காளீ ஸமரேஷு துர்காII" என்று கூறுகிறது. தர்மம் தாழ்வது கண்டும், அதர்மம் மேலோங்குவது கண்டும் தேவீ கோபமடையும் பொழுதில் காளீ எனவும், துஷ்டர்களான பகைவர்களை அழித்து சிஷ்டர்களான நல்லோர்களைக் காப்பாற்றும் பொழுதில் துர்கை எனவும், அறம் காத்திட அவ்வப்பொழுது பலவாறாக, பல காலகட்டங்களிலும், பத்து அவதாரங்கள் வாயிலாகவும், உலகத்துயர் துடைத்து காத்திடும் பொழுதில் விஷ்ணு எனவும், உயிரினங்களுக்கு சுகபோக வாழ்வளித்திடுகையில் பவானீ என்றும், நால்வகையாக அழைக்கப்பட்டு போற்றப்படுகிறாள்.

தேவீ பல வடிவம் உடையவள் என்பதை, பிரம்மாண்ட புராணம் "பகுரூபா" என்கிறது. பராசக்தியே ஸர்வமங்களாவாக உலகில் எல்லாப் பொருள்களிலும் நிறைந்து அப்பொருளாகவே விளங்குகிறாள் என்றும், காணும் நிலையிலும், காணா நிலையிலும் உலகில் பரவி, அணுவிலும் அணுவாக இருந்திடுவதை ரகஸ்யத்ரயம் விளக்குகிறது.

ஸர்வஸ் யாத்யா மஹா லக்ஷ்மீ த்ரிகுணா பரமேஸ்வரீ I

லக்ஷ்யா அலக்ஷ்ய ஸ்வரூபா ஸா வ்யாப்ய க்ருத்ஸ்நம் ஸ்வயவஸ்திதா II

துர்கா சப்தசதியின் உத்தரபாகத்தில் பரதேவதை மூன்று ரூபங்களில் மஹாலக்ஷ்மியாகவும், மஹாகாளியாகவும், மஹாசரஸ்வதியாகவும், தோன்றுகிறாள் என்று கூறப்படுகிறது.

<u>திரிகுணாத்மிகாதேவீ :-</u> தேவியின் திருவுருவங்கள் யாவும் முக்குணங்களின் அடிப்படையில் மூவகையாகவும், சாந்தம், உக்ரம் என இருவகையாகயும் விளங்குவதால் அதற்கேற்ப அவளது வழிபாட்டு முறைகளும் ஸௌமியம் என்றும் ரௌத்ரம் என்றும் இருவகையாயும், முக்-குணத்தினடிப்டையில் மாறுதல்களைக் கொண்டதாயும் உள்ளன. மூத்தவளான ஆதிபராசக்தியே முக்குணங்களுக்கும் இருப்பிடமாம். ஹபபார ரூபம் அபரம் தமஸா கேவலேன ஹி" என்ற மந்திர சாஸ்திர வசனத்தின்படி, தமோகுண அம்சமாக மஹாமாயாதேவியாகத் தோன்றி, மதுகைடப அசுரர்களை விஷ்ணு அழித்திடுவதற்கு புத்திரூபமாய் இருந்து அருளினாள். இவளே மஹாமாயா என்றும், மஹாகாளீ என்றும், மஹாமாரீ என்றும் போற்றப்படுபவள். ஸத்வகுண அம்சமாகத் தோன்றி அதர்மத்தால் வெகுண்டு, சும்ப நிசும்ப அசுரர்களை அழித்தவள். இவளே மஹாவித்யா, மஹாவாணீ, பாரதீ, மஹாஸரஸ்வதீ என்று போற்றப்படுபவள். ரஜோகுண அம்சமாகத் தோன்றி மஹிஷாசுரனை அழித்தவள். இவளே ஸர்வமங்களாவாகவும், மஹாலக்ஷ்மீ, கமலாத்மிகை மஹாவித்யாவாகவும், போற்றப்படுகிறாள்.

சண்டமுண்டர்களை ஸம்ஹரித்த சாமுண்டீஸ்வரியே காளிகா என்பவள். துயரங்களை அறவே துடைத்து, அடியவர்களைக் காத்து, ரக்ஷிப்பவள் துர்கை ஒருத்தியே என, தேவீமாஹாத்-மியத்தில் இந்திராதி தேவர்களின் துதிப்பாடல் உணர்த்துகிறது. இதனை "தாரித்ரிய துக்க பய ஹாரிணி கா த்வதன்யா. ஸர்வோபகார கரணாய ஸதார்த்ர சித்தா" என்கிறது சப்தசதீ. உலகத்துயர் நீக்க அறப்போரிட்டு அவனியைக் காத்தவள். பகவதி காளியே தசமஹா-வித்யாவாக விளங்கி முத்தொழில் தொடர, மூலகாரணியாகிறாள். லலிதா சஹஸ்ரநாமாவளியில் ஒன்றான "கராங்குளி நகோத்பன்ன நாராயண தாசக்ருதீ என்பதால், விஷ்ணுவாகி, தசாவ-தாரத்தாலும், அறம் காத்த அகிலாண்டநாயகி காளிகையே என அறியலாம். காளியும், துர்கையும் வேறு அல்ல. இரண்டும் ஞானகிரியா ரூபங்களான சிவசக்தியே. அதிஸௌம்யா அதிரௌத்ராயை நதாஸ் தஸ்யை நமோநம: என்ற தேவர்களின் துதிவாக்கின்படி மிகவும் சாந்தமாகவும், பேரழகியாகவும் திகழ்பவளும் இவளே. மிகவும் ரௌத்தரமாகவும் மிகவும் பயங்கரமான கோரரூபத்துடன் விளங்குபவளும் இவளே என்று அறியலாம்.

தம்ஷ்ட்ரா கராளவதனே! சிரோமாலா விபூஷணே!.
சாமுண்டே! முண்டமதனே! நாராயணி! நமோஸ்துதே. (தேவீ மாஹாத்மியம்)

<u>விஷ்ணுமாயா ரூபிணீ :-</u> மஹாமாயாதேவியே லலிதா சஹஸ்ரநாமத்தில் விஷ்ணுமாயா என்று போற்றப்படுகிறாள். உலகில் நாம் சுகபோகத்தை அனுபவித்திட உதவுபவள் மஹாமாயை. இவளே பரபிந்து என்றும், குண்டலினீ சக்தி என்றும் பரநாத பிந்துசக்தீ என்றும் அறியவும். யோக நித்திரையில் இருந்த விஷ்ணுவின் கமலக்கண்ணில் நித்ராதேவியாய் விளங்கியும், பிரம்ம தேவரின் துதியால் புத்திரூப ஞானசக்தியாய் வெளிப்பட்டும், உதவியதால், இவளை விஷ்ணு மாயை என்று

அழைக்கின்றனர். பராசக்தியே விஷ்ணுவை உறங்க வைத்தும், விழிக்கச் செய்தும், போரிடச்செய்தும் இயக்கியதால் இப்பெயர் பெறுகிறாள். இவளே முக்குணத்தால் வெளிப்பட்டும், வெளிப்படாமலும், பலவகை வேறுபாடுகளுக்கும் காரணமாக விளங்குவதாக காளிகா புராணம் விளக்குகிறது.

அவ்யக்த வ்யக்த ரூபேண ரஜஸ் ஸத்வ தமோகுணைர் I
விபஜ்ய யார்த்தம் குருதே விஷ்ணு மாயேதி ஸோச்யதே II (காளீபுராணம்) இவளை அபிராமிபட்டர் அந்தாதியில் புகழ்ந்து கூறுவதாவது, பலவகைச் செல்வமாக விளங்குபவளே, அவற்றால் விளையும் சுகபோகமே, அரியபோகங்களால் ஏற்படும் மயக்கமே, அம்மயக்கத்தின் முடிவில் ஏற்படும் தெளிந்த ஞானமே! அடியேன் மனதில் மாயையிருள் சிறிதும் இல்லாது நீங்கிட சுடர்வீசும் பெருவொளியாக இருக்கும் உனது இன்னருள் எத்தகையது? ஏன்னால் அறிய இயலவில்லையே என்று தெரிவித்துள்ளார்.

பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்
அருளே! மருளில் வரும் தெருளே! என் மனத்து வஞ்சத்து
இருளேதுமின்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்றன்
அருள் ஏதும் அறிகின்றிலேன்றும் புயாதனத்தம்பிகையே" (அபிராமி அந்தாதி)

அவித்யை எனும் அக்ஞானத்தை நீக்கித் தெளிவை உண்டாக்குவதால் அம்பிக்கைக்கு விக்ஞானகலனா என்று பெயர். அவ்வாறு சிவஞானப்ரதாயினியாக மெய்ஞானம் தந்து காப்பவள் காளிகாம்பாவே ஆவாள். இவள் சிவஞானஸ்வரூபிணீ என்றும், சிவசக்தியைக்ய ரூபிணீ என்றும் அறியத்தக்கவள். இதனையே மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழில் "அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழுமன்பர் உளற்கோயிலிற்கு ஏற்றும் விளக்கே" என்று ஸ்ரீ குமரசுருபர சுவாமிகள் தேவியைக் குறிப்பிடுகிறார். ஞானமே வடிவாய், சின்மய அக்னி-ஸ்வரூமாய், ஞானச்சுடரொளியாய் விளங்குபவள் ஸ்ரீ காளிகையே.

<u>**மஹாகாளீ தோற்றம் :**</u> - மார்க்கண்டேய புராண தேவீமாகாத்மியத்தில் தேவியின் நெற்றிக்-கண்ணிலிருந்து கோபத்தில் வெளிப்பட்டதாகவும், மார்பகத்தில் ஒடுங்கியதாகவும், சரிதம் கூறப்-படுகிறது. இது ஒருகாலகட்டத்தில், இமயமலைப்பகுதியில், பேரழகியாக தேவியைக் கண்ட, சண்டமுண்டர்கள் இருவர் அவள் மிுத பெரும்படையுடன் போர் துவக்கிய பொழுதில், அன்னைக்குக் கோபம் மூண்டது. அத்தருணம் அவளின் நெற்றிக்கண்ணிலிருந்து காளீ வெளிப்- பட்டாள். பின்பு, சண்டமுண்டர்களுக்கும், காளிக்கும் பயங்கரமான போர் நடந்தது. அதில் சண்டனின் தலையை கத்தியால் துண்டித்து, முண்டனையும் காளீ வதம் செய்தாள். அசுர-கணங்கள் போர்க்களத்தை விட்டு வெருண்டோடின. சண்டனின் சிரத்தையும், முண்டனின் முண்டத்தையும் தம் வெற்றிக்கு அடையாளமாகத் தேவியிடம் காளீ சமர்ப்பித்தாள். தேவீ மகிழ்ந்து, காளியை நோக்கி நீ இனி சாமுண்டி என உலகில் ப்ரஸித்தி பெறுவாய் எனக் கூறினாள். இவ்விதம் காளி சண்டமுண்டர்களை அழித்தது மட்டுமின்றி, மேலும் ரக்தபீஜனின் வதத்திற்கும், அசுரனை குருதி அற்றவனாக்கிட

உதிரபானம் செய்து மாய்த்து உதவியாக இருந்தாள் என்பதையும் அறிய முடிகிறது. இச்சரிதத்தில் தேவியால் காளியானவள் சாமுண்டே என அழைக்கப்படுதலால் காளிகையே சாமுண்டீஸ்வரி என்றும், சண்டீநவாக்ஷரீ மந்திரத்திற்குப் பொருளாக விளங்குபவள் காளிகையே என்றும் அறியலாம். சாமுண்டா வேறு, அவள் யாரிட-மிருந்து தோன்றினாளோ அந்த தேவீவேறு என்று எண்ணலாகாது. தேவர்கள் அன்னையைத் துதித்துப்பாடிய தோத்திரத்திலிருந்து சாமுண்டேச்வரியும், பரதேவதையும் ஒன்றே என அறிவோம்.

<u>காளீ சொல் விளக்கம் :</u> - காலன் என்றால் சிவன், அவருடைய பத்னீ காளீ எனப்படுகிறாள். காளீ என்ற சொல்லுக்கு காளீகல்பத்ருமம் என்ற நூல் பொருள் விளக்கம் தருகிறது. விச்வாத்மிகா = உலகை தனக்குள் உடையவள், அனந்தா = முடிவற்றவளான நித்யா, சூக்ஷ்ம-ரூபிணி = புலப்படாதவடிவினள் என்று பொருள் கூறுகிறது. கலயதி இதி காளீ என்று மொழி இலக்கணத்தால் உத்பாதயதி = படைக்கிறாள், பாலயதி = காக்கிறாள், ஆத்மன்யேவலோபயதி = தனக்குள்ளேயே ஒடுக்கிக் கொள்கிறாள் எனப்பொருள் கொண்டு முத்தொழிலும் புரிபவள் ஆதலால் காளீ எனப்படுகிறாள். ஓரெழுத்து பீஜமந்திரத்தில், க்லீம் என்ற காமராஜபீஜ எழுத்தே மஹாகாளிக்கு உரியதாகும். எனவே இங்கு இந்த கூட்டெழுத்தே காளீ என மருவி உள்ளதாகவும் சிலர் கூறுவர். காலஸ்யகலனாத் காளி என்று கொண்டு, காளருக்குப் பின்னும் இருப்பவள் என்றும், காலமாகிய மகாப்ரளயகாலத்தில் இவள் மட்டுமே எஞ்சி இருப்பதாலும் இவள் காளீ என்று அழைக்கப்படுவதாகவும் சாக்த நூல்கள் கூறுகின்றன. "கால ஸம்க்ர-ஸனாத் காளீ ஸர்வேஷா மாதிரூபிணீ" என்கிறது. இதனையே அபிராமிபட்டரும் "மூத்தவளே" என்று குறிப்பிட்டுள்ளார். மஹாப்ரளயமான ஸர்வஸம்ஹாரம் முடிவுற்ற காலத்தில் நிலைத்து நிற்பவள் என்பதாலேயே சைவத்தில் பரம்பொருள் சிவம் எனப்படுதல் போன்று, சாக்தத்தில் பரதேவதை காளீ எனப்படுகிறது. சிவசக்தியே ஆம். மேலும் காலம் என்றால் கருமை நிறத்தைக் குறிக்கும். ஸர்வசம்ஹாரம் முடிவுற்று அனைத்து சூரியசந்திராதிகளும் ஒடுங்கிய காலம் இரவாக, மகாநிசியாக, இருளாக, கருமையாக இருக்குமாதலால் அக்காந்தியிலேயே மஹாகாளர் எனும் ஸ்வச்சந்த மஹாபைரவேச்வரரும், மஹாகாளியும், கருப்பராகவும், கருப்பியாகவும் விளங்கினர். இதனால் காளீ என்பதற்கு கருமேகம் போன்ற கருமை நிறத்தவள் என்றும், நீலீ நீலாஎன்றும், சியாமா, சியாமளீஎன்றும்,கிருஷ்ணவர்ணீஎன்றும் வேதாகமங்கள் விளக்குகின்றன. ஒடுக்கச்செயலைச் செய்திடும் இக்காளியின் கருமைநிறமானது, பிற நிறங்களை ஒடுக்கிக் கொண்டு இருக்கும் என்பதை உணர்த்துவதுமாகும். கருமை நிறத்தில் மட்டுமே வெண்மை, சிகப்பு, மஞ்சள், நீலம், பசுமை நிறங்கள் மறைந்திடுவதைக் காணலாம். ஸாதகர்களின் நன்மைக்காக நிர்குண நிராகார சக்தியானவள் கருமைநிறமாக விளங்குகிறாள், என்று தேவியின் கருமை நிறத்தை பற்றி சாக்த மஹாநிருவாண தந்த்ர நூலில் விளக்கப்பட்டு உள்ளதை அறியலாம்.

ச்வேத பீதாதிகோ வர்ணோ யதா கிருஷ்ணே நிலீயதே I

ப்ரவிசந்தி ததா காள்யாம் ஸர்வ பூதாநி சைலஜே I

அதஸ் தஸ்யா: காலசக்தேர் நிர்குணாயா நிராகிருதே: I

ஹிதாயா: ப்ராப்த யோகானாம் வர்ணக் கிருஷ்ணோ நிருபித:II

காளியின் வடிவம் பலவாறாக கூறப்பட்டிருப்பினும் பரப்ரம்மஸ்வரூபமானபடியால், கற்பனைக்கும், மனத்திற்கும் எட்டதவாறு பக்தியில் அனுபவத்தால் மட்டுமே அறியத்தக்கதாக விளங்குவதாக அறியவும். பரதேவதையானவள் தோற்றமும் அழிவும் அற்றவளாவாள். இருப்பினும் பஞ்ச-கிருத்யம் செய்ய விரும்புகின்ற பொழுது, குணகர்மாவிற்கு ஏற்ப எப்பொழுது வெளிப்-படுகிறாளோ அப்பொழுது அவள் உலகில் தோன்றியவளாக கூறப்படுகிறாள். உண்மையில் அது எங்கும் உள்ளவளின் வெளிப்பாடே ஆகும். இதனை மார்கண்டேய புராணம் தேவீ மாகாத்மியம் கூறுகிறது.

தேவானாம் கார்யஸித்யர்த்தம் ஆவிர்பவதி ஸா யதா I

ஊத்பன்னேதி ததா லோகே ஸா நித்யாபி அபிதீயதே II என்கிறது.

<u>ஜகத்காரணீ ஜனனீகாளீ</u> : - மஹாப்ரளய காலத்தின் முடிவில், அனைத்தும், காரியங்கள் யாவும், காரணத்துள் ஒடுங்கி, மறைந்து, ஒன்றுமில்லாத காலத்தில், மஹாமாயை எனப்படுகிற பரபிந்துவை வியாபித்து நிற்பவளாக, சிவசக்தியாக, சிவனிடம் ஐக்யரூபிணியாக, பகவதீ காளீ விளங்குகிறாள். பகவதி அந்த சமயத்தில் தன்பிம்பத்தில் பார்வையை பதித்தபொழுதில் அந்த பிம்பமானது மாயையாகிறது. அங்கு உலகைப் படைத்திடுவதன் பொருட்டு கணவன் வடிவாக சிவரூபத்தை மானசிகமாக தேவி கற்பிக்கிறாள். இவ்வாறு இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்திகள் என படைப்பு விளைகிறது. இவ்விதமாக? அனைத்தையும் தம்முள் ஒடுக்கி வைத்துள்ள பரபிந்துஸ்வரூபிணியே, உலகத்தோற்றத்திற்கு மூல ஆதாரசக்தி ஆகும். அதுவே அனைத்து சக்திகளுக்கும், தெய்வங்களுக்கும், உலகங்களுக்கும் முதலாவதான முக்கிய தோற்றுவாயாகவும், பயிரிட விதை போலவும் விளங்குகிறாள். இதனை, ஆதாரபூதா ஜகதஸ் த்வ மேகா, என்றும், விச்வஸ்ய பீஜம், பரமா ஹி மாயா, ஸம்மோ ஹிதம் தேவி சராசரஸ்ய" என்ற தேவர்களின் துதியால் தெளிவு பெறலாம். ஆப்ரம்மகீடஜனனீ என்றும் உன்மேஷ-நிமிஷோத்பன்ன விபின்ன புவனாவளீ என்றும், ஜனனீ என்றும், லலிதா ஸஹஸ்ரநாமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அறியலாம். இதிலிருந்தே பிரம்மா, விஷ்ணு, ருத்ரர் முதலான தேவர்களின் தோற்றம் ஏற்பட்டு, பின்பு பரதேவதையின் விருப்பப்படியான அருட்பார்வையால் ஆணும் பெண்ணுமாகி, உலகம் மீண்டும் தோன்றி இயங்குகிறது என்பதாக சாக்தாகம ருத்ரயா-மளமும், மார்க்கண்டேயபுராணமும் விளக்குகிறது.

<u>தசமஹாவித்யா ஆவிர்பாவம்</u> : - பரசிவத்துடன் இணைந்தே உள்ள பராசக்தியானவள், ஒருசமயத்தில் பத்து சக்திகளும் மஹாவித்யா எனப்படும். மஹா என்றால் மிகப்பெரியது என்றும் ப்ரம்மம் என்றும் பொருள். வித்யா என்றால் ஞானசக்தி என்று பொருள். பரப்ரம்மஸ்வ-ரூபமாய் விளங்கி, மெய்ஞானமளித்து, போகம் மோட்சம் முதலிய ஸர்வாபீஷ்டஸித்திகளையும்

அளிப்பவர்களாக விளங்குவதால் தசமஹாவித்யா எனப்படுவர். சாக்த தந்த்ரமெனும் நூல்கள் இந்த தசமஹாவித்யாசக்திகளின் வெளிப்பாடுபற்றி ஒரு நிகழ்ச்சியை வரலாற்றைக் கூறி உள்ளது. அதுயாதெனில், சிவலோகத்தில் ஒரு சமயம் பகவான் எதிர்காலத்தை எண்ணியவராய், பகவதியை விட்டு விலகி, மறைந்து எங்காவது இருந்திட எண்ணினார். அதை அறிந்த தேவீ இறைவனைப் பார்த்து, தாங்கள் கண்ணுக்குத் தெரியாத நிலையில் எங்கு சென்றிட உள்ளீர்கள்? என்று வினவிட, அதற்கு இறைவன், "நாம் எங்கு விரும்புகிறோமோ அங்கு செல்வோம்" எனக் கூறினார். இதற்கு தேவீ தடை கோரி எம்மிடமிருந்து வேறு எங்கும் சென்றிட சிந்திப்பதைக் கைவிடுங்கள்சுவாமி என வேண்டினாள். ஆனால் பகவான் சதாசிவரானவர் தேவியின் வேண்டுகோளைச் செவிமடுக்காமல் புறப்பட்டார். சிறிது தூரம் சென்றபின், வழியை மறைத்துக் கொண்டு பகவதீ மகாகாளீ அவரெதிரில் நிற்பதைக் கண்ட பகவானிடத்தில், இத்திசையில் தாங்கள் செல்ல இயலாது என்றாள். பிறகு பகவான் சங்கரர், அத்திசையை விடுத்துத் திரும்பி, மாறுபட்ட திசைகளில், முறையே பயணிக்க முனைந்து, எல்லா திசைகளிலும் இவ்வாறே காளீதேவியால் எதிர்கொண்டு தடுக்கப்பட்டார். இவ்வாறு பகவதியான, ஜகதம்பாவானவள், கிழக்கு முதலான எட்டு திசையிலும், அவ்வாறே மேல் திசை மற்றும் கீழ்த்திசையிலுமாக, பத்து திசைகளிலும், பத்துவிதமான வடிவத்தை வெளிப்படுத்தி நின்றாள். இவையே சாக்தா-கமங்களில் தசமஹாவித்யா என்று உலகம் போற்றிட விளங்குவதாய் உள்ளன. அவை 1. காளீ, 2. தாரா, 3. ஷோடசீ, 4. புவனேஸ்வரி, 5. பைரவி, 6. சின்னமஸ்தா, 7. தூமாவதி, 8. பகளாமுகீ, 9. மாதங்கி, 10. கமலாத்மிகா என்பவர்கள் பத்து மகாவித்யா அன்னையர்கள் என்கின்றன சாக்த நூல்கள்.

காளீ, தாரா, மஹாவித்யா, ஷோடசீ, புவனேஸ்வரீ,
பைரவீ, சின்னமஸ்தா ச வித்யா, தூமாவதீ ததா I
பகளா, ஸித்திவித்யா ச மாதங்கீ, கமலாத்மிகா I
ஏதா தசமஹாவித்யா: ஸித்திவித்யா: ப்ரகீர்த்திதா: II (சாக்ததந்திரம்)

இவ்வாறு கூறப்பட்டுள்ள பத்துவகை பகவதிஸ்வருப மஹாவித்யைகளுள் காளியின் பெயரே முதலாவதாக உள்ளதால் பரதேவதை இவளே.

<u>ஜகதம்பா தக்ஷிணகாளிகா :</u> - ஸ்ரீ காளிகாம்பாவே, முதலாவதான ஆத்யாசக்தி. இவளது நிலை மிகவும் உச்சநிலையாகும். அதாவது வடக்கே காளீ, வடகிழக்கே த்ரிபுரசுந்தரி, கிழக்கில் சின்னமஸ்தா, தென்கிழக்கே தூமாவதி, தெற்கில் பகளாமுகீ, தென்மேற்கில் கமலாத்மிகா, மேற்கே புவனேஸ்வரீ, வடமேற்கே மாதங்கீ, மேல்திசையில் தாராவும், கீழ்த்திசையில் பைரவியும் தோன்றி விளங்கியதாக கூறப்படுகிறது. சில தந்த்ரங்கள் இவர்களை தசாவதாரத்துடன் விளக்கியும், காளியே சீதை என்றும், விளக்குகின்றன. மஹாபதிவ்ரதா சக்தியாகவே காளி திகழ்கிறாள். இங்கு முதலாவதான காளி என்பவள் தக்ஷிணாகாளி, சியாமா என்று அறியவும். இவள் மிருத்யுஞ்ஜய மஹாசக்தியாவாள். இவளை தக்ஷிணகாளி என்றழைத்திடக் காரணம் யாதெனில், தென்திசைக்கு அதிபதியும், சூரியனின் புத்திரருமான யமன், காளியின் (உபாஸகர்) அடியவர்களைக்கண்டு அஞ்சி ஓடுவார் என்பதனால் இவள் தக்ஷிணாகாளி என்று புகழ்பெற்றதாக சாக்தநிர்வாணதந்திரம் என்ற

நூல் கூறுகிறது. இதனால் இவளது மகிமையையும் இவளருளால் தொல்லையும், பயம் நீங்கி, நீடித்த ஆயுள் கிடைக்கும் என்பதையும் நாம் அறியலாம்.

> தக்ஷிணஸ்யாம் திசிஸ்தானே ஸம்ஸதிதச்ச ரவேஸ்சுத : I
> காலோ நாம்நா பலாயேத பீதியுக்தஸ் ஸமந்தத: I
> அதஸ் ஸா தக்ஷிணாகாளீ த்ரிஷு லோகேஷு கீயதே II (சாக்தாகமம்)

மேலும், ஒரு யாகம் அல்லது பூஜையின் பயனானது தக்ஷிணை அளிப்பதால் மட்டுமே கிடைத்திடும். எனவே, அவ்வாறு, இவளைப் பூசித்தால் அனைவரையும் பூசித்ததாக ஆவதாலும், இவளால் மட்டுமே போகமோக்ஷ பயன்கள் கிடைப்பதாலும், இவள் தக்ஷிணா என்று அழைக்கப்-படுகிறாள். பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், இந்திரன் முதலான தேவர்களுக்கும், போரிலும், விருப்பத்-தேவையிலும், இவளே இடர்களைந்து, இஷ்டஸித்தியை அளித்துள்ளதை, புராணங்களின் வாயிலாக அறியலாம். தேவகார்ய ஸித்திக்காகவே பராசக்தி அடிக்கடி ஆவர்பவித்து இருக்கிறாள் என்பதை முன்னர் அறிந்தோம். உருவமற்றபோதிலும், பக்தர்களுக்கு அருள்-புரிந்திடவே, பராசக்தியான காளீ பலஉருவங்களை எடுத்து, பல தலங்களில் அருளாட்சி செய்கிறாள். காளிக்கு பலபேதங்கள் இருப்பினும், பொதுவாகவும் சிறப்பாகவும் எட்டுவகையாக நூல்களில் கூறப்படும். அவை 1. சிந்தாமணிகாளி, 2. ஸ்பர்சமணிகாளி, 3. ஸந்ததிப்ரதா- காளி, 4. ஸித்திதாகாளி, 5. தக்ஷிணகாளி, 6. காமகலாகாளி, 7. ஹம்ஸகாளி, 8. குஹ்ய- காளி என்பவை ஆகும். இவற்றுள் தக்ஷிணகாளியே ப்ரதானமாக பாவிக்கத்தக்கவள்.

<u>மங்களம் தருபவள் மாகாளி</u> : - காளி என்றாலே உக்ரமான தோற்றமுடையவள் என நினைவுக்கு வரும். சாந்தமானவளாகவும், சியாமளாவாகவும், மாதங்கியாகவும் விளங்குபவளும் இவளே. காளி கோரமான உருவம் கொண்டவளாயினும் தனது பக்தர்களுக்கு வசீகரத் தோற்றம் கொண்டவளாகவே ஸௌம்யையாக காட்சி கொடுப்பாள். மூர்த்திரஹஸ்யத்தில் காளியின் ரூபம் ஸௌபாக்ய காந்திகளுக்கும், ஐஸ்வர்யங்களுக்கும் இருப்பிடம் என்று கூறப்படுகிறது.

> ஸ்புரத் தசன தம்ஷ்ட்ரா ஸா கோர ரூபாஅபி பூமிபI
> ரூப ஸௌபாக்ய காந்தீநாம் ஸா ப்ரதிஷ்டா பராச்ரியாம் II
> (தேவிமாகாத்மிய மூர்த்தி ரகஸ்யம்)

காளிக்கு உலகங்களின் மங்களத்திற்காகப் பத்ரகாளி எனப்பெயர் கொண்டுள்ளதாக மார்க்கண்டேய புராணம் கூறும்.

> பத்ராய ஜகதாம் தேவி யாநி யாநி ஸநாதநீ.
> கார்யாணி சக்ரே கல்யாணி கல்யாணாநி மஹாந்திச.

கல்யாணம் என்றாலும், பத்ரம் என்றாலும், சிவம் என்றாலும், மங்களம் என்பதே பொருள். எனவே காளியே கல்யாணீ ஸர்வமங்களா ஆவாள்.

அபயம் அளிப்பவள் காளிகாம்பா :- துஷ்டர்களை அச்சுறுத்தும் வகையில் ஆயுதங்களுடன் விளங்கினாலும் அடியவர்களுக்கு பயத்தைப் போக்கிட அபயகரத்தையும், வரமளித்திட வரத முத்திரையுடன் ஒரு கரத்தையும், தக்ஷிணாகாளி கொண்டு விளங்குகிறாள். சாக்தாகமங்களில் காளியானவள் எப்பொழுதும் தனது பக்தர்களைப் பார்த்து, பயப்பட வேண்டாம் நான் அபயம் அளிக்கிறேன் என்று பெரும் சப்தத்துடன் கூறுகின்றாள் என்று கூறப்படுகின்றது. இதனால் அடியவர்களிடம் இவளுக்கு உள்ள காருண்யம் விளங்கும். மேலும் தேவியானவள் தயக்கமின்றி உங்களுக்கு என்ன வேண்டுமென்று சொல்லுங்கள், நான் அளிக்கின்றேன் எனவும் தெள்ளத்-தெளிவாகவும் கூறுகின்றாள் என தேவீ சாத்திரங்கள் விவரிக்கின்றன. இதனால் காருண்ய-விக்ரஹா காளீ என்பது அறியத்தக்கது. சாமுண்டியின் ஒன்பது எழுத்து நவாக்ஷரீ மந்திரம் மட்டுமே வித்யாசமாகவும், சிறப்பாகவும், பெயருடன் கூடியதாய் அபயமளிப்பவள் என்பதை அதாவது விச்சே என்ற சொல்லை முடிவில் கொண்டு விளங்குவதாயும் உள்ளது. இவளே அபயமளிப்பவள் என்பதை "சாமுண்டாயை விச்சே" என்பதால் உணர்ந்திடலாம். விச்சே என்றால் அபயம் அளிப்பவள் என்பது பொருள்.

காப்பவள் காளீ :- துர்கையும், காளிகையும் தீயின் அம்சங்களைக் கொண்டு அக்னி-ஸ்வரூபியாக உள்ளதாக வேதமும், ஆகமங்களும் கூறும். "தாம் அன்னிவர்ணாம் தபஸா ஜ்வலந்தீம் வைரோசனீம்" என்கிறது யஜுர்வேதம். காளீ அக்னியின் 10 கலைகளையே பத்து தலைகளாயும், 10 கரங்களாயும், 10 பாதங்களாயும் கொண்டு விளங்குபவள். ஸ்ரீ சக்ரத்திலும் பத்து கோணங்கள் இரண்டு அமைந்துள்ளது இதை உணர்த்துவதே ஆகும். இவளே பஞ்ச-பூதங்களாகவும், எட்டு மூர்த்திகளாக சூரியன், சந்திரன், யஜமானன் வடிவிலும் விளங்குகிறாள். ஜகன்மாதா காளியைச் சுற்றிலும், எண் திசையிலும், லோக மாதர சக்திகள் விளங்குவர். 1) பிராம்மி, 2) மாகேஸ்வரீ, 3) கௌமாரீ, 4) வைஷ்ணவீ, 5) வாராஹீ, 6) மாஹேந்திரீ, 7) சாமுண்டி, 8) மகாலக்ஷ்மீ, அல்லது நாரசிம்ஹீ இவர்களே உலக அன்னையர்கள் என்ற பெயரில் போற்றப்படுபவர்கள் ஆவர். வாணீ மேலுலகத்திற்கும், லக்ஷ்மீ பாதாள உலகிற்கும் தேவியாக முறையே வடகிழக்கிலும், தென்மேற்கிலும், சேர்த்து பத்து திசையிலும், பத்து மாதாக்களாகவும் பூசிக்கப்படுவர். ஸ்ரீ சக்ரத்திலும், இரண்டாவது பூபுரரேகை (கோடு)யில் பூஜிக்கப்படுகின்றனர். துர்கை காளீ மற்றும் இந்த லோகமாதர்களை வணங்குவதால் நமக்குள் இருக்கும் காமம், குரோதம், முதலான தீய சக்திகளை, நம்மை தாழ்த்துபவைகளை, வென்று தீமையை நீக்கி வாழ்வில் வெற்றியையும், ஸித்தியையும் பெற இயலும். இதுவே சத்ருநாசம் செய்வதாக கூறப்படுகிறது புராணங்களில்.

காளிகே! கோரரூபா ஆத்யா! ஸர்வகாமபலப்ரதா.
ஸர்வ தேவஸ்துதா தேவீ சத்ருநாசம் கரோது மே (காளீ ஹ்ருதயஸ்தவம்)

இதனைக் கூறி காளியை வேண்டினால், மும்மலம் நீங்கி அருள் கிட்டும். உலகையும், உடலையும் நவசக்திகளாயும், நவதூதியாகவும், நவதுர்கையாகவும், நவகாளியாகவும்,

நவசண்டியாகவும் இருந்து இயக்கிக் காத்து ரக்ஷிப்பவள் காளிகையே ஆவாள். சிவன் முப்புறம் எரித்திட துணை செய்தவளே சூலினி துர்கை. தக்ஷயாகத்தை அழித்து அறம்காக்க வீரபத்ரருக்கு துணை செய்வதள் பத்ரகாளீ. மஹாப்ரளயத்தில் மகாகாளருக்கு துணை நிற்பவள் காளீ, சரபேச்வரருக்கு துர்கையும், காளியும், இருசக்திகளாக இருந்து உதவினர். ஒவ்வொரு யுகத்திலும், கல்பங்கள், மன்வந்தரங்கள், கஷ்டகாலங்கள் இவற்றிலும் பலமுறை தேவீ வெளிப்பட்டு உலகில் துயர் துடைத்து காத்து வருபவள், சாக்தாகம பரமேஸ்வரியான ஸ்ரீ காளிகாம்பாவே ஆவாள்.

__காளீ அருள்தருதலங்கள் :-__ புண்ணிய பாரத பூமியில், காசி முதலான புனிதத்தலங்களில் ஸ்ரீ காளிகா பலவகைத் திருக்கோலங்களில் பல பெயர்களில், பலவகை வழிபாட்டு முறைகளில், பலவகையில் அருளாட்சி செய்து வருகிறாள். எடுத்துக்காட்டாக முக்கியமாக காளிகோட்டம் என்ற இடத்தில் காசியில் காளி அருள் செய்கிறாள். மேலும் உஜ்ஜயினியில் மஹாகாளீ, கொல்கட்டாவில் கோரகாளீ எனவும், தமிழ்நாட்டில் சிறப்பாக ஒன்பது தலங்களிலும் அருள்கிறாள். 1) சிறுவாச்சூர் மதுரகாளீ, 2) தொட்டியம் மதுரகாளீ, 3) உடையாளூர் செல்வ- மாகாளீ, 4) திருநாகேஸ்வரத்தில் பச்சைகாளீ, பவழக்காளீ, 5) திருவெண்காட்டில் (அகோர-வீரபத்ரர் சன்னதி எதிரில் உள்ள) பத்ரகாளீ, 6) சிதம்பரத்தில் (ஆடவல்லானுடன் நடனமாடிய) தில்லை நடனகாளீ, 7) கீழ்வேளூரில் ஐந்து வட்டத்துக்காளீ, 8) காளையார் கோவிலில் சுவர்ககாளீ, 9) அம்பகரத்தூர் வீரமாகாளீ ஆவாள். மேலும் மேல்மலையனூர் அங்காளீ, கதிராமங்கலத்தில் கம்பர் காளீ, திருவாலங்காட்டில், உக்ரகாளீ என பல தலங்களிலும் கிராம தேவதையாக தனிக்கோயில்களில், தனிக்காவல் தேவதையாகவும், காளி கோயில்களில் விளங்கி அருள்புரிவதைக் காணலாம். இவளையே ஸம்ஹாரிணீ ருத்ரரூபா என்றும், பத்ரப்ரியா என்றும், பத்ரமூர்த்தி என்றும், ப்ரம்மாண்டபுராணமாகிய லலிதாசகஸ்ர-நாமம் தெரிவிக்கிறது. வங்காளத்தில் நவகாளீ என்றே ஒரு இடம் காளீ தலமாக விளங்குகிறது. பஞ்சாபில் சண்டிகர் என்ற பெயரில் காளியின் இருப்பிடம் பாரதத்தில் பல உள்ளன.

__ஆணவத்தை ஒடுக்கும் அங்காளீ :-__ உலகில் தருமமார்க்கத்திற்குத் தடையாய் கிளம்பும் , கொடிய சக்திகளை அழிப்பதற்காகத் தேவீ ஒருத்தியே பல உருவங்களை எடுத்துத் தோன்றி, காக்கிறாள் என்று தேவர்கள் கூறி போற்றியுள்ளனர். அரக்கர்கள் அரிய பல வரங்களைப் பெற்ற- போதிலும் அதர்மநெறியில் (அக்ரமவழியில்) சென்றதால் அவர்களை அடக்கி, உலகை அறநெறியில் இயங்க வைத்தவள் சாமுண்டீச்வரீ. எப்பேர்பட்ட கொடுமை இழைக்கும் அரக்கர்-களையும் கூட, அம்பிகை எடுத்த எடுப்பிலேயே கொன்றுவிடுவதில்லை. அறப்போர் முறைகளான ஸாமம், தானம், பேதம், தண்டம் என்ற நால்வகை யுக்திகளையும் முதலில் கடைபிடித்தும், தூது அனுப்பிபேச்சுவார்த்தை நடத்தியும், வாய்ப்பளித்து, இவைகளில் சரிப்பட்டு திருந்தி வராவிட்டால் மட்டுமே அவனை வேறு வழியின்றி கொல்கிறாள் என்பதை

புராணங்களால் நன்கு அறியலாம். இவ்விதம் தேவீ எதிரிகளிடத்தும் முறையைக் கடைபிடித்தலே அவளது கருணையாம். சும்பாசுரனிடம் பேசிவர சிவனையே தூது அனுப்பி சிவதூதீ என்ற புகழ் பெற்றவள் காளி. ஆணவமே உருவான மஹிஷாசுரனை மாய்த்தவள் துர்கை. இவர்களின் உடலை மட்டுமே அழித்து, அவர்களின் திருந்திய ஆன்மாவிற்கு, அருள்புரிந்தவள் என்பது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. சும்பனது தலையும், மகிஷாசுரனது தலையும் , தேவி பூசையில் இன்றும் பூஜிக்கப்படுகிறது.

<u>காளியின் காருண்யம் : -</u> அனைத்துலக அன்னையாய் கருணைமிக்க அமுதக்கடலாய் விளங்கும் காளியானவள், தன்னால் ஸம்ஹரிக்கப்படும் எதிரியிடமும் வற்றாத கருணை கொண்டவளாவாள். ஸம்ஹாரம் என்றால் அழித்தல் என்பது பொருள் இல்லை. நன்கு ஒடுக்குவது என்பதே பொருள். ஆணவமலமானது நித்யமானதாலும், ஆன்மாநித்யமானதாலும் அவை அழிக்கப்படுவதில்லை. திறனற்றதாக்கி காரியம் காரணத்திலேயே ஒடுக்கப்படுகிறது. இந்துசயமத்தில் நடேசர் முதலான எல்லா தெய்வங்களுமே எதிரிகளை ஒடுக்கி அவர்களையும், அவர்களது பொருள்களையும், தாமணிந்து மதிப்பளித்து, அனுக்ரஹம் செய்துள்ளது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. துர்கை மகிஷனை தம்பாதகமலத்தில் நீங்காஇடம் தந்து பூசித்துப் போற்றிடவும் அருளினாள். காளியும் அவ்வாறே எதிரியின் உத்தமாங்கமான சிரஸைத் திருவடிக் கீழ் இருத்தி முக்தி அளித்தும், தலையைத் தனது கரங்களில் ஏந்தியும் மாலையாக அணிந்தும், அவளோடு சேர்ந்திருக்கும் தேவீ ஸாயுஜ்யமுக்தி நிலையையும், அவளைப் பூசிக்கும் போது அவனையும் பூசிக்கும் பெரும்பேற்றையும் அருளி இருக்கிறாள். காளிக்கு அளிக்கப்படுபவை? முக்தி பெறுவது உறுதி. காளியின் வடிவமைப்பில் பாதத்தடியில் ரக்தபீஜனின் தலையும், காலடியில் சும்பாசுரனும் அமைந்திருக்கும். இதனையே தேவர்கள் சப்தசதீஸ்தவத்தில் "வைரிஷ்வபி ப்ரகடிதைவ தயா த்வயேத்தம்" என்று கூறியுள்ளனர். மேலும் அறப்போரில் ஆயுதத்தால் அடிக்கப்பட்டு இறந்தல் மட்டுமே முக்தி பெறுவர் என்பதற்காகவே தேவீ ஆயுதங்களைத் தாங்கி இருக்கிறாள். தேவீ ஆயதமேதுமின்றி பார்த்தே பொசுக்கிவிட இயலும் என்பதை, சிவன் பார்த்து மன்மதனையும், சிரித்து முப்புரத்தையும் எரித்ததைப் போன்று, காளீ மகாபாசுபதாஸ்திராக்னியாகிய, மகாபதிவ்ரதாசக்தியினாலேயே, பண்டாசுரனை எரித்தும், தூம்ரலோசனனை எரித்தும், தனது ஒப்பற்ற பராக்ரமத்தை வெளிப்படுத்தி உள்ளதால் அறியலாம். எனவே தேவி ஆயுதங்களை ஏந்தி இருப்பது அசுரர்களின் உடலை அழிப்பதற்கும், பக்தர்களுக்கு பயத்தைப் போக்கி நம்பிக்கை, தைரியம், அபயம் இவற்றை அளிக்கவும், தேவர்களுக்கு நன்மை புரியவதற்குமே என்று மார்கண்டேயபுராணம் தெரிவித்து உள்ளது.

தைத்யானாம் தேகநாசாய பக்தானாம் அபயாய சI
தாரயந்தி ஆயுதானீத்தம் தேவானாம்ச ஹிதாய வைII (தேவீ மாகாத்மியம்)

அடியவர்களின் எதிரிகளை மாய்த்து காத்திடுவேன், அஞ்சேலென அபயமளித்து, பயத்தைப் போக்கிடவே, காளீயானவள் கத்தி, சூலம் இவற்றை ஏந்தி இருக்கிறாள். எனவே பக்தர்கள் தேவியைத் துதித்து வெற்றி பெறலாம் என்பதற்கு இத்துதி உதவும்.

ஜ்வாலாகராள மத்யுக்ரம்அசேஷாசுர சூதனம் I

த்ரிசூலம் பாது நோ பீதேர் பத்ரகாளி நமோஸ்துதேII (சப்தசதீஸ்தவம்)

உலகில் நாம் விரும்பும் அனைத்து சுகபோகங்களின் வடிவில் இருப்பவள் தேவியே. இதனாலேயே இவளை "மஹாபோகா" என்றும், "மஹாஐச்வர்யா" என்றும் லலிதா சஹஸ்ர-நாமம் போற்றுகிறது. இதனை அம்பிகை அருளாளரான அபிராமிபட்டர், தமது அபிராமி அந்தாதித்துதியில் "அருள்போகம் செய்யும் மருளே" எனக் குறிப்பிடுகிறார். உலகிற்கு முதல் காரணமாக, பிறப்பிடமாக உள்ளது மாயை. துணைக்காரணமாக கருவியாக உள்ளது சக்தி. நிமித்தகாரணமாக இருப்பது சிவம். அதாவது ஒரு மண்பானைக்குக் களிமண், தண்டசக்ரம், குயவர் இவை மூன்றும் உள்ளது போல், சைவசித்தாந்தம் விளக்கும். சாமுண்டீச்வரியை அபிராமிபட்டர் உயர்ந்தநிலையில் உள்ளவளாக **உயர்சண்டீ** என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால் காளியின் மேன்மை புலனாகும்.

<u>தொல்லை நீக்கும்தாய் காளீ :-</u> உலகில் எவ்வளவோ கஷ்டங்கள், தொல்லைகள், ஆபத்துகள், இடையூறுகள், துயரங்கள் வந்தவண்ணமே உள்ளன. இவற்றை சமாளிக்க ஓரே-வழியாதெனில்? தேவியின் அருளைப்பெறுவது ஒன்றேயாகும். இந்த தொல்லை என்பது மூவகைப்படும். இவை தாபத்ரயம் எனப்படும். அவை, பூகம்பம், கடல் கொந்தளிப்பு, எரிமலை வெடிப்பது, புயல், இடி, மழை வெள்ளம், பெரும் பஞ்சம் முதலியன, [1]**ஆதிதைவிகம்** எனப்படும். இயற்கைவிதிவசத்தால் உயிரினங்களுக்கு பேய், பிசாசு, பூதம், பிரம்மாராக்ஷஸர் முதலிய கொடிய குரூரக் கிரஹங்களால் ஏற்படும் தொல்லைகள் [2]**ஆதிபௌதிகம்** என்பவை. மனத்-துயரமாகிய ஆதி உடல் நோயாகிய வியாதி, மற்றும் பிறரால் ஏற்படும் துன்புறுத்தல், வருத்தம் முதலியன [3]**ஆத்யாத்மிகம்** எனப்படுபவை. இத்தகைய மூவகைத் தொல்லையிலிருந்தும் நம்மைக் காப்பவள் காளியே. இவளே **தாபத்ரய நிவாரிணீ** ஆவாள். இவை எல்லாம் விதிப்படி நடைபெறுவது என நினைத்து அலட்சியப்படுத்தாமல், அம்பிகையின் அருள்பெற்றால் இன்னல் தீரும் என்ற முடிவுடனும், நன்நம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் அருள்பெற முயற்ச்சித்தால், வெற்றிபெறலாம் என்பதை புராணங்கள் வாயிலாக நாம் உணரலாம். மார்க்கண்டேயர் தனக்கு பதினாறுவயதே ஆயுள் என்பதை அறிந்திருந்தும், தெய்வ அருளால் அவர் சிரஞ்சீவியானார். அவ்வாறே பக்தியால் ப்ரஹ்லாதரும், ஆஞ்சனேயரும் சிரஞ்சீவி நிலைபெற்றனர் என்பது புராணங்களால் அறியலாம்.

<u>கலியுக வரதா காளீ :-</u> கலியுகத்தில் விரும்பும் வரம் தருபவள் காளியே. இவளை உபாஸிப்பது மிகவும் சுலபமானது. காளியின் மந்திரத்திற்கு வித்யாராக்ஞீ என்று சிறப்பு

பெயர் உள்ளது. எனவே காளியை பக்திசுலபா என்கிறது சாத்திரம். கலிகாலத்தில் காளியின் உபாஸனை ஸகல- விதமான ஸித்திகளை அளிப்பதாகும். கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் விரும்பும் பயனை அளிப்பவளும், விரைவில் அளிப்பவளும் காளியே. இதனை லலிதாஸஹஸ்ரநாமதுதி, வாஞ்சிதார்த்த ப்ரதாயினீ என்றும் க்ஷிப்ர ப்ரஸாதினீ என்றும் கூறுகிறது. எக்காலத்திலும் அருள்பவளாயினும், கலியுகத்தில் சிறப்பாக, அனைத்து உயிர்களுக்கும், போகம் மோக்ஷம் எனும் இருவகைப் பயனையும் அளிப்பவள் காளியே என்கின்றன சாக்த நூல்கள்.

ஸதா ஸர்வயுகே தேவி கலிகாலே விசேஷத: I

ஸர்வ்ராணி ஹிதகரம் போகமோக்ஷைக காரணம் II கலியுகத்தில் வழிபடத்-தக்கவள் காளி மட்டுமே. இவளைப் போல் விரைவில் அருளும் தெய்வமில்லை என்கிறது சாக்தபிச்சிலா தந்திரம். "கலௌ காளீ கலௌகாளீ நான்யோதேவ: கலௌயுகே" என்கிறது. மற்றொரு நூல் "கலௌசண்டீ விநாயகௌ" என்று காளியையும், கணபதியையும் கலியுக தெய்வமாக கூறுகிறது. சிறப்பாக கலியுகத்தில் தக்ஷிணாம்னாய தேவதைகளான காளீ, மாரீ, சாஸ்தா, துர்கா, சரபர், பைரவர், வீரபத்ரர் முதலிய உக்ர தேவதைகளின் வழிபாடு சிறந்த பயன் தருவதாகும். கலியுகத்தில் வழிபட வேண்டியவள் காளீ ஒருத்தியே. அவளே வரம் அளிப்பவள் என்கிறது. காளீரஹஸ்யம் எனும் மந்த்ர சாஸ்திரம்.

கலௌகாளீ கலௌகாளீ கலௌகாளீ வரப்ரதா I

கலௌகாளீ கலௌகாளீ கலௌகாளீ து கேவலா I (காளீரஹஸ்யம்)

தக்ஷிணாயணத் துவக்கதில் ஆடிமாதத்தில் உக்ரஸ்வரூபமுள்ள தேவிகளான, காளீ, மாரீ, சண்டீ, துர்கை முதலான தெய்வங்களையும், உத்தராயண துவக்கத்தில் தை மாதத்தில் தேவீ சாந்தமாக காணப்படுவதால் சாந்தரூபியான லலிதா, புவனேஸ்வரீ முதலான தேவிகளையும் சிறப்புப்பயன்பெற்றிட வழிபடுவது வழக்கில் உள்ளது. சைவாகமங்களில், பத்ரகாளியின், ஸ்தாபனம், பிரதிஷ்டை, உத்ஸவம், பூஜை முதலியன கூறப்பட்டு உள்ளன. காளியை ஒன்பது வகையாக சைவாகமம் கூறுகிறது. அவ்வாறே உமாயாமள சாக்ததந்திரநூலில் 1) காளீ, 2) மஹாகாளீ, 3) பௌமகாளீ, 4) க்ரூரகாளீ, 5) உத்தரகாளீ, 6) கங்காளீ, 7) தக்ஷிணாகாளீ, 8) கராளவக்த்ரீ, 9) சிவஸம்வாதகாளீ என்று ஒன்பது வகைகளில் நவகாளிகள் கூறப்படுகின்றனர்.

<u>காளிகோயிலும், பூசையும் : -</u> பரப்பரம்ம ஸ்வரூபிணியான பகவதி காளியை, கிராமம், நகரம், புரம், பட்டணம், ராஜதானி (தலைநகர்) கங்காதீரம், நதிக்கரை, பர்வதம் (மலைப்பகுதி) சுபஸ்தலம் (க்ஷேத்ரம்), மயானம் (சுடுகாடு), தேவலாயம் இவற்றில், ஏகபேரவிதானமாகிய, தனி ஒருசிலையாகவோ, பகுபேரவிதானமாகிய, பரிவார தெய்வங்களுடன் சுடிய பலவகை சிலையுடன் கூடியதாகவோ, சிலையை ஸ்தாபித்து, தேவியை பிரதிஷ்டைசெய்து, பூசித்திட வேண்டும் என்று, சாக்தயாமள ஸங்கிரஹ நூலின் கிரியாதீபிகை கூறுகிறது. சிவாலயத்தில்,

பரிவார ஸ்தாபன விதிமுறையில் காளியையும், துர்கையையும், ஸப்தமாதர்களையும் சுற்றுப்பகுதியில் பரிவாரமாக ஸ்தாபித்து பூசித்திட வேண்டுமென்று சைவாகமங்கள் கூறியுள்ளன.

சாக்தாகமங்களான ஒன்பது யாமளநூல்கள், ஸித்தாந்த மிச்ரதந்த்ரம் என்றும், இவற்றாலேயே சிறப்பாக ஸ்பதமாதர்களுக்கும், காளீ முதலானோர்க்கும் ஸ்தாபனம், பூஜை, ஹோமம், ஸ்நபனம், உத்ஸவம், சாந்தி முதலியவைகளை ஆதிசைவ ஆசார்யரைக் கொண்டு செய்யப்பட வேண்டும் என்றும் சைவசுப்ரபேதாகமம் கூறியுள்ளது. சிவாலயத்தின் தென்புறத்தில் உக்ரவடிவில், ரௌத்ரியாக சாமுண்டீச்வரியையும், சப்தமாதர்களை, வீரபத்ரர் மற்றும் விக்னேச்- வரருடனும் வடக்கு நோக்கி ஸ்தாபித்து, நித்யபூஜை செய்திடுமாறும், இவ்வாறு பரிவாரமாக இனி அமைந்துள்ள போது, காளிக்கு உத்ஸவத்தை சிவாலயத்தில் செய்யக்கூடாது என்றும், காளிக்கு தனிக்கோயிலாக இருக்குமிடத்தில் மட்டும், காளிக்கு உத்ஸவத்தை செய்ய வேண்டும் என்றும், சைவ அம்சுமதாகமம் கூறி உள்ளது. இதனையே காரணாகமம்

ப்ராஸாத கோபுரம் சைவ ப்ராகார வ்யாபினீ யதிI
ப்ரத்யேக மாலயம் சைவ ப்ரதித்வஜ மிஹோச்யதேI
ப்ரத்யேகமாலயம் ப்ரோக்தம் காள்யுத்ஸவ மத ஆசரேத் II
அந்தே பசுபலிம் க்ருத்வா பாரசைவேன காரயேத் II என்கிறது.

மேலும் காளீ கோயிலில், ப்ரதிஷ்டை, உத்ஸவம், முதலிய நைமித்திக கிரியைகளை, ஆதிசைவ சிவாசார்யரைக் கொண்டு செய்விக்க வேண்டும், நித்யபூசையை, சிறப்பாக பாரசைவர்களாகிய பூசாரிகளைக் கொண்டு செய்விக்க வேண்டும், என்றும் சைவகாரணாகமம் தெரிவிக்கிறது. மேலும் காளிக்கு சிறப்பான, தனித்த பரிவாரத்துடனும், கோபுர பிராகாரங்களுடனும் அமைந்து உள்ள கோயிலாக உள்ளவிடத்தில், ப்ராமணர்களைக் கொண்டு பூசித்தல் உத்தமம், சுபதம் என்கிறது. சாக்தஉமாயாமளம் என்ற நூலில், நித்யபூஜையை காளிக்கு ப்ராமணர் செய்வது உயர்தர சுபம் தரும் என்றும், பாரசைவர்களான பூசாரிகளால் செய்யப்படுவது நடுத்தரமான பலன் தரும் கௌணம் என்றும், ஸாமான்ய மக்களால் செய்யப்படுவது கடைநிலைச் செயலென்றும் கூறப்பட்டு உள்ளது. தனித்த கோயிலில் ப்ராமணர் பூசிப்பது சுபம் என்கிறது.

ப்ராம்மணாராதனம் முக்யம் பாரசைவம் து கௌணவம்.
ஸாமான்யம் சௌண்டநீயம்ச யாமளா சார்யகர்மவத்.
ஸ்வதந்திராலயே து கர்தவ்யம் ப்ராம்மணாராதனம் சுபம் (உமாயாமளம்)

<u>காளீபூசையின் விசேஷ பயன் :-</u> காளியின் திருவடியைப் பூசிப்பதனால், நீண்ட ஆயுள், ஆரோக்யம், செல்வம், வல்லமை, புஷ்டி (செழிப்பு), பெரும்புகழ், புலமை, சுகபோகம், முக்தி எனும் தேவீ ஸாயுஜ்ய வீடுபேறு முதலிய அரிய பயன்கள் கிடைக்கும். எவன் காளியை

பூசிக்கிறானோ அவனே உலகில் அருஞ்செயலாற்றிய ஸாதனையாளன், அவனே குலத்தை உயர்த்திய போற்றத்தக்க மகனாவான். அவனது தாயே கொடுத்து வைத்த பெரும்பாக்யாவதி, எவனால் காளீ நன்கு பூசிக்கப்பட்டாளோ, அவன் ஜகன்மாதாவின் அருளால் ப்ரம்மஞானத்தை அடைகிறான் என்று சாக்தாகம காளீதந்த்ரம் கூறுகிறது.

ஆயுராரோக்ய மைச்வர்யம் பலம் புஷ்டிம் மஹத் யச : .
கவித்வம் புக்தி முக்தீ ச காளிகா பதபூஜநாத்.
ஸஏவ சுகிருதீ லோகே ஸஏவ குலநந்தன: .
தன்யா ச ஜனனீ தஸ்ய யேந தேவீ ஸமர்ச்சிதா.
ப்ரம்மஞானம் அவாப்னோதி ஸ்ரீமாதா ஆத்யா: ப்ரஸாதத: (காளிதந்த்ரம்)

மேலும் காளியை பூசிப்பதே, சிவன் விஷ்ணு முதலான அனைத்து தெய்வங்களையும் பூசித்ததாக ஆகும். ஸர்வதேவதா ஸ்வரூபிணியாக ஸ்ரீ காளி விளங்குவதால் இவள் ஒருத்தியை வழிபடுவதனாலேயே பிரம்மா, விஷ்ணு, சிவன், கௌரீ, லக்ஷ்மீ, கணபதி, சூரியன் இவர்கள் பூசிக்கப்பட்டவர்களாகின்றனர் என்று மந்திர சாஸ்திரம் கூறுகிறது. மேலும் புண்ணிய ஜன்ம-வசத்தால் காளியை பூசிப்பதனால் அவனருளால் அச்வமேதம் முதலிய உயர்ந்த யாகங்களின் பயனையும், தவம், தானம், புனிதக்ஷேத்ர தீரத்தயாத்ரை முதலானவற்றின் பயனையும் பெறுகிறான் என்கிறது காளீரஹஸ்யம்.

தனாச்வமேத ப்ரமுகைர் யாரிஷ்ட்வாசுச ஜன்மனாI
தத்தம் தானம் தபஸ்தப்தம் பூஜயேத் யஸ்து காளிகாம் I
பிரம்மா விஷ்ணு சிவோ கௌரீ லக்ஷ்மீர கணபதீ ரவி: I
பூஜிதாஸ் ஸகலாதேவா: ய: காளீம் பூஜயேத் ஸதா II (காளீரஹஸ்யம்)

காளி பூஜையில், விரும்பும் சிறப்புப் பயனைப் பெற்றிட, உகந்த, உரிய பொருளை, தேவிக்கு அர்ப்பணித்தல் முறையாகும். விருப்பப்பயனுக்கேற்ப வழிபாட்டுசெய்முறைகளும் சிறப்புப்-பொருள்களும் வேறுபடும். அதாவது வில்வஇலையினாலும், சிகப்பு அரளிப்பூவினாலும் பூசித்தால் காளி வரமருள்பவளாவாள் என்கிறது.

பில்வபத்ர ஸஹஸ்ராணி கரவீராணி வை ததா I
ப்ரதிநாம்நா பூஜயேத் ஹி தேன காளி வரப்ரதா II (காளிரஹஸ்யம்)

விரும்பும் பயனை அடைய மந்திரம், தியானம், ஜபவிதி, வழிபாட்டுமுறை, உரியபொருள் இவை வேறுபடும். இவற்றை குருவிடமிருந்துதான், அறிந்துகொள்ள வேண்டும். தாமே அறிந்து செயல்படுதல் துயரம் அளித்திடும். எனவே காளிபூஜைக்கு குருவருள் அவசியம். எடுத்துக்-கட்டாகவும், பொதுவாகவும், பூஜையில் பொருள்தியாகத்தின் பயன்களாக, சிவப்பு மலரால் பூசித்திட உலகில் விரும்பியது வசமாகும். செந்தாமரைமலரால் அர்ச்சித்தால் அவரது எதிரிகளும் நண்பர்களாகிவிடுவர். குபேரனை மிஞ்சும் அளவு செல்வம் பெறுவர். வில்வ

இலைகளால் அர்ச்சித்திட அரசபோகத்தைப் பெறுவார் என்றும், காளியை எருமை, ஆடு, ஒட்டகம் முதலியவற்றின் மாம்சாதிகளால் பலியிட்டு மகிழ்வித்தால் அவருக்கு விரைவிலேயே அனைத்து ஸித்திகளும் கைகூடுமென காளிரஹஸ்யம் கூறுகிறது. காளி பூஜைக்கு மட்டில் மாம்ஸம் அல்லது ரத்தத்துடன் அன்னம், அல்லது உயிர்பலியினை பூசை முடிவில் அளித்தால் மட்டுமே பயன்கைகூடும். பலி எனும் கிரியை பயனையும், வெற்றியையும், வலிமையையும், தரவல்லது. சௌம்யவழி பூசையாயினும் மாற்றுப்பொருள்களைக் கொண்டாவது அதனை மாமிசமாகக் கருதி பலி அளித்தல் பூஜை முறை ஆகும்.

ரக்தாம்போஜைர் பவேன் மைத்ரீ தனைர் ஜயதி வித்தபம்
பில்வபத்ரைர் பவேத் ராஜ்யம், ரக்தபஷ்பைர் வசீகிருதி: I
அஸ்ருஜா மஹிஷாதீனாம் காளிகாம் யஸ்து தர்பயேத் I
தஸ்ய ஸ்யுரசிராதேவ கரஸ்தாஸ் ஸர்வ ஸித்தய : I (காளிரஹஸ்யம்)

காளியின் ஒப்பிலா மஹிமை :- ஓங்காரி காளியின் ஒப்பிலா மஹிமைகளை சாக்தாகமங்கள் குறிப்பிடுகின்றன. அதாவது இவளை சரண்அடையும் அடியவர்கள் எத்தகையர்களாக இருந்தாலும் எந்த புனிதமற்ற, தாழ்ந்த, பக்குவமற்ற நிலையிலிருந்தாலும்கூட, அவளது பக்தனுக்கு, பெருதற்கரிய நிருவாணம் எனும் முக்தி பெறுவதற்கு அவர்கள் தகுதி-பெற்றவர்களாகி, பொருள், புகழ், ஞானம், அனைத்தையும் பெறுவர். இதனை புராணங்களில், தேவர், ரிஷிகள், மன்னர்கள், பாமரர்கள், ஞானியாகவும், புலவராகவும், வீரனாகவும் அருள்-பெற்ற வரலாறுகளால் உணரலாம். எடுத்துகாட்டாக விக்ரமாதித்தன், காளிதாஸமகாகவி, மூககவி, முதலானோர். பெண்தெய்வங்களின் மூலமந்திரங்களுக்கு வித்யா என்று பெயர். இதில் காளியின் மந்திரவித்யைக்கு நிகரேதுமில்லை. காளிவழிபாட்டின் பயனுக்கு, நிகராக வேறு தெய்வ வழிபாட்டுப் பயன் இல்லை. காளிஅருளால் கிட்டிடும் ஈடற்ற ஞானத்திற்கு ஸமமானதொரு ஞானமில்லை. காளியைக் குறித்துச்செய்திடும் தவத்திற்கு ஸமமாக வேறு தெய்வத்தவம் கிடையாது என்று சாக்தாகம நூல் காளீதந்த்ரம், காளியின் மஹோன்னத மகிமையைக் கூறுகிறது.

நஹி காளிஸமா வித்யா நஹி காளிஸமம் பலம்.
நஹி காளிஸமம் ஞானம் நஹி காளிஸமம் தப: என்கிறது. (காளீதந்திரம்)

ஸ்ரீசக்ர நிலயா ஸ்ரீகாளிகா:- சாக்தாகமங்கள் காளியே பரப்ரம்மஸ்வருபா என்றும், இவளே சாந்தமாயும் உக்ரமாயும் இருவகை வடிவங்களில் இருவகையாக வழிபடப்படுகிறாள் என்றும் முடிவாகத் தெரிவிக்கின்றன. சாக்தத்தில் ஸ்ரீசக்ரம் சக்ரராஜம் எனப்படுகிறது. ஸ்ரீலலிதா மஹா-திரிபுரசுந்தரி ஷோடசீ மஹாவித்யா பராபட்டாரிகா பூஜிக்கப்படுகிற, ஸ்ரீ சக்ரம் என்பது யந்திரமாயும், அர்த்தமேருவாயும், பூர்ணமேருவாயும், நவாவரண பூஜை செய்திடும் வகையில்

முறையே மேருமலை போன்று, உள்புறம் மேலிருந்து வெளிப்புறம் கீழ்வரையாக முறையே 1. வட்டம் = பிந்து, 2. திரிகோணம் = முக்கோணம், 3. வசுகோணம் = எண்கோணம், 4. தசாரம் = பத்துகோணம், 5. தசகோணம் = பத்துகோணம், 6. மன்வச்ரம் = பதினான்கு கோணம், 7. நாக-தளம் = எட்டு இதழ் பத்மமண்டலம், 8. ஷோடசதளம் = பதினாறுதளபத்மம், 9. விருத்தத்ரயம் = மூவட்டம், 10. ஸதனம் = பூபுரம் வீடு. என்று பத்து உறுப்புகளைக் கொண்டு, தட்டையாகவோ மேருமலை போலவோ அமைக்கப்படுவது ஸ்ரீ சக்ரமஹாமேரு எனப்படும். இதில் ஸ்ரீ வித்யாவை பூஜித்திடுவர். இச்சக்ரம் சைவத்தில் எவ்வாறு உயர்தரவடிவமாக, அருவுருவமாக, சிவலிங்கம் விளங்குகிறதோ, அதேபோன்றே சாக்தத்தில் மஹோன்னதமான அருவுருவத் திருமேனியாய்த் திகழ்வதாகும். துர்கை, கந்தர் முதலான ஒவ்வொரு தேவதையின் யந்திரமண்டல வடிவத்தையும், இவ்விதம் மேருவாக அமைத்தும் பூசிக்கலாம். சிவலிங்கத்தைப் போன்றே இதிலும் முத்தத்துவ முப்பகுதிகள், சிவசக்திஐக்யபாவனை, ஆவரண பூஜைக்கு உரிய இடங்களாக பல உறுப்புகள், யாவும் உள்ளன, என்று அறியவும். ஸ்ரீவித்யா லலிதா, தனது பதியாகிய காமேச்வரரின் மடியில் அமர்ந்து விளங்குவது போலவே, காளியும் மகாகாளரின் மடியில் அமர்ந்து இணைந்து இருப்பவள் என்கிறது சாக்தம். இவள் உக்ரகிருத்யா ஆவாள். சிவலிங்கத்தைப் போலவே ஸ்ரீசக்ரத்தில், பிந்துவில் சிவனையும், முக்கோணத்தில் தேவியையும் பூசித்திடுவர். எனவே, தேவிக்கு த்ரிகோணாந்தர தீபிகா, த்ரிகோணகா என்ற திருநாமங்கள் உண்டு. பரபிந்து ஸ்வரூபமாக பரதேவதை விளங்குவதால், இவளுக்கு பிந்துஸ்தானத்தில் விசேஷார்கியத்தால் தர்பணம் செய்து மகிழ்விப்பர். இதனை "பிந்து தர்பண ஸந்துஷ்டா" என்ற நாமாவளி உணர்த்தும். ஸ்ரீகாளிக்கும் மந்திர நடுவில் 9 / 5 அல்லது 3 முக்கோணங்களில் யந்த்ர அமைப்பு விளங்குகிறது. ஒவ்வொரு முக்கிய சுற்றுத்தேவதைக்கும் முக்கோணம் அல்லது பத்மதளம் இடமாக அமையும். யோநிநிலயா என்றும் நவயோநி மண்டலஸ்தா என்றும் போற்றப்பட்டு, காளி உலகத்தோற்றுவாயாக, மூலகாரணியாக, கருதப்பட்டு, யோனி அதாவது பெண்குறிக்கருவாய் வடிவிலோ, ஞான விருக்ஷமாகிய அரசமரத்து அரசிலை வடிவிலோ, எட்டுதளமுள்ள தாமரைமலர் வடிவிலோ, அக்னியின் தத்வமண்டலமான முக்கோணவடிவிலோ காளி பூசிக்கப்படுகிறாள். எனவே ஸர்வமந்த்ராத்மகமாய் விளங்கும் ஸ்ரீசக்ரம் விளங்குமிடத்தில் பரதேவதையின் ஸாந்நித்யம் ஏற்படும். அதில் இல்லாதது ஒன்றுமில்லை எனப்படுதலால் ஸ்ரீ சக்ரநாயகி காளியே ஆவாள்.

<u>காமாக்ஷிகாளியே காமகலா :-</u> ப்ரபஞ்ச சிருஷ்டிக்குமுன் சித்சக்தியாக பரதேவதை ஒருத்தியாகவே இருந்ததால், இவள்தான் அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்தையும் தோற்றுவித்தவள். ஆகையினால் இவளை காமகலை என்று ஞானிகள் அறிந்து கூறுவர். காமம் அல்லது காமனா என்றால் ஆசை, அதாவது மனவிருப்பம் என்று பொருள். நாதபிந்து வடிவாய் அதாவது நாதம் = ஒலியாய், பிந்து = ஒளியாய் விளங்கிய பரபிந்து வடிவினளே, உலகை முன்பு போல் படைக்க விரும்பி, தன்னிடமிருந்து தமது அச்சமாக முதலில் ஷடத்வா எனப்படுகிற வர்ணம் = எழுத்து, பதம் = சொல், மந்திரம் = ஆற்றல்மிகுகாப்புஒலி ஆகிய

மூவகை அத்வாக்கள் ஆன சப்தப்ரபஞ்சத்தையும், தத்துவம் = 36 போக ஸாதனமான அகக்கருவிகள். புவனம் = போக ஸ்தானமாகிய 224 உலகங்கள், மேற்கூறிய ஐவகை அத்வாக்களையும் தம்முள் அடக்கிய பஞ்சகலைகளையுமாக தன்னை ஆறுவகையாக வெளிப்படுத்தி, உலகாக விளங்குகிறாள். நிவிருத்திகலை, ப்ரதிஷ்டாகலை, வித்யாகலை, சாந்திகலை, சாந்தியதீத- கலை ஆகிய கலைகள். ஐந்தும் பஞ்சப்ரம்மமய, பஞ்சஸாதாக்யமய, பஞ்சபூதமயமாயும் திகழும் சக்தியின் கூறுகள்.

<u>பராசக்தியும், பஞ்சகிருத்யமும் : -</u> படைத்தலுக்கு ஸ்ருஷ்டிகர்த்ரீ ப்ரம்மரூபாவாயும், காத்தலுக்கு கோப்த்ரியாக கோவிந்தரூபிணியாகவும், ஒடுக்குதலுக்கு ஸம்ஹாரிணீருத்ர-ரூபாவாயும், மறைத்தலுக்கு திரோதானகரியாக ஈஸ்வரியாயும், அருள்வதற்கு ஸதாசிவையாக அனுக்ரஹதாவாயும், ஐந்தொழிலாற்றும் பஞ்சகிருத்ய பராயணியாக இருப்பவள். கிரியாரூபமான ஆற்றல்மிகு சக்திகள் மந்திரகலைகளே ஆகும். ஐந்தொழிலாற்றும் பிரம்மா முதலான ஐவரிடத்திலும் விளங்கும் மொத்த கலைகள் 64 கலைகளாகும். அவைகளே முக்கோண வடிவில் ஸ்ரீ சக்ர மேருவில், பஞ்சபிரம்மாஸனஸ்திதாவாக 64 சதுஷ்ஷஷ்டி கலாமயாவாக, காமேச்வர-சக்தியாய் விளங்குவதாலும், சூரியன், சந்திரன், அக்னி, சக்தி மண்டல கலைகளாயும் விளங்குவதாலும், ஸ்ரீ சக்ரநாயகியே காமகலேச்வரீ எனப்படுகிறாள். இத்தகைய ஸ்ரீசக்ரம் விளங்கும் நவநாயகிகள் காமேச்வரியான காமாக்ஷி என போற்றப்படுகிறாள். ஸ்ரீசக்ரபீடத்தின் திருவுருமாய், ஸ்ரீகாஞ்சியில் திகழ்பவளே காமாக்ஷி ஆவாள். அவளது கைகளில் உள்ள பாசம் அங்குசம் இரண்டு ஆயுதமும், மலர்க்கணைகளையும், தாமரை மலர் மொட்டும், மனதின் காமனாரூபமாய் கரும்பு வில்லையும் கொண்டு, வெளிப்படாத நிலையில் அடியவர்க்கு அருளும் ஸ்ரீசக்ர நாயகியாக காமகலாரூபி காமாக்ஷி விளங்குகிறாள்.

<u>சாக்தபூஜா விதிமுறை : -</u> வேதங்கள், ஆகமங்கள், தந்திரமந்த்ர சாஸ்திரங்கள், புராணங்கள், சிற்ப சாஸ்திரங்கள் முதலான சமய முதல் நூல்கள், மகிமைகளுடனும், வரலாறுகளுடனும் தேவியின் திருவுருவங்களை விளக்குகின்றன. இவற்றுள் தேவியின் திருநாமங்களும், திருமேனி வடிவங்களும், எண்ணிலா நாமரூபங்களாய் கூறப்படுகின்றன. [1]பராசக்தி இடமிருந்து ஆயிரத்தில் ஒரு கூறாக, அவளது அம்சமாகவே [2]ஆதிசக்தி வெளிப்பட்டதாயும், இவ்வாறே அவளிடமிருந்து முறையே [3]இச்சாசக்தி = விருப்ப ஆற்றல், [4]ஞானசக்தி = மெய்ஞான ஆற்றல், [5]கிரியா சக்தி = செயலாற்றல் என ஐவகை சக்திகளின் வெளிப்பாட்டை சைவ வாதுளாகமம் விளக்கி உள்ளது. பராசக்தியின் ஒரு கூறாகவே துர்கையும், சாமுண்டீஸ்வரியும், பத்ரகாளியும் கூறப்படுவர். தமிழ் இலக்கியங்கள் துர்கையை குறிப்பிடுகின்றன. சாக்தநெறியில் சக்தி வழிபாடு செல்வாக்கு பெற்ற நிலையில், காளிபூசையும், துர்கைஅம்மன் பூசையும் சிறப்பாகப் பின்பற்றப்படுகிறது. காளீ மற்றும் துர்கை, மாரியம்மன், சப்தமாதாக்கள் முதலான கொற்றம்மிக்க தெய்வ வடிவங்கள் கிராமம், நகரம் இவற்றில் வெளிப்புறத்தில் எல்லைப்பகுதியில் தனிக்கோயில்கள் அமைத்து,

வழிபடப்படுகின்றன. இவற்றில் வழிபாடு இருவகை நெறியில் நிகழ்வன. சாந்தமான பூஜாநெறியில், மதுமாம்ஸாம் முதலியவைகளை விலக்கி மாற்று வழியில் மகிழ்விப்பது சைவநெறி வழிபாடு. மற்றொன்று உக்ரமான பூஜாநெறியில் மதுமாம்ஸாதிகளுடன் உயிரினப்பலிஉதிரத்துடன், ஆசார்யர் அந்தணர் அல்லாத பாரசைவர்களால் பூசாரிகளால் செய்யப்படும், சாக்ததந்த்ரமார்க்க பூசை வழிபாட்டு முறை ஆகும். அன்றாடம் செய்வது அல்லது தொடர்ந்து ஏதேனும் ஒருமுறையில் குறிப்பிட்ட கிழமை அல்லது திதிகளில் மட்டும் செய்வது காளியின் நித்யபூசைமுறை ஆகும். இதனை பாரசைவர்களான பூசாரிகளும் மற்றய உபாஸகர்- களும் செய்திடத்தகுதியுடையோர். முதலில் செய்யப்படுவதான பிரதிஷ்டையையும், 12 ஆண்டு களுக்கு ஒருமுறை செய்யத்தக்க சம்புரோக்ஷணமெனும் கும்பாபிஷேகத்தையும், சிறப்புகால மாதம், திதி, நட்சத்திரம் இவற்றில் செய்யத்தக்க பலநாள் திருவிழாவான உத்ஸவத்தையும், ஆதிசைவகுலத்து உதித்த ஆசார்யர்களைக் கொண்டு, செய்து கொள்வது, நைமித்திகபூசை எனப்படும். வேண்டுதலின் பேரில் விருப்பகாலத்தில் விரும்பும் வகையில் செய்யத்தக்க காம்ய-பூசைகளை பூஜாகாரி எனும் பூசாரிகளைக் கொண்டு செய்ய வேண்டுமெனவும் சாக்ததந்த்ர-மாகிய நூல்கள் கூறுகின்றன. இத்தெய்வங்களுக்கு குருதிப்படையலுடன் செய்யப்படும் கௌல-மார்க்கபூஜை விருப்பமான பூசையாகும். உக்ரவடிவதெய்வங்களை அமாவாசை, தேய்பிறை அஷ்டமி, சதுர்தசி ஆகிய திதிகளிலும், சாந்தவடிவதெய்வங்களையும், உக்ரவடிவதெய்வங்-களையும், ப்ரதிமாதபௌர்ணமி திதியிலும், செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அனைத்து தேவியர்களையும் பூசை செய்வது சிறப்புப்பயன் தருவது ஆகும்.

<u>காளி கோயிலமைப்பு :-</u> காளியின் கோயில் மூவகையாகும். 1) ஸஹஜாலயம் = இணைந்த கோயில் அதாவது ஒரு கோயிலில் சுற்றுபரிவாரமாய் அமைவது. 2) மிச்ராலயம் = தேவீ தனி ஆலயத்திலோ, ஆலயத்துடனேயே அருகில் தனியே அமைவது, 3) ஸ்வதந்திராலயம் = தனித்தாட்சி செய்யும், தாமே பிரதானமாய், மூலமாய்விளங்கும், தனிக்கோயில் எனப்படும். இவை மூன்றிற்கும் வழிபாட்டில் வேறுபட்ட விதிமுறைகள் கையாளத்தக்கவை ஆகும். சிவாலயத்தில் தேவீஆலயத்தை அமைக்காவிடினும், சிவலிங்கத்தில் யோகசக்தியாக இணைந்து இருக்கிறாள். இருப்பினும் அருகில், அசையும் நிலையில உலோகசிலையில் முகமண்டபத்தில் போகசக்தியையும், வெளிப்பகுதியில் வீரசக்தி ஆலயத்தையும் ஆக முச்சக்தியுடன் கூடியே சிவாலயம் விளங்கும். அவ்வாறே தேவீ ஆலயத்தை சிவனது மாகேச்வர மூர்த்தங்களுள் ஏதேனும் ஒன்றுடன் கூடியதாகவோ, தேவிக்கு அருவுருமான ஸ்ரீசக்ரமிருப்பின் சிவலிங்கத்துடனோ, சிவனோடு சேர்த்தே ஆலயம் அமைய வேண்டுமென்பதை ஆகமம் வலியுறுத்துகிறது. சிவாலயத்தில் லிங்கமானது கிழக்கு அல்லது மேற்கு நோக்கி இருந்தாலும் தேவியை வலது அல்லது இடது பக்கத்தில் வடக்கிலோ, தெற்கிலே, கிழக்கு நோக்கியவாறோ சிவவசக்தியின் ஆலயத்தையும் அல்லது வடக்கில் தெற்கு நோக்கியவாறும் தேவீ ஆலயம் அமையத்தக்கது. சிவாலயத்தில் 2ம் பிராகாரம் முதல்

4ம் ப்ராகாரம் வரையில் பரிவார தெய்வங்களை சிவாகமங்கள் 8, 12, 16, 24, 32 என பகுத்து உரிய இடம் திசை நோக்குடன் தேவதைகளைக் கூறி விதித்துள்ளது. அதன்படி காளியையும், துர்கையையும் எங்கும் அமைக்கலாம் என்ற போதும், தெற்கில் அல்லது தென்மேற்கில் வடக்குமுகமாயும், துர்கையை அக்னிமூலையில் வடக்குமுகமாயும், வாயுமூலையில் கிழக்குமுகமாயும், சிவாலயத்தின் கோட்டமாகிய கண்டஹர்மியத்தில் ருத்ரபத்னியாகிய துர்கையை வடக்குமுகமாகவோ அமைத்து வழிபடுவது முறையாகும். கிராம எல்லைப்பகுதியில் உள்புறத்தில் வெளிநோக்கு உள்ளவாறோ அல்லது உரியதிசைநோக்கிலோ கிராம தேவதைகளாகவும் காளி கோயில், துர்கை அம்மன் கோயில், பீடாஹாரி கோயில் (பிடாரி), மாரி கோயில் முதலியவற்றைத் தனிக்கோயிலாக அதன் சுற்றுத்தெய்வங்களுடன் அமைத்தல், பூசித்தல் முறையாகும். இத்தகைய கோயிலில் மட்டுமே பலநாள் திருவிழாவை செய்திட வேண்டும். பரிவாரமாய் இருந்தால் விழா செய்தல் கூடாது.

தனிக்கோயில் என்பது, காளிக்கு மட்டும் பிரதானமாக, மூலக்கருவரையும், விமானமும் அமைக்கப்பட்டு, உரிய முறையில் ராஜகோபுரம், சிம்மம், பலிபீடம், துவஜஸ்தம்பம் (கொடிமரம்) துவார சக்திகள், அர்த்த மண்டபம், முகமண்டபம், ஸ்நபன மண்டபம், அலங்கார மண்டபம், மஹா மண்டபம், பல சுற்றுப்ராகாரம் (திருச்சுற்றுத்தலம்) இவற்றுடன் அமைக்கப்படுவது. இத்தகைய ஆலயத்தில் முகபத்ரமாக நீள்சதுரவடிவபீடத்தில், (மேடையில்) அல்லது சிம்ம-வாஹனத்தின் மீது வலது காலை, தொங்கவிட்டு இடது காலை மடக்கிக்கிடத்தி அமர்ந்த நிலையிலோ, அல்லது பீடத்தில் உட்கார்ந்த நிலையிலோ, சிம்மத்தருகில் நின்றநிலையிலோ, அல்லது பீடத்திலோ, சிம்மத்திலோ ஒரு காலை, வலதுபாதத்தை வாஹனம் அல்லது பீடத்தில் பதித்துவைத்து, மற்றய இடதுகாலை தரையிலோ, அசுரதேகத்திலோ, அசுரத்தலையிலோ ஊன்றியவாறும், வலக்கையை கட்கம் அல்லது சூலத்துடன் உயர்த்தி, முனை கீழ்நோக்கியவாறு, குத்திடுவதாக சூலத்தைப் பிடித்தவாறு காளியின் திருவுருவ அமைப்பு விளங்கும்.

<u>காளியின் திருவுருவங்கள் :-</u> காளியின் திருவுருவம் பைரவர் மற்றும் வீரபத்திரர் உருவத்தை ஒத்த வடிவில் பெண்ணுருவாய் விளங்கும். இவளது வடிவம் 64 வகையாக கூறப்படுகிறது. நான்கு கை முதல் 6, 8, 12, 16, 18, 32 என கை அமைப்புகளுடனும், ஒன்று, ஐந்து, பத்து, ஆயிரம் தலைகளுடனும், குஹ்யகாளீ என்பது பல்லாயிரம் கரம், சிரம் கொண்டதாயும், மிக பயங்கரமாயும் கூறப்பட்டுள்ளன. கொற்றம்மிக்க கோலம் காளிக்கே உரியவடிவமாகும். மூவுலகிலும் காளியின் பராக்ரமத்திற்கும், வீரத்திற்கும் உவமை இல்லை என்றும், சத்ருவை அஞ்சிடவைத்து, அழித்திடவல்ல வேறு சக்தி இல்லை என்றும் தேவீமாகாத்மியத்தின் தேவர்துதி தெரிவிக்கிறது.

"கேநோபமாபவது தேஅஸ்ய பராக்ரமஸ்ய I
வீரயம்ச சத்ருபயஹாரி அதிகாரிகுத்ர II
சித்தேகிருபா சமர நிஷ்டுரதா ச திருஷ்டா I
த்வய்ஏவ தேவிவரதே புவனத்ரயேபி II" (தேவீ சப்தசதீதுதி)

சமரில் கொடூரமாயினும், மனதில் கிருபை கொண்டு, வரமளித்து காப்பவள் காளியே என்கிறது. பொதுவாகவும், அதிகமாகவும் ஆலயங்களில் 4 கைகளிலும், 8 கைகளிலும் உக்ரமாகவே காளியின் திருவுருவம் அமைந்து அருள்கிறது. அதில் வலது முன்கையில் திரிசூலம் அல்லது கத்தியும் இடது முன்கையில் குருதி அருந்தும் பானபாத்திரம் அல்லது மனித மண்டைஓட்டு, கபாலகிண்ணம், வலது இடதில் மேல்பின்கரங்களில் உடுக்கை, பாசம் இவற்றுடன் பரட்டைத் தீச்சுடர் சடைமுடியும், குரூரவட்ட விழியும், வாயில் இருபக்கத்திலும் கோரமான தெற்றிபற்களும், நீண்டுதொங்கும் நாக்கும், அஷ்டநாக 8 பாம்பகளால் அணிகலன்களும், 57 மண்டை ஓட்டு மாலையும் சிறப்பு அமைப்பாகும். ரக்தசாமுண்டீஸ்வரிக்கு பின்கைகளில் டமருகம் (உடுக்கை), பாசம் (கயிறு) இரண்டு அல்லது சக்ரம் சங்கு இவற்றுடன் முன்கைகளில் வலது இடதாக மலர்களையும், கரும்பு வில்லும் அமைப்பாகும். எட்டுகை காளியானது மேற்படி உடலமைப்புடன் எட்டுகரங்களில் கத்தி, சூலம், கபாலம், வேதாளம், மணி, உடுக்கை, பாசம், வில், அம்பு, கேடயம் அல்லது தீச்சட்டி, வீரத்தை வியந்து தெரிவிக்கும், விஸ்மயமுத்திரை, வரதம் அபயம் அல்லது எச்சரிக்கும் தர்ஜனீ முத்திரை இவற்றுடன் அமைப்புடையதாகும். காளிபூசையில், தவறாமல் சிம்மத்திற்கு பூசை செய்யப்பட வேண்டும். காளியின் வாஹனமாக, சன்னதியில் சிம்மத்தை அமைத்திட வேண்டும். இது படுத்த நிலையிலோ, நின்ற நிலையிலோ, பாயும் நிலையிலோ அமைக்கப்படலாம். சாந்தவடிவதேவியர்க்கு வ்ருஷபம் அமைக்கத்தக்கது. இந்துசமயத்தில் வாஹன அமைப்பு முக்கியமாகவும், முப்பொருளையும், உயிரினங்கள் இறைவனை அடைய முயல்வதையும் குறிப்பிடும், பசுபதார்த்த தர்மரூபமாகும். வூஹனம் அழியாத தருமதேவதையாக கருதப்படுகிறது. சிம்மம், சம்ஹார செயலையும், மாமிச உணவையும், காட்டுக்கும், விலங்குக்கும் அரசனாக இருப்பதாலும் இத்தகைய குணமுள்ள காளிக்கு சிம்மமே வாஹனமாகத் திகழ்கிறது. சிங்கம் இருக்கும் இடத்திற்கு பிற பிராணிகள் செல்ல அஞ்சும், தேவையில்லாத போது சிம்மம் தனது இயல்பான ஹிம்சித்தலை, துன்புறுத்தலைச் செய்யாது. எனவே சம்ஹார செயலான போரில் ஈடுபடும், துர்கை, காளி இவர்களுக்கு, போரில் பேருதவி புரிந்தும், அசுரப்படைகளை அழித்தும், அறம்காத்தது சிம்மமே ஆகும். இதனாலேயே சிவன் முதல் அனைத்து தெய்வங்-களுக்கும் இருக்கையில் சிம்மாஸன பூசை இடம் பெறுகிறது. அறம் காக்கும் அரசர்களுக்கும், அரியணையாக, சிம்மாசனம் திகழ்கிறது. மஹாப்ரளயகாலத்தில், அழியாது நின்றிடும் தரும-தேவதையை, சிவசக்தியை வாஹனமாக ஏற்று, அருளியதாக வேதாகம புராணங்கள் மகிமையை விளக்குகின்றன.

காளியின் வழிபாட்டு முறை : ஒரு தெய்வத்தை உபாசனை செய்வது என்பது, அந்த தெய்வத்தைப் பற்றிய பஞ்சாங்க செய்திகளை அறிந்து, அவசியமாய் பின்பற்றுதலாகும். அவை முறையே 1) படலம் = தெய்வத்தைப் பற்றிய செய்திகளை அறிதல், 2) பத்ததி = யந்திர பிம்பாதிகளின் பூசை முறைகளை அறிதல், 3) வர்ம / கவசம் = தெய்வத்தின் பாதுகாப்புத்-துதியால் தற்காப்பு பெறுதல், 4) நாமஸாஹஸ்ரகம் = தெய்வத்தின் அரியபெயர்களையும், 108, 300, 1008 திருநாமாக்களையும் அறிதல், 5) ஸ்தோத்திராணி = தெய்வத்தின், இதயஸ்தவம், மஹிமாஸாரஸ்தவம் மற்றும் பலவகை உயர்தர துதிப்பாடல்களை அறிந்து, துதித்திடல் ஆகியவை பஞ்சாங்கமெனும் ஐம்பெரும் உறுப்புகள். இவ்வைந்தையும் செய்து வருவது உபாசனை ஆகும்.

மந்திரஒலியின் உச்சரிப்புப்பயிற்சி : பூஜைக்கான யந்திரம் அல்லது பிம்பம் இவைகளை முதலில் முறையே பஞ்சகவ்யத்தால் சுத்திசெய்து, புனிதப்படுத்தி, அத்தேவதையின் மந்திரங்களை தமது உடலில் முதலில் பதித்து, தாமும் அத்தெய்வத்தகுதி மற்றும் உருவஒற்றுமை பாவனையுடன், தெய்வத்தின் இந்த பஞ்சாங்கத்தையும் முறையே பின்பற்றி உரிய காலம் வரை செய்து மந்திர சித்தியைப் பெறுதல் முறையாகும்.

படலம் பத்ததீ வர்ம ததா நாம ஸஹஸ்ர கம் I
ஸ்தோத்ராணி சேதி பஞ்சாங்கம் வேததோபாஸனே ஸ்மிருதம் II

(மந்திரசாஸ்திரம்)

இம்முறைக்கு காரணம் யாதெனில்? இவை ஐந்து உறுப்புகளும் சேர்ந்தாலே, தேவதையும், பூசையும் முழுமைபெறும். இவற்றில் கவசம் உடலாகவும், படலம் தலையாகவும், பத்ததி கைகளாகவும், ஸஹஸ்ரநாமதுதிதேவியின் திருமுகமாகவும், தோத்திரங்கள் தேவதையின் திருவடிகளாகவும், விளங்குவதால் இவ்வைந்தையும் கடைபிடித்தால் மட்டுமே அத்தெய்வ அருள்கிட்டுவது உறுதியாகும். எனவேதான் தேவர்களும் சிவனை ஆயிரம் பெயர் கூறி போற்றுவதாக சமயாசாரியரான அப்பர்பெருமான் தேவாரத்தில் "பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை" என்றும், "போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே" என வருந்தியும், "இறைவனைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று கருதியும் சைவபக்தர்கள் போற்றிப் பயனடைந்து உள்ளனர். அபிராமிபட்டரும் தேவியை "சேர்திருநாமங்கள் செப்புவரே" என்றும், "வந்தேசரணம்புகும் அடியாருக்கு வானுலகம்" என்றும் அந்தாதியில் குறிப்பிடுகிறார்.

சாக்த மந்திர மஹிமை :- தெய்வங்களின் அருள் பெறவும், நம்மைக் காத்துக் கொள்ளவும், தெய்வங்களை வெளிப்படுத்தவும், மகிழ்விக்கவும், நிலைபெறச் செய்யவும், பயன்பெறவும், தெய்வங்களின் மந்திரங்கள் நமக்கு பெரிதும் உதவுகின்றன. மந்திரத்தின் பொருளுணர்ந்து, மனதில் எண்ணுபவனை இது காப்பதனால், இது மந்திரம் என்று பெயர் பெறுகின்றது.

ஒருவரை அழைக்கவும், செயலாற்றச் செய்யவும் அவரது பெயர் தேவையாகிறது. அவ்வாறே பெயர் கூறி அழைத்த உடனே அப்பெயருள்ளவர் நம் அருகில் வருவது போலவே, தெய்வங்களும் மந்திர உச்சரிப்பால் வெளிப்பட்டு, அருள்புரிந்து, பயன் தருவர். எந்ததேவியானவள், ப்ரளயகாலத்தில், அசையாததான ஸ்தாவரம், அசைவதான ஜங்கமம் என இருவகையாய் விளங்குகிற ஸகல பிரும்மாண்டங்களையும் ஸம்ஹரிக்கிறாளோ, அக்காளியை வணங்குகிறேன் என்று கூறி, பொதுவான காளியின் துதிமந்திரத்தால் காளியை யாவரும் வணங்கலாம்.

காளீ காலயதே ஸர்வம் ப்ரம்மாணம் ஸசராசரம்
கல்பாந்த ஸமயே யாதாம் காளிகாம் ப்ரணமாம்யஹம் (துதி)

பராசக்தியே சப்தபிரம்மமயீ என்றும், பராத்பரமயீ என்றும் போற்றப்படுபவளாக ஓசை வடிவாய், சூக்ஷ்மமாயும், ஸ்தூலமாயும், ஒலியாகவும், சொல்லாகவும், பரா, பச்யந்தி, மத்யமா, வைகரீ என நான்கு ஒலி வடிவமாய் விளங்குகிறாள். உடலில் ஓசை நால்வகையாக உள்ளதை, வேதம் "சத்வாரி வாக் பரிமிதா பதானி I தானி விதுர் ப்ரமணா யே மநீஷிண: II" என்கிறது. பரபிந்துவிலிருந்து 50 எழுத்துக்கள் முதலில் தோன்றி, அவை ஒன்பது பகுதிகளாகி, இவ்வாறு நவகண்ட மாத்ருகாக்ஷரங்களாகின்றன, இவற்றின் சக்திகளாக, மாத்ருகா தேவிகள் சைவா-கமத்திலும், சாக்தாகமத்திலும் கூறப்படுகின்றனர்.

மந்த்ராக்ஷரமயீம் தேவீம் மாத்ருகாரூப தாரிணீம் I
நவதுர்காத்மிகாம் ஸாக்ஷாத் கன்யாம் ஆவாஹயாம்யஹம் II (சாக்தம்)

எல்லா மந்திரங்களுக்கும் மூலமாய், ஆதாரமாய் விளங்குவன, 50 எழுத்துக்களே. எனவே தான் எல்லா தெய்வ வழிபாட்டிலும், தவறாமல் மாத்ருகாக்ஷர நியாசம் இடம் பெறுகிறது. படைக்கும் சக்தியை, யோகினிகளாக, சோணிதசக்திகளாக தனக்குள் பெற்றுள்ள, கன்னிப்- பெண் (குமரிப்பெண்) வடிவில், துர்கையும், காளியும் பூஜிக்கப்படுவதால், மகிழ்ந்து அருள்வார்கள் என்கிறது சாக்தாகம நூல்கள். எனவே கன்னிபூசை, குமாரிபூசை தவறாமல் செய்யப்படுகிறது.

"யஸ்யாப் பரதரம் நாஸ்தி ஸைஷா துர்கா ப்ரகீர்த்திதா" என்கிறது தேவீஉபநிஷதம். "நஹிகாளிஸமா வித்யா" என்ற சாக்தாகமக்கொள்கை முடிவாலும், துர்கையும், காளியும் ஒரே பகவதியே ஆவர். இவர்களுக்கு சிறப்பாக 9 என்ற எண்ணிலும், 81 என்ற எண்ணிலும், சிறப்பு பதம், முக்கோணம், இவற்றுடன் யந்திரமந்திர நாமாவளிகள் உள்ளன. துர்கையை கன்யகுமாரி என துர்காசூக்தத்தில் யஜுர்வேதம் குறிப்பிடுகிறது. மதங்கமுனிவர் யோகப்பயனாய் சிவசக்தியை மகளாக அடைந்து, வளர்த்ததனால், மகாகவிகாளிதாஸரும் மதங்கமுனிகன்னியே என்பார். காளியே இளமையாக, சாந்தமானவளாக, சியாமளா என்றும், மாதங்கீ என்றும் பெயர் பெறுகிறாள். நவாக்ஷர மந்திரத்தின் நாயகியாக சாமுண்டீஸ்வரியே விளங்குகிறாள். துர்கையும் காளியும் உலகத்திற்கு பயத்தைப் போக்குவதால் இவர்களின்

மந்திரத்தில் சிறப்பாக விச்சே என முடிவடையும். விச்சே என்றால் அபயமளிப்பவள் என்பது பொருள். சிவபஞ்சாக்ஷரத்தைப் போன்று சாமுண்டீ நவாக்ஷரீ மந்திரத்தில் மட்டுமே தேவிபராசக்தியான சாமுண்டா எனப்படும் காளியின் பெயர் உள்ளது தனிச்சிறப்பு ஆகும். பஞ்சதசீ, ஷோடசீ, முதலிய மற்றய மந்திரங்கள் பலப்பல எண்ணிக்கையில், சிறப்புக்கூட்டு எழுத்துசக்திகளாய், விளங்குவன. சக்திகளின் மந்திரத்திற்கு வித்யா என்று பெயர். சாக்தமந்திரபேதமானது, அவற்றின் முதல்எழுத்தைக் கொண்டு, ஏழுவகை என்று மந்திர சாத்திரங்கள் கூறி உள்ளன. அவை முறையே,

1) காதி வித்யா = க என்ற எழுத்தில் துவங்குவது காதி எனப்படும்.
2) ஹாதிவித்யா = ஹ என்ற எழுத்தில் துவங்குவது ஹாதி எனப்படும்.
3) குரோதாதிவித்யா = குரோதபீஜம் எனப்படுகிற ஹூம் என்று துவங்குவதாகும்.
4) வாகாதிவித்யா = வாக்பவபீஜம் எனப்படும் ச்ரீம் என்ற எழுத்தில் துவங்குவனவாகும்.
5) நாதிவித்யா = நம: என்ற சொல்லில் துவங்கிடுவதாய் விளங்குபவை.
6) தாதிவித்யா = மூன்றாவது த என்ற எழுத்தில் துவங்குவனவாகும்.
7) ப்ரணவாதி = ஓம் என்று பிரணவத்தில் துவங்கும் மந்திரங்கள் ஆகும். மந்திரங்களில், ஒரு எழுத்து மந்திரங்களாக இருப்பவை, அந்த தேவதையை அழைப்பவை. மரத்தை விதை வெளிப்படுத்துவது போல், அது தெய்வத்தை வெளிப்படுத்துவதாக விளங்குவதால் அது பீஜாக்ஷரம் எனப்படுகிறது. அதாவது விதை போன்ற எழுத்து ஆகும். பொதுவாக தெய்வங்களின் பெயர்களில் உள்ள முதல் எழுத்தே அந்த தெய்வத்தின் பீஜமந்திரமாகும். சண்டீநவாக்ஷரியில் காளியின் பீஜாக்ஷரமாக "கலீம்" விளங்குகிறது. சாக்தவித்யாதந்த்ரமாகிய மந்திரசாஸ்திரங்களில், காளீதேவிக்கு "க்ரீம்" பீஜாக்ஷரமாக விளங்குகிறது. ஐம் என்பது வாக்பவ பீஜம் என்று சரஸ்வதிக்கு உரியதானாலும், பரதேவதா மஹாமாயையைக் குறிப்பிடவும் இடம் பெறும். ச்ரீம் என்பது லக்ஷ்மீ பீஜம் என்றாலும் உக்ரசக்திகளுக்கும் வல்லமைகளுக்கும் பயன்படும். ஐம் ஹ்ரீம் ச்ரீம் இவை மூன்றும் சேர்ந்தது சாக்தப்ரணவம் எனப்படும். ஐம், ஹ்ரீம், ச்ரீம், க்லீம், ஸௌ: எனும் இவை ஐந்தும் விமர்சப்ரணவம் எனப்படும். சாந்தரூபிணியான புவனேஸ்வரீ, ஸ்ரீ வித்யா, சிவசக்தி இவர்களின் பீஜாக்ஷரத்துடன் சிறப்பானதொரு நவாக்ஷரீ மஹாமந்திரமானது ஒன்பது சைவாகமங்களின் ஸாரமாகத்திகழும். திருமூலர் அருளிய திருமந்திரத்தில் கூறப்பட்டு உள்ளது. இது நவாக்ஷரீ என்று பெயர் பெறும். இவற்றை தேவிக்கே உரிய அக்னி கலைகளான 10 கோடுகளால் உருவாகும். தசசூத்திரபரமேசீவாஸ்து பதவடிவில், சமசதுர எண்பத்தொரு கட்டத்தில், பகுத்துப் பதிக்கும் முறையில், யந்திரவடிவில் கூறியுள்ளார். திருமூலரின் கூற்றுப்படி ஒன்பது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒன்பது எழுத்தாகி ஒன்பதாகப் பெருகி 9 X 9 = 81 எழுத்தாகி அமைந்து விளங்குகின்றன. அவை முறையே 1) [1]க்லீம், 2) ச்ரீம், 3) ஹ்ரீம், 4) ஐம், 5) [3]கௌரம், 6) [1]க்ரீம், 7) ஹௌம், 8) ஔம், 9) ஸௌம் என்பவை நவாக்ஷரங்கள் ஆகும். இதில் தசமகாவித்யாவில் முதலாவதான தக்ஷிணகாளீ பீஜமும்,

முதலாவதாக மகாகாளியின் பீஜமும் இடம் பெற்று உள்ளதால், இது பராசக்தியான காளியின் யந்திரம் எனக் கொள்ளலாம். சாமுண்டீஸ்வரிக்கும் ஏற்றதாக இது ஒப்புயர்வற்ற, மஹோன்னத சக்திபடைத்த யந்திர அமைப்பு முறையாகும்.

நவாக்கரி சக்கரம் நானுரை செய்யின்
நவாக்கரி ஒன்று நவாக்கரியாக
நவாக்கரி எண்பத் தொரு வகையாக
நவாக்கரி யக்லீம் ஸௌ முதலீறே (திருமந்திரம் 1294)

சென்னையில் அருளும் அன்னை காளிகா : காத்தருளும் காளியானவள், கலியுக-வரதாவாக, கருணைமழை பொழிந்து, அருளாட்சி செய்திடும் திருத்தலங்களுள் ஒன்றாக விளங்குவது தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னை மாநகரில், காளிக்கு உகந்த புனிதஇடமான கடற்கரைப்பகுதியில் அமைந்துள்ளது காளிகாம்பாள்கோயில். இக்கோயில் ஸ்ரீகாளிகாம்-பாளுக்கு மட்டுமே அமைந்ததொரு "காளிகாம்பா ஸ்வதந்த்ராலயம்" எனப்படுகிற காளியின் தனிக்கோயிலாகும். இவள் சிவசக்தியே என்பதை உணர்த்திடும் வகையில் சைவாகமப்படி சிவாலயமும், இதனுடன் மிச்ராலாயமாக அமைந்து உள்ளது. இவ்விரு கோயிலும் துவாரதேவாதி பலிபீடம் வரையிலும் தனித்தனியாக சண்டேசருடனும் விளங்கினாலும், இங்கு, பிரதானமாய், காளிகாம்பாள் வீராசனத்தில் அமர்ந்தவளாய் விளங்கி, தக்ஷிணாமூர்த்தி வடிவில் இருக்க, கொடிமரத்துடன் மஹோத்ஸவத்துடன் பூஜிக்கப்படுகிறாள். இவள் அதிஸௌம்யமான உருவத்தையும், அதிரௌத்ரமான பெயரையும் பெற்று விளங்குகிறாள் என்பதும், ஸ்ரீ சக்ரத்துடன் விளங்குவதும் இத்தலத்தை ஒரு சக்தி பீடம் என்பதை உறுதிப்படுத்துகிறது. இங்கு காளிக்கே-உரிய, உக்ரத்தோற்றமில்லாவிடினும், லலிதாம்பிகை, ராஜராஜேஸ்வரீ திருவுருவத்தில் விளங்கியும், திருவடியில் திரிசிரங்கள் இருப்பதாலும், கரும்பு இன்றியும், ஐவகை மலர்கணைகள் இன்றி, தாமரை மலர் மொட்டும், வரதமும் உள்ளது. இவளை ஆதிபராசக்தியின் வடிவாய், காளியின் சாந்தஸ்வரூபியான காளியின் அம்சமான அமைப்பு கொண்டு அருள்பாலித்து வருகிறாள். இவ்வாலயம் காளிக்கோயிலுக்கான அமைப்பிலக்கணம் கொண்டுள்ளதைப் பற்றிய தகவல்களை அறிவோம். பொதுவாக சிவனது சக்தியின் கோயில் கிழக்குமுகமாகவும், தெற்குமுகமாகவும் அமைந்திருக்கும். காளியின் கோயில் கிழக்கு அல்லது வடக்கு திசை நோக்கி இருக்கும். இவ்வாலயத்தில் தனிச்சிறப்பாக கடற்கரையில் மாநகரத்தை நோக்கிய மேற்கு நோக்கி அமர்ந்து அருள்கிறாள்.

ஆலய அமைப்பின் அருமைகள் : - (1) ஆகமங்களின் ஆலயவிதிமுறைப்படி, கிராமம், நகரம் முதலானவற்றில், வெளிநோக்குடன், கிராம ஸம்ரக்ஷணியாக, எல்லைப்பகுதியில் காளியானவள், ஸம்ஹாரிணியாக, ருத்ரரூபாவாக, நிக்ரஹகாளியாக விளங்குவாள்.

அவ்வாறே கிராமாதிகளை தனது பார்வையால் அருள்புரிவதற்காக காளியானவள் ஸதாசிவாவாக, அந்தர்முக ஸமாராத்யாவாக அனுக்ரஹதாவாக கிராம நகரத்தைப் பார்த்திடுமாறு அனுக்ரஹகாளியாக விளங்குவாள். இவ்வாறு லிங்கத்தில் பூசிக்கப்படும் ஸதாசிவரின் சக்தியாக அனுக்ரஹ-காளியாக, இங்கு அமைந்து இருக்கிறாள். ஸ்ரீ சக்ரப்ரதிஷ்டையால் உக்ரமன்றி அருள்கிறாள்.

(2) சிவலிங்கப்ரதிஷ்டைக்கு, மேற்குமுகமாக ஸ்தாபித்தல் உத்தமம் என்ற சிவாகமவசனப்படி அருவுருவ நிலையில் சாக்த லிங்கமான, சக்ரராஜமான, ஸ்ரீசக்ர மேருவிற்கும், மேற்குமுகமாய் ஆலயம் அமைந்து உள்ளது. வளர்கின்ற, உதிக்கின்ற செங்கதிர் போல், மேற்கு நோக்கி இருந்து அருள்கிறாள். சைவலிங்கத்து ஸதாசிவனின் குடும்பினி என்பதை உணர்த்திட அம்பா என்றும் சாக்த பரதேவதைகாளி என்பதை உணரத்த காளி என்றும், காளிகாம்பாள் என்றும் பெயர் பெறுகிறாள். இதனால் லிங்கத்தைப் போன்ற மேருசக்தியாய் மேற்கு நோக்குகிறாள்.

(3) சாக்த தந்திரத்தில் பரதேவதைகளாக கூறப்படும் தசமஹாவித்யைகளுள் முதலாவதாக கூறப்படும் பரப்ரம்மஸ்ரூபிணியான காளீ அம்சமாகவும், அவற்றுள் சாந்தரூபியான புவனேஸ்வரீ மேற்கே உதித்தவளாதலால், இவளது வடிவிலேயே இங்கே மேற்குமகமாய் அமைந்தது சிறப்பாம்.

(4) ஸ்ரீ சக்ரத்தைப் பூசிப்பவர் தன்னை நோக்கியவாறு, மையமுக்கோணத்தின் முனை அமையுமாறு, வைத்து பூசித்திட வேண்டும்.அவ்வாறு பின்பற்றுகையில் தேவி மேற்கு அல்லது தெற்கு நோக்கியவளாவாள். அந்த ஸ்ரீசக்ரமே ஆலயத்தில் அமையும் பொழுது வடக்குமுகமாய் அர்ச்சிக்க வேண்டியதால், இங்கு அமைந்துள்ளது. இதனால் ஸ்ரீசக்ர பூஜையை அபிமுகமாக அமராது வடக்கு நோக்கி இருந்து பூசித்திடுமாறு அமைப்பு பெற்று உள்ளது. லிங்கமும், ஸ்ரீ சக்ர மேருவும் அருவுருவநிலை வடிவங்களாதலால் இதனுள் பாவனை செய்து நியாஸம் செய்து பூசித்திட இயலும், ஆனால் உருவநிலையில் ஸகளமாய் தேவியை பூசித்திடுகையில் அவளது வலதுகை பக்கம் அர்ச்சகர் இருந்து, பிற ஆலயங்களில் கிழக்கு அல்லது வடக்கி நோக்கியவராக பூசையை செய்திடுவார். இங்கு இரண்டு வடிவமும் இணைந்து ஒரே கருவறையில் மேற்கு நோக்கி உள்ளதால் தேவிக்கு இடதுபுறம் நின்று சிவலிங்கார்ச்கனை போன்றே பூஜை செய்யப்படுவது சிறப்பு அம்சமாய் உள்ளது.

(5) தசமகாவித்யைகளுள் காளி வடக்கு திசையில் உதித்தவளாதலால் தனி காளிகோயில் உக்ரமூர்த்திக்கு வடதிசை நோக்கி இருக்கும். உக்ரமூர்த்தியின் உக்கிரத்தை தனித்திட எதிரில் வீதியையோ, நீர்நிலையையோ, சாந்தமூர்த்தியின் ப்ரதிஷ்டையையோ செய்திடுவர். இங்கு காளி சாந்தமூர்த்தியாய், நீருக்கு அதிபதியான வருணபகவானின் திசையான மேற்கு நோக்கி, உஷ்ணத்தில் சிவந்த செந்தணல் போல கோபம் தணிந்த காளி இங்கு கருப்பியாக, சியாமாவாக விளங்குகிறாள். கிருஷ்ணவர்ணீப்ரஹத்ரூபி என வேதம் காளியைக் கூறுகிறது.

(6) காளியின் திருவுருவத்தில், உக்ரமோ அல்லது அசுரன்தலை அவளது கையிலோ, காலடியிலோ அமைந்திருக்கும். தக்ஷிணகாளியே வரதமுத்திரையுடன் விளங்குபவள். இதனை உணர்த்துவதாக இங்கு தேவியின் திருவடியில் மூன்று அசுரர்களின் துண்டித்த தலைகளும், முன்கை வரதமுத்திரையுடனும் அமைப்பு உள்ளது சிறப்பாகும்.

(7) தேவீ ஆலயத்தில் சாந்தமூர்த்திக்கு சன்னதியில் விருஷபம் அமையும் இங்கு காளியான-படியால் சாந்தமாய் உள்ள போதும், சிம்மவாகனமும், உக்ரமான துவார சக்திகளும், ஏவல்காவல் தெய்வமாக இவளது வலதுகை பக்கத்தில் பத்ரகாளியும், வீரபத்ரரும் இருப்பது காளிமாதாவாக திகழ்வதை உணர்த்துகிறது. இவ்விதம் சிறப்புமிகு காளிகாம்பாள் கோயிலாக இது திகழ்கிறது.

<u>உபாஸனா மார்க்கம் :</u> - காளியை உபாஸித்து, மும்மூர்த்திகள் முதலான பல தேவர்களும், பல ரிஷிகளும், பல மன்னர்களும், இஷ்டஸித்திகளைப் பெற்றனர் என்பதை இதிகாஸ புராணங்கள் நன்கு விளக்கி உள்ளன. ஞானமே வடிவான காளியின் அருளால், மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்தோரும், மிகவும் உயர்ந்த நிலையில் மன்னனாகவும், மகரிஷிகளாகவும், மகாகவி-களாகவும், வீரமும், விவேகஞானமும் பெற்று உள்ளனர். சாக்த நூல்கள் காளியை காரணமேது-மின்றியே கருணை புரிபவளாகவும், ஒப்பற்ற பயனளிப்பவளாகவும் கூறுகின்றன. இதனால் தேவி "அவ்யாஜ கருணாமூர்த்தி" என்று கூறப்படுகிறாள் ஆவாள். இவளிடம் வந்தே சரணம் புகுவோர் வானுலகையும், மண்ணுலகையுமாள்வர். எவனொருவன் மந்திரத்தை உபதேசித்த குரு, உபாசிக்கும் தேவதை, ஜபித்து ஸாதித்திடும் மூலமந்திரம் ஆகிய இம்மூன்றையும் வேறுபாடே இல்லாதவாறு மூன்றிலும் மற்றதையும் ஒன்றில் ஒன்றாக அபேதமாகக் கருதி ஆராதிக்கிறானே அவனே சாக்தனாகிறான். அவனே சைவனாயும், வைஷ்வணவனாயும், ஸௌரனாயும், பூர்ணமான தீக்ஷிதனாகவும் ஆகிறான். இத்தகுதி இல்லாதவன் மந்திரத்தைப் பெறுவதும், அவன் பயிற்ச்சி செய்வதும், பயனின்றி கைகூடுதலை தடை செய்யும், என்கிறார் சிவன்.

> "குருர் தைவத மந்த்ராணாம் மஹேசஸ் யாபி பார்வதி.
> அபேதேன ஸ்மரேன் மந்த்ரம் ஸ சிவஸ் ஸகணாதிப:I
> யோ மந்த்ம் பாவயேன் மந்த்ரீ ஸசிவோ நாத்ர சம்சய: I
> ஸ சாக்தோ வைஷ்ணவஸ் ஸௌர: ஸரவ பூர்ண தீக்ஷித: I
> அயோக்யாய ந தாதவ்யம் ஸித்திரோதப் ப்ரஜாயதே: II

இவ்வாறு மந்த்ர சாஸ்திரத்தில் உண்மை ரசகியத்தை சிவன் தேவிக்கு கூறுகிறார். ஆதலால், யாவரும் ஸத்குருவைத் தேடி, தேர்ந்தெடுத்து, அடிபணிந்து, அவரையே இஷ்டதெய்வமாக, ஜங்கமமூர்த்தியாக, நடமாடும் தெய்வமாக, உண்மையாக நம்பி உபதேசம் பெற்று, அதற்கேற்ப ஆசாரநெறிமுறைகளைப் பின்பற்றி, அத்தெய்வத்தின் பஞ்சாங்கங்களையும், புரச்சரண விதிமுறைகளையும் செய்து, முடித்தால் மட்டுமே மந்திரஸித்தி உண்டாகும். மந்திரஸித்தி

ஏற்பட்டதை பல அறிகுறிகளால் அறிந்து கொண்டபின்பு விரும்பிய பயனைப் பெறவும், பெறச் - செய்யவும், ஸாதகன் ஈடுபட வேண்டும் என மந்திரசாஸ்திரங்கள் கூறுகின்றன. ஒன்றைப்பிடி, உறுதியாகப்பிடி என்றவாறு, தேவியின் திருவடியை உறுதியாக நம்பிப் பற்றி, அவளருளால் வீடுபேற்றை பெற இயலும். "மெய்யே உன் பொன்னடிகள் கண்டிங்கு வீடுற்றேன்" என்பார் மணிவாசக சமயாசாரியர். "துர்காம் தேவீம் சரணம் அஹம் ப்ரபத்யே" என்று "துர்கா-சூக்தமும், தாம் பத்மினீம் சரணம்" என்று "லக்ஷ்மீ சூக்தகும் வேதத்தில் தேவியை சரணமெற்று" அடைய வேண்டும் என்பதைத நமக்கு உபதேசிக்கின்றன.

<u>முடிவுரை :</u> உலகில் உள்ள உயிரினங்களை உள்ளிருந்து ஆட்டி வைக்கும் அந்த சக்தி எது என்ற கேள்விக்கு ஒரே பதில் பராசக்தி என்பதே ஆகும். ஸர்வசக்தியும் ஒன்றே. பிரம்மாவின் படைக்கும் சக்தி, விஷ்ணுவின் காக்கும் சக்தி, ருத்ரனின் ஸம்ஹரிக்கும் சக்தி, சூரியனின் பிரகாசிக்கும் சக்தி, அக்னியின் தகிக்கும் சக்தி, வாயுவின் வீசும் சக்தி, பூமியின் சுமக்கும் சக்தி, இவை எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாக ஒரு சக்தி உண்டு என்பது யாதெனில், அவளே பராசக்தி. இவள் ஒவ்வொரு பிராணியிடத்திலும் தேஹ, ஜீவ, சக்தியாக, யோக, சக்தியாக, குண்டலினீ என்ற பெயரில் விளங்குகிறாள். இவளின்றி எதுவும் அசையாது. இவளே ஜகத்யோனி- யாகவும் பரபிந்து சக்தியாகவும், ஜகதீஸ்வரியாகவும், காளியாகவும் இருக்கிறாள். இவள் இல்லையேல் சிவம் இயக்கமற்று சவமாக விளங்குவார். இதனை ஆதிசங்கரரும், தமது ஸௌந்தர்யலகரியில் தேவியின் மகிமையை "சிவஸ் சக்தியா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்" என்று குறிப்பிட்டு உள்ளார். எனவே புழு முதல் பிரம்மா வரை ஒரு காரியத்தைச் செய்ய முடியாத போது தனக்கு சக்தி இல்லை என்றே கூறுவார்கள். இதனையே தேவீ-மாகாத்மியம் ஸர்வபூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்திதா என்கிறது. எங்கும் நிறைந்துள்ள அந்த சக்தியே பரப்ரம்மம் எனப்படுகிறது. அவளை அறிதலே ப்ரம்மஞானம் எனப்படுகிறது. அவளே பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய மும்மூர்த்திகளிடமும் சக்தியாக இருந்து, முத்தொழிலாற்றி, உலகைக்காத்து ரக்ஷித்து இயக்குகிறாள். உலகும் அவளே, உலகப்பொருளும் அவளே, அதனை நுகர்பவளும் அவளே, எல்லாமாய் யாதுமாகி நிற்பவள் ஆதிசக்தி காளியே ஆவாள். இவளையே விருப்பமற்ற ஞானியர், யோகியர் இவளையே நிர்குண ப்ரம்மமாயும் விருப்பமுள்ள போகியரான மக்கள் ஸகுணப்ரம்மமாயும் உபாசித்து விரும்பும் பயனை அடைகின்றனர். நமக்கு உலகில் ஏற்படும் கஷ்டங்களையும், தொல்லைகளையும் நீக்கவும், அக்கிரமங்களை ஒழிக்கவும், தருமத்தை நிலைநாட்டவும், நாமும் ஆதிபராசக்தியான பரப்பிரம்ம ஸ்வரூபிணியான ஸ்ரீ காளிகாம்பாளை சரணமடைந்து, முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே என்ற சாக்த அருளாளர் அபிராமிபட்டரின் அருள்வாக்கின்படி, அருள்பெற்று இன்புறுவோமாக. பகவதி ஸ்ரீமாதா நம்மைக் காக்கட்டும்.

தேவீம் திர்லோகஜனனீம் சரணம் ப்ரபத்யே

சுபமஸ்து

* * * * * * * * * * * * * * * * *

வாழ்த்து

வாழ்கவே வாழ்க! என்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க! மல மறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க! மெய்ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க! மலமிலாதான் பாதமே. (குருமூர்த்தி)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே. (திருஞானசம்பந்தர்)

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
(கச்சியப்ப சிவாசார்யார்)

ஆறிரு தடந்தோள் வாழ்க, ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானை தன்அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீர் அடியா ரெல்லாம்.
(அருணகிரிநாதர்)

மழை வழங்குக, மன்னவன் ஓங்குக,
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக,
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே. (கோயிற்புராணம்)

வைய நீடுக மாமழை மன்னுக.
மெய் விரும்பிய அன்பர் விளங்குக.
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக.
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

வாழ்க சைவம்! திருச்சிற்றம்பலம்! வாழ்கசீரடியாரெல்லாம்!

உ

ஸ்ரீகுருப்யோ நம:

சென்னை சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாச்சார்யார் தொகுத்து வெளிவந்துள்ள ஸமய நூல்களை ஆஸ்தீக அன்பர்கள் வாங்கிப் பயனடையவும்

வ.எண்	நூல்	பக்கம்-எழுத்து	மொழி	விலை
1.	உருவத்தில் இறைவன்	தமிழ்	தமிழ்	No Stock
2.	விபூதி மஹிமை	தமிழ்	தமிழ்	No Stock
3.	நவராத்திரி தேவியர் துதித்திரட்டு	தமிழ்	தமிழ்	No Stock
4.	புதுக்கோயில் சடங்கு ஐந்து	64-தமிழ்	தமிழ்	Rs.200/-
5.	சிவாகம கட்டுரைத் திரட்டு-1	122-தமிழ்	தமிழ்	Rs.200/-
6.	சிவாகம கட்டுரைத் திரட்டு-2	132-தமிழ்	தமிழ்	Rs.200/-
7.	காக்கும்காளியின் காருண்ய மஹிமை	தமிழ்	தமிழ்	No Stock
8.	சிவாகம கட்டுரைத்திரட்டு-3	தமிழ்	தமிழ்	Rs.200/-
9.	சிவாகம கட்டுரைத் திரட்டு-4	168-தமிழ்	தமிழ்	Rs.200/-
10.	சிவயோகநெறி (சைவாகமத்தில்)	116-தமிழ்	தமிழ்	No Stock
11.	ஆலயாகார அர்த்த விவரணம்	64-தமிழ்	தமிழ்	No Stock
12.	புஷ்பார்ச்சன விதி	124-தமிழ்	தமிழ்	Rs.150/-
13.	திவ்யாபிஷேக விதி	136-தமிழ்	தமிழ்	Rs.200/-
14.	ஹோமலக்ஷண ஸங்கிரஹம்	340-தமிழ்	தமிழ்	Rs.500/-
15.	சண்டயாக விவேகம்	306-தமிழ்	தமிழ்	Rs.400/-
16.	திவ்ய ஸ்தவ கதம்பம் (கிரந்தம்)	180-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	Rs.200/-
17.	சிவாகம கட்டுரைத்திரட்டு-5	160-தமிழ்	தமிழ்	Rs.200/-
18.	நக்ஷத்ரசாந்தி விதானம்	124-தமிழ்	தமிழ்	Rs.550/-
19.	உத்ஸவபேத க்ரியாபோதம்	224-தமிழ்	தமிழ்	Rs.350/-

வ.எண்	நூல்	பக்கம்-எழுத்து	மொழி	விலை
20.	நற்கூற்று மணிமாலை	352-தமிழ்	தமிழ்	Rs.400/-
21.	சிவாகம சூக்தி மஞ்ஜரீ	224-தமிழ்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
22.	காளீபூஜாப்ரபாவம்	380-தமிழ்	தமிழ்	Rs.450/-
23.	பிரத்யங்கிரா ஹோமக்ரமம்	48-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.250/-
24.	புவனேச்வரீ பூஜாகல்பம்	202-தமிழ்	தமிழ்	Rs.350/-
25.	சைவநிர்வசன வசனாமிருதம்	நாகரம்	சம்ஸ்க்ருதம்	No Stock
26.	சிவசக்தி ஸ்தோத்ரமாலா	320-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.350/-
27.	பத்ரகாளீ தீபபூஜையும் துதிகளும்	124-தமிழ்	தமிழ்	Rs.200/-
28.	பிரத்யங்கிரா ஸபர்யா ஸர்வஸ்வம்	560-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.600/-
29.	பிரத்யங்கிரா ஸஹஸ்ரநாமம்	150-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.200/-
30.	சிவாகம கட்டுரைத்திரட்டு-6	108-தமிழ்	தமிழ்	Rs.200/-
31.	திவ்யஸ்தவகதம்பம்	180-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
32.	கோயில்விழாக்களின் வாஹனஉலா	256-தமிழ்	தமிழ்	Rs.400/-
33.	தேர்பவனிப்பெருமை	176-தமிழ்	தமிழ்	Rs.300/-
34.	சிவகாமகட்டுரைத்திரட்டு-13	136-தமிழ்	தமிழ்	Rs.200/-
35.	சிவஸ்தோத்ர முக்தாவளீ	104-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	No Stock
36.	ஆகமச்சான்றுப் பேழை	186-தமிழ்	தமிழ்	Rs.300/-
37.	சண்டீயாக ப்ரயோகம்	300-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	No Stock
38.	ஆகமக்கோயில் அமைப்பு முறை	576-தமிழ்	தமிழ்	Rs.750/-
39.	லக்ஷ்மீ ஆராதன சந்திரிகா	528-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.800/-
40.	லிங்கஸ்தாபனம் & அஷ்டபந்தனம்	572-தமிழ்	தமிழ்	Rs.500/-
41.	பிரத்யங்கிரா ஹோமக்ரமம்	80-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	Rs.200/-
42.	சிவாகமகட்டுரைத்திரட்டு பாகம்-10	262-தமிழ்	தமிழ்	Rs.200/-
43.	ஆகமநிர்வசன வசனாமிருதம்	நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-

யந்திர செப்புத் தகடுகள்

ஆலயதேவதா ப்ரதிஷ்டாயந்திர தகடு ஒன்று கிரந்த எழுத்தில் ரூ.1000/-

சைவ, வைணவக் கோயிலின் அறுசமயத் தெய்வச்சிலைகளுக்கான ஆகம பிரதிஷ்டைக்கான தகட்டு யந்திரங்கள், தாமிரக்தகட்டில்அளவு இஞ்ச் 3 × 3 அல்லது 5 × 5ல் ஆகம விதிமுறைப்படி எழுதியவை, உரிய மந்திரவகைகளுடன் கூடியவை உரியவைக்கு மட்டுமே கிடைக்கும்.

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry